# ஆனந்த போதினி

43 11-12

மே-ஜூன், 1958

7L
ma11, N15AB
N58, 43-11-12
2094056


வைகாசி
20

"ஜீவா" தீட்டிய

## எழுத்து ஓவியங்கள்

யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்?

விலை ரூ. 2—0—0.

இவ்வுலகைத் திரும்பிப் பாரேன்?

விலை ரூ. 1=75 nP.

தாசிரமணி

விலை ரூ. 1=50 nP.

உயிரோவியம்

விலை ரூ. 1=50 nP.

காதலனா? காதகனா?

விலை ரூ. 1=25 nP.

சீமாட்டி கார்த்தியாயினி

விலை 87 nP.

ஒவ்வொரு புத்தகத்துக்கும் தபால் செலவு 69 nP.

6-புத்தகங்களுக்கும் தபால் செலவு ரூ. 2=25 nP.

ஆனந்தபோதினி ஆபீஸ்,

தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# ஆனந்தபோதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி 43 | விளம்பி௵ வைகாசிமீ ௧உ 1958௵ மேமீ 14உ | பகுதி 11

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 MAY 1958
MADRAS

## உள்ளுறை



| எண். | | பக்கம். |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | 602 |
| 2. | தமிழ் அறிஞர்களின் சங்கநாதம் (தலையங்கம்) | 603 |
| 3. | திருவனந்தபுரம் சர்க்கார் பொருட்காட்சிசாலை | 607 |
| 4. | பிரளயம் | 610 |
| 5. | பாரதியாரின் குயில்தரும் இன்பம் | 617 |
| 6. | பொன்னி | 626 |
| 7. | விதியை வென்ற மதி | 633 |
| 8. | தோளும் துணையும் | 637 |
| 9. | செந்நீர்ப் பஞ்சணை | 639 |
| 10. | வீராங்கனை (கவிதை) | 649 |
| 11. | ஞாலம் (தொடர் கதை) | 654 |
| 12. | பஞ்சாங்கம் | 660 |

# ஆனந்த போதினி

## கடவுள் வணக்கம்

தேவியல் அறியாச் சிறியனேன் பிழையைத்
திருவுளத் தெண்ணிநீ கோப
மேவிஇங்கு ஐயோ கைவிடில் சிவனே!
வேறுநான் யாதுசெய் வேனே!
மூவிரு முகஞ்சேர் முத்தினை யளித்த
முழுச்சுவை முதிர்ந்த செங் கரும்பே!
சேவின்மேல் ஓங்கும் செழுமணிக் குன்றே!
திருவொற்றி யூர்மகிழ் தேவே! (1)

உய்யவொன் றறியா ஒதியனேன் பிழையை
உன்திரு வுள்ளத்தில் கொண்டே
வெய்யன்என்று ஐயோ கைவிடில் சிவனே!
வேறுநான் யாதுசெய் வேனே!
செய்யநெட் டிலைவேற் சேய்தனை அளித்த
தெய்வமே! ஆநந்தத் திரட்டே!
மையலற் றவர்தம் மனத்தொளிர் விளக்கே!
வளம்பெறும் ஒற்றியூர் மணியே! (2)

கழல்கொள்உன் அருமைத் திருவடி மலரைக்
கருதிடாப் பிழைதனைக் குறித்தே
விழலன்என்று ஐயோ கைவிடில் சிவனே!
வேறுநான் யாதுசெய் வேனே!
அழல்அயிற் கரத்துஎம் ஐயனை ஈன்ற
அப்பனே அயனு(ம்)மால் அறியாத்
தழல்நிறப் பவளக் குன்றமே! ஒற்றித்
தனிநகர் அமர்ந்தருள் தகையே! (3)

அஞ்செழுத்து ஓதி உய்ந்திடாப் பிழையை
ஐய!நின் திருவுளத்து எண்ணி
வெஞ்சன்என்று ஐயோ கைவிடிற் சிவனே!
வேறுநான் யாதுசெய் வேனே!
கஞ்சன்மான் முதலோர் உயிர்பெற விடத்தைக்
களத்திருத்திய அருட் கடலே!
சஞ்சித மறுக்குஞ் சண்முகம் உடையோன்
தந்தையே! ஒற்றிஎந் தவமே! (4)

# தமிழ் அறிஞர்களின் சங்க நாதம்

தமிழக அரசாங்கம் அதாவது சென்னை சர்க்கார் தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டுவிட்டது உலகறிந்த செய்தி யாகும். அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் அனைத்தையும் படிப்படியாகச் செய்து வருகிறார்கள். திருச்சி மாவட்டத்தில் தாலுகா, கலெக்டர் அலுவலகங்களில் தமிழிலேயே நடிவடிக்கைகள் அனைத்தும், கடிதப் போக்குவரத்துகள் முதலியனவும் சில ஆண்டுகளாகப் பரீட்சார்த்தமாக நடைபெற்று வருகிறது. மற்ற மாவட்டங்களிலும் பையப் பைய இம்முறையை அமலாக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

முதல் கட்டத்தில் சர்க்காரின் சிறிய காரியாலயங்கள் சிலவற்றில் பொதுவாக டைப் ரைட்டிங் மிஷின்கள் உபயோகப்பட வேண்டிய அவசிய மில்லாத அலுவல்களிலெல்லாம் தமிழ்ஆட்சி மொழியாகப் புகுத்தப்பட லாயிற்று. நம் தமிழ் ராஜ்யத்தில் தமிழ் ஆட்சிமொழியாக அமலாகும் இரண்டாவது கட்டத்தில் வருகிற ஜூலை மாத முதல் நாளிலிருந்து 200 டைப்பிஸ்டுகளுக்குத் தமிழ் டைப் ரைட்டர் மிஷின்களை உபயோகிக்கப் பயிற்சி யளிக்க, சென்னை சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்களாம். இதற்கென ஒரு பயிற்சிப் பள்ளியும் ஆரம்பிக்கப்படுமாம். சர்க்கார் தமிழ் டைப் ரைட்டிங் மிஷின்களுக்கு ஆர்டர் கொடுத்திருப்பதாகவும், இவை வந்ததும் மேற்குறித்த பயிற்சிப் பள்ளிக்குச் சப்ளை செய்யப்படும் என்றும் கூறப்படுகிறது. இந்த டைப் ரைட்டர்களில் சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட 'கீ போர்டு' இருக்குமாம்.

இவ்விதம் அரசாங்கம் தமிழை ஆட்சிமொழியாக அமல் நடத்தி வருவதில் அறிஞர் பெருமக்களுடைய ஒத்துழைப்பு மிக அவசியம். நாட்டு மக்களும் இவ்விஷயத்தில் கவனஞ் செலுத்தி ஒல்லும் வகையாலெல்லாம் உதவி புரியவேண்டும். சமீபத்தில் கோயம்புத்தூரில் நடைபெற்ற ராஜ்யத் தமிழாசிரியர் மாநாட்டில் கலந்து கொண்ட அறிஞர்கள் பலர் ஆட்சிமொழி சம்பந்தமாகத் தங்களுடைய எண்ணங்களையும் பயனுடைய யோசனைகளையும் வெளிப்படுத்தி யிருப்பது மகிழ்ச்சிக்குரியது. 'தமிழ்மொழி வழி அரசியல்' அலுவல்கள் வெற்றியுடன் நடைபெறுவதற்கான வழி வகைகளை அறிஞர்கள் பலர் தெளிவாக எடுத்துப் பேசியிருக்கிறார்கள். பல நகரசபைகள் ஜில்லா போர்டுகளில் கமிஷனராக இருந்து அரும்பணி புரிந்த திரு. கீ. இராமலிங்கனார் தலைமையில் தமிழ் மொழிவழி அரசியல் அலுவல்கள் வெற்றிகரமாக நடைபெறுவதற்கான வழி வகை

கள் ஆராயப்பட்டது மிகப் பொருத்தமாகும். இவர் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அதாவது தமிழை ஆட்சிமொழி யாக்க வேண்டுமென்ற எண்ணமும் முயற்சியும் முகிழ்ப்பதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்பிருந்தே, தாம் ஆணையாளராகப் பொறுப் பேற்ற ஊர்களிலெல்லாம், தமிழ்மணம் பரப்பி வந்திருக்கிறார். நகராண்மைக் கழகங்கள், நாட்டாண்மைக் கழகங்களின் அலுவல்களை யெல்லாம் தமிழிலேயே பெரும்பாலும் நடத்தும்படியாகச் செய்திருக்கிறார். ஊர்த் தெருக்களுக்கெல்லாம் தமிழ்ப் பெயர்களை—தமிழ்ப்புலவர்கள், கவிஞர்கள் பெயர்களை வைத்திருக்கிறார். அரசாங்க அலுவலகங்களில் பெறும் பொறுப்பு வகிக்கும் அதிகாரிகள் பலர் இவர் போன்றே மொழிப்பற்றும் இனப்பற்றும் உடையவர்களா யிருப்பார்களானால், இன்றைய சர்க்கார் முடிவு செய்திருக்கிறபடி, தமிமை ஆட்சி மொழியாக அமல் படுத்துவதில் வெகு விரைவில் வெற்றி காண முடியும் என்பது நம் கருத்து. மேற்படி தமிழாசிரியர், மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய டாக்டர் சிதம்பரநாதஞ் செட்டியாரவர்களும் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்மொழி பல துறைகளிலும் சிறப்புற்றோங்குவதற்குப் பெருந் தொண்டு புரிந்து வந்திருக்கிறார். இம் மாநாட்டில் பெரும் பங்கு கொண்டு பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, டாக்டர். ரா. பி. சேதுப்பிள்ளை, தேவநேயப் பாவாணர், டாக்டர் மா. இராச மாணிக்கம் முதலிய அறிஞர்களும் தமிழன்னை அரியணையில் கொலு வீற்றிருக்க ஆவன செய்து வந்திருக்கிறார்கள்.

திருச்சியில் தமிழ் பரீட்சார்த்தமாக உபயோகப்படுத்தி வந்தது பற்றி, திரு. கீ. இராமலிங்கனார் குறிப்பிடுகையில், "திருச்சியில் தமிழ் பரீட்சார்த்தமாக வைக்கப்பட்டும் ஆங்கில வார்த்தைகளே பெரும்பாலும் உபயோகப்படுத்தி வந்தது. இதற்குக் காரணம் கலெக்டர் தமிழரல்லவாகையால் அவருடைய அறிக்கை சாதகமாக இருக்கவில்லை. அந்தந்த இலாக்காக்களில் வேலை செய்து வந்த சிப்பந்திகள் தமிழ் வார்த்தைகள் கண்டுபிடிப்பது கஷ்டமாக இருப்பதாகக் கூறினார்கள். ஆனால், மேற்கொண்டும் சில நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டதன் பயனாக, மேற்படி சிப்பந்திகளே நல்ல முறையில் தமிழிலேயே குறிப்புகளை எழுதியதை நான் பாராட்டினேன். புதிதாக வேலைக்கு வரும் இளைஞர்கள் தமிழில் நல்ல தேர்ச்சி பெற்றிருக்கின்றனர். தினத் தாள்கள், கிழமைத் தாள்கள், திங்கள் தாள்கள் ஆகியவைகளில் கூடுமானவரை தமிழ் சொற்களையே உபயோகிக்கவேண்டும்" என்று கூறினார்.

இம்மாநாட்டு வரவேற்புக் குழுத்தலைவராக இருந்த திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்களும் தம் வரவேற்புரையில், திரு. கீ. இராமலிங்கனார் வெளியிட்டதைப் போலவே, தமிழ்மொழி யாக்கத்துக்



கான அரிய கருத்துகள் பலவற்றை தெரிவித்தார்கள். "தாய்மொழியின் இன்றைய உடனடித் தேவை விஞ்ஞான வளர்ச்சியும், தொழிலியல் வளர்ச்சியுமாகும். ஆங்கிலத்தில் படித்தால்தான் அறிவியல் வளர்ச்சி பெற முடியும் என்று பேசும் காலம் மலையேறி விட்டது. தாய்மொழி வாயிலாகக் கற்றால்தான் தமிழருடைய புத்தம் புதிய விஞ்ஞான முயற்சிகளும் ஆக்க வழிப்பட்ட அறிவாராய்ச்சிகளும் தோன்ற முடியும். கலைச் சொல்லாக்கத்தில் ஈடுபடவேண்டும். சாவகாசமாக நின்று நிதானமாக நாம் கலைச் சொற்களைக் கன்னித் தமிழில் ஆக்கிக்கொள்ளும்வரையில் விஞ்ஞானமோ, உலகமோ காத்திருக்கமுடியாது. ஏதோ ஓர் வடிவில்—முடியுமானால் தமிழ் மரபுக்கு முரணாகாத வகையில் கலைச் சொற்களை நாம் உடனடியாக உருவாக்கித் தீரவேண்டும். கலைச்சொல் ஆக்கத்தில் தடையோ தயக்கமோ ஏற்படுமாயின் எல்லா நாடுகளுக்கும் பொதுவான உலகக் கலைச் சொற்களை அப்படியே தமிழ் எழுத்துக்களில் எழுதி அகராதிகளை வெளியிட்டுத் தீரவேண்டும்....நமக்கு வேண்டிய கலைகள் எங்கே இருந்தாலும், எந்தத் திசையில் இருந்தாலும், எந்த மொழியில் இருந்தாலும் கொண்டு வந்து சேர்க்க வேண்டியது நமது முக்கிய கடமையாகும்."

மாநாட்டைத் தொடங்கிவைத்த சென்னை ராஜ்யக் கல்வித் துறைத் தலைவர் திரு. என். டி. சுந்தர வடிவேலு, "கிராமங்களில் உள்ள பெருவாரியான மக்கள் தமிழை விடாமல் பேசி வருவதால்தான் தமிழ் உயிர் பெற்றிருக்கிறது வெறும் ஆராய்ச்சியுடன் நின்று விடாமல், நிர்மாண வேலைகளில் அதிக ஊக்கம் எடுத்து வருவது அவசியம்" என்று குறிப்பிட்டிருப்பது தமிழ்மொழி நல்ல முறையில் ஆக்கம் பெறவேண்டும் என்று விரும்பும் தமிழாசிரியன்மாருடைய கவனத்துக்குரியது.

மாநாட்டுத் தலைவர் டாக்டர் திரு அ. சிதம்பரநாதஞ் செட்டியார் தமது தலைமைப் பேருரையில் தமிழ் ஆட்சிமொழி யாவதைக் குறித்து அருமையான சில கருத்துக்களை வெளியிட்டார். "கல்லூரிகளில் தமிழ்நாட்டில் தமிழ் போதனா மொழியாக இருக்கவேண்டும் என்று கூறுவதில் இன்னமும் ஆட்சேபம் இருந்து வருவது வியக்கத் தக்கதாகும். ஆரம்பக் கல்வி நிலையிலிருந்து, கல்லூரிக்கல்வி நிலைவரை தாய்மொழியாகிய தமிழைத்தான் உபயோகிக்க வேண்டும். தமிழே போதனாமொழியாக இருக்கவேண்டும். எல்லா பாடங்களையும் தமிழில் போதிக்க முடியும். பிற மொழிகள் மூலம் கல்வியானது எல்லோருக்கும் பயன்படக் கூடியதாக இருக்க வேண்டும்.

"புது பாடத் திட்டப்படி தமிழுக்கு முதன்மை கொடுக்கப்பட்டிருக்கிறது. இத் திட்டப்படி எட்டாவது வகுப்பு முதல் பதினோராவது வகுப்பு வரை மாணவர்கள் மூன்று மொழிகளைக் கற்க

வேண்டும். (1) தாய்மொழி. (2) பிரதேச மொழி அல்லது ஏதாவது ஓர் இந்திய மொழி. (3) இந்திய மொழி யல்லாத வேறு ஏதாவது ஒரு மொழி. சமஸ்கிருதத்தை வாசிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. சர்க்கார் உத்தியோகங்களுக்காக இந்தியைப் பலர் கற்கக்கூடும். மற்ற நாடுகளில் மாணவர்கள் மூன்று மொழிகள் வாசிப்பது சுலபம். எழுத்து ஒன்றே. ரோமன் எழுத்து மூலம் அவற்றைக் கற்கிறார்கள். இந்தியாவில் அப்படியில்லை. மூன்று மொழிகளுக்கும் தனித்தனியாக எழுத்துக்களைக் கற்க வேண்டிய கஷ்டம் இருக்கிறது. இரண்டாவத பகுதியில் தமிழைக் கற்க அதிக வசதிகளைச் செய்து கொடுக்கும்படி பெற்றோர்கள் சர்க்காரை வற்புறுத்திக் கேட்கவேண்டும். எந்தப் பாடத்தையும் கற்றுக்கொடுக்க ஆசிரியர்கள் தயாராக இருப்பார்கள்" என்று தலைவர் தமிழ்ராஜ்யத்திலுள்ள தமிழாசிரியர்கள் அனைவர் சார்பிலும் உறுதி கூறி யிருக்கிறார்.

இம் மாநாட்டில் நல்ல பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. தமிழாசிரியர்கள் தங்களுடைய வாழ்க்கைத்தர உயர்வு கோரி மட்டும் தீர்மானங்கள் நிறைவேற்றாமல், தங்களுக்கு வாழ்வளித்திருக்கும் தமிழ்மொழி யாக்கத்துக்கும் தமிழ்நாட்டுச் சிறப்புக்குமான தீர்மானங்களை நிறைவேற்றி யிருக்கிறார்கள். சென்னை ராஜ்யத்துக்குத் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றி வழங்க வேண்டுமென்றும், பள்ளிக்கூடங்களிலும் தமிழ் ஆட்சியானதற்கு அறிகுறியாகத் தக்க ஸ்தானம் அளிக்கப்பட வேண்டுமென்றும் தமிழின் தரம் உயர முதல் படிவத்திலிருந்தே தமிழ் ஆசிரியர்களையே தமிழ் கற்பிக்க அமர்த்த வேண்டும் என்றும், தமிழ் ஆசிரியர்களையே வகுப்பு ஆசிரியர்களாக அமர்த்த வேண்டும் என்றும், சென்னை, திருச்சி வானொலி நிலையங்களில் ஆகாஷ்வாணி சுபச் சங்கீதம் போன்ற பிறமொழி சொற்களை நீக்கி நல்ல தமிழ் வழங்கவும் தமிழிசை, தமிழ் நாடகங்களே வழங்கவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் வலியுறுத்தும் தீர்மானங்கள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கனவாகும். தமிழ் நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள அறிஞர் பலரும் கோயம்புத்தூரில் திரண்டு நின்று அரிய பெரிய கருத்துக்களை வெளியிட்ட தமிழ் ராஜ்யத் தமிழாசிரியர் மாநாடு பலவகையிலும் சிறப்புடைய தொன்றாகும்.

---

# திருவனந்தபுரம் சர்க்கார் பொருட்காட்சிச்சாலை

திருவனந்தபுரம் சர்க்கார் பொருட்காட்சிச் சாலையில் உள்ள கலைப்பொக்கிஷங்களில் மரச் செதுக்கு வேலைப்பாடுகள் தான் மிக விசேஷமானவை என்று கூறலாம். கேரள ராஜ்யத்திலுள்ள வனங்களில் பல்வேறு வகையான மரங்கள் ஏராளமாக இருக்கின்றன, எனவே, கேரளாவில் மரச் செதுக்கு வேலை நீண்டகால பரம்பரைத் தொழிலாக இருப்பதில் வியப்பொன்றுமில்லை. அந்தக் காட்சிச்சாலையில் இருக்கும், பொருட்கள் சுமார் 400 வருஷங்களுக்கு முந்தியதாக இருக்க முடியாது.

கேரள ராஜ்யத்தில் இருந்து அழிந்துபோன ஓரு பழைய கோவிலிலிருந்து எடுக்கப்பட்ட பாகங்களினால் ஆக்கப்பட்ட மண்டபமொன்று பொருட்காட்சிச்சாலையின் தலைவாசலில் வைக்கப்பட்டிருக்கிறது. அது கேரள நாட்டுக் கலைஞர்களுக்கு மரச் செதுக்கு வேலையிலுள்ள தேர்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அழகான செதுக்கு வேலையுள்ள தூண்கள், அவைகளின் உச்சியில் ஊசலாடும் தொங்கட்டங்கள், தாமரை மொக்கு உருவத்தில் செதுக்கியிருக்கும் விதானம், கூர்கோபுரம் போன்ற கூரை இவை அத்தனையும் சேர்ந்து அம்மண்டபத்தை ஒரு கலைக் கோவிலாக ஆக்கியுள்ளன, அந்த மண்டபத்தில் ஆனந்தக் கூத்தாடும் நடராஜரின் வெண்கலச்சிலை ஒன்று—மிகச் சிறந்த சிலை—வைக்கப்பட்டிருக்கிறது. அதன் முன் (சேர்த்திக் கடன்) வேண்டுதல் விளக்கு ஒன்றும் வைக்கப்பட்டிருக்கின்றது.

காட்சிச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் "கூத்தப் பாலம்"; (நடன அரங்கு) மாடல், கலைச்சிறப்பு மிக்க மற்றொரு மரவேலைப் பொருளாகும்.

அங்குள்ள காட்சிப் பொருள்களில் நம் மனதைக் கவரும் மற்றொரு அம்சம் பத்மநாபபுரம் கோவில் ரதம். அது சுமார் 300 வருஷங்களுக்கு முன்பு செய்யப்பட்டது. அது மூன்று தட்டுகள் உள்ளது; உயரம் 9 அடி. அடித்தட்டு 1½ அடி நீளமும், 9 அடி அகலமும் கொண்டது.

கேரள நாட்டின் தனிப்பட்ட கலைப்போக்கைச் சிறப்பாக எடுத்துக் காட்டுகிற புஷ்ப விமானம் ஒன்றும் அங்கே இருக்கிறது.

## வெண்கலச் சிலைகள்

அங்கிருக்கும் வெண்கலச் சிலைகளில் வட திருவிதாங்கூரிலிருந்து கண்டெடுக்கப்பட்ட விஷ்ணு விசேஷ அம்சமாகும். ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால் செய்யப்பட்ட அவ்வுருவம் பண்டைக் காலக் கலைஞர்களின் திறமைக்கு சான்று கூறி நிற்கிறது.

சதியின் சடலத்தைத் தோள்மேல் போட்டுக்கொண்டு நிற்கும் சிவஸ்சொரூபச் சிலை அங்கு வருவோர் மனதையும் ஒருங்கே கவர்ந்து விடுகிறது. இது ஒரு அலாதியான சிலையாகும். சதி உயிர்

நீத்ததை உலகுக்கு அறிவிக்கும் பூதகணம் ஒன்று வாயில் இரு எக்காளங்களை வைத்து ஊதிக்கொண்டு சிவனின் பக்கத்தில் நிற்கிறது.



இந்தப் படம் கஜதாண்டவரின் உருவத்தைச் சித்தரிக்கிறது.



அக்காட்சிச்சாலையில் ஐந்து நடராஜ விக்ரகங்கள் இருக்கின்றன; அவைகளில் ஒன்றின் பின்னால் அக்கினி வட்டம் (பிரபை) இருக்கின்றன; மீதி இரண்டில் அது இல்லை. வெண்கலச் சிலைகளில் குறிப்பிடத்தக்க மற்றொரு சிலை கஜதாண்டவ சிலையாகும். அச்சிலையில் தாண்டவமூர்த்தி காலை வைத்திருக்கும் பாணி வழக்கத்துக்கு மாறாக இருக்கிறது; முயலகனுக்குப் பதிலாக யானைத் தலையில் காலை வைத்திருப்பதும் புதுமையாக இருக்கிறது. ஆனால், அது சமீப காலத்தைச் சேர்ந்தவை தான்.



இக் காட்சிசாலையி லிருக்கிற வெண்கலச் சிலைகளில் சோமாஸ்கந்தருடைய இப் பிரதிமையைக் காணலாம்.

## கதகளி

கேரளத்தின் பிரபல கலையாக விளங்கும் கதகளி நடனத்தைக் காட்டும் ஆறு குட்டி பொம்மைகள் தலைவாசலின் அருகிலுள்ள சுவர்களில் பதிந்திருக்கும் பெட்டிகளில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. நாடக பாத்திரங்களும் அவர்களின் பாவமும் வெகு தெளிவாகத் தெரியும்படி அவை அழகாகச் செதுக்கப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டிருக்கின்றன.

பல விதமான இசைக் கருவிகள் அங்கு காட்சிக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. நரம்புக்கருவிகள், தோல் கருவிகள் முதலியவை உள்ளன. ஜாவா, பாலி ஆகிய தீவுகளிலுள்ள மத ரீதியான நடனங்களைச் சித்தரிக்கும் அனேக பொருள்களும் அக்காட்சிச் சாலையில் இருக்கின்றன.

# பிரளயம்

"புதுப்பிரியன்"

கி. பி. 1999-ஆம் ஆண்டு உலகம் தன் போக்கில் உருண்டு கொண்டிருந்தது. பிறப்பிலும் இறப்பிலும் எந்தவித மாறுதலும் இல்லை. அதே ஆண்டு நவம்பர் மாதம் முதல் தேதி வெளியான தினசரிகளில் ஒரு நூதன விளம்பரம் தோன்றியது. ஒரே நாளில் உலகச் செய்தியாகவும் பரவிவிட்டது.

பூலோக வாசிகள் அயர்ந்து போனார்கள். வியப்பின் எல்லையைக் கடந்து பெருமூச்சு விட்டார்கள்......இப்படியும் நடக்குமா என்று குழம்பினார்கள்...

கருத்திலே தோன்றாத புதுமை! இலக்கியத்திலே காண முடியாத அற்புதம்! வசிய சக்திகளுக்கு அப்பாற்பட்ட ஒரு வினோதம்! மனிதனின் மாபெரும் சாதனை...இப்படி பிரமிக்க வைக்கும் தலைப்புகளை அள்ளி வீசியது அந்த விளம்பரம். அது மேலும் கூறுகிறது... மனிதன் பறக்கிறான்! உண்மை......அந்தரத்திலே வெட்டவெளியிலே மனிதன்...நம்மைப் போன்ற ஒரு சாதாரண பிறவி பறக்கும் அதிசயத்தைப் பாருங்கள்...நாளது 2000ம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல்தேதி கருந்தட்டான் பட்டிணம் சேவல் கட்டம் பொது மைதானத்தில் மாலை ஆறுமணிக்கு இவ்வற்புத நிகழ்ச்சி நடைபெறும்...கனம் பிரதம மந்திரி ஸ்ரீமான்...தலைமை வகிக்கிறார்...கட்டணங்கள் இத்யாதி இத்யாதி...

இந்த விளம்பரம் தொடர்ந்து தினந்தோறும் வர ஆரம்பித்தது. பொதுமக்களின் மனோபாவம் வெவ்வேறு விதமாக இருந்தது...... மனிதனாவது...பறப்பதாவது......வெறும் பேத்தல், அய்யா...சுத்த ஹம்பக்...எவனோ புரளி கிளப்பறான்...காசு சுரண்டும் வழி.. பறவை செய்வதை எங்கேயாவது மனிதன் செய்ய முடியுமா?...ஏன் ஸ்வாமீ......மனிதன் முயற்சித்தால் ஆகாத காரியம் கூட இருக்கிறதா?...கப்பலையும் ஆகாய விமானத்தையும் உலகுக்கு கொடுத்தது யாரய்யா...தேவதூதர்களா?...மனிதன் அய்யா, மனிதன்! அவனை சாதாரணமாக நினைத்து விடாதீர்...வானத்தை முட்டும் இமயத்தின் உச்சியைக்கூட மனிதன்தான் கண்டுபிடித்தான்...மறுக்கிறீரா?...இல்லை...இல்லை......பார்க்கலாம்......வெறும் பேச்சுக்குச் சொன்னேன்...இப்படிப் பலரகமான பேச்சுக்கள். வெளி தேசங்களில் இந்தச் செய்தி மிகுந்த பரபரப்பைக் கொடுத்தது...பல செல்வந்தர்கள் கருந்தட்டான் பட்டிணத்திற்கு வர முயன்றார்கள். அந்தப் பட்டிணம் அமர்க்களப்பட்டது. நாள்தோறும் அந்த விளம்பரம் பல வர்ணங்களில் கண்களைக் கவர்ந்தது...நிமிஷந்தோறும் மக்கள் கூட்டம் பெருகிக்கொண்டேயிருந்தது...அங்கே வந்து இறங்கிய பல செல்வந்தர்களுக்கு தங்க இடமில்லாமல் போகவே அரசாங்கம் அதற்கு ஏற்பாடு செய்ய நேர்ந்தது. நெருக்கடியை நன்றாக உணர்ந்த நிர்வாகிகள் நவம்பர்மாத மத்தியிலிருந்தே டிக்கெட்டுகளை விற்க ஆரம்பித்தனர். இதனால் கள்ள மார்க்கெட்டும் அதிகமாகி விட்டது. இந்தக் குற்றத்திற்காக பலபேர் கைது செய்யப்பட்டனர். புதுமையைக் காணப் போகிறோம் என்ற ஆனந்தத்தில் ஜனங்கள் காசை அள்ளி வீசி டிக்கெட்டுகளுக்கு முந்திக்



கொண்டார்கள். ஒரே நாளில் முதல்நாள் காட்சிக்கான மூவாயிரம் டிக்கெட்டுகளும் தீர்ந்து விட்டன. கள்ள மார்க்கெட் பெருகி விட்டதால் மேற்கொண்டு டிக்கட்டுகள் விற்பது நிறுத்தப்பட்டது. இந்த விளம்பரம் வெறும் கண் துடைப்பாக இருக்குமோ என்று நிர்வாகிகளின் மீது போலீஸின் பார்வை தீவிரமாக இருந்தது. போலீஸ் கண்காணிப்பிலேயே விளம்பரமும் தவறாமல் வந்து கொண்டிருந்தது. டிக்கெட்டு கிடைக்காத பலர் ஆத்திரப்பட்டார்கள். கூட்டமாக 'இடத்தைப் பெருக்கு...இன்னும் ஆயிரம் டிக்கெட்டுகள் கொடு என்று கோஷமிட்டுப் புரட்சி செய்தனர். டிக்கெட்டு வைத்திருந்தவர்களுக்குத் தூக்கமே இல்லை. மனிதன் பறக்கப் போகும் மகா அதிசயத்தை மானசீகமாகப் பார்த்துக்கொண்டே தவித்தார்கள்.

கி. பி. 2000-ம் வருஷம் பிறந்தது. அன்று காலையிலிருந்து கருந்தட்டான் பட்டிணம் அமர்க்களப்பட்டது...உலக மக்களின் கருத்து அங்கேயே இருந்தது. ஏராளமான சுவரொட்டிகளும் விளம்பரங்களும் கண்ணைப் பறித்தன. நினைத்துப் பார்க்கவும் முடியாத அற்புதத்தை இன்று நேரிலே காணுங்கள்...கனவிலேயும் எண்ண முடியாத சாகஸத்தை இன்று கண்ணாரக்கண்டு களியுங்கள். இன்று மாலை ஆறுமணிக்கு கருந்தட்டான் பட்டிணத்து சேவல் கட்டம் பொது மைதானத்தில் பூமியின் ஆகர்ஷண சக்தியையே வெற்றி காணும் வீரனைக் காண்பீராக...இந்த அற்புத நிகழ்ச்சி இன்றிலிருந்து மறு அறிவிப்பு வரை தினசரி மாலை ஆறுமணிக்கு நடைபெறும்...

மாலை மூன்று மணியிலிருந்தே சேவல் கட்டம் மைதானத்தின் சுற்று வட்டாரத்தில் வண்டிப் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. மிதமிஞ்சிய கும்பல் கூடிவிட்டது. போலீஸ் குதிரைப்படை கூட்டத்தை ஒதுக்கி விட்டுக்கொண்டிருந்தது.

...மைதானத்திற்குள் பிரம்மாண்டமானதொரு பந்தல் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. பறக்கும் காட்சி உள்ளிருப்பவர்களுக்கு மட்டுமே தெரியும்படியாக கொட்டகை அமைக்கப்பட்டிருந்தது. மதில் சுவரில் ஏறியவர்களை போலீஸார் பிடித்துக்கொண்டார்கள்... மணி ஐந்து. இன்னும் கரியாக ஒரு மணி நேரம் இருக்கிறது. இந்த ஒரு மணியைக் கழிக்கத் தெரியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தது காண வந்த கூட்டம்.. டிக்கெட்டு இல்லாத ஏமாற்றத்தினால் வெளியே இருந்தவர்கள் இப்போது ஆரவாரம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். வெறும் தண்ணீரைக் கொடுத்து சோடா என்று ஏமாற்றிக்கொண்டிருந்தான் ஒரு கடைக்காரன். கொஞ்ச நேரத்தில் அவன் கடையிலிருந்த சோடாபாட்டில்கள் பறந்தன. இரண்டே நிமிஷங்களில் அந்தக் கடை சூறையாடப்பட்டது. கலகத்தை அடக்க அதிகமான போலீஸ் படை வரவழைக்கப்பட்டது.

இதனிடையில் கொட்டகையில் உள்ளே இருந்தவர்களின் பார்வை தீட்சண்யமாகிக் கொண்டிருந்தது. கனம் பிரதம மந்திரியும் மற்றும் நிருபர்களும் தங்கள் இடங்களை ஆக்ரமித்துக் கொண்டார்கள். நடுநாயகமாக விளங்கிய பெரிய மேடையில் மைக்

வைக்கப்பட்டிருந்தது. மணி ஐந்தரை. ஒருவருக்குமே இருப்புக் கொள்ளவில்லை. ஆயிரமாயிரம் கண்கள் மேடையைத் துருவிக் கொண்டிருந்தன. ஐந்தேமுக்கால் மணிக்கு ஒரு இளைஞர் மைக்கின் முன்பு தோன்றினார். இவர்தான் பறக்கப் போகிறாரோ? கூடியிருந்த மஹா ஜனங்களின் புரிபடாத கூச்சல் அவரைப் பேசவிடவில்லை. பர்தாபமாக கூட்டத்தைப் பார்த்தார், ஆரவாரம் கொஞ்சம் அடங்கியதும் பேச ஆரம்பித்தார். "கனம் பிரதம மந்திரி அவர்களுக்கும் மற்றும் அற்புதக் காட்சியைக் காணக் கூடியிருக்கும் பொதுமக்கள் குழாத்திற்கும் என் வணக்கத்தைச் சமர்ப்பிக்கிறேன். இன்னும் சில நிமிஷங்களில்—உங்கள் வாழ்நாளிலே இதுவரை கண்டிராத அதிசயத்தை—இப்போது பிரத்தியட்சமாகப் பார்க்கப் போகிறீர்கள். இது செப்பிடு வித்தையோ, குட்டிச்சாத்தான் வேலையோ என்றெல்லாம் எண்ணிக் கலக்கமடைய வேண்டாம்...உங்கள் உள்ளங்களை திடப்படுத்திக் கொள்வீராக...... மனிதன்—உங்களையும் என்னையும் போன்ற ஒரு சாதாரண பிறவி—இங்கே பறக்கும் மெய்யான அற்புதத்தை நீங்கள் பார்க்கப் போகிறீர்கள். உங்கள் பொறுமையைச் சோதிக்கும் நோக்கம் எங்களுக்குக் கிடையாது. சரியாக ஆறுமணிக்கு இந்த அற்புத நிகழ்ச்சி நடைபெறும்—மறுபடியும் நினைவூட்டுகிறேன்...உங்கள் மனத்தை திடப்படுத்திக் கொள்ளுங்கள்...அனைவரும் அமைதியாக இருக்க வேண்டுகிறேன்..." இப்படிச் சொல்லிவிட்டு அவர் திரைக்குப் பின் போய்விட்டார்.

மணி ஆறு. மெல்ல மெல்லத் திரை விலகியது. கொட்டகை பூராவும் பயங்கர மௌனம் தலைகாட்டிக் கொண்டிருந்தது. சற்று முன்பு பேசிய அதே இளைஞர் இப்போது மீண்டும் தோன்றினார். அமைதியாக மண்டியிட்டபடி சில நிமிஷங்கள் பிரார்த்தனை செய்தார். பிறகு திடீரென்று எழுந்தார்: "கவனியுங்கள்...இதோ நான் பறக்கப் போகிறேன்!...ஜனங்கள் திறந்தவாய் மூடாமல் அவரையே பார்த்தார்கள். மறுபடியும் அந்த வாலிபர் பேசுகிறார்; "என்னை நன்ருகப் பார்த்து விடுங்கள்...நான் உங்களைப்போல ஒருவனே... எனக்கு இறக்கைகள் எதுவுமில்லை. இறக்கையில்லாதவன் எப்படிப் பறக்கப் போகிருன் என்று நினைக்கிறீர்கள். ஆனால் அது தப்பு. இறக்கையில்லாமலேயே ஒரு மனிதனால் பறக்க முடியும். விஞ்ஞானத்தின் வளர்ச்சியினூடே என் அறிவை தீர்க்கமாகச் செலுத்தியதன் விளைவே, இன்று என் வெற்றியை உங்கள் முன்பு அரங்கேற்றுகிறேன்." எல்லோரும் கண்ணை இமைக்காமல் பார்த்தார்கள். அவர் தன் கைகள் இரண்டையும் செங்குத்தாக உயரே தூக்கினார். பிறகு மெதுவாகப் பக்கங்களில் பாதி வரை இறக்கி பறக்கும் நிலையில் நின்றார். விநாடிக்கு விநாடி மௌனம் பயங்கரமாக இருந்தது. 'ஆ! இதென்ன...சொன்னபடி அவர் உடம்பு மேலெழும்புகிறதே'...ஆம்...அவர் பறக்க ஆரம்பித்து விட்டார்...

கனம் பிரதமமந்திரி வியப்பின் மிகுதியால் எழுந்து விட்டார். அந்த இளைஞர் பறந்து கொண்டிருக்கும்போதே கைத்தட்டல் ஆரம்பித்து விட்டது. பல 'கிளிக்'குகள் ஒலித்தன. பெரிய காமிராக்கள் வெளிச்சம் காட்டின. காலைப் பத்திரிகைகளிலே புகைப்படங்கள் வந்தாக வேண்டுமே! அந்த இளைஞர் சாவதானமாக—சாயங்கால வேளையிலே கருடபக்ஷி பறக்குமே அந்தமாதிரி ஒரு சுற்று பறந்துவிட்டு தன்னிருப்பிடதிற்கு வந்தார். கைத்தட்டல் ஓயவே இல்லை. சைகை காட்டிவிட்டு மறுபடியும் உயரே எழும்பினார் இளைஞர். இந்தத் தடவையில் முன்னைக் காட்டிலும் வேகம் அதிகரித்தது. இதேபோல ஒவ்வொரு சுற்று வரும்போதும் வேகமும் அதிகரித்துக்கொண்டே வந்தது. ஒன்பதாவது முறை முடிந்தது. அவர் பேசுகிறார்; "நண்பர்களே!...நீங்கள் நினைவு உலகத்தில்தான் இருக்கிறீர்கள் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்! உங்கள் கண்களை அகல விரித்துப் பாருங்கள்..." அவர் துளிக்கூட ஆயாசமில்லாமல் தொடர்ந்து பேசலுற்ருர்." "இப்போது நான் பறக்கப் போகும் முறை இந்தக் காட்சியின் கடைசிமுறை. அடுத்த காட்சி மறுபடியும் நாளை இதே நேரத்தில் இங்கே நடைபெறும் .." திரும்பவும் ஜனங்களின் ஆரவாரக் கூச்சல். ஆஹாகாரம் எழுப்பினர்கள்; த்லா, த்லா ஒலி சுண்டெலிக் கூட்டமே படை யெடுத்தாற்போ லாகியது. வில்லினின்றும் பாயும் அம்பைப் போலவே அவர் பாய்ந்து பறந்தார், இரண்டே விநாடிகளில் அந்தக் கொட்டகையைச் சுற்றிக் கொண்டு பழைய இடத்திற்கு வந்துவிட்டார். முதல் சுற்று இருபது விநாடிகள், இரண்டாவது பதினெட்டு, மூன்ருவது பதினைந்து...... இப்படியே படிப்படியாகக குறைந்து கடைசிச் சுற்று இரண்டே விநாடிகளில் முடிந்துவிட்டது. கண கணவென்று மணி ஒலித்தது.



அடுத்தநாள் பத்திரிகைகளில் மனிதன் பறந்த அதிசயம் அமர்க்களப்பட்டது.

மனிதன் அந்தரத்தில் பறந்த அதிசயம்!

நகரில் ஜனசமுத்திரம்! போலீஸ் தீவிரம்!

கருந்தட்டான் பட்டிணம்: ஜனவரி 2-கடந்த இரு மாதங்களாக வெளிவந்த விளம்பரத்தின்படி நேற்று மனிதன் பறக்கும் அபூர்வம் கனம் பிரதம மந்திரியின் முன்பு நடைபெற்றது. எவ்வித தாங்குதலுமின்றி ஒரு இளைஞர் (24) பட்சிகளைப்போலப் பறந்து காட்டினார். கடைசியாக—அதாவது பத்தாவது முறையில் அவர் பறந்தபோது மணிக்கு இருநூறு மைல் வேகத்தில் பறந்ததாகக் கணக்கெடுக்கப்பட்டது. பறந்த இளைஞர் ஒரு இந்திய விஞ்ஞானி என்று மட்டுமே தெரிகிறது. நகரில் இதை முன்னிட்டு அதிகமான பரபரப்பேற்பட்டிருப்பதால் இன்று முதல் 144 தடைச் சட்டத்தை கமிஷனர் பிறப்பித்திருக்கிருர்.

இரண்டாவது நாள் காட்சி முதல் நாளைப்போலவே எந்த மாறுதலுமில்லாமல் நடைபெற்றது. 144 தடைச் சட்டத்தை மீறிய பலர் கைது செய்யப்பட்டனர். அன்றும் குதிரைப்படைதான் கூட்டத்தைக் கலைத்தது. தொடர்ந்து காட்சி தினம் நடைபெற்றது.

* * *

கைலையங்கிரியிலே பார்வதி சமேதராக வீற்றிருந்த முக்கண்ணனின் தேஜோமய வதனம் ஒளி மங்கிக் கிடந்தது. சிருஷ்டி

கர்த்தாவும் விஷ்ணுபகவானும் உட்பட முப்பத்து முக்கோடி தேவர்களும் மூவாயிரம் முனிவர்களும் ஒருமிக்கக் கூடியிருந்தார்கள். எல்லா முகங்களிலும் வழக்கமான தேஜஸ் இல்லை. அசாதாரண மான அமைதி அங்கே நிலவிக் கிடந்தது. யார் முதலில் பேசுவது என்றே புரியவில்லை. துர்வாச முனியினால் இன்னும் அமர்ந்திருக்க முடியாமல் திடீரென்று ஆசனத்தை விட்டுத் துள்ளி எழுந்தார். தேவர்கள் நடுங்கினர். வாயு பகவான் சூடு பொறுக்காமல் திணறி னார். கோபத்தால் துடிக்கும் முனியின் வாயினின்றும் வார்த்தை கள் வெடிக்க ஆரம்பித்தன. "நெற்றிக் கண்ணா! பூலோகத்திலே நினைக்க முடியாத அநியாயம் இன்று நேரிலே நடப்பது கண்டு நம் நெஞ்சு நடுங்குகிறது. கேவலம் மானிடப் பிறப்புப் பூண்டவன் பட்சியைப் போலப் பறக்கிறான். நம்மை அவமதிக்கும் இந்த அநியாயத்தை நம்மால் இனி க்ஷணமும் பொறுக்க முடியாது. ஏன் மௌனியாகிவிட்டீர்கள்......கூறுவீர் கைலையங்கோனே.........இது பிரம்ம தேவனின் தவறு என்று நினைக்கிறேன். சிருஷ்டித் தலைவன் தக்க மறுமொழி கூறுவானாக......"கோபக்கனல் வீசும் முகபாவத் துடன் பிரம்ம தேவனைப் பார்த்துக்கொண்டே அமர்ந்தார் அந்த மஹரிஷி. நான்முகன் எழுந்தார். அவரது நான்கு தலைகளும் ஆடின. வாய் திறந்து பேச ஆரம்பித்தபோது சில தீப்பொறிகள் தெறித்தன.

வசிஷ்ட மஹரிஷி அவசரமாக எழுந்து ஓம் சாந்தி...ஓம் சாந்தி என்று ஜபித்துவிட்டு அமர்ந்தார். சிருஷ்டிக் கடவுள் பேசுகிறார்: "உமையொரு பாகத்தவனே! முனிவரின் கூற்றுப்படி என் சிருஷ்டி யில் ஏதாவது தவறு இருக்குமாயின் நீல கண்டனே...நான் இந்தத் தொழிலையே விட்டுவிட்டு நரகம் ஏகவும் சித்தம் ..சித்தம்! தவறு என்னுடையதுதான் என்று துர்வாசரோ அல்லது வேறு யாராயி னும் சரி...நிரூபித்து விட்டால்......திரிபுரம் எரித்தவனே...என்னை சிட்சிக்க வேண்டுகிறேன். அந்த இளைஞன் ஒன்பது வருஷ காலம் விஞ்ஞான ஆராய்ச்சி செய்தது நமது காக்கும் பிரானாகிய விஷ்ணு பகவானுக்குத் தெரியும். ஆராய்ச்சியின் பலனால் அவனுக்கு அந்த சக்தி சித்தியாகியிருக்கும். வேறு நான் எதுவும் விளக்கத் தேவை யில்லை..."பிரம்மதேவன் அமர்ந்துவிட்டார். அவர் தலைகள் இன்னும் ஆடின. விஷ்ணு பகவான் எழுந்து "ஸ்வாமி" என்று ஆரம்பித்த போது எம்பெருமானின் அக்கினிப் பார்வையைத் தாளமாட்டாமல் பின்னுக்குச் சாய்ந்துவிட்டார்.

அனைவரையும் கையமர்த்தினார் பார்வதி நாதர். "சிரேஷ்டர் களே! இதுபற்றி ஒவ்வொருவரும் தமது அபிப்பிராயத்தைத் தெரி வித்துப் பேச இது சமயமல்ல. பூலோக சட்ட சபையும் அல்ல. இதெல்லாம் நேர விரயமேயன்றி வேறல்ல. உடனே ஒழுங்கு நடவ டிக்கை எடுத்தாக வேண்டும். பூலோக நரன் நம்மை ஏமாற்றிவிட் டான். பூமாதேவியின் சக்தியை நாணித் தலை குனியச் செய்துவிட் டான். இதனால் பூலோகத்திலே நமது மதிப்பும் பங்கப்படுகிறது... அதோ அங்கே நம்மைப்பற்றிப் பேசுகிறார்கள்......கவனியுங்கள்..." எல்லோரும் ஞான திருஷ்டியில் பார்த்தார்கள்...



கருந்தட்டான் பட்டிணம் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. பிரசங்கி காரசாரமாகப் பேசுகிறார். "மனிதன் வெற்றி கண்டுவிட்டான். சிந்தித்துப் பாருங்கள். தோழர்களே! உண்மையிலேயே கடவுள் என்ற ஒருவர் இருப்பாராகில் அவர் இப்போது தலைகுனியத்தான் வேண்டும். நல்லவேளை! அப்படி யாரும் இல்லை என்று நம்பி என்னைத் தேற்றிக்கொள்கிறேன். நீங்களும் அப்படியே செய்யலாம். இன்னும் சில ஆண்டுகளில் ஒவ்வொரு மனிதனும் பறப்பது சாத்தியமே."

முக்கண்ணனின் குனித்த புருவங்கள் நெரிந்தன. முகம் விகாரமாகியது. ஆத்திரத்தை அடக்கமுடியாமல் முடியிலிருந்த கங்கையினின்றும் சில துளிகளை அந்த இடத்தில் வீசினார்......கருந் தட்டான் பட்டிணத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்றுக்கொண் டிருந்த இடத்தில் வானமே பொத்துக்கொண்டதுபோல மழை கொட்ட ஆரம்பித்து விட்டது. கூட்டம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. தேவர்கள் நடுநடுங்கினர். துர்வாசரோ பூலோகம் அழியட்டும் என்று இரைந்தார். உடனே முப்பத்து முக்கோடி தேவர்களும் பூலோகம் அழியத்தான்வேண்டும்...பிரளயம். பிரளயம் என்று இடிமுழக்கம் செய்தார்கள். எம்பெருமான் மறுபடியும் கையமர்த்தினார். ஆனால் துர்வாசர் அடங்கவில்லை. பூலோகக் அழியத்தான் வேண்டும் என்று உறுமினார். அந்த உறுமல் பயங்கர மாக கைலாயத்தில் எதிரொலித்தது. அதோடு சாந்தமடைய வில்லை. அந்த முனி சிரேஷ்டர் தன் முழுச் சக்தியையும் பிரயோ கித்துவிட்டார். சிவனின் பனித்த சடையினின்றும் கங்கை பூலோ கத்திலே விழுந்தது. பூமியில் பிரளயம்......பிரளயம்......மனிதப் பூண்டே அற்றுவிட்டது. பிரளயம்.

* * * *

"ஏன்னா, ஏதாவது சொப்பனம் கண்டேளா, என்ன...பிரளயம் பிரளயம்னு இது என்ன பேத்தல்......இங்கே அது இன்னும் வரவில்லை."

"கனவா?......"

"சிவன், 'சிவன்"என்று உளறினேன். "இன்னும் இரண்டு தரம் சொல்லுங்கோ...பயம் போயிடும்" என்றாள் பார்யாள். கண்ணைக் கசக்கிவிட்டுக்கொண்டேன். பகல் தூக்கம். நாற்காலியில் பத்தி ரிகை படித்துக்கொண்டிருந்தவன் அப்படியே தூங்கியிருக்கிறேன். பத்திரிகை மடியில் விரித்தபடி கிடந்தது. நான் படித்த சில வரிகள் மீண்டும் கண்ணில் பட்டது......"இன்னும் ஐம்பது வருஷங்களில் பூமியின் ஆகர்ஷண சக்தியை வென்றுவிடலாம் என்று பிரபல விஞ்ஞானி......அபிப்பிராயப்படுகிறார். அப்போது மனிதன் வானத் தில் பட்சிகளைப்போலப் பறக்க முடியும்......"

நான் பெரு மூச்சு விட்டேன்!

டெலிபோன் நெ. 3005. தபால்பெட்டி நெ. 167.

பஞ்சாங்கங்களில் பெரும் பிரசித்தி பெற்று
தன்னிகரற்று விளங்குவதும்
112-பக்கங்கள் கொண்டதுமான
**விளம்பி வருஷத்திய**
(நேத்திர-ஜீவ-நக்ஷத்திராதி, சாந்திர-சௌரமான)
**சர்வ முகூர்த்த**

# "ஆனந்தபோதினி"

*சுத்தத் திருக்கணித பஞ்சாங்கம்*

சென்ற 43 ஆண்டுகளாக நமது "ஆனந்தபோதினி"
பஞ்சாங்கத்தைக் கணித்து வந்த
திருக், சித்த, ஆரிய, சூரிய, சித்தாந்த, வாக்கிய
கணிதப் பயிற்சியில் வல்ல நிபுணர்கள்
பலரை உதவியாகக்கொண்டு,

அகில இந்திய மாத தேதிகளுடன்,
**ஸ்ரீ S. வாஸன்** அவர்களால்
சுத்தமாக இப் பஞ்சாங்கம் கணிக்கப்பெற்றது.

விலை 60 புது காசு.

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால் பெட்டி நெ. 167, சென்னை-1.

# பாரதியாரின் குயில்தரும் இன்பம்

**ம. சிவ சிதம்பரம்**

*

தேசீயக் கவி பாரதியார் தமிழ் இலக்கியத்திற்குப் பல வகைகளில் தொண்டு செய்திருக்கிறார். அவர் உருவாக்கிய தமிழ் வசன நடை தமிழ் மொழியில் ஒரு சரித்திர நிகழ்ச்சிபோல் இடம் பெற்று விட்டது. அவர் உணர்ச்சி மிகுந்து பாடிய தேசீயப் பாடல்கள் இசை உலகில் புது திருப்பத்தை உண்டாக்கின. அவருடைய இலக்கியங்களோ ஒவ்வொன்றும் மணியெனவே திகழ்கின்றன. அவற்றில் ஒன்றே குயில் என்னும் இலக்கியம்.

குயில் என்ற சொல்லைக் கேட்டதும் நம் மனம் நாத உலகில் மிதக்கின்றது. வசந்த காலத்தை நினைக்கச் செய்கின்றது. வசந்த காலத்தின் அழகும் அக்காலத்திற்கே உரிய குயிலின் இனிய குரலும் அமையவேண்டும் என்றே நம் குழந்தைகளுக்கு வசந்தம் என்ற பெயரை இடுகின்றோம். இவ்வாறு நம் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட வசந்த கால குயிலோசை பாரதியாரின் உள்ளத்தில் ஓர்அபூர்வ காதலையே உருவாக்கிவிட்டது. இவ்விதம் காதல் கொண்ட மனம் கற்பனையில் பாய்ந்தோடி கல்லும் உருகும் விதம் கதை அமைக்கின்றது.

## குயில் பாட்டின் வரலாறு

புதுவை நகரின் தெற்கேயுள்ள ஓர் மாஞ்சோலையில் பெண் குயில் ஒன்று இனிமையாகப் பாடிக்கொண்டிருந்தது. "குக்குக்கு" என அக் குயில் பாடும் பாட்டின் தொக்கப் பொருளெல்லாம் அங்கு உலாவிக்கொண்டிருந்த பாரதியாருக்கு விளங்கியது. அச்சோலையில் இருந்த வேறு பறவைகளும் எங்கேயோ போய்விட்டன. குயிலும் பாரதியாரும் தவிர வேறு யாரும் அங்கில்லை. குயில் அவ்வாறு பாடியது என்ன? இதை பாரதியாரே கூறுகின்றார். "காதல் காதல் காதல், காதல்போயின் சாதல் சாதல்" இப்படி பலவாறு பாடிய குயில் பாட்டு முடிந்ததும் சோக முற்று வாடியது. அப்பாடலைக் கேட்டவுடனே பெருங் காதல் கொண்டு விட்ட பாரதியார் "பிழை உனக் கெய்தியதென பேசாய்" எனக் கேட்க குயில் "நான் குயிலாகப் பிறந்தும் யாது காரணத்தாலோ யாவர் மொழியும் எளிதுணரும் பேறு பெற்றேன். ஆயினும் நான் காதலை வேண்டிக் கரைகின்றேன் இல்லையெனில், சாதலை வேண்டித் தவிக்கின்றேன் என்றது. பாரதியார் சிந்தித்துக்கொண்டிருக்கும்போதே மற்ற பறவைகளெல்லாம் வந்து விடவே குயில் "இன்றைக்கு நான்காம் நாள் இங்கு நீர் வரவேண்டும்; வாரீரேல் ஆவி தரியேன்" என்றுரைத்தது.

இவ்வாறு கூறிய குயில் பறந்து மறைந்து விட்டதால் குயிலின் மேல் மனதைப் பறிகொடுத்த பாரதியார் சித்தந்தனதின்றி வீடு சென்றார். அவ்விரவு அவர் பட்ட துன்பம் சொல்லத்தரமன்று. "தாளம் படுமோ தறிபடுமோ யார் படுவார்" என்ற சொற்களே

இதை விளக்கப் போதுமானது. மறுநாள் பொழுது புலர்ந்ததும் பாரதியார் மறுபடியும் அம்மாஞ்சோலையை நோக்கி கடுகி நடந்து அக்குயிலைக் காணவந்தார்.

பறவைகளெல்லாம் வேறெங்கோ போயிருக்க சோலையில் அக்குயில் ஓர் மரக் கிளையில் வீற்றிருந்து "ஓர் ஆண் குரங்கு தன்னு டனே, ஏதேதோ கூறி இரங்கும் நிலையைக்" கண்டார். அவர் தம் மன வெழுச்சியை சொல்லால் கூற முடியுமா? உடனே அக்குயிலை யும் குரங்கையும் கொல்லக் கருதினர். ஆயினும் குயில் கூறுவது என்னவென்றறிய அவை அறியாதபடி ஒளிந்திருந்து கேட்க ஆரம்பித்தார்.

முதலில் குயில் குரங்கை நன்கு புகழ்ந்து விட்டு, அதை தான் காதலிப்பதாகக் கூறி முதல் நாள் பாடிய "காதல் காதல் காதல்" எனும் பாட்டை "நீசக் குயிலும் நெருப்புச் சுவைக் குரலில் ஆசைத் ததும்பி அமுதூரப் பாடியது." அதைக்கேட்ட குரங்கு "காதலில்லை என்ருல் கணத்திலே சாதலென்ருல், காதலினற் சாகுங் கதியிலே என்னை வைத்தாய், இப்பொழுதே நின்னை முத்தமிட்டுக் களியுறு வேன், என்று பல பேசுவது" பாரதியாரைப் பண் செய்யவே. "கொன்றுவிட எண்ணிய குரங்கின்மேல் வீசினர் கைவாளை." ஆனல் சிறு குரங்கு அவர் வாளுக்குத் தப்பி முகஞ் சுளித்து தாவி யொளித்திடவும், ஒப்பிலா மாயத்தொரு குயிலும் தான் மறைய "மற்ற பறவைகளும் வந்து ஒலிக்க ஆரம்பித்தன. பாரதியார் தட்டுத் தடுமாறி குயிலை எங்குந் தேடியும் அது காணப்படவில்லை.

பாரதியார் மனத்துயருடன் வீட்டுக்குத் திரும்பி பிரக்கினை போய் வீழ்ந்து விட்டார். மாலையில் தான் சிறிது தெளிவடைந்தார். பலவாறு விசாரிக்க வந்த நண்பர்களைப் பிறகு கூறுகிறேன் என்று சொல்லிப் போகச் செய்து உணவுண்டு தூங்கிவிட்டார். மறுநாட் காலை துயிலெழுந்து "காலிரண்டும் முன்போலவே சோலைக் கிழுத் திட அங்கு சென்று குயிலைத் தேடி கண்டு பிடித்தார் பாரதியார். மாமரத்தின் கிளையில் குயிலிருந்து நீண்ட கதை சொல்லுவதும் ஓர் கிழக் காளைமாடதனை ஆவலுறக் கேட்பதுவும் கண்டு கோபங் கொண்ட பாரதியார் கொல்ல வாள் வீசக் குறித்தாலும் பறவை சொல்வதைக் கேட்பதுவும்" கண்டு கோபங்கொண்ட பாரதியார் கொல்ல வாள் வீசக் குறித்தானும் பறவை சொல்வதைக் கேட்ட பின் கொல்லலாம் என அமைதிகொண்டார்.

முன்போல் குயில் பாட்டை புகழ்ந்து விட்டு, தான் அதன்மேல் காதல் கொண்டு வருந்துவதாகக் கூறி, "பண்டுபோலே தனது பாழடைந்த பொய்ப்பாட்டை, எண்டிசையும் இன்பக் களியேறப் பாடியது" இப்பாட்டைக் கேட்ட பாரதியாரும் தன்னை மறந்து விட்டார். பாட்டு முடிந்ததும் காளையைக் கொல்ல வாள் வீசினர். ஆனல் குயிலும் மாடும் மறைந்துவிட்டன. பிறகு அவர் சிறு குயிலை வீணிலே தேடிய பின் வீடு வந்து சேர்ந்துவிட்டார்.

குயில் காதல் பாட்டை உரைத்ததும் அவர் மயல் கொண்டதும் குரங்கும் மாடும் அவருக்கு வயிரிகளாய் வந்து சேர்ந்ததும் வெகு



நேரம் வரை அவருக்கு எண்ண அலைகளை எழுப்பின. பிறகு ஒரு வாறு அவர் தூங்கிவிட்டார். மறுநாள் நான்காம் நாள், குயில் வரச் சொன்ன நாள், பாரதியார் வீட்டு மாடியில் திகைப்புற்றமர்ந் திருந்தபொழுது சோலை அருகில் ஓர் கரும்பறவை பறப்பது கண்டு அதைத் தொடர்ந்து சென்று மாஞ்சோலையை அடைந்தார். அங்கு அக்குயில் ஓர் மாமரத்தின் கிளையிலிருந்து மகிழ்ந்து காதல் எனும் இசையைப் பாடிக்கொண்டிருந்தது.

பாரதியார் அதைக்கண்டு "நீசக் குயிலே ஆசைக் குரங்கினை யும் அன்பா ரெருதினையும், எண்ணி நீ பாடும் இழிந்த புலைப் பாட்டை" கேட்பதற்கா என்னை இங்கு நடத்திவந்தாய் என பலப் பல கூறி கொன்றுவிட எண்ணினலும் நெஞ்சம் இடம் கொடுக்காத தால் நிறுத்திவிட்டார். குயில் கண்ணில் நீர் வடிய "அன்றில் சிறு பறவை ஆண் பிரிய வாழாது; எனக்கு காதல் அளியுங்கள்; இன்றேல் கொன்று விடுங்கள்; குரங்கையும் மாட்டையும் கண்டு காதல் விளை யாடியதாகக் கூறுகின்றீர். என்மேற் பிழையில்லை. என் கதையைக் கேளுங்கள்" என தன் கதையைக் கூற ஆரம்பித்தது.

முன்பொருநாள் இக்குயில் பொதிகையில் ஓர் மரக்கிளையில் அமர்ந்திருக்கும்போது ஓர் முனிவர் அவ்வழியே வந்தார். இது அவர் அடி பணிந்து "எனக்கு மானுடர்போல் சித்த நிலைவாய்த் திருக்கும் செய்தி ஏன்? எனக் கேட்டது. அதற்கு அவர் பின்வரு மாறு கூறலுற்ருர்.

## குயிலின் பழம் பிறப்பு

முற்பிறப்பில் நீ ஓர் வேடனின் மகளாய்ப் பிறந்து வளர்ந்தாய். உன் மாமன் மகனொருவன் மாடனெனும் பேர் கொண்டான் உன்னை மணக்க விரும்பினன்; "நீ யவனை, மாலையிட வாக்களித் தாய் மையலினலில்லை. அவன் சால வருத்தம் சகிக்காமல் சொல்லி விட்டாய்!" உன் அழகின் பெருங்கீர்த்தி தேய மெங்கும் பரவ, வேடர்கோன் தன் மகன் நெட்டைக் குரங்கனுக்காய் பெண் வேண்டி உன் தந்தையிடம் வந்து பன்னிரண்டு நாட்கள் மணம் புரிந்துக்கொள்வதாக நிச்சயதார்த்தம் செய்துகொண்டான். அது கேட்டு மாடன் வந்து சினங்கொள்ள எட்டு மாதங்களில் மருமம் சில செய்து திரும்பி விடுவதாய் நீ கூறினய். காதலினலில்லை. கருணையினலிஃதுரைத்தாய். சிலநாட்களுக்குப் பிறகு நீ தோழிய ருடன் காட்டில் விளையாடி வரும்போது, அங்கு வேட்டையாடி வந்த சேரமான் மகன் உனைக் கண்டு காதல் கொண்டான். நீயும் "மன்ன வனைக் கண்டவுடன் மாமோகம் கொண்டுவிட்டாய்."

தோழியரும் அவன் உருவைக்கண்டு பேரரசன் எனத் தெரிந்து அஞ்சி மறைந்து விட்டார். அவன் உன்னுடன் காதல் மொழி பேசி உன்னை மகிழ்வித்தான். நீங்கள் அங்கிருக்கும்போது ஊரிலிருந்து திருமணத்திற்காக வந்திறங்கிய நெட்டைக் குரங்கன், நீ தோழிய ருடன் காட்டிற்குச் சென்றிருப்பதறிந்து ஆத்திரந்தான் மிஞ்சி நின்னை ஆங்கெய்தி காணவந்தான்.

நெட்டைக் குரங்கன் வந்ததையும், நீ காட்டிற்குச் சென்றிருப்பதறிந்து அங்கு சென்றதையும் கேட்ட மாடன் தானும் ஓடோடி அங்கு வந்து சேர்ந்தான். 'அவ்விருவரும் நீங்கள் களித்திருப்பதைக் கண்டு கோபங்கொண்டு சேரன் மகனை நோக்கி ஒருசேர வாளை வீசினர். நடந்த தொன்றையும் நீங்கள் அறியவில்லை. வெட்டுண்ட சேர மைந்தன் சட்டென எழுந்து வாளினால் அவ்விருவரையும் வெட்டி வீழ்த்தினான். அவ்விருவரும் "பேச்சிழந்தே அங்கு பிணமாகக் கிடந்து விட்டார்."

சோர்ந்து வீழ்ந்த சேரமான் உனை நோக்கி "மறு பிறப்பிலாயினும் உனை சேர்வேன் எனக் கூறி உயிர்விட்டான். சேரமான் தொண்ட நாட்டு கடற் கரையைச் சேர்ந்த ஓர் ஊரில் மானிடனாக வளருகிறான். நீ இப்பிறப்பிலும் விந்தகிரியில் ஓர் வேடனுக்குக் கன்னிகையாகப் பிறந்தாய்' மாடன் குரங்குகள் இருவரும் பேயாக மாறி சுற்றி வரும்போது உனைக்கண்டு, இப்பிறப்பிலும் நீ மன்னனையே சேர்வாய் என்று கருதி, உனைக் குயிலாக்கி, நீ போகுமிடமெல்லாம் தொடர்ந்து சுற்றுகிறார்கள்.

தொண்டநாட்டில் வாழும் சேரமான் உன்னை ஓர் நாள் கண்டு உன் பாட்டில் மையல் கொள்வான். பேயிரண்டும் மோசம் செய்து சேரமான் சந்தேகப்படும்படி செய்துவிடும். அவனும் உன்னை வஞ்சகி என்றெண்ணிவிட்டு விட நிச்சயிப்பான். பின் விளைவதை நீ கண்டு கொள்வாய்.

மேற் கண்டவாறு குயிலின் பழம் பிறப்புணர்த்திய முனிவர் "சந்தி ஜெபம் செய்யும் சமயமாய் விட்டதென்று" கூறி மறைந்து விட்டார்.

## குயில் செய்த வியப்பு

இவ்வாறு தன் கதையைக் கூறி வந்த குயில், காதலருள் புரிவீர் காதலில்லை என்றிடிலோ, சாதலருளித் தமது கையால் கொன்றிடுவீர்." என்று கூறிய பாரதியாரின் கையில் வீழ்ந்தது. அதன்மீது இரக்கமும் அன்பும் கொண்ட பாரதியார் மூண்டு வரும் இன்பவெறி கொண்டதனை முத்தமிட்டார். ஆனால் என்ன வியப்பு! உடனே குயில் மறைந்துவிட்டது. அங்கு அழகான பெண் ஒருவள் காட்சியளித்தாள். பாரதியார் அப்பெண்ணுடன் கூடி பெருங்களிப்புக்கொண்டு சில பொழுது இருந்த பிறகு, "பக்கத்திருந்த மணிப்பாவையுடன் சோலை எல்லாம் ஒக்க மறைந்துவிட்டது." பாரதியார் ஓகோ எனக் கதறி வீழ்ந்தார்.

வியப்பிலும் வியப்பு! விழி திறந்து பார்க்கையிலே அவர்கள் இதென்ன? "பண்டைச் சுவடி எழுதுகோல் பத்திரிகைக் கூட்டம் பழம்பாய்" இவைகளே சூழ்ந்திருக்கக் கண்டார். அப்போது தான் அவர் வீட்டிலுள்ளோம் என உணர்ந்தார். இவ்வளவு நேரமும் தாம் கண்ட "சோலைக்குயில் காதல் சொன்ன கதை அத்தனையும், மாலை அழகின் மயக்கத்தால் உள்ளத்தே, தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சி" எனக் கண்டு கொண்டார்.



இதுவே குயில் எனும் இலக்கியத்தின் சுருக்கமான கதை. இதை பாரதியார் தம் சுய சரித்திரம்போல் கூறுகின்றார். இதில் பாரதியார் பொழிந்துள்ள கற்பனைத் திறம் உயர்ந்த தன்மையைச் சேர்ந்தது. சில நண்பர்கள் பாரதியார் குயில் பாட்டை மேனாட்டறிஞர் சிலரின் பாடலைத் தழுவிப் பாடினார் எனக் கூறினும் இது தனித் தமிழ் இலக்கியமாகவே திகழ்வதை யாரும் மறுக்க முடியாது. அவர் தம் உயரிய நடையும் பொருட் செறிவும் இப்பாடல் முழுவதும் விரவிக் கிடக்கின்றது.

## குயிலும் வேதாந்தமும்

"ஆன்ற தமிழ்ப் புலவீர் கற்பனையே ஆனாலும், வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க, யாதானுஞ் சற்றே இடமிருந்தாற் கூறீரோ" என பாரதியாரே இப்பாடலின் கடைசி வரிகளில் கூறியுள்ளபடி இதில் புகுத்தப்பட்டுள்ள தத்துவக் கருத்துக்களோ வியக்கத்தக்க முறையில் உள்ளன. அவற்றை விரித்துரைப்பதே ஒரு பெரிய நூலாகுமாதலால் சுவை மிகுந்த சில பகுதிகளைமட்டும் பார்ப்போம்.

## ஞாயிற்றின் காட்சி

காலை இளம் பரிதியைப் புகழாத தமிழ்ப் புலவரே இல்லை. காலைக் கதிரவனை கடற்கரையிலிருந்து நோக்கும்போது நம் உள்ளம் பேரின்பத்தில் திளைக்கின்றது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்த நக்கீரர் இத்தகைய காலைக்கதிரவனின் காட்சியைக் கடற்கரையிலிருந்து கண்டார். கடவுளுக்கு உவமைகூற அவர் அதுவரை அலைந்து திரிந்ததன் பயன் கிடைத்துவிட்டது. இத்தகையன் இவ்வண்ணத்தன் எனக் கூற முடியாது என்று பலரும் கருதிய கடவுளையும் உவமைகூறி விளக்க ஆரம்பித்தார் நக்கீரர்.

"உலகம் உவப்ப வலன் ஏர் புதிரிதரு, பலர் பகழ்ஞாயிறு கடற் கண்டாங்கு, ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிர் ஒளி" எனத் தமிழ்த் தெய்வமாம் முருகனை உவமைகூறி விளக்கிப் பாடுகின்றார் நக்கீரர். ஸ்ரீ கண்ணபிரான் பகவத் கீதையில் "ஆதித்யாநாம் அஹம் விஷ்ணு ஜ்யோதிஷாம் ரவிரசுமான்" ஆதித்யர்களுள் விஷ்ணுவென்பவன் நான் பிரகாசப்படுத்துகின்றவைகளுள் கிரணங்களையுடைய சூரியன் நான் "(பத்தாம் அத்தியாயம், 21 சுலோகம் எனக் கூறுகின்றானன்றோ? மற்றும் வேதங்களும் ஞாயிற்றைக் கடவுளெனவே கூறி புகழ்கின்றன. ஸ்ரீராமலிங்க வள்ளலாரும் "தீட்டுகின்ற சிற்றம்பலந்தன்னிலே திகழ்கின்ற பெருவாழ்வே, காட்டுகின்றதோர் கதிர்நடுவிளங்கிடும் கடவுளே" (திருவருட்பா. 6 திருமுறை. திருவருட்பேறு. 8.) என ஞாயிற்றில் இறைவன் ளிளக்கம் உள்ளதைக் கூறிப் புகழ்கின்றார். இதையே பாரதியார் "மூலத் தனிப்பொருளை மோனத்தே சிந்தைசெய்யும், மேலவரும் அஃதோர் விரியும் ஒளி என்பாரேல், நல்லொளிக்கு வேறுபொருள் ஞாலமிசை ஒப்புளதோ" எனக் கூறி வியக்கின்றார்.

அந்த நல்லொளியின் சிறப்புதான் என்னே! பாரதியாரும் புதுவைக் கடற்கரையிலிருந்து ஞாயிறு தோன்றும் காட்சியை பல காற் கண்டு இன்பமடைந்தார். "காலை இளம்பரிதி வீசும் கதிர்களிலே, நீலக்கடலோர் நெருப்பெதிரே சேர்மணிபோல் மோகனமாம் சோதி பொருந்தி" என ஆரம்பத்திலேயே புகழ்கின்றார் பாரதியார். அக்காட்சி அவர் உள்ளத்தை எவ்வாறு கொள்ளைகொண்டது பாருங்கள்! "காலைக்கதிரழகின் கற்பனைகள் பாடுகின்றேன்" என்று கூற ஆரம்பித்தவர், "தங்கம் உருக்கித் தழல் குறைத்துத் தேனாக்கி, எங்கும் பரப்பியதோரிங்கிதமோ" என்று வியக்கின்றார். காலைக்கதிரவன் உருகிய தங்கம்போல் காட்சியளிக்கிறான். வெம்மையும் குறைந்து காணப்படுகிறது. இருளை விலக்கிக்கொண்டு வரும் ஒளியோ தேனைவிட இனிமையாய் இருக்கின்றது. அது ஒரு இடத்தில் மட்டும் இன்றி எங்கும் பரவியுள்ளது. இவ்வளவு கருத்துக்களையும்-காட்சிகளையும் பாரதியார் இரண்டே வரிகளில் சொல்லோவியமாகச் சித்திரித்துவிட்டார்.

நக்கீரர் முருகனுக்கு உவமையாகக் காலை இளம்பரிதி கடற்கரையில் தோன்றுவதைக் கூறினார். ஆனால், முருகனுக்கு உவமானமாகிய காலை இளம்பரிதிக்கு உவமையே இல்லையாம். "வான் வெளியை சோதி கவர்ந்து சுடர்மயமாம் விந்தையை, ஓதிப் புகழ்வார் உவமையொன்று காண்பாரோ" எனப் பாடுகின்றார் பாரதியார்.

மற்றும் புற இருளைநீக்கும் சூரியோதயமே அக இருளாம் அறியாமை ஆணவம் முதலிய மலங்களை நீக்கும் ஞானத்தோற்றத்திற்கு உவமையாக்கப்படுகிறது. எக்காலமும் விழிப்பிலுள்ள ஆண்டவனை எழுப்புவதற்காக திருப்பள்ளி எழுச்சி பாடப்படவில்லை; ஆனால் அகவிருளை நீக்கும் ஆன்மவொளியைக் கருதியே பாடப்பட்டன.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப" என்றும் "கண்ணுடையார் என்போர் கற்றோர்" என்றும் கூறி கண்ணின் பெருமையாலேயே கல்வியின் பெருமையை விளக்குகிறார் திருவள்ளுவர். பாரதியாரோ "கண்ணை யினிதென்றுரைப்பார் கண்ணுக்குக் கண்ணாகி, விண்ணை அளக்கும் ஒளி மேம்படுமோ ரின்பமன்றோ" எனக் கூறி கண்ணிற்கும் ஒளியைத்தரும் பரிதியே மேன்மையுடையதென்கிறார். ஒளியற்றவிடத்தில் கண் பயனில்லையன்றோ?

இவ்வளவு சிறப்புள்ள ஞாயிறு செய்யும் செயல்களோ "புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி, மண்ணைத் தெளிவாக்கி நீரில் மலர்ச்சிதந்து, விண்ணை வெளியாக்கி விந்தைசெய்தல்" முதலியவாக விரிகின்றன. இங்கு பரிதியின் செயல்கள் போற்றிப் புகழ்ப்படும் தன்மைக்கு ஒப்பும்கூற முடியுமோ?

### ஓதம் உரைக்கும் வேதமும் நாதமும்

கடலின் அலைகள் எப்பொழுதும் இரைச்சலிட்டுக்கொண்டே இருக்கின்றன. ஆனால் பாரதியாருக்கு இவ்விரைச்சலும் இடை



யாக்த் தோன்றுகின்றது. "நீலப் பெருங்கடல் என்னேரமுமே தானிசைக்கும் ஓலத்திடையே உதிக்கும் இசை." எனக் கூறுவதை யார்தான் புகழாமல் இருக்க முடியும்? இக்கடல் அலைகளின் தன்மையும் ஓசையையும் நன்கு அனுபவித்த பழந் தமிழர் இதை இசைத் தமிழில் நன்கு பயன்படுத்திக்கொண்டனர். அதன் பயனே அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவாக உருவாகியது.

பாரதியாரை இசைபாடி மகிழ்வித்த கடல் அலைகள் வேதத்தைப் பாடி ஞானத்தையும் போதித்தனவாம். "முறைதவறு, வேகத் திரைகளினால் வேதப்பொருள் பாடி வந்து தழுவும் வளம்,' என வரும் பாரதியாரின் வரிகளே இதற்குச் சான்று.

பரிதியைப் புகழும் பாரதியார் பரிதியையும் படைத்த பரமனைப் புகழும் பான்மையை நோக்குவோம். "வட்ட உருளைகளை வானத்தில் அண்டங்கள், எட்ட நிரப்பி அவை எப்போதும் ஓட்டுகின்றாய்" என்று புகழ்வதோடமையாது நீரைப்படைத்து நிலத்தைத் திரட்டி வைத்தாய், நீரைப் பழைய நெருப்பிற் குளிர்வித்தாய், காற்றைமுன்னே ஊதினாய் காணரிய வானவெளி, தோற்றுவித்தாய்" என உலகத்தின் உற்பத்தியையே விளக்கிப் பாடுகின்றார்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஒன்றைப் படைத்தான் பரமன். அது யாது? "ஆனாலும் நின்றன் அதிசயங்கள் யாவினுமே, கானமுதம் படைத்த காட்சி மிக விந்தையடா" எனக் கூறி இசையின் உயர்வை விளக்குகின்றார். பூதங்கள் ஒத்துப் புதுமை தரல் விந்தையெனில், நாதங்கள் சேரும் நயத்தினுக்கு நேராமோ" என நாதத்தின் நயத்தில் உளங்கனிந்து பாடுகின்றார்.

இசை தோன்றும் வழிகளை பாரதியார் வகுத்துரைக்கும் நேர்த்தியைப் பாருங்கள். "கானப் பறவை கலகலெனும் ஓசையிலும், காட்டு மரங்களிடைக் கூட்டு மிசைகளிலும், ஆற்று நீரோசை அருவி ஒலியினிலும், நீலப் பெருங்கடல் என்னேரமுமே தானிசைக்கும், ஓலத்திடையே உதிக்கும் இசையினிலும்; மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால், ஊனுருகப் பாடுவதில் ஊறிடுந் தேன் வாரியிலும், ஏற்ற நீர்ப்பாட்டின் இசையினிலும் நெல்லிடிக்கும், கொற்றொடியார் குக்குவெனக் கொஞ்சு மொழியினிலும், சுண்ணமிடிப்பார் தஞ்சுவை மிகுந்த பண்களிலும், பண்ணை மடவார் பழகு பலப்பாட்டினிலும், வட்டமிட்டு பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்க கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும், வேயின் குழலோடு வீணை முதலா மனிதர், வாயினிலும் கையாலும் வாசிக்கும் பல் கருவி, நாட்டினிலுங் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும், பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்" எனக் குயில் கூறு முகத்தான் இதை விளக்குகின்றார்.

இவ்விசையே "மேனி புளக முற ஆற்றலழிவுபெற உள்ளத்தனல் பெருக" கேட்கப்படுகின்றது. "சோலைப்பறவை யெல்லாம் சூழ்ந்து பரவசமாய்க், காலைக் கடனில் கருத்தின்றி கேட்கப்படும் "இசையை" காட்டில் விலங்கறியும் கைக்குழந்தை தானறியும். பாட்டின் சுவையதனைப் பாம்பறியும் என்றுரைப்பார்." இங்கு

காட்டில் விலங்கறியும் என்பது உதயணன் யாழ் வாசித்து யானையை வசப்படுத்தியதையும் கண்ணன் குழல் ஊதி மாடுகளை மகிழ்வித்ததையும் நினைப்பூட்டுகின்றது.

### தாயும் சேயும்

நான்காம் நாள் குயில் காதலருளும்படி பாரதியாரை வேண்டுகின்றது. என்னை நீங்களே சினந்தால் வேறு புகலிடமேது எனக் கூறவந்த குயில் "ஞாயிறு தான் வெம்மை செயில் நாண்மலர்க்கு வாழ்வுளதோ" என உவமை கூறி கேட்கிறது. அத்துடன் அமையவில்லை. "தாயிருந்து கொன்றால் சரண் மதலைக் கொன்றுளதோ" என உலகியல் வழக்கத்தையும் எடுத்துக் காட்டுகின்றது.

இராமலிங்க வள்ளலாரும் "தடித்த வோர் மகனைத் தந்தையீண்டடித்தால் தாயுடன் அணைப்பள்; தாயடித்தால், பிடித்தொரு தந்தையணைப்பன் இங்கெனக்கே பேசிய தந்தையும் தாயும், பொடித்திருமேனி அம்பலத்தாடும் புனித நீ ஆதலால் என்னை, அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும் எனப் பாடுகின்றனரன்றோ? இறைவனே உண்மையான தாய் என்பதை "ஈன்றெடுத்த தாயரவர் எண்ணிலரே ஆயினும் என் ஆண்டவனே உன்னைப்போல் ஆவாரோ" என்ற வள்ளலார் பாடலால் அறிக. இவ்விறைவனே சினந்தால் என்னவது என்றே மேற் குறித்த பாடலில் வள்ளலார் கூறியுள்ளார். பாரதியாரும் "தேவர் சினந்துவிட்டால் சிற்றுயிர்கள் என்னாகும்" என குயிலின் வாயிலாகக் கேட்கின்றார். வள்ளலார், பாரதியார் எனும் இருவருடைய கருத்துகளையும் ஒப்பு நோக்கி இன்பமடைக.

### காவிய ஓவியம்

கற்பனையில் கண்ட காட்சிகளை சொல்லோவியமாகத் தீட்டுவதில் பாரதியார் மிகப் பண்பு வாய்ந்தவர். குயிலுடைய காதற் பாட்டை கேட்ட குரங்கு "கண்ணை சிமிட்டுவதும் காலாலும் கையாலும், மண்ணை பிறாண்டி எங்கும் வாரி இறைப்பதுவும்" ஆக இருந்ததாம். இந்த வரிகளில் நம் கண் முன்னாலேயே அத்தகைய குரங்கைக் கொண்டு வந்து நிறுத்திவிட்டார் பாரதியார். உண்மையான குரங்கையே அதன் சித்திரத்தையே பார்க்கும்போது அடையும் உணர்ச்சியை விட இப்பாட்டைப் படிக்கும் நாம் அடையும் உணர்ச்சி உண்மையானதாகவும் மகிழ்ச்சி யளிப்பதாகவும் இருக்கிறது.

மற்றும், குயில் பெண்ணாக மாறியபோது பாரதியார் அப் பெண்ணைச் சித்தரித்துக் காட்டுவதை நோக்குங்கள். "இவளழகை எற்றே தமிழில் இசைத்திடுவேன். கண்ணிரண்டும், ஆளை விழுங்கும் அதிசயத்தைக் கூறுவனோ மீன விழியில் மிதந்த கவிதை யெல்லாம் சொல்லில் அகப்படுமோ" என கண் ஒன்றினையே சொல்லோவியத்தினாலும் எழுத முடியவில்லையே என வருந்துகின்றார்.

ஆயினும் ஒருவாறு கூறுகின்றார். அவள் வடிவு அமைந்த விதத்தை நோக்குங்கள். "கவிதைக் கனி பிழிந்த, சாற்றினிலே பண் கூத்தெனு மிவற்றின் சாரமெல்லாம், ஏற்றி அதனோடே இன்



னமுதைத் தான் கலந்து, காதல் வெயிலிலே காயவைத்த கட்டியினால் மாதவளின் மேனி வகுத்தான் பிரமனென்பேன்." அழகை அனுபவிக்கத் தெரிந்தவர்கள்தான் மேற் கூறிய வடிவை உள்ளக் கிழியில் எழுதிப் பார்க்க முடியும்.

### குயில்பாட்டின் உண்மை

குயில் பாடுவதாக வரும் அடிகளில்தான் எத்தனைத் தத்துவக் கருத்துக்கள் பொதிந்துள்ளன! 'அருளே யாம் நல்லொளியே'' என்பது "அருட் பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை" என்ற வள்ளலார் கருத்துடன் ஒத்துள்ளது. "இன்பத்துக்கோர் எல்லை காணில் துன்பம் என்பது நுணுக்கமான தத்துவ முடிபாகும். "உறுதிக்கே ஓர் உடைவுண்டாயின் இறுதி" என்பது சிறந்த வீரத்தை விளக்குகின்றது. இவ்வாறு அந்த ஒன்பது பாடல்களும் நவரத்தினம்போல் திகழ்கின்றன.

இவ்வாறு இலக்கியச் சுவையிலும் மெய்ஞ்ஞானச் சுவையிலும் சிறந்த குயில் பாட்டை, சாதாரண குயிலின்மீது பாரதியார் காதல் கொண்டு பாடினதாக சிலர் நினைக்கலாம். உண்மை அதுவல்ல. பாரதியார் குயிலின் பாட்டைக் கேட்ட உடனேயே காதல் கொள்ளுகிறார். இசையினால் மனம் ஒருமுகப் பாடடைதலையே இது குறிக்கும்; இசையைப் பொழியும் கண்ணனை என் காதலன் என்று பாடிய பாரதியார், காதலின் நுட்பங்களை—ஜீவன் உணர்வு நிலை எய்துங்கால் அடையும் தன்மைகளையே சாதாரண முறையில் குயில் பாட்டில் விளக்குகின்றார். ஆண்டவன் "ஏழிசையாய் இசைப்பயனாய்" விளங்குகின்றான் என்றல்லவா சுந்தரரும் கூறுகின்றார். அந்த இசையாகிய ஆண்டவனை விளக்குவதே இக் குயில் பாட்டு.


"ஆனந்த போதினி"

(மாதப் பத்திரிகை)

சந்தா விவரம்

| | |
|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட இந்தியா, சிலோன் | ரூ. 2—00 |
| வருடம் 1-க்கு வெளிநாடுகளுக்குச் சந்தா | ரூ. 3—00 |
| நடந்துகொண்டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை | ரூ. 0—20 |
| சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை | ரூ. 0—25 |

ஜீவிய சந்தா ரூ. 30—00

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

எப்பொழுது சேர்ந்தாலும் ஆடிமீ முதல் கணக்கு வைக்கப்பட்டு சஞ்சிகைகள் அனுப்பப்படும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, சென்னை.

# பொன்னி

இரா. பாரதிநேசன்

*

(சென்ற இதழின் தொடர்ச்சி)

## 3. பொன் கண்டு பெண் கொடுத்த காதை

காலச் சூருவளி மூன்றாண்டுகளை முறித்துச் சென்றது.

ஒருநாள் மாணிக்கம் தடபுடலான உடையணிந்துகொண்டு தமக்கையின் வீட்டிற்கு வந்தான். அவன் கண்களில் முதலில் தென்பட்டது பொன்னிதான். தெருவிலே தண்ணீர் தெளித்து கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். பொன்னியின் பூரிப்பான அந்த அமைப்புகள் மாணிக்கத்தை போதை கொள்ளச் செய்தது. மாணிக்கத்தின் டாம்பீகத்தைக் கண்ட பொன்னியும் ஒருகணம் திகைத்தாளென்றாலும் மறுகணமே தன்னிலை அடைந்தாள். உள்ளே சென்று தன் தாயிடம் மாணிக்கத்தின் வரவைத் தெரிவித்தாள்.

அடுக்களையிலிருந்து ஓடிவந்த பொன்னியின் தாய் தன் தம்பி மாணிக்கத்தை அணைத்துக்கொண்டாள். அவன் தான் வாங்கி வந்த விதவிதமான சாமான்களை அவளிடம் கொடுத்தான். அவள் மாணிக்கத்தின் கன்னத்தைத் தொட்டு 'திருஷ்டி' கழித்தாள். க்ஷேம லாபம் விசாரித்தாள். பிறகு உட்காரச் சொன்னாள்.

பிறகு, "பொன்னி இவனோடே பேசிக்கிட்டு இரு. நான் போயி சமையல் வேலையெல்லாம் பார்க்கறேன்" என்று சொல்லிவிட்டு அடுக்களைச் சென்றாள்.

கதவோரமாக தலைகுனிந்தபடி நின்றிருந்த பொன்னியைக் கண்ட மாணிக்கம் வைத்தகண் வாங்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு, "பொன்னி இதோ பார். உனக்காக 'சந்திரஹாரம்' வாங்கிக்கிட்டு வந்திருக்கேன். இந்தா" என்று கூறி பெட்டியிலிருந்து பிறைச்சந்திரன் தொங்கும் ஒரு பொன் சங்கிலியை எடுத்தான்.

பொன் நகைகளை அதிகம் காணாத பொன்னி அந்த சந்திரஹாரத்தைக் கண்டதும் அதை அணிய எண்ணி மாணிக்கத்தின் அருகே வந்தாள்.

மாணிக்கம் அதை இரண்டு கைவிரல்களினால் தூக்கிக் காட்டினான். அந்தச் சந்திரஹாரத்திலிருந்த பிறைச்சந்திரன் ஊசலாடியது. பொன்னியின் உள்ளமும் ஊசலாடியது. அதை வாங்க கையை நீட்டினாள்.

"கிட்ட வா. நானே போட்றேன். இந்த "ஸ்க்ரூ"வை உன்னாலே போட முடியாது. நான் போட்டுக் காட்றேன்" என்று கூறி எழுந்து நின்றான்.

பொன்னி சிறிது நேரம் யோசித்தாள். பிறகு மாணிக்கத்தின் அருகே வந்தாள். அவன் அந்த ஆரத்தை அவளுடைய கழுத்திலே போட்டான். எதிரே இருந்த நிலைக்கண்ணாடியில் பொன்னியின் உருவம் தெரிந்தது. பின்னால் மாணிக்கத்தின் உருவம் தெரிந்தது. அந்த ஆரத்திலிருந்த பிறைச்சந்திரன் மின்னிக்கொண்டிருந்தது.



மாணிக்கம் மெள்ள அவள் தோளில் கைவைத்து "பொன்னி" என்றான். அந்தக் குரலில் கரகரப்புக் காணப்பட்டது.

பொன்னி திடுக்கிட்டு விலகினாள். அவள் கண்கள் வேடனைக் கண்ட பிணையின் கண்களை நினைப்பூட்டியது.

"பொன்னி, ஏன் இப்படிப் பயப்படுகிறாய்? நீ எனக்கு மனைவியான பிறகுதான் நான் உன்னைத் தொடவேண்டுமா?" மாணிக்கத்தின் குரலில் கேலி தொக்கி நின்றது.

பொன்னி ஏதும் பேசாமல் விருட்டென்று உள்ளே போய்விட்டாள். அதே நேரத்தில் பொன்னியின் தந்தை மாடத்தம்பியும் உள்ளே வந்தார். அவர் மாணிக்கத்தைக் கண்டதும் மலைத்துப் போனார். ஒருசமயம், பண்ணையாரின் மகன் சந்திரன் கிராமத்திற்கு வந்திருந்தபோது அவன் அணிந்திருந்த உடையைக் காட்டிலும் இப்போது மாணிக்கம் அணிந்திருக்கும் உடை சிறந்திருப்பதைக் கண்டார். கணநேரந்தான்...

"ஏண்டா, மாணிக்கம் எப்போ வந்தே? ஏன் நிக்கறே? என்று கேட்டுக் கொண்டே அங்கிருந்த ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்தார்.

மாணிக்கமும் ஊஞ்சலில் உட்கார்ந்துகொண்டு, "இப்பத்தான் 'லீவு' கிடைச்சது, வந்தேன் மாமா" என்று கூறி நிலையைச் சமாளித்துக் கொண்டான்.

"எங்கே வேலை செய்யறே?-" இது மாடத்தம்பியின் கேள்வி.

"பட்டணத்திலே ஒரு 'பெரிய கம்பெனி'யிலே வேலை செய்யறேன். ஆமா, நில விளைச்சலெல்லாம் எப்படி இருக்கு மாமா?" என்று கேட்டுப் பேச்சை மாற்றினான் மாணிக்கம்.

"உம்...மாரி பொய்க்காமல் இருந்திருந்தா நல்லா இருந்திருக்கும்" என்று பெருமூச்சோடு சொன்னார்.

மாமாவுக்குக் கடன் தொல்லை இருக்கிறது என்பதை அந்தப் பெருமூச்சிலிருந்தே மாணிக்கம் அறிந்து கொண்டான்.

"மாமா, நீங்க கவலைப்படாதிங்க. இந்தாங்க இதைக்கொண்டு எல்லாக் கடனையும் அடைச்சுடுங்க" என்று கூறி தன் பெட்டியிலிருந்து ஒரு கத்தை பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்துக் கொடுத்தான்.

மாடத்தம்பி அந்த நோட்டுக்கத்தையை நடுங்கும் கரங்களால் வாங்கினார்.

"மாமா, நான் வாங்கும் சம்பளத்தைக்கொண்டு ரெண்டு குடும்பம் நல்லா வாழலாம் மாமா" என்று பெருமையாகச் சொன்னான் மாணிக்கம்.

"வாங்க. ரெண்டுபேரும் கையலம்பிண்டு வாங்க, பொன்னி, கையலம்ப மாமனுக்குச் சொம்பிலே தண்ணி கொடு" என்று உள்ளே இருந்து குரல் கொடுத்தாள் பொன்னியின் தாய்.

மாடத்தம்பி நோட்டுக் கத்தையைத் தன் பெட்டியிலே வைத்தார். பிறகு இருவரும் கையலம்பிக்கொண்டு சாப்பாட்டிற்கு அமர்ந்தனர்.

பொன்னியின் தாய்தான் பறிமாறினுள். "தம்பி, உனக்கு கத்திரிக்காகூட்டு ரொம்ப பிடிக்குமேன்னுதான் செய்தேன். இன்னும் கொஞ்சம் வச்சிக்க. மிளகு ரசம் வச்சிருக்கேன் இன்னும் கொஞ்சம் வாத்துக்க" என்று வலிந்து வலிந்து பரிமாறினுள்.

அன்றிரவு, தன் கணவனிடம் தன் எண்ணத்தை வெளியிட்டாள்.

மாடத்தம்பியின் மனதிலே போராட்டம் எழுந்தது. ரத்தினமும் மாணிக்கமும் மாறி மாறி வந்தனர்.

"ஏன்னு, ஏன் யோசிக்கறீங்க. மாணிக்கம் நல்ல இடத்திலே தான் வேலை செய்யருன். அவனுக்கு பொன்னியைக் கொடுத்தா நல்லா வச்சிருப்பான். அதுவும் சந்தோஷமா வாழும். என்ன நான் சொல்றது" என்று பிண்ணிப் பிண்ணி பேசினுள் பொன்னியின் தாய்.

மனம் ஒரு நிலையிலில்லாதிருந்த மாடத்தம்பி தலையை ஆட்டினுர்:

"ஏன், சும்மா ஆடுபோல தலையாட்டிக்கிட்டு இருந்தா? வாயைத் திறந்து சொல்லுங்களேன்" என்ருள்.

"சரி" என்ருன் மாடத்தம்பி.

அதே நேரத்தில், பிறைச்சந்திரனிலே ரத்தினத்தின் முகம் மட்டும் தோன்றி ஏளனமாய்ச் சிரிப்பதுபோல கனவு கண்டு திடுக்கிட்டு விழித்துக்கொண்டாள் பொன்னி. ரத்தினத்தைத் தவிர வேறு எவரையும் கணவனுக ஏற்பதில்லை என்று முடிவு செய்துகொண்டாள்.

ஆனுல்...

மறுவாரமே மாணிக்கத்தின் மனைவியானுள் பொன்னி!

ஆம்; புலியை மானுக்குக் காவலாக வைத்தனர்—பாம்பைத் தவளைக்குக் காவலாக வைத்தனர்—எறும்பைச் சர்க்கரைக்குக் காவலாக வைத்தனர்.

கால மரத்திலிருந்து இரண்டு வாரச் சருகுகள் உதிர்ந்தன.

பொன்னி இடுப்பில் குடமேந்தி குளத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தாள்.

"பொன்னி."

பழகிய குரல் ஒன்று தன்னைக் கூப்பிடுவதை அறிந்து திரும்பினுள்.

ரத்தினம் புன்னகையை வெளித்தள்ளிய வண்ணம் விரைந்து வந்து கொண்டிருந்தான்.

ரத்தினத்தைக் கண்டதும் பொன்னியின் உடல் ஒரு முறை சிலிர்த்தது. அவளையறியாமல் குடம் நழுவி தரையில் 'டங்' கென்ற சப்தத்துடன் விழுந்தது. பொன்னியின் இரண்டு கண்களும் இரண்டு வாவிகளாகின!

ஆசையோடு ஓடிவந்த ரத்தினம் திகைத்தான். அவனையறியாமல் அவன் கண்கள் பொன்னியின் கழுத்தை நோக்கின. அந்தக் கழுத்தில் மஞ்சள் கயிறு படுத்துறங்குவதைக் கண்டான். திடீரென்று அந்த மஞ்சள் கயிறு பாம்பாக மாறி படமெடுத்தது! ரத்தினம் கண்களை இறுக மூடிக்கொண்டே திரும்பினுன்.



"அழிந்தது. ஆசை அன்பு எல்லாம் அழிந்தது. மனக்கோட்டை சுக்கு நூருகத் தகர்ந்தது" என்று அவன் வாய் முணுமுணுத்தது. கால்கள் வேக நடை போட்டன.

## 4. காவலர் புக்க காதை

நீண்ட சப்தத்துடன் எழும்பூர் ஸ்டேஷனில் வந்து நின்றது திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ். சினிமா கொட்டகையின் கதவைத் திறந்ததும் 'புக்கிங் ஆபீஸை' நோக்கி முண்டியடித்து ஓடும் சினிமா ரசிகர்களைப்போல வண்டி நின்றதும் 'குபு குபு' என்று எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு இறங்கினர். போர்ட்டர்கள் பெட்டி படுக்கை முதலியவற்றைச் சுமந்து சென்றனர்.

மாணிக்கமும் பொன்னியும் இறங்கி ஸ்டேஷனைவிட்டு வெளியே வந்தனர். அவர்கள் இருவரையும் கண்டதும் சைக்கள் ரிக்ஷா காரர்கள் போட்டி போட்டுக்கொண்டு வந்தனர்.

மாணிக்கம் வண்ணுரைப்பேட்டைக்குப் பேசிக்கொண்டு ஏறினுன். பொன்னி பட்டணத்தில் 'காலெடுத்து வைத்ததும் தன் தாய் சொல்லும் 'சொர்க்க லோகம்' இதுதானே என்று எண்ணினுள்.

சைக்கிள் ரிக்ஷா நகர்ந்தது.

வெளியே எட்டிப்பார்த்த மாணிக்கம் சட்டென்று தலையை உள்ளுக்கு இழுத்துக்கொண்டு, "சீக்கிரம் போப்பா" என்ருன்.

சைக்கிள் ரிக்ஷாவின் சக்கரங்கள் வேகமாக உருண்டன.

அதே நேரத்தில் யாரோ கைதட்டி, "மாணிக்கம், மாணிக்கம்" என்று குரல் கொடுத்தான்.

மாணிக்கம் மௌனமாக இருந்தான். பொன்னி மாணிக்கத்தைப் பார்த்தாள்.

சைக்கிள் ரிக்ஷா வண்ணுரைப்பேட்டையிலுள்ள லாலாகுண்டாவில் புகுந்து ஒரு சிறிய வீட்டின் முன் நின்றது,

முதலில் மாணிக்கம் இறங்கினுன். பின்னுல் பொன்னி இறங்கினுள். சிறிது வயது முதிர்ந்த ஒருத்தி அவர்களுக்கு 'ஆலம்' சுற்றினுள். பிறகு இருவரும் உள்ளே சென்றனர்.

பொன்னி அந்த அறையைச் சுற்றி தன் பார்வையைச் செலுத்தினுள். அங்கே தடியூன்றிய கிழவனரின் படமும் (காந்தி) நாட்டிய கோலத்திலிருக்கும் சிவ-பார்வதி படமும், மற்றும் பல பெண்களின் (சினிமா ஸ்டார்) படங்களும் மாட்டப்பட்டிருப்பதைக் கண்டாள்.

சினிமா, நாடகம், மிருகக்காட்சிசாலை இப்படியாக பொன்னியை அழைத்துச் சென்ருன் மாணிக்கம். இவற்றை யெல்லாம் காண தான் போன ஜன்மத்தில் தவம்செய்திருக்க வேண்டுமென்று எண்ணினுள்.

நாள்காட்டியிலிருந்த ஒரு மாத காகிதத்தைக் காலதேவன் விழுங்கி விட்டான்!

மாணிக்கத்தைத் தேடிக்கொண்டு மெள்ள மெள்ள அவன் நண்பர்கள் வர ஆரம்பித்தார்கள். அப்பொழுதெல்லாம் இரவு வெகுநேரம் வரை பொம்மைக் காகிதத்தை வைத்துக்கொண்டு "ஆஸ்" "கிளாவர்" "துருப்பு" என்றெல்லாம் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டாள் பொன்னி. அவள் சீட்டாட்டத்தைப் பார்த்ததில்லையாகையால் ஏதோ விளையாடுகிருர்கள் என்று எண்ணி தூங்கப் போய்விடுவாள். சில சமயங்களில் மாணிக்கமும் அவளைத் தூங்கும்படி கட்டளையிடுவான்.

நாள் போகப் போக இது ஒரு சூதாட்டம் என்று தெரிந்து கொண்டாள். தன் கணவனைத் தடுத்தாள். இந்த விஷயத்தில் தலையிடாதிருக்கும்படி கண்டிப்பாகக் கூறிவிட்டான் மாணிக்கம். நயமாகக் கெஞ்சிஞள்-இனி கிடைக்கப்போகும் சன்மானத்திற்கு முதல் தாம்பூலம் கிடைத்தது. ஆம்; பொன்னியின் மென்கன்னத்தை மாணிக்கத்தின் முரட்டுக் கைகள் சிவக்கச் செய்தன. அன்றிலிருந்து மாணிக்கம் 'விஸ்வரூபம்' எடுத்தான்.

இரவிலே குடித்துவிட்டு வரும் மாணிக்கத்திடம் பொன்னி படாதபாடு பட்டாள். சில சமயங்களில் நகை கொண்டுவந்து அவளுக்கு அணிந்து அழகு பார்ப்பான். சில நாளைக்குப்பின் அந்த நகைகளும் இருக்காது.

தான் ஒரு பயங்கர மனிதனுக்கு வாழ்க்கைப் பட்டிருப்பதை அறிந்துகொள்ள பொன்னிக்கு நீண்டநாள் பிடிக்கவில்லை. அதற்குத் தகுந்தாற்போல் தன்னைத் தயார் செய்து கொண்டாள்.

ஆனல் இந்த வாழ்க்கை வெகுநாள் நீடிக்கவில்லை.

திடீரென்று மாணிக்கம் இரண்டு வாரங்கள் வீட்டிலேயே அடைந்து கிடந்தான். அந்த இரண்டு வாரங்கள் பொன்னியுடன் மிக அன்போடு பழகினன். பொன்னி தனக்குப் புதுவாழ்வு திரும்பி விட்டது என்று எண்ணி மகிழ்ந்தாள்.

ஆனல்......

ஒருநாள் காலை தெருவில் நீர்தெளிக்க கதவைத் திறந்த பொன்னி அங்கு நிற்கும் ஆட்களைக் கண்டதும் "ஆ" என்று அலறி மூர்ச்சையானள்.

அப்படியென்ன அவர்கள் தலையில் கொம்பு முளைத்திருந்ததா? இல்லை-சிவப்புத் தொப்பி இருந்தது.

ஆம்; போலீஸார் நின்றுகொண்டிருந்தனர்.

பிறகு...

போலீஸார் உள்ளே புகுந்தனர். ஆனல்...குற்றுயிராய்க் கிடந்த மாணிக்கத்தைத்தான் அவர்களால் கைதுசெய்ய முடிந்தது. அவனுக்குப் பக்கத்தில் சில வைரப்பொடிகள் சிதறிக்கிடந்தன.

இன்ஸ்பெக்டரின் வாய் "தற்கொலை" என்று முணுமுணுத்தது.

சில மணி நேரத்தில் பொன்னியையும் மாணிக்கத்தையும் சுமந்து சென்றது 'நீல வாகனம்' இருவரும் அரசாங்க வைத்திய விடுதியில் சேர்க்கப்பட்டனர்.



வைத்திய விடுதியில் சேர்க்கப்பட்ட பொன்னி மூர்ச்சை தெளிந்தபோது மாணிக்கம் மரணவாக்குமூலம் கொடுத்த சில நிமிடங்களுக்குள் இறந்து விட்டான் என்ற செய்தியைக் கேள்விப்பட்டுத் துடித்தாள்...கதறினள்.

மறுநாள் 'தின கதிரின்' முதல் பக்கத்தில் கீழ்க்கண்ட செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது.

**சீட்டாட்டத் தகராரில் இருவர் கொலை!**

**கொலை செய்தவர் வைரத்தூள் சாப்பிட்டு தற்கொலை!!**

சென்னை, ஜன-10.

லாலா குண்டாவைச் சேர்ந்த மாணிக்கம் என்பவரும் ரங்கசாமி என்ற பித்தளை வியாபாரியும் காசி என்ற நகை வியாபாரியும் சீட்டாடிக் கொண்டிருக்கும்போது ஏற்பட்ட தகராறில் மாணிக்கம் என்பவர் மற்ற இருவரையும் கொன்று தலைமறைவாக இருந்ததாகவும் பிறகு போலீஸார் தன்னைக் கைதுசெய்ய வந்திருப்பதை அறிந்து மோதிரத்திலிருந்த வைரத்தைத் தூள்செய்து சாப்பிட்டதாகவும் கூறப்படுகிறது.

போலீஸார் குற்றுயிராய்க் கிடந்த மாணிக்கத்தை வைத்திய விடுதியில் சேர்த்தனர். அவர் தனது மரண வாக்குமூலத்தில் தான் செய்த குற்றத்தை யெல்லாம் கூறி இருக்கிருராம். அவருக்கு சமீபத்தில்தான் திருமணம் ஆயிற்றும். போலீஸார் மேலும் புலன் விசாரித்து வருகின்றனர். (ந. நி.)

## 5. சூளுரைத்த காதை

ஆறு மாதங்கள் எப்படியோ ஓடிவிட்டன.

பொன்னி தன் தாய் வீட்டில் திலகமிழந்து வெள்ளைக் கலையுடுத்து வாடிய மலரென வாடிக்கிடந்தாள். மாடத்தம்பிக்குத் தன் மகளைக் காணும்போதெல்லாம் நெஞ்சம் குமுறும். தன் மனைவியைத் திட்டுவார். காலப்போக்கில் அவர் உடல் நலிவுற்றது. விரைவில் சுடலையைத் தன் நிரந்தரப் படுக்கையாக்கிக் கொண்டார். அவர் இறந்தார். அவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அவர் மனைவியும் சென்ருள், பொன்னி அத்தையின் வீட்டில் தஞ்சம் புகுந்தாள். காளியப்பனும் மங்கலமும் மிக்க அன்போடு வளர்த்தனர்.

தாய் தந்தையரைக் காண வந்த ரத்தினம் மஞ்சளையும் பூவையும் இழந்த பொன்னியைக் கண்டான். அவன் உள்ளத்திலே போராட்டம் நிகழ்ந்தது. பட்டணத்திலே பண்ணையாரின் மகன் சந்திரன் நடத்திவைத்த கலப்பு மணமும், விதவை மணமும் ரத்தினத்தின் மனதிலே வந்து நிழலாட்டம் போட்டன.

தாய் தந்தையர் இல்லாத நேரத்தில் தன் அபிப்பிராயத்தைப் பொன்னியிடம் தெரிவித்தான். முதலில் அவள் மறுத்தாள். பிறகு தன்னல் அவனுக்குத் துன்பம் ஏற்படுவதைப் பார்த்துக் கொன்

டிருக்க முடியாதென்றாள்; பழமை விரும்பிகள் எதிர்ப்பார்கள் என்றாள்.

ரத்தினம் தீர்மானமாகச் சொன்னான். "பொன்னி, உலகமே திரண்டு வந்தாலும் சரி, உன்னை மணந்தே தீருவேன். எந்த ஒரு ஆபத்தையும் நான் எதிர்க்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் நீ மட்டும் என்னை மணந்து கொள்வதாக உன் இதயப்பூர்வமாகச் சொல். மற்ற தடைகளை நான் கடந்து வெற்றி நடை போடுவேன். இந்தக் கிராமத்திற்கு நம் திருமணம் ஒரு புரட்சிகரமானதாக இருக்கட்டும். பொன்னி, நோயாளி கசப்பான மருந்தைச் சாப்பிட பிரியப்பட மாட்டான். ஆனால் அதைச் சாப்பிட்டால்தான் அவன் உயிர் பிழைப்பான் என்றால் கட்டாயப்படுத்தியாவது நாம் அந்த மருந்தைச் சாப்பிட வைக்கிறோம். அதேபோல இந்த உலகத்திற்கும் கலப்பு மணமும் விதவா விவாகமும் நிச்சயம் தேவை. உலகம் பிரியப்படா விட்டாலும் நாம் அதைச் செய்தே ஆகவேண்டும். நம் திருமணம் நடந்தே தீரவேண்டும்" என்று சூளுரைத்தான்.

ரத்தினத்தை மணக்க பொன்னிக்குக் கொள்ளை ஆசைதான். ஆனால் அவள் உலகத்திற்காகப் பயந்தாள். எனினும் ரத்தினத்தின் உபதேசத்தால் 'சரி' என்று ஒப்புக்கொண்டாள்.

ரத்தினம் இந்த முடிவைத் தன் தாய் தந்தையரிடம் தெரிவித்தான். அவர்களும் உள்ளூர சந்தோஷப்பட்டாலும் உலகம் என்ன சொல்லுமோ என்று அச்சப்பட்டனர். என்றாலும் ரத்தினத்தின் பிடிவாதத்தால் ஒப்புக்கொண்டனர்.

எதிர்ப்பு எழுந்தது என்றாலும் ரத்தினம்—பொன்னி திருமணம் நடந்தது. ரத்தினத்தின் சூளுரை வெற்றி பெற்றது!

* * *

கட்டிலிலே சாய்ந்திருந்த ரத்தினம் கதவு திறந்து மூடும் சப்தம் கேட்டுத் திரும்பினான். பொன்னி தலை குனிந்து நின்றுகொண்டிருந்தாள். ரத்தினம் வெற்றிப் புன்னகையை ஏந்திய வண்ணம் கட்டிலை விட்டிறங்கி அவளை அணுகி அவளின் முகத்தைத் தன் வலதுகையால் தூக்கினான். அவள் கண்களில் நன்றியும் ஆனந்தக் கண்ணீரும் பொங்கி வழிந்தது. பொன்னி திடீரென்று ரத்தினத்தின் காலில் விழுந்தாள். ரத்தினம் அவளை மெதுவாகத் தூக்கினான். பொன்னி தன் முகத்தை ரத்தினத்தின் பரந்த மார்பில் புதைத்துக் கொண்டாள். ரத்தினம் அன்போடு பொன்னியின் குழலைக் கோதினான்.



# விதியை வென்ற மதி

மா. லோ. தாமோதரம்

★

நடுப்பகல் பூசை நடைபெறும் நேரத்தை யொட்டி சேர நாட்டின் கோயிலில் மணி ஒலித்துகொண்டிருந்தது. 'கணீ'ரென்று ஒலித்த ஆலய மணியோசை அணி மிகுந்த அங்காடி வீதிகளை யெல்லாம் கடந்து அரண்மனைக்கும் எட்டியது. படை வீடுகளுக்குள் நுழைந்து நாட்டின் எல்லைவரைக்கும் கேட்டது. பூசை நடந்தேறிய பின் மணியோசை நின்றது.

அரண்மனை கலகலப்பின்றி காட்சியளித்தது. அரண்மனை அதிகாரிகளின் வாக்கிலும் செயலிலும் சாந்தம் தெரிந்தது. அதன் ஊடே அச்சமும் தலைகாட்டியது. சேரநாட்டின் அதிபதி கோமான் நெடுஞ்சேரலாதன் மஞ்சத்தில் அமர்ந்து சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். செங்குட்டுவன் மயில்விழி சாளரத்தின் அருகில் நின்றவாறு வெம்மை மிகுந்த வானத்தை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான்.

தன் தாய்நாட்டிற்கே தீங்கிழைத்த துரோகியின் மீது மக்களுக் குண்டாகும் வெம்மையைப்போல கதிரவன் புவியின்மீது வெப்பத்தைப் பொழிந்து கொண்டிருந்தான். அரண்மனை வாயில் காப்போன் நடைப்பிணம் போன்று குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான். அப்பொழுது அரண்மனையை நோக்கி ஓருருவம் வருவதைக் கண்டான். முடி யில்லாத தலை. காவி உடையணிந்திருந்தாலும் அவர் நடை கம்பீரமாக இருந்தது. "தென்னாட்டிற்கு விஜயம் செய்த புத்தபிக்ஷுவா? சமண சமய துறவியா? யார் இவர்?" என்ற கேள்விகளுக்கு விடை காணாமல் திகைத்த வாயில் காப்போன், 'அவர் ஒரு தமிழ்ப்புலவராக இருக்கவேண்டும்?' என்று எண்ணினான், ஆனால் அவர் முகத்தைப் பார்த்தால் வறுமையில் வாடும் வண்டமிழ் புலவராக தெரியவில்லை. அதோ! அவர் அரண்மனை வாயிலை கடக்கப் போகிறார். கூரிய ஈட்டியை அவர் முன் நீட்டி, "ஐயா! வேந்தர் அவர்களை இச்சமயம் காண இயலாது. தாங்கள் எவரைக் காணப் பிரியப்பட்டாலும் அவரை சந்திக்க முடியாது. வேந்தர் அவர்களும் அமைச்சர் அவையும் பெருங் குழப்பத்திலும் கவலையிலும் ஆழ்ந்துள்ளது, ஆகையால் தாங்கள் இன்றுபோய்........," என்று சொல்லிக்கொண்டே வந்த வாயில் காப்போன் திடுக்கிட்டான். அடுத்தகணம் நீட்டிய ஈட்டியை விலக்கி அவருக்கு வழிவிட்டான். அவர் அரண்மனை வாயிலைக் கடந்து அந்தப்புரத்தை நோக்கி நடந்தார். கொடிய புலியினிடம் சிக்கிய மானைப் போல வாயில் காப்போன் நடுங்கிக்கொண் டிருந்தான். "அப்பொழுது அவைப்புலவர் சொன்னது உண்மையா?" என்று அவன் தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். அவன் முன் காலையில் அவைப்புலவர் சொன்ன செய்திகள் ஒன்றன்பின் ஒன்றாக காட்சி யளித்தன.

எங்கும் அமைதி நிலவியது. இள வெப்பக் காற்று வீசியது.

தங்கத்தால் செய்யப்பட்ட சிங்கங்கள் தாங்கும் அரியாசனத்தில் தேவர்கள் துதி செய்யும் இந்திரன் இவன்தானே என்று ஐயுறும்படி வேந்தன் நெடுஞ்சேரலாதன் அமர்ந்திருந்தான். அவன்வலது பக்கத்தில் உதய காலத்து அருணனைப் போல செங்குட்டுவனும் இடது புறத்தில் மாசிலாமதியைப் போன்ற இளங்கோவும் அமர்ந்திருந்தார்கள். நட்சத்திரங்கள் காட்டும் குறிப்பை எடுத்து சொல்லும் திறனுடைய நிமித்திகன் ஒருவன் அப்பொழுது அவையினுள் பிரவேசித்தான். அவன் வேந்தனை வணங்கிய பின் கூறுவான். "சேரநாட்டு கோமான் வாழ்க! அவர் கொற்றம் வாழ்க! வேந்தே! குடிமக்களின் நலனே முடிமன்னனுக்கு அரண் என்பதை அறிந்து அறநெறி பற்றி நல்லாட்சி செய்யும் மாமன்னு! நின் அறிவு வளத்தைக் கண்டு நாணியே கலைமகளானவள் பூவிலே பிறந்தோன் நாவிலே மறைந்து கொண்டாள். உன்னுடைய பெருஞ் செல்வத்திற்கு முன்பு தன் செல்வச்சிறப்பு குறைந்ததே என்பதை அறிந்த திருமகள் திருமாலின் மார்பில் சரண் புகுந்து தன்னை மறைத்துக் கொண்டாள். உன்னுடைய வீரத்தைக் கண்டு அஞ்சியே இந்திரனும் தேவர்களும் தேவலோகத்தை விட்டு பூலோகத்திற்கு வருவதில்லை. இத்தகு சிறப்புடைய உனக்குப் பின் இப் பரந்த பூமண்டலத்தை ஆட்சி புரிய தகுதியைப் பெற்றுள்ளவன் உன் இளைய மைந்தன் இளங்கோவே. அவனே இந்நாட்டை ஆள்வான்" என்றான்.

நிமித்திகன் வாக்கைக் கேட்ட வேந்தன் திடுக்கிட்டான். சபையோர் ஏதும் செய்ய சக்தியின்றி மயங்கினர். அன்றலர்ந்த செந்தாமரையைப் போன்ற செங்குட்டுவனின் சிரித்த முகம் சினத்தால் மேலும் சிவந்தன. இளங்கோ நிமித்திகன் சொன்னதைக் கேட்டு வியந்தான். தன் நிலையை உணர்ந்தான். அருமைத் தந்தையும் ஆருயிர் அண்ணவும் அவதிப்படும் நிலைமையை அறிந்தான். ஆசனத்திலிருந்து அமைதியாக எழுந்தான். அவன் கண்கள் அவையை வட்டமிட்டன. நிமித்திகனைக் கண்டவுடன் அவன் இதழில் இளம் முறுவல் அரும்பியது. "வேந்தே! அவையோரே! இக்கணமே நிமித்திகன் வாக்கை பொய்யாக்காவிடில் தீந்தமிழ்ப் பாடல் இயற்றும் பேற்றை இழந்தவனுவேனுக!" என்று கூறி அவை விட்டு ஏகினன்.

* * * *

"ஒரு நிமித்திகனின் வாக்கை பொய்யாக்க இளவரசர் இளங்கோ எவ்வளவு பெரிய தியாகம் செய்துவிட்டார்" என்று வாயில் காப்போன் அதி ஆச்சரியப்பட்டான். அவையில் நடந்த நிகழ்ச்சியையும் இளங்கோ சபதம் செய்துவிட்டு அவையைவிட்டு நீங்கியதையும் புலவர் மூலமாக அவன் ஏற்கனவே அறிந்தவன் தான். ஆனாலும் இளவரசர் இல்லறத்தை விட்டு துறவறத்தை உடனே மேற்கொண்டு விடுவார் என்று அவன் எதிர்பார்க்க வில்லை. ஆம்! புத்த பிக்ஷுவா? சமண சமய துறவியா? புலவரா? என்றெல்லாம் அரண்மனை வாயில் காப்போன் யாரைக் கண்டு ஐயம் கொண்டானே, எவரை அரண்மனைக்குள் அனுமதிக்க மறுத்தானே அவர்தான் இளவரசர் இளங்கோ.



வாசகர்களே! ஒரு நிமித்திகனின் வார்த்தையை பொய்யாக்க வேண்டி இல்லறத்தைத் துறந்து துறவறத்தை மேற்கொண்ட இளங்கோவடிகளைப் பின் தொடர்ந்து சென்று மேலும் என்ன நடைபெறுகிறது என்பதை அறிவோம்; வாருங்கள்!!

"வேந்தே!"

ஆழ்ந்த சிந்தனையிலிருந்த நெடுஞ்சேரலாதன் தலை நிமிர்ந்து பார்த்தான். தன் மெய்க்காப்பாளன் பணிந்து நிற்க அவனுக்குப் பக்கத்தில் நிற்கும் துறவியை நோக்கினன்.

அந்தத் துறவி யார்?

"வாருங்கள் ஸ்வாமி! தங்கள் நல்வரவால் என் உள்ளம் குளிர்ந்தது. தங்கள் தூய பாதங்களின் ஸ்பரிசத்தால் என் குடில் தூய்மையை அடைந்தது. இவ் வடிமையால் தங்களுக்கு ஆக வேண்டியது என்ன?" என்று நெடுஞ்சேரலாதன் அந்தத் துறவியை உபசரிக்கலானன்.

உணர்ச்சி மேலீட்டால் துறவியின் கண்களில் சிறிது நீர் கசிய ஆரம்பித்தது. ஆனாலும் அவ்விளம் துறவி உணர்ச்சியை வென்று பாசத்தை அடக்கி சிந்தனையைப் பரமன் மீது படர விட்டார்.

"தந்தையே!" துறவி அழைத்தார். "........எனக்கு விடை கொடுங்கள்."

"ஆ!...யார்?...என் கண்மணியா! ஐயோ! மகனே! உனக்கேன் இந்தக் கோலம்? வாழ்வைத் துறக்கவேண்டிய அவசியம் என்ன? அப்பா! மகனே! இளங்கோ..."

செங்குட்டுவன் நிதானமாக திரும்பி அந்தத் துறவியைப் பார்த்தான். "யார்? யார்? என் இளவலா? இளங்கோவா? நிமித்திகன் வாக்கைப் பொய்ப்பிக்கவா இக்கோலம் கொண்டான்? இல்லை; நிச்சயமாக இல்லை! நிச்சயமாக இல்லை! என்மேல் கொண்ட அளவற்ற அன்பல்லவா அவனை இத்தனை பெரிய தியாகம் செய்ய வைத்தது. ஐயோ! அந்த அன்பிற்கு நான் எதை ஈடுசெய்ய முடியும்" செங்குட்டுவனின் உள்ளம் ஊசலாடியது. அவன் வாய் திறந்து பேச வில்லை. இடத்தை விட்டு இளங்கோவின் முன் போகவுமில்லை. துறவு கோலம் கொண்டவுடன் அதற்கேற்றபடி தன்னைப் பெற்றெடுத்த தந்தையைக்கூட முதலில் "வேந்தே!" என அழைத்து தன் துறவற நெறியைக் கடைப்பிடித்த தன் தம்பியை அணைத்துக் கொண்டு, அவனை தான் தவருக நினைத்ததைச் சொல்லி, கண்ணீர் விட்டு கதறினுல் தான் பொருமை கொண்ட தன்னுள்ளம் மாசு நீங்கி தூய்மையடையும் என்று எண்ணினன். ஆனல் அவன் உணர்ச்சி வசப்பட்டு துயரத்தில் ஆழ்ந்து விடவே அவனல் ஒன்றும் செய்ய இயலவில்லை; எதிர்பாராத அதிர்ச்சியால் அவன் மிகவும் குழம்பி விட்டான்.

"தந்தையே! என்னை மன்னியுங்கள். அண்ணா, எனக்கு விடை கொடுங்கள். மூத்தவன் இருக்க இளையவன் அரசாள்வதா? வழி வழி வந்த தமிழர் மரபுத் தந்தையே! தங்கள் வாழ்நாளில் மாறுவதா? அதனால் வரும் பழி நம் குலத்தையல்லவா இழிவு படுத்தும். 'தமிழ் வேந்தர்களின் பரம்பரை ஆடல் பாடல் களியாட்டங்களில் காலம் போக்கும் ஆடம்பரக்காரர்கள் அன்று, எப்பொழுதும் போர் செய்து ஏதும் அறியாத மக்களைக் கொன்று வாள் முனையால் தன் ஆட்சியைப் பலப்படுத்தும் வெறியர்களும் அன்று, அவர்களில் அன்பும் அறனும் உடையவர்களும் உண்டு. துறவற நெறி பற்றி தூய வாழ்வை நடத்தும் பண்பாளர்களுமுண்டு" என்றெல்லாம் வருங்கால மக்கள் புகழ எனக்கு விடை கொடுங்கள். தங்கள் தனயன்—செங்குட்டுவனின் தம்பி—'அரச மரபு அறிந்தவன். அண்ணனிடம் மிக்க அன்பு கொண்டவன் தமிழ்க்காவலன்? என்று என்னை யாவரும் போற்ற வேண்டுமானால் தாங்கள் என் துறவு கோலத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்று என்னை ஆசீர்வதியுங்கள்" என்றார் இளங்கோவடிகள்.

அன்று முதல் இளங்கோவடிகள் அரச பதவியைத் துறந்தார். ஆடம்பரத்தை விட்டார். அணி அலங்காரங்களையும் அறுசுவை உண்டியையும் மறந்தார். ஆனால் அவர் தமிழை மட்டும் மறக்கவில்லை. தமிழை மேலும் வளர்த்தார். தன் வாழ்நாள் எல்லாம் திருநாளாக இருக்க தமிழ்த்தொண்டு செய்தார். முடி மன்னனின் மகனை அவர் உலகம் போற்றக்கூடிய ஒரு குடிமகன் காப்பியம் இயற்றினர்.

இளங்கோவடிகள் செய்த தியாகத்திற்கும் தமிழ்த் தொண்டிற்கும் மணியாலும் முத்தாலும் மாசிலா பொன்னாலும் அணியிட்டு பணி செய்தாலும் ஈடாகுமா?

"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர்போல், இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை,
வெறும் புகழ்ச்சி யில்லை."

—பாரதியார்.



அட்டைப்பட விளக்கம்.

# தோளும் துணையும்

**வித்துவான் ச. சுந்தரேசன்**

★

நண்பகல். சுமார் 12 மணி இருக்கும். வீட்டில் உள்ள பொருள்களெல்லாம் காண்பவர் மனத்தைக் கவரும் வண்ணம் அலங்காரமாக வைக்கப்பட்டிருந்தன. அழகிய அந்த வீட்டை மிக நல்ல முறையில் தன் கைத் திறமையால் மேலும் அழகு படுத்தி வைத்திருந்தாள் அவ் வீட்டில் வேலை செய்யும் வெள்ளை யம்மாள். அவளுக்குச் செய்ய வேண்டிய கடமை அது. வீட்டு வேலைகளைச் செய்வதோடு மட்டுமல்லாமல் உணவு சமைப்பவளும் அவளே. பொதுவாக அவளே எல்லாவற்றிற்கும் பொறுப்பானவள் என்று கூடச் சொல்லலாம். இப்படி ஒழுங்காகத் தன் வேலைகளைச் சாவி கொடுத்தால் ஓடுகின்ற கடிகாரத்தைப் போல செய்துவந்த அவளுக்கு அன்று மனம் என்னவோபோல இருந்தது. காரணம் தன் உடம்பிற்கு எந்தவிதமான நோயுமில்லை. தன் வீட்டிற்குத் தலைவியான மலர்க்கொடி எப்பொழுதும் போல மலர்ச்சியோடு இருக்கவில்லை. இளமைத் துடுக்கில் இனிமையான மொழி பேசி இங்குமங்கும் துள்ளியோடும் மானைப்போல இருக்கும் அவள் படுக்கையிலேயே படுத்துக்கொண்டிருந்தால் யாருக்குத்தான் மனம் வருந்தாமல் இருக்கும்?

காலையில் "ஏதோ நானும் சாப்பிட்டேன்" என்பதற்காகச் சிறிதுதான் சிற்றுண்டியை யுட்கொண்டாள். அதன்பிறகு பசியின் நினைவே யில்லாமல் இருக்கிறாளே என்று வருந்தினாள் வெள்ளையம்மாள். நண்பகல் உணவுக்கானவற்றைத் தயார் செய்துவைத்துவிட்டு மலர்க்கொடியைப் பார்த்து உணவு உட்கொள்ளச் செய்யலாம். அல்லது உடல் நலம் சரியாக இல்லாவிட்டால் மருத்துவரிடமாவது காட்டி நோயைப் போக்கலாம் என்று எண்ணியவாறே மலர்க்கொடியின் அறைக்குள்ளே நுழைந்தாள். ஆனால் தன் தலைவியைச் சரியாகக் காணமுடியவில்லை. கவிழ்ந்து படுத்தவாறே தலையணையின்மீது முகத்தைப் பதித்துக்கொண்டிருந்தாள். ஆடைகள் பலவாறு கலைந்திருந்தன. அருகே சென்றாள் வெள்ளையம்மாள். 'அம்மா! அம்மா!' என்று அழைத்தாள். சிறிதே புரண்டு படுத்து 'உம்' என்றாள் "என்னம்மா! இது. ஓடியாடி உற்சாகமாக இருக்கும் நீ ஏன் இப்படி இருக்கிறாய். நன்றாக இருக்கிறதா? எழுந்திரு, அவர் வருகின்ற நேரமாயிற்றே" என்றாள். கண்களில் இருந்து வரும் நீர்த்துளியாலும் உடலின் வெப்பத்தால் வரும் வியர்வையினாலும் நனைந்திருந்த பூப்போன்ற மென்மையான தலையணையை யணைத்தவாறே நிமிர்ந்து, "நீ போ, வெள்ளையம்மா. எனக்குப் பசிக்கவில்லை. நீ போய்ச் சாப்பிடு. அவர் ஏன் இப்போது வரப் போகிறார்? அவருக்கு இருக்கும் வேலையில் நம்மையெல்லாம் நினைவிருக்குமா?" என்றாள். அவளது நிலையை எண்ணியவாறே நின்

றிருக்கும்போது யாரோ வரும் ஒலி கேட்டுத் திரும்பினுள். தலைவர் குணசீலர் தான் உள் நுழைந்தார். இனி நமக்கு இங்கு வேலை யில்லை யென்று அறையின் வெளியே வந்து தன் வேலைகளைக் கவனிக்கச் சென்றுவிட்டாள்.

அயர்ந்து சோர்வோடு படுத்திருந்த மலர்க்கொடியின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார். 'மலர்க்கொடி!' என்ருர். 'ஏன்' என்றவாறு வேறு பக்கமாகத் திரும்பி யுட்கார்ந்தாள். "ஏன் இவ்வளவு நேரமாக எங்கெல்லாமோ சுற்றிவிட்டு இப்பொழுதுதான் வந்தேன் என்பதற்காகக் கோபித்துக்கொண்டாயா" என்ருர். "இல்லை. உங்களுக்கு உங்கள் வேலைதான் பெரிது. என்னை நினைவிருக்குமா? ஏதோ உயிரோடுதான் மனைவி வீட்டிலிருக்கின்ருள் என்று நினைத்து இப்பொழுதாவது வந்தீர்களே" என்று அவன் பக்கமாகத் திரும்பிக் கேட்டாள். அவன் கண்கள் சிவந்திருந்தன; பொதுமகளிரோடும் புதிதாக வந்த நீரின் பெருக்கில் ஆடிவிட்டு வந்தமையால் சிவந்திருந்தன. தெளிவாக யூகித்துக்கொண்டாள். 'தன்னை ஏன் இவ்வாறு சுட்டிக் கேட்கிருள்' என்று நினைக்கும்போது அவள் தன்னை உற்றுப் பார்த்தலும் தெரிந்தது. என்ன சொல்லலாம் என்று யோசனை செய்யும்போது அவளே ஆரம்பித்தாள்: "நான் ஒன்று கேட்கிறேன். பொய் சொல்ல மாட்டீர்களே" என்ருள். 'என்ன? என்ருன். "நான் ஊடிக்கொள்ளவில்லை. நலமுடைய பிற பெண்களின் தோளுக்குத் துணையாக நீங்கள் சென்று புதுப் புனலில் ஆடிவிட்டு வந்தீர்களல்லவா?" என்ருள். என்ன சொல்வதென்று தெரியாமல் திருடியவன் கையில் தேள் கொட்டியது போன்று விழித்துக்கொண்டிருந்த குண சீலரை நோக்கி "சிவந்த உங்கள் கண்களே சொல்கின்றனவே! ஏன் மறைக்கப் பார்க்கிறீர்கள்?" என்று மேலும் கேட்டாள். அவருக்கு அந்த சமயம் உள்ளம் என்னவோ எண்ணியது. முன்னேர்களெல்லாம் கணவனும் மனைவியும் தோளும் துணையுமாக இருந்து வாழவேண்டுமென்று சொல்லியிருக்கிருர்கள். நாம் எப்படியோ தவறிவிட்டோம். இனி இவ்விதக் குற்றங்களைத் தவீர்த்துவிடவேண்டும் என்று நினைத்தவாறு மலர்க்கொடியின் முகத்தை நோக்கினுர். அன்பு ததும்பிய முகத்தின் மலர்ச்சி கண்டு மகிழ்ந்தார். உயிருக்கும் உடலுக்கும் ஒருவருக்கொருவர் உணவு பரிமாறிக்கொண்டு இல்லற வாழ்வை யினிது நடத்துகின்றனர்.

இச்செய்தியினைச் சுருக்கமாகக் கூறி விளங்க வைக்கின்றது ஐங்குறுநூறு பாடல் ஒன்று. கீழே படித்துச் சுவைப்போம்.

"புலக்குவே மல்லோம் பொய்யா துரைமோ
நலத்தகு மகளிர்க்குத் தோட்டுணை யாகித்
தலைப்பெயற் செம்புன லாடித்
தவநனி சிவந்தன மகிழ்ந!நின் கண்ணே."

[ஐங்குறுநூறு—80]

---

# செந்நீர்ப் பஞ்சணை

மூலம்:
கலீல் கிப்ரான்

★

தமிழாக்கம்:
நலங்கிள்ளி

திருமண ஊர்வலம் மாதா கோயிலை விட்டுப் புறப்பட்டது. மணமக்களைச் சுற்றிலும் சுற்றமும் நண்பர்களும் சூழ்ந்திருந்தனர். பகல்போலும் விளக்குகள் ஒளிர, பல்லியங்கள் நேர் முழங்க, பல்வகைப்பட்ட பேச்சுகள் இடையே, மகளிரின் கிண்கிணிச் சிரிப்பொலி காற்றூடே தவழ்ந்து வர, கல்யாண ஊர்வலம் ஊர்ந்தது.

மணமகனின் வீட்டை அடைந்தது ஊர்வலம். அவ்வீட்டின் வெளிமுகப்பே தனிப்பட்ட ஒப்பனையுடன் விளங்கிற்று. உள்ளே இரு கைகளுக்குக் கண்கவர் விரிப்புகள் போர்த்தப்பட்டிருந்தன. அழகிய கூடத்தின் தரை முழுவதும் கம்பளம் விரிக்கப்பட்டு சுவர்கள் அழகுற அலங்கரிக்கப்பட்டு, வெள்ளியும், பொன்னும், முத்தும் மணியும் கலந்த அணிபணிகள் ஒளிர, செல்வச்செறுக்கு ஒவ்வோர் அணுவிலும் காணப்பட்டது. மலர்களின் மணமும் சந்தனம் ஜவ்வாது அகில் முதலியவற்றின் மணமும், பிற நறுமணங்களும் கலந்து திருமணத்திற்கே உரிய உன்னத மணம் எங்ஙணும் பரவி இருந்தது. உயர்ந்த அழகிய ஒரு இருக்கையிலே மணமக்கள் அமர்த்தப்பட்டனர். நண்பர்கள் விருந்தினர்கள் ஆண்கள் பெண்கள் உட்பட அனைவரும் அக் கூட்டத்திலே நிறைந்து விட்டனர். கம்பளத்தின் மீதும், நாற்காலிகள் மேலுமாக அமர்ந்திருந்த அவர்களால் கூடம் நிரம்பி வழிந்தது. பணியாட்கள் எல்லோருக்கும் விருந்து பரிமாறி தாராளமாக மது வகைகளும் வழங்கினர்.

ஒருபுறம் காதுக்கினிய கானமும் ஒருபுறம் கண்ணுக்கினிய நாட்டியமும் நடைபெற்றது. பாடப்பட்ட இசையோ அகப்பொருள் துறையைச் சார்ந்ததாய் ஏற்கனவே மதுவின் போதை ஏறி இருந்த விருந்தினர்களை மேலும் இறங்கச் செய்வதாய் அமைந்திருந்தது. எனவே அவர்களில் சிலர் எதிரே காணும் நாட்டியத்திற் கேற்பத் தாளம் போட்டனர். சிலர் தலையையும் உடலையும் அசைப்பச் சிலர் அதைப்போலவே ஆட முயற்சித்தனர். ஆங்கு அமைதி இல்லை; குழப்பந்தான் மிஞ்சிற்று. உயிர்த்தாதுக்கள் உணர்வு பெற்று ஆங்குள்ளோர் இதயம் துடிக்கத் தொடங்கின. பேய் மீட்டிய ஓரிரு தந்தி அறுந்து நரம்பு பிசகிய யாழின் அபசுவரம் போல் அவ் வீட்டின் வெறியாட்டம் காணப்பட்டது.

ஆங்கு ஒருபால் ஒருவன் அழகிய மங்கை ஒருத்தியின் அழகால் மயக்கமுற்று, அது அவன் உள்ளத்தைத் தூண்டிவிட அவளிடம் தன் மனத் தடித்தளத்திலே புதைந்துள்ள காதலைச் சொல்லலுற்ருன். மற்ருேர்புறம் ஓர் இளைஞன் ஓர் அழகியிடம் தன் காதலின் ஆழத்தையும், தன் மனம் படும் பாட்டையும் விவரிக்கக் கருத்துக் கோவையும் வார்த்தையும் தேடித் திக்குமுக்காடிக் கொண்டிருந்தான். இப் புறத்திலே வாழ்க்கையின், பாதி வழி கடந்த ஒருவன் குவளைக்குப் பின் குவளையாக வற்புறுத்திக் கேட்டு மதுபானம் செய்து ஆங்குப் பாடப்பட்ட இசை பழைய காலத்துப் பண் என்று

குறைபட்டுக் கொண்டிருந்தான். ஒரு மூலையிலே ஒரு மடந்தை மற்றோர் மங்கையுடன் சல்லாபித்துக் கொண்டிருந்த ஒருவனைக் கண்குத்திப் பாம்புபோல் கவனித்துக் கொண்டிருந்தாள். மற்றோர் மூலையிலே தலை வெளுத்துப்போன ஓர் மூதாட்டி தன் மகனுக்கு ஏற்ற நங்கை இங்கே யார் உளர் எனப் பெண்கள் கூட்டத்தை ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தாள். காலதர் (Window) அருகிலே ஒருத்தி தன் கணவனின் மது மயக்கத்தைச் சாதகமாக்கிக்கொண்டு தன் காதலனை நெருங்கும் நேரத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள். இவ்வண்ணமாக ஆங்கே இருந்தவர்கள் மதுவிலும் கேளிக்கையிலும் மூழ்கிச் சிரிப்பிலும் உந்தி செல்லப்பட்டவர்களாய் நேற்றைய நிலையை மறந்து நாளைய ஏக்கத்தைத் துறந்து நிகழ்காலத்தின் ஒவ்வொரு கணந்தோறும் துய்க்கும் இன்பப் பலனைக் காணத் துடித்தனர்.

இத்தகைய எல்லா நிகழ்ச்சிகளும் மணமகள் மட்டும் நிச்சலனமாக, சோக சித்திரமாக, கைதிதான் சிறைப்படுத்தப்பட்டுள்ள இருண்ட சிறைக்கூடத்தின் சுவர்களைத் தப்பிச் செல்லப் பார்ப்பது போல, சமயம் பார்த்துக்கொண்டிருந்தாள். அடிக்கடி அவள் கண்கள் ஓர் மூலையிலே தனியாக இந்தக் களியாட்டக்காரருடன் சேராமல் அடிபட்ட புறாவைப்போல் ஒதுக்குப் புறமாக அமர்ந்திருந்த ஒரு இருபது வயதுள்ள இளைஞனைக் காணலுற்றன. அவன் தன் கைகளைக் கட்டிக்கொண்டிருந்தான். அது அவன் தன் இதயத்தை எங்கும் ஓடி விடாதவாறு பாதுகாப்பதைப் போல் இருந்தது. அவன் கண்களோ ஏதோ வெறிச்சென்று வெட்டவெளியைப் பார்ப்பதுபோல் எதையோ நோக்கிக் கொண்டிருந்தன. அவனுடைய உயிர்நாடி உடலை விட்டுப் போய்விட, அதைத்தேடி காற்றையும் கிழித்துக்கொண்டு இருட்தோற்றத்தைப் பின்பற்றி செல்லும் பார்வை என அவன் பார்வை காணப்பட்டது.

நள்ளிரவு நெருங்கிற்று. மணவிழாவின் விருந்தினர் கேளிக்கைகள் துரித கதியிற் செல்லலுற்று முடிவில் ஒழுங்கற்ற வெறிக் கூத்தாக மாற்றம் அடைந்தது. அவர்களின் புலன்கள் மதுவின் நுரையால் மங்கி வார்த்தைகள் குழறியும் பொருளற்றும் போந்தன. அந்த வேளையில் மணமகன் தன் இருக்கைவிட்டு எழுந்தான். பாதி வயதைக் கடந்த கடூரமான தோற்றமுடைய அவனும், பாவம், மது மயக்கத்தினால் கிறங்கினான். தன் உறவினர் நண்பர்களின் கேலி கிண்டலின் ஊடே அவன் அவ்விடம் வீட்டு நீங்கினான்.

அந்தப் பொன்னான நேரத்தை எதிர்நோக்கி இருந்தவள்போல், மணமகள் உடனே தன் இருக்கையில் இருந்தபடியே, கூட்டத்தில் இருந்த ஒரு மங்கையைத் தன் கையால் விளித்தாள். அவள் தன் அருகில் வந்து பக்கலில் அமர்ந்த உடனே, ஒரு பயங்கர ரகசியத்தைக் கூறப் புகுமுன் சுற்றுமுற்றும் பார்ப்பவளைப்போல் திரும்பித் திரும்பிப் பார்த்து, துடிதுடிக்கும் உதடுகளை அவள் காதருகிலே வைத்துக் கூறலுற்றாள்,

"சுசேன்! நீ என் அன்புக்குரியவள். நீயும் நானும் சிறு வயது முதல் ஒன்றாக வளர்ந்தோம். விளையாடினோம். அந்தத் தொடர்பின்மேல் நடிப்பின்மேல் உன்னை வேண்டிக்கொள்கிறேன். உனக்குப்



பிரியமானவை மேலும் உன் உள்ளத்தில் புதைந்திருப்பவை மேலும் ஆணையாக வேண்டுகிறேன். நம்முடைய இதயத்தைத் தழுவி நின்று அவைகளை ஒளிபெறச் செய்வதும் உன் நெஞ்சத்தை விம்மித முறச் செய்து, என் நெஞ்சைத் துயரால் வாட்டுவதுமான காதல்மேல் ஆணையிட்டு வேண்டுகிறேன். நீ உடனே, எனக்காக ஆங்கே உட்கார்ந்துள்ள சலீமிடம் செல்லவேண்டும். சென்று அவரை, ஒருவரும் காணாதவாறு பின்புறமுள்ள தோட்டத்திற்கு வரச் சொல்ல வேண்டும். ஆங்குள்ள மலர்ச்செடியின் கீழ் அவரை எனக்காகக் காத்திருக்கச் சொல்லவும். அவரிடம் எனக்காக நீ வாதாட வேண்டும். ஆம், அவர் அங்கிருந்து எழுந்து நான் சொன்ன இடத்திற்குச் செல்வதற்காக நீ வாதாடத்தான் வேண்டும். கடந்து போன இன்பமயமான நாட்களை அவருக்கு நினைவுறுத்து. எங்கள் கனிந்த காதலையும் நினைவுப்படுத்து. மேலும் சொல் 'உன் காதலி மிகவும் துர்ப்பாக்கியவதி; புத்தியற்றவள் அவள். தன் இறுதிக் காலத்தை அடைய குறுகிய காலமே உண்டு. அவள் இவ்வுலகை விட்டுப் பிரிவதற்கு முன் தன் இதயத்தை உமக்குத் திறந்து காட்ட விரும்புகிறாள். இப்போதே அவள் யாவற்றையும் இழந்து தன் நிலை துறந்தாள். நரகத்தீ அவளைச் சாம்பராக்கு முன் உம்முடைய கண்களின் ஒளியை மட்டும் காண அனுமதியளி. அவள் உம் வரையில் பாவியானாள். அதற்காக உம்முடைய மன்னிப்பைப் பெறுவதற்கு ஒரு வழியைத் தாரும்" என்று அவரிடம் கூறு. இப்போதே செல். இங்குக் கூடி இருக்கும் பன்றிக் கூட்டங்களுக்காக அஞ்சாதே. இவை மதுவால் மயங்கி தங்கள் மதியை இழந்து பார்வை கெட்டு காதும் செவிடுபட்டுள்ளன" என்று கூறினாள்.

அம்மங்கை உடனே எழுந்து ஆங்கு ஒருபுறத்தே சோகம் கப்பிய முகத்தோடு அமர்ந்துள்ள சலீமின் பக்கலிலே அமர்ந்தாள். பிறகு அவள் அவனுடைய காதிலே தன் தோழி கூறிய யாவற்றையும் ஒன்று விடாமல் கூறி அவன் முகத்தை ஏறிட்டு நோக்கினாள். காதலும் நம்பிக்கையும் அவன் உடலைச் சிலிர்க்க வைத்தன. அவன் தலைநிமிர்ந்து இவை யாவும் கேட்ட பின்னர் அவளை மிக ஆர்வத்தோடு நீர் வேட்கை மிக்கவன் செய்துள்ள நீர்க்குவளையை நோக்குவதுபோல் நோக்கினான். பிறகு மிக மெல்லிய குரலிலே அவன் அவளை நோக்கி "அவ்வண்ணமே; நான் தோட்டத்திலே மலர்ச்செடியின் கீழ் காத்திருக்கிறேன்" என்று கூறிவிட்டு எழுந்து தோட்டத்தை நோக்கிச் சென்றான்.

சில வினாடிக்குள் மணமகளும் அவன் சென்ற பாதையே குறியாகி, அந்தக் கூடத்திலே மதுவின் போதையால் வெறியாட்டயரும் மாந்தர்களையும், குடியால் மதிமயங்கி தம்மின் இளையரைத் தழுவி நிற்கும் மங்கையரையும் கடந்து தோட்டத்தை அடைந்தாள். ஆங்கிருந்து அவள் ஓநாய்களால் விரட்டப்பட்ட புள்ளிமான்போல் மிக வேகமாக ஓடி தன் காதலன் காத்திருக்கும் மலர்ச் செடியின் பக்கலுக்கு விரைந்தாள். ஆங்கு தன் காதலனை அடைந்ததும், தன் இரு கைகளால் ஆரத்தழுவி, அவனை இறுக அணைத்தவண்ணம் தன் கண்களிலே நீர் வழிந்தோட, அவள் முகத்தைப் பார்த்தபடியே சோகத்தோடு கூறலுற்றாள்.

"அன்பே, நான் கூறுவதைக் கேளுங்கள். பெரும் தவறு செய்த மகாபாபி நான். அந்தத் தவறுக்காக மாபாவத்துக்காக, மிகவும் பச்சாதாபப் படுகிறேன். இரங்குகிறேன். அக் கழிவிரக்கம் என் நெஞ்சத்தைப் பிளக்கக்கூடிய அளவுக்கு நான் இரங்குகிறேன். என் அன்பே! சலீம்! நான் உன்னை இவ்வுலகில் எக்காதலரும் காதலிக்காத அளவுக்குக் காதலித்தேன், காதலிக்கிறேன். இவ்வுடலில் உயிர் நீங்கும் காலம் வரையிலும் அதற்கப்பாலும் காதலிப்பேன். ஆனால் நீர் வேறொருத்தியின் மையலால் என்னை மறந்து விட்டீர் எனப் பலர் என் நெஞ்சத்திலே நஞ்சைக் கலந்தனர். அவர்கள் தம் நாக்குகளால் என் இதயத்தைப் பிளந்து என் உள்ளத்தைப் பொய்களால் நிரப்பினர். அந்தப் படுபாதகி நாஜிபி, என்னிடம் நீர் அவள் ஆசைக்கு அடிமையாகி விட்டதாயும் அதனால் என்னை நீர் மறந்து விட்டது மட்டுமன்றி வெறுத்து ஒதுக்கி விட்டதாயும் கூறி, என்னைத் தன் சொற்களால் கொல்லத் தொடங்கினாள். அதன் மூலமாக அவளுடைய உறவினனுக்கு நான் மாலையிடவேண்டும் என்பது அவள் எண்ணம் என்பது எனக்கு அப்போது தெரியாது. ஐயோ, என் முட்டாள்தனம் அப்படியே ஆகிவிட்டது. ஆனாலும் என் மட்டில், உம்மைத் தவிர்த்து எனக்கு வேறொருவர் மணாளன் ஆக முடியாது. இன்று என் கண்களை மூடி இருந்த கருப்புத்திரை. விலகிவிட, உம்மிடம் நான் ஓடோடியும் வந்தேன். ஆம்; அந்த வீட்டை விட்டு முடிவாகவே வெளியேறி விட்டேன். திரும்பவும் அவ்வீட்டில் காலடி எடுத்து வைக்கமாட்டேன். நான் உம்மைத் திரும்பவும் என் கைகளால் பிணிக்க வென்றே ஓடி வந்தேன். இந்த உலகிலே இந்த பிணைப்பைத் துண்டாடிவிட எந்த சக்தியாலும் முடியாது. துயரத்தில் மூழ்கியவாறே நான் மணம் செய்து கொண்ட மணாளனிடம் என்னை, இப் பிணைப்பைத் துண்டித்து அனுப்பக்கூடிய வல்லமை எதற்கும் இல்லை. பொய்யும் ஏமாற்றும் எனக்கெனத் தேர்தெடுத்த கணவனையும் விதி எனக்கென அமைத்துவிட்ட தகப்பனையும் இன்று முதல் துறந்து விட்டேன். திருமணத்திற்காக பாதிரியார் தயாரித்த மலர்முடியையும் உலகில் சமைக்கப்பட்ட திருமணச் சட்டமாகிய விலங்கையும் விலக்கிவிட்டு இங்கு வந்திருக்கிறேன். குடியும் பாவமும் நிரம்பிய இவ் வீட்டையே விட்டு உம்மைத் தொடர்ந்து மிக மிக தூர நாட்டுக்குச் செல்ல வந்திருக்கிறேன். ஆம்; மிக தூரத்திற்கும் சரி, பூமியின் மறுகோடியோ, அல்லது கொடிய விலங்குகள் தங்கும் குகையோ அல்லது மரணத்தின் கோரப்பிடிப்போ எங்காயினும் சரி, நாம் இருவரும் சேர்ந்தே பயணம் செய்வோம்.

"இதோ அருகிலே உள்ள துறைமுகத்திற்குச் சென்று ஒரு கப்பலிலே ஏறி கண் காணா தூர நாட்டுக்குச் செல்வோம், விடியுமுன் நம் எதிரிகள் நம்மைக் காணா வண்ணம் நாம் உடனே போய் விடுவோம். இந்த வைர நகைகள் தங்கச்சங்கிலிகள் முத்துவடங்கள், இவை யாவும் நம் எதிர்காலத்திற்குத் துணைபுரிய நாம் அரசிளங்கன்றுகளாக விளங்கி வாழ்க்கை நடத்தலாம். சலீம், என் அன்பே! ஏன் நீ பேசவே இல்லை. என்னைப் பார்க்கக்கூட இல்லையே. என் இதழ்கள் உன்னால் சுவைக்கப்படாமல் துடிக்கின்றனவே. நீ என் உள்ளத்தின் ஓலத்தையும் இதயத்தின் ஏக்கத்தையும் உணரவில்லையா? என் கணவனையும் பெற்றோரையும் துறந்து என் மணி அணியோடு உன்னுடன் ஓடிவிட இங்கு வந்திருப்பதை நீ இன்னும் நம்பவில்லையா? பேசமாட்டாயா, சலீம்? இல்லை; பேச வேண்டியதில்லை. இப்போது ஒவ்வொரு வினாடியும், பொன்னையும் பொருளையும், ஏன் மன்னன் மணிமுடியைக் காட்டிலும் விலை மதிப்பற்றது. எனவே நாம் இங்கிருந்து போய்விடலாம், பிறகு பேசிக் கொள்ளலாம்" என்றாள்.



இவ்வண்ணம் அவள் பேசிய போழ்து அவள் குரல் இசையை விட இனித்தும் மரண ஓலத்தைவிட பயங்கரமாயும் ஒலித்தது. புள்ளினங்களின் சிறகுத் துடிப்பைவிட படபடத்தும் கடல் ஆழத்தைவிட ஆழ்ந்தும் காணப்பட்டது அது. நம்பிக்கையும் அவநம்பிக்கையும் இன்பமும் துன்பமும் இழைந்து கலந்து ஒலித்த அந்தப் பேச்சிலே பெண்மையின் இதய தாபமும் ஆசையும் முழுமையும் நிரம்பி வழிந்தது.

அவன் ஆங்கு நின்று கூர்ந்து கவனித்து முழுமையும் கேட்டான். அவனுடைய உள்ளத்திலே காதலுக்கும் கண்யத்திற்கும் பெரும் போராட்டம் நடைபெற்றது. பாலை வனத்தைப் பசுஞ் சோலையாக்கும் காதலுக்கும் உயிருடன் ஒன்றி, ஆசைகளையும் மனிதாபிமானங்களையும் உதறித் தள்ளும் கண்ணியத்திற்கும் அவன் உள்ளத்திலே போர் நடைபெற்றது.

நீண்ட நேர மௌனத்திற்குப் பிறகு, அந்த இளைஞன் தன் தலை நிமிர்ந்து நோக்கினான். அவன் கண்களிலே ஆசைக் கனலை, தன் ஆன்ம பலத்தால் அடியோடு அழித்து விட்ட வெற்றி ஒளி தோன்றிற்று. பயத்தால் தன்னையே கவனித்துக் கொண்டிருந்த அவள் பார்வையில் இருந்து தன் தலையை வேறு பக்கம் திருப்பி, அவன் மிக வெறுப்போடு "பெண்ணே! நீ இங்கிருந்து போய்விடு! உடனே திரும்பிப் போ! நீ உன் கணவன் வீட்டுக்குப் போகத்தான் வேண்டும். ஏனெனில் எல்லாம் முடிந்துவிட்டது. கனவால் கற்பனையாக எழுப்பப்பட்ட கோட்டைகளை, என் உள்ளத் தெழுச்சி தூள் தூளாக்கி தரைமட்டமாக்கி விட்டது. எனவே நீ உன் கணவனிடம் திரும்பிச் செல். களியாட்டம் நடைபெறும் இடத்திற்கு உடனே செல். ஏனெனில் கழுகுக் கண்களால் உன்னைக் கண் காணிப்பவர்கள், நீ கடந்த காலத்திலே உன் காதலனுக்குத் துரோகம் செய்ததைப் போலவே, திருமணஞ் செய்த அன்றே நள்ளிரவிலே உன் கணவனுக்குத் துரோகஞ் செய்தாய் என்று உன்னைத் தூற்றிப் பழிப்பார்கள்" என்று கூறினான்.

இவைகளைக் கேட்டவுடனே அவள் உடல் புயலால் அலைக்கழிக்கப்படும் நாணற் றண்டு போல் கிடுகிடுவென நடுங்கியது. துயரத்தால் அவள் கதறியபடியே "என் கடைசி மூச்சுள்ளமட்டும் அந்த வீட்டுக்கு நான் திரும்பமாட்டேன். அந்த வீட்டுக்கும் அந்த வாழ்க்கைக்கும் அதில் உள்ள செல்வ சுகத்துக்கும் ஒரே முழுக்குப் போட்டு விட்டேன். தேசப் பிரஷ்டன் யாவற்றையும் துறந்து

வேற்று நாட்டுக்குச் செல்வதைப்போல், நான் யாவற்றையும் விட்டு விட்டு உன்னிடம் வந்துவிட்டேன். சலீம்! உன்னை கெஞ்சுகிறேன்! உன்னைவிட்டு என்னைப் போகச் சொல்லாதே! என்னை மோசக்காரி என்றும் எண்ணாதே! நம்முடைய இரு இதயங்களையும் ஒன்றாகப் பிணித்த காதலின் கரங்களைக் காட்டிலும், வெறும் மணத்தால் எங்கள் இருவர் கரங்களையும் ஒன்று சேர்த்த மத குருவின் கரங்கள் வலிவு மிக்கதல்லவே. இதோ உன் கழுத்தை சுற்றிக்கொண்டுள்ள என் கைகளைப் பார். இவ்வுலகில் உள்ள எந்த சக்தியாலும் அவைகளை விலக்க முடியாது. என் உயிர் உன் உயிரோடு இணைந்து விட்டபிறகு மரணம் கூட அவைகளை இரண்டாகப் பிரிக்க முடியுமா? முடியவே முடியாது" என்று கதறினாள்.

சலீம் தன்னை அவள் கரங்களிலிருந்து விடுவித்துக்கொள்ள முயன்றான். வெறுப்பினால் அவன் முகம் கடுகடுக்க, 'பெண்ணே! என்னைவிட்டு உடனே போய்விடு; என் உள்ளத்தில் இருந்து உன்னை முற்றும் விலக்கிவிட்டேன். என் காதலுக்குரியவள் வேறொருத்தி எனப் பிறர் பேசிக் கொண்டது யாவும் உண்மையே: என்ன நான் சொல்வது உனக்குக் கேட்கிறதா? என் நினைவில் இருந்து உன்னை அடியோடு துடைத்துவிட்டேன். உன் மேலுள்ள வெறுப்பால் உன்னைப் பார்க்கவும் என் கண்கள் கூசுகின்றன. போ! போ! என் வழியில் குறுக்கிடாதே. உன் கணவனிடம் சென்று அவன் நம்பிக்கைக்குப் பாத்திரமாய் நடந்து கொள்' என்று சொன்னான்.

துயரம் தன் உள்ளத்தைக் கவ்வ அவள், "இல்லை இல்லை. இவைகளை நான் நம்பமுடியாது. பிறர் கூறிய யாவும் பெரும் பொய்யே; நீ உண்மையாகவே என்னைக் காதலிக்கிறாய். அதை உன் கண்களில் நான் நன்றாகக் காண்கிறேன். உன் உடலை நான் தீண்டும்போதெல்லாம் அதை நான் நன்குணர்கிறேன். நான் உன்னை எவ்வளவு காதலிக்கிறேனோ அவ்வளவு நீ என்னைக் காதலிக்கிறாய். இவ்விடத்தைவிட்டு; உன்னோடன்றி எங்கும் செல்ல முடியாது என் உடலிலே இன்னும் வலிமை உண்டு, நீ எங்கு சென்றாலும் இவ்வுலகின் மறு கோடிக்கே சென்றாலும் அங்கேயும் நான் பின் தொடர்வேன்" என்றாள்.

அவன் தன் குரலை உயர்த்தித் திரும்பவும் கூறலுற்றான். 'பெண்ணே, நீ உடனே என்னை விட்டுப் போய்விடு. இல்லையேல் என்னுடைய உரத்த குரல் களியாட்டயர்ந்துள்ள விருந்தினரை இங்கு வரவழைத்து விடும். உடனே போய்விடு. இல்லையேல் அவர்கள் உன் வெட்கங்கெட்ட செயலைக் கண்டு தூற்றிப் பழித்துப் பேசும்படிச் செய்வேன். என் காதலி நாஜ்பீ இங்கு வந்து உன்னைக் கண்டு ஏளனம் செய்து உன் வீழ்ச்சிக்காக கேலி பேசி தன் வெற்றிக்காக புகழ் பாடச் செய்வேன்' என்று கூறினான்.

இப்படிப் பேசியபடியே அவன் அவளைத் தன்னிடமிருந்து விலகி நிற்கத் தன் கையால் சிறிது தள்ளினாள். அவள் தோற்றம் உடனே மாற்றம் அடைந்தது. அவள் கண்களிலே ஒளி கொப்பளிக்கத் துயரமும் காதலும் மாறி கோபமும் உறுதியும் தன்னை



ஆட்கொள்ள, குட்டிக்காக வீறிட்டெழும் பெண் புலியைப்போல், புயலால் கொந்தளித்தெழும் கடலைப்போல் சீறி 'எனக்குப் பிறகு யார் உன்னுடன் காதற்கேணியில் மாந்தி இன்புறுவர். என் இதயம் தவிர எந்த இருதயம் உன் நெஞ்சக் காதலின் முத்தத்தைச் சுவைத்து இன்புறும் என்பதை நான் பார்க்கிறேன்' என்று உரத்துக் கூவியபடியே தன் உடையிலே மறைத்து வைத்திருந்த குத்து வாளை உருவி மின் வெட்டென அவன் மார்பிலே பாய்ச்சினாள். புயலால் வீழ்த்தப்பட்ட மரம்போல் அவன் 'ஆ' வென்று கீழே விழ, தன் கையில் பிடித்திருந்த குத்து வாளில் ரத்தம் சொட்டச் சொட்ட, அவள் அவன் பக்கலிலே மண்டியிட்டு அவன்மேல் சாய்ந்தாள்;

மரணம் தன் கோரக் கரங்களை நீட்டித் தீண்டிவிட்ட தன் கண்களை திறந்து, தன் உதடுகள் துடிதுடிக்க. மேல் மூச்சு வாங்கக் கூறலுற்றான். 'ஓ லைலா! என் அன்பே! நீ இன்னும் என்னை நெருங்கி வா. என்னை விட்டு அகலாதே. வாழ்வைவிட மரணம் வலிவுள்ளதுதான். ஆனால் காதலோ மரணத்தைவிட பலம் வாய்ந்தது. களியாட்டயர்பவர்களின் கேலிச் சிரிப்பையும் மதுக்கிண்ணங்கள் மோதும் கிண்கிணி ஒலியையும் கேள். என் அன்பு லைலா. நீ இவைகளில் இருந்து என்னை விடுதலை செய்தாய், என் தளையை அறுத்துவிட்ட அந்தக் கைகளை நீட்டு. லைலா நான் அவர்களை முத்தமிடவேண்டும். என் இதய தாகத்தை மறைத்து வெறும் பொய்யே உரைத்த இந்த உதடுகளை முத்தமிடு, லைலா, முத்தமிடு. ஆ. போதும். என் ரத்தம் தோய்ந்த உன் விரல்களாலே மரணத்தின் எல்லையில் மூடிக் கொள்ளும் கண்ணிதழ்களை மூடிவிடு. என் உயிர், உடலைவிட்டு நீங்கிய உடனே அக்குத்துவாளை என் வலது கையிலே வைத்துவிடு. யாவருக்கும் சலீம் தன் துயரத்தாலும் பொறாமையாலும் தற்கொலை செய்து கொண்டான் என்று கூறிவிடு. லைலா! நான் உன்னை என் முழு உள்ளத்தோடும் காதலித்தேன். ஆனால் உன்னுடன் மணநாளன்று ஓடி விடுவதைவிட என் இதயத்தின் இன்பத்தைத் துறந்து விடுவதில் மேலான இன்பங் கண்டேன். என் பேரின்பமே, லைலா! என் உயிர் நீங்கு முன்னர் பிறர் என் பிணத்தைக் காணா முன்னரே என்னை முத்தமிடு—லைலா......" என்றபடியே தன் கைகளால் மார்பை அழுத்திப் பிடித்துக்கொள்ள அவன் தலை சாய்ந்தது. உயிர் உடலை விட்டு நீங்க சலீம் பிணமானான்.

லைலா உடனே தன் தலையைத் தூக்கி வீட்டை நோக்கி உரத்த குரலிலே, "ஓ விருந்தினர்களே இங்கே ஓடி வாருங்கள். இங்கே வந்து இந்த மணமகனையும் மணவிழாவையும் காணுங்கள். சாந்தி முகூர்த்தப் பஞ்சணையைக் காண ஓடிவாருங்கள். தூங்குகின்றவர்களே, குடிகாரர்களே, விழித்துக்கொள்ளுங்கள்; இங்கே வாருங்கள். நாங்கள் காதலின் நுட்பத்தையும் வாழ்வு சாவு இவை இரண்டின் ரகஸ்யத்தையும் உங்களுக்குக் கூறுகிறோம்"! என்று கூவினாள்.

அவள் குரல் அவ்வீட்டின் மூலை முடுக்குகள் எங்கும் எதிரொலித்து, களியாட்டத்திலே திளைத்திருந்த ஆடவர் பெண்டிர் செவிவழி புகுந்து அவர்களின் இதயத்தையே குலுங்க வைத்தது. அதைக் கேட்டதும் அவர்கள் சில விநாடிகள் மெய்மறந்து சிலை

யென அசைவற்றுப் பின் ஏதோ ஒரு தெளிவு தங்கள் மயக்கத்தை
யும் ஊடுருவிச் சென்றதென உணர்ந்து யாவரும் ஒருங்கே ஒருவர்
மேல் ஒருவர் வீழ்ந்தடித்து இப்புறமும் அப்புறமுமாக ஓடி இறுதி
யில் சலீம் வீழ்ந்திருக்கும் இடத்தை அணுகிச் சூழ்ந்தனர். ஆங்கு
அவர்கள் சலீமின் நெஞ்சகத்திலிருந்து குருதி வழிந்தோடுவதையும்
லைலாவின் கையிலே குத்துவாள் ரத்தம் தோய்ந்து ஒளிர்வதையும்
கண்டு தங்கள் நா—மேலண்ணத்தில் ஒட்டிக்கொள்ள உடல்
பயத்தால் நடுநடுங்க மெய் மறந்து நின்றனர்.

அவள் சுற்றி நின்ற இவர்களைப் பார்த்துச் சோகமும் பயமும்
கப்பிய முகத்தோடு அவர்களை நோக்கிக் கூறலுற்றாள்.

"ஓ கோழைகளே, நெருங்கி வாருங்கள். இங்குள்ள மரணத்
தின் பயங்கரத்தைக் கண்டு அஞ்சாதீர்கள். ஏனெனில், உங்கள்
அற்பத்தனத்தின் முன் மரணம் மிக உயர்வானது. இந்தக் கத்தி
யைக் கண்டு நடுங்கி விலகி நிற்காதீர்கள். இது மிகத் தூய கருவி—
உங்கள் முடை நாற்றம் மிக்க உடலையும் கடுமை படர்ந்த இதயத்
தையும் இது தீண்டவே கூசும். இதோ இங்ஙன் என் அருமை
காதலனைக் காணுங்கள். இன்றைய மணமகன் இவர்தான். இவர்
என் காதலர். ஆகையினாலே நான் அவரைக் கொலை செய்துவிட்
டேன். இவர் என் கணவர்; நான் அவர் மனைவி. நாங்கள் தழுவி
இன்புறத்தக்க ஒரு பஞ்சணையைத் தேடினோம். ஆனால் உங்கள்
வழக்கப் பழக்கங்களால் மெலிவெய்தி உங்கள் அறியாமையால்
இருள் சூழ்ப்பட்டு காமத்தால் ஊழல் மலிந்து கிடக்கும் இவ்வுலகில்
அது எங்களுக்குக் கிட்டவில்லை. எனவே நாங்கள் வேறு உலகிற்கு,
சிறுமையும் ஊழலும் அற்ற, வஞ்சகமும் பொறாமையும் இல்லாத
உலகத்திற்குப் போக முடிவு செய்துவிட்டோம். வாருங்கள் அண்
மையில் வாருங்கள். பயப்படாதீர்கள். எங்கள் முகத்தைப்
பாருங்கள். ஒருவேளை நீங்கள் வணங்கும் கடவுளின் ஒளியை காதல்
தியாகிகளாம் எங்கள் முகத்தில் காணலாம். அவனுடைய இன்
னோசையை எங்கள் இதய ஒலியிலே கேட்கலாம். ஓ அவள் எங்கே?
அந்தக் கொடுமையும் பொறாமையும் நிறைந்த கள்ளி எங்கே? என்
காதலரிடம் என்னைப் பழித்துக் கூறிவிட்டு, என்னிடத்திலே, அவர்
அவளிடம் மாறாத அன்பு செலுத்திக் காதலிப்பதாயும் என்னை
மறந்துவிடுவதற்கென, அவனிடம் என் காதலர் தன்னையே அர்ப்
பணித்து விட்டதாகக் கூறிய வஞ்சகி எங்கே? அவளுடைய உறவி
னனுக்கு என்னை மணமுடித்து எங்கள் இருவர் தலைக்குமேல்
பாதிரியார் தன் கையை உயர்த்தியபோழ்து, தான் வெற்றி பெற்ற
தாக மனப்பால் குடித்தாள். எங்கே அவள்? அந்த மோசக்காரி
நாஜ்பி கூப்பிடுங்கள் அவளை. அப்போது அவள் சொந்தக்கார
னுக்கு என்னை மணமுடிக்கக் கண்ட நீங்கள் இப்போது என் காதல
னுடன் நான் இங்கு குருதிப்பஞ்சணையிலே தழுவி இருப்பதைக்
காண குழுமியுள்ளதை அவள் காணக் கூப்பிடுங்கள். நான் சொல்
லும் வார்த்தைகளின் பொருளை அறிவதற்குக்கூட உங்களுக்கு
அறிவு போதாது. ஆனால் நீங்கள் உங்கள் ஊழல் மலிந்த உதடுக
ளால் எங்களை வைது எங்களைப்பற்றி உங்கள் மக்களிடம் தூற்றி



சபிப்பீர்கள். ஆனால் உங்கள் மக்களின் மக்களோ உங்கள் பிற்
சந்ததியாரோ எங்களைப்பற்றி கௌரவமாக நினைத்து எங்கள்
காதல் தியாகத்திற்காக எங்களைப் போற்றுவர் என்பது திண்ணம்.
மூடமக்களே, ஊழலும் செல்வமும் துரோகமும் கலந்து என்னை
மாற்றானுக்கு மணமுடிக்க விரும்பிய நீங்கள் இருளிலே ஒளியைக்
காணவும் பாறையிலே தண்ணீரைக் காணவும் கல்லிலே ரோஜாவின்
மலர்ச்சியைக் காணவும் முயன்று நம்பிக்கையை இழந்த அப்பாவி
கள். குற்றங்களும் தவறுகளும் மலிந்த இந்த நாட்டின் அவமானச்
சின்னங்கள் நீங்கள். குருடனுக்கு மற்றோர் குருடன் வழிகாட்டிச்
செல்வதுபோல், உங்களுக்கு உங்கள் சம்பிரதாயம் வழிகாட்ட
உளுத்துப்போன சமுதாயத்திற்கு உடைந்த தூண்களாக நிற்கின்
றீர்கள். நான் உங்களை உங்கள் குற்றங்களை மன்னிக்கிறேன்.
ஏனெனில், மகிழ்வோடு விடுதலை அடையும் உயிர் உலகத்தின்
பாவங்கள் யாவற்றையுமே மன்னித்து விடுகிறது."

இப்படிக் கூறிய அடுத்த விநாடியே அவள் தன் கைகளை
உயரத் தூக்கி மின்னலைப்போல் குத்துவாள் ஒளிர அதைத் தன்
மார்பில் பாய்ச்சி தன் காதலன் அருகிலேயே வீழ்ந்து தாமரைக்
கொடியெனத் தன் கைகளால் தன் காதலனைப் பின்னிக் கொண்
டாள். சுற்றி நின்ற மகளிர்கள் யாவரும் ஆவெனக் கூச்சலிட்டு
மயங்கித் தியங்கி ஒருவர்மேல் ஒருவர் வீழ்ந்து தம் கைகளால் கண்
களை மூடிக்கொண்டனர். ஆண்களோ பயத்தாலும் குழப்பத்தாலும்
ஓவெனக் கூச்சலிட்டனர்.

மார்பிலிருந்து குருதி ஆறாய்ப் பெருகி வழிந்தோட உயிர்
சிறிது சிறிதாக நீங்கிக்கொண்டிருக்கும் அவள், அவர்களை நோக்கித்
திரும்பவும் நீங்கள் எங்கள் அருகிலேயே வராதீர்கள். எங்களைப்
பிரிக்கவும் முயலாதீர்கள். இல்லை; மீறினால் உங்கள் தலைக்குமேல்
வட்டமிட்டுக்கொண்டிருக்கும் எங்கள் ஆவி உங்கள் கழுத்தைத்
திருகி உங்கள் ஆவியைக் குடித்துவிடும். எனவே எங்களை இப்ப
டியே விட்டு விடுங்கள். நில அன்னை எங்களைத் தன் மடியில்
இணைத்து அணைத்துக்கொள்ளட்டும். அவள் பலகோடி ஜீவன்
களைத் தன் இதயத்தோடு அரவணைத்துக் காப்பதுபோல் எங்களுக்
கும் தன் இதயத் தடாகத்தில் கட்டாயம் இடம் அளிப்பாள்"
என்று கூவினாள்.

பிறகு அவள் தன் காதலனின் குளிர்ந்த உதடுகளோடு தன்
உதடுகளைப் பொருத்தி அவனை நோக்கியபடியே தன் கடைசி
மூச்சோடு சொல்லலுற்றாள். 'என் அன்பே, இதோ பாருங்கள்.
என் நெஞ்சக் காதலரே இதோ பாருங்கள். பொறாமைக்காரர்கள்
எப்படி நம் படுக்கையைச் சுற்றி நின்று தங்கள் கழுகுப் பார்வையை
நம்மீது வீசுவதைப் பாருங்கள். அன்பே, சலீம், நீங்கள் எனக்காக
அதிக காலம் காத்திருந்தீர்கள். நானும் இதோ வந்துவிட்டேன்.
நான் தளைகளை எல்லாம் அறுத்து விட்டேன். இனி, நாம் தாமதிக்
காமல் பேரின்ப மயமான காதலுலகத்திற்குச் சிட்டுகளெனச்
சிறகடித்து விரைந்து செல்வோம். எல்லாப் பொருள்களும் எனக்கு
இப்போது துடைக்கப்பட்டு மறைக்கப்பட்டு விட்டது. இப்போது
உன்னைத் தவிர, எனக்கு வேறொன்றும் புலப்படவில்லை. என்

உதடுகளையும் என் இறுதி மூச்சையும் கவனி; சலீம்! நான் உன்னோடு புறப்பட்டு விட்டேன். வா. சலீம் வா! நாம் இருவரும் இணைந்து இன்பபுரிக்குப் பயணமாவோம்.''

இவை கூறியபடியே அவள் தன் காதலன் மார்பின் மீது வீழ்ந்தாள். இருவர் குருதியும் ஒன்று கலக்க அவள் தலை அவன் கழுத்தின் மீது பதிய கண்கள் திறந்து அவன் முகத்தைப் பார்த்தபடியே நிலைத்து நிற்க அவள் ஆவி நீங்கிற்று.

சுற்றியுள்ள மக்களோ வாய் பேசாது செய்வதறியாது கல்லால் அடித்த சிலைபோல் முகம் வெளிற முழங்கால் செயலிழந்து நிற்க, அசைவற்று நின்றனர். அந்த நேரத்திலே இறந்துபோன மணமகளை மணவிழாவால் மாற்றானுக்கு மணமுடித்து வைத்த பாதிரியார் ஆங்கு விரைந்து வந்து வீழ்ந்து கிடந்த இரு காதலர்களையும் சுட்டிக்காட்டிச் சூழ்ந்து நின்றுள்ள மக்களைப் பார்த்துக் கூறலுற்றார்.

“குற்றத்தாலும் வெட்கங்கெட்ட இழி செயலாலும் ரத்தம் சிந்திய இந்த இரு உடல்களைத் தொட்ட, தொட நீட்டிய எந்தக் கையும் சபிக்கப் பட்டதே! சாத்தானால் நரகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட அவ்விரு உயிர்களுக்காக கண்ணீர் சிந்தும் கண்களும் சபிக்கப்பட்டனவே! இந்த இரு பிணங்களும், அவைகளின் ரத்தம் பூமியை அசுத்தம் செய்ய, நாய்கள் அதன் தசையைத் தின்று எலும்புக்கூடுகள் காற்றாலும் மழையாலும் சிதைந்து பிரிந்து போகும் வரையிலும் இங்கேயே கிடக்கட்டும். உங்கள் நெஞ்சத்தைக் குற்றத்தின் துர்நாற்றத்தால் திணறடித்து ஊழலால் அழித்து விடுகின்றன. இவ்விடத்தில் இருந்து உடனே திரும்பி உங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள். இல்லையேல் நரகத்தீ தன் நாவால் உங்களைச் சுட்டுப் பொசுக்கி விடும். இனிமேல் இங்கு நிற்கும் யாரும் தேவாலயத்துக்குள் நுழையவோ கர்த்தருக்கு முன் மண்டி இடவோ பிரார்த்தனையில் கலந்து கொள்ளவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள்'' என்றார்.

சிறிது நேரத்திற்கு முன் அந்தரங்கத் தூதாக மணமகளால் ஏவப்பட்ட சூசன் என்னும் மங்கை அந்தக் கும்பலை விலக்கிக் கொண்டு அப்பாதிரியின் முன்னர் வந்து தன் கண்களில் நீர் வழிந்தோட துயரமும் கோபமும் மேலோங்கக் கூறலுற்றாள்.

“ஓ முரட்டுமதப் பித்தனே! இந்தத் தெய்வீகக் காதலர்களை விடியுமட்டும் நான் காத்து நிற்பேன். விடிந்ததும் இவர்களுக்காகக் குழிதோண்டி இருவரையும் ஒருங்கே புதைப்பேன். அதை நீ தடுக்க முயற்சித்தால் என் கைவிரல்களால் நிலத்தைத் தோண்டுவேன். என் கைகளையும் நீ கட்டிப் போட்டால் என் பற்களாலேயே குழிதோண்டி இவர்களைப் புதைப்பேன். நீயும் உன் சமுதாயக் கட்டுப்பாடுகளும் நாசமாய்ப்போக! உங்களாலும் உங்கள் சமுதாயத்தாலும் ஒன்றும் செய்ய முடியாது. நீயும் உன்னைச் சேர்ந்த இந்தக் குருட்டுக் கும்பலும் இங்கிருந்து ஓடி விடுங்கள். பன்றிக்கு நல்ல மணம் பிடிக்காது. பேய்களுக்கோ இன்னிசை ருசிக்காது. ஓடுங்கள் இங்கிருந்து'' என்று கூவினாள்.

மத குருவும் எல்லாமக்களும் அங்கிருந்து அகன்ற உடனே சூசன் அக்காதலர்களின் மரணத்திற்காக மனங் கசிந்து அழுதாள்.

# வீராங்கனை

குரு. மாரியப்பன் பி. ஏ.,

★

## 1. பவள நாடு

பாவலர் போற்றி பாடும்
பண்புடை பவள நாட்டின்
காவலன் உதய சிம்மன்
களங்கமில் ஆட்சி நோக்கி,
ஏவலர் போல்இ யற்கை
இடைவிடா(து) அடிமை செய்து
ஆவலுக்(கு) எல்லை காட்டி
அளவிலாப் பொருள்கு விக்கும்! 1

அளவிலாப் பொருட்பெ ருக்கால்
அற்றவர், மிக்கார் என்ற
பிளவில்லை; பூசல் இல்லை;
பிச்சையென் றிரப்பார் இல்லை;
களவில்லை; பொய்யும் இல்லை;
கபடமோ, கொலையோ இல்லை;
வளமிகு பவள நாட்டின்
வாழ்வினில் துயரே இல்லை. 2

எட்டுணை துயரும் நாடா
எழிற்றிரு நாட்டில், மக்கள்
கிட்டுதற் கரிய எல்லா
நலன்களும் கிடைக்கப் பெற்று
மட்டிலா இன்பத் தேறல்
மாந்தியே மகிழ்ந்தி ருக்க,
நட்டலர் வெறித்து நோக்கி
நலிந்தனர் பொறாமைத் தீயில்! 3

## 2. அம்மை நோய்

செம்மைசால் ஆட்சி செய்யும்
திருவளர் மார்ப னுக்கு
வெம்மைசெய் பகைவர் எல்லாம்
வீழ்ச்சியுற் றொதுங்கி நிற்கத்,
தம்முயர் நாட்டி னுக்கே
சதிசெய்யும் துரோகி போல
அம்மைநோய்க் கொடியன் சாடி
அவன்தனை அடிமை செய்தான். 4

செருவினை விளையாட்(டு) என்று
    செறுக்கிடும் வேந்தன் தன்னை
உருவிலா(து) ஒளிந்து தாக்கி
    ஒடுக்கிய அம்மை, 'தெய்வத்
திருவிளை யாடல்' என்ற
    செவ்வியால் இதனை நாட்டில்
ஒருவரும் அறியா வண்ணம்
    உரைத்திலர் அரச சுற்றம்! 5

புயலெனப் பகைவர் நாப்பண்
    புகுந்துவாள் சுழற்றும் மன்னன்
செயலிழந்(து) அமளி மீது
    சித்திரம் போற்கி டந்தான்;
அயலினில் வசந்த வல்லி—
    அரசனின் இல்ல நல்லாள்
கயலெனும் விழிகள் கண்ணீர்
    கக்கிடத் துணையி ருந்தாள். 6

### 3. முற்றுகை

வலிவினை நோயின் கோர
    வாய்க்கிரை யாக்கித் தேகப்
பொலிவினை இழந்த சிம்மன்
    போர்முர(சு) ஒலிக்கக் கேட்டான்;
"புலிஎவன் வந்தான்?" என்று
    'பொருக்' கென எழுந்தான்; ஆனால்
நலிவினைத் தாங்கும் தேகம்
    நல்லமர்க் கிணங்க வில்லை! 7

மன்னனைச் சூழ்ந்தி ருந்த
    மருத்துவர், அமைச்ச ரெல்லாம்
"என்ன இஃ(து)?" எனத்தி கைத்தார்;
    இருதலைக் கொள்ளி யானார்;
மின்னெழில் வசந்த வல்லி
    வேந்தனைத் தாங்கிக் கொண்டாள்;
தன்னிலை தவிர்ந்த வீரத்
    தளபதி பாய்ந்து வந்தான். 8

நஞ்சினைத் தோய்த்த வேலால்
    'நறுக்' கென இடிப்ப தைப்போல்,
"தஞ்சமென் றிணைந்து நின்ற
    தரளநாட் டதிபன் இன்று
வஞ்சனை யாக நம்மை
    வளைத்தொலி முரச டித்து
வெஞ்சமர்க் கழைத்து விட்டான்,"
    என்றனன் இளைய வீரன் 9



### 4. மன்னன் புலம்பல்

'தளபதி! நமது நாட்டின்
    தனிப்பெரும் பெருமை எண்ணி
அளவிலாக் கர்வம் கொண்டே
    அலட்சியம் செய்து விட்டேன்;
வளமிகு நாட்டின் மீது
    வஞ்சகர்க் கென்றும் ஓர்கலர்
உளவறிந் திருக்கும் என்றே
    உணர்ந்திலா(து) இன்னல் ஏற்றேன்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் சென்னை-600 008

"நாட்டினில் அமைதி வாழும்
    நற்றரு ணத்தில் சேனைக்
கூட்டமேன்?" என நினைத்துக்
    கொல்படை கலைத்தேன் அன்று;
ஈட்டிய அம்மை நோயால்
    என்னுடல் தனில மைந்த
தாட்டிக மெல்லாம் கொள்ளை
    தந்திருக் கின்றேன் இன்று! 11

"கொற்றவாள் வீரர் மிக்க
    கொல்படை கலைத்த தையும்,
தொற்றிய அம்மை நோயால்
    துவண்டுயான் கிடப்ப தையும்
ஒற்றறிந்(து) ஏற்ற போழ்தில்
    ஓர்அறி விப்பும் இன்றி
பற்றலன் வளைத்துக் கொண்டான்,
    பாவி!" என் றரற்றும் மன்னன். 12

### 5. அரசியின் முடிவு

தன்னையே நொந்து கொள்ளும்
    தாரனைத் தேற்றும் தேவி,
"முன்னையப் படைகள் இங்கு
    மொய்த்திலர் எனினும், நாட்டை
அன்னையென் றேத்திப் போற்றும்
    அருந்திறல் மக்கள் கோடி
ஒன்னலர் தம்மை ஓட்டா(து)
    ஒழிவரோ? அஞ்சேல்!" என்றாள். 13

தேவியின் உரை தொடர்ந்த
    தளபதி, "சீர்த்தி மிக்கோய்!
'மேவிய பகைவர் தம்மை
    விரட்டுவோம், வருக!' என்று
கூவியே மக்கள் ஒன்று
    கூடிஉன் வருகை நோக்கித்
தாவிநின் றிருக்கும் போழ்து
    தவறுமோ வெற்றி?" என்றான். 14

'மன்னனின் வரவு நோக்கி
மருகிநிற் கின்றார் மக்கள்'
என்றசொற் செவியி லேற்றி,
எழுந்தனள் வசந்த வல்லி!
சென்றனள் அறையி னுள்ளே;
திரும்பினள்; விநாடிப் போழ்தில்
தன்னுடை மாற்றி வேந்தன்
உடையிலே காட்சி தந்தாள். 15

### 6. மன்னன் உடையில் மங்கை

மன்னவன் உடையில் நின்ற
மாதினை நோக்கிச் சூழ்ந்தோர்
'என்னஇக் கோலம்?' என்று
வியந்தனர்; இமைத்தல் செய்யார்;
"இன்னுயிர்த் துணையே! உன்றன்
எண்ணம்என்?" என்று கேட்ட
தன்னவர்க்(கு) அன்பு கூட்டிச்
சாற்றினள் வசந்த வல்லி: 16

"தங்களின் வரவு நோக்கித்
தாமதித் திருக்கும் மக்கள்
உங்களைக் காணா விட்டால்
ஊக்கமி ழக்கக் கூடும்;
அங்கவர் மனம்த ளர்ந்தால்
அணிநகர்க்(கு) அழிவு நேரும்;
பொங்கிடும் உரிமை வாழ்வு
புகைந்துமண் ணாகிப் போகும். 71

"நீங்கள்இன்(று) அம்மை நோயால்
நிலையிழந் திருக்கும் செய்தி
ஈங்கவர் அறிந்த தில்லை,
என்பதால் உங்கள் வேடம்
தாங்கி யான் போருக் கேகித்
தருக்கரை முறிய டிப்பேன்;
தீங்கெதும் நேரா வண்ணம்
செப்புக ஆசி" என்றாள். 18

### 7. போர்

துடியிடை யாளின் இந்தத்
துணிகரச் செயலை நோக்கி
முடியர சன்வி யந்து
முத்தமிட்(டு) ஆசி ஈந்தான்;
இடியெனப் போர்மு ழக்கம்
எழுந்திட; வசந்த வல்லி
நொடியினில் குதிரை தாவிப்
படைப்புலம் நோக்கிச் சென்றாள். 19



குதிரையில் வந்த மாதைக்
கொற்றவன் என மதித்துக்
கதிரைவேற் படைகள், வீரக்
காவியம் பாடி, ஞாலம்
அதிரவே, மாதின் பின்னே
அணிவகுத் தேகக், கோட்டைக்
கதவுகள் வாய் பிளக்கும்;
கத்திகள் கைக லக்கும். 20

நேர்ந்தஇப் பேரெ திர்ப்பை
நினைத்திடாத் தரள நாட்டார்
போர்தனில் உயிர் மதித்துப்
புறமுது கிட்டுப் போனார்;
சீர்மிகு வெற்றி தாங்கித்
திரும்பிய வசந்த வல்லி
மார்பினில் புண்ணும் தாங்கி
மயங்கிய நிலையில் மீண்டாள் 21

### 8. நடுகல்

குற்றுயி ராக நங்கை
கொற்றவன் முன்னே போந்து
"வெற்றி!"யென்(று) ஆர்த்து மார்பில்
வீழ்ந்தனள்; உயிர்வி டுத்தாள்;
கொற்றவன் கண்ணீர் சிந்தி
கோதையைத் தழுவிக் கொண்டு,
"நற்றுணை யாக வாழ்ந்து
நல்லறம் புரிந்தாய், வல்லீ! 22

"கொழுநன்என துயரில் பங்கு
கொண்டனை; பெருமை காத்தாய்!
விழுமிய நாட்டிற் காக
வெஞ்சமர் புரிந்து மாண்டாய்!
வழுவிலாச் சிலைவ டித்து
வந்தனை செய்து வாழ்வோம்;
தொழுதகைப் பெருமை யோடு
துலங்குவை என்றும்!" என்றான். 23

ஓதரும் பெருமை சான்ற
ஓரரும் செயல் புரிந்து
மாதருக் குயர்வு தந்த
மாதவள், வசந்த வல்லி
தீதரும் சிலையில் வீரத்
தெய்வமாய் நிற்கக், காணும்
பூதலத் தோரின் நெஞ்சில்
புகழுரு வாக நின்றாள். 24

தொடர் கதை:




## 38

அல்லி விழியும் அழகு முருகனும் குன்றி ஒடுங்கின. அந்த வீடு ஒரு பாழ்பட்ட பழங்காலக் கோட்டையைப் போல் பொலிவிழந்து கிடந்தது. மூன்று உயிர்களும் மூன்று உலகங்களில் உலவின.

அழகு முருகன் தம்மீது இளங்கோவின் தந்தை கொடுத்த 'மானக்கேடு' வழக்கில் வெற்றி பெறுவதற்காகப் பொருளைப் பொருட்படுத்தாது அலைந்து கொண்டிருந்தார்!

அல்லிவிழியோ தலைவிக்கேற்ற முறையில் குடும்ப அரசியலின் ஒவ்வொரு அணுவின் துன்பத்தையும் பங்கு போட்டுத் துய்த்தார்.

மனையின் தலைவியரைப் போலத் துன்புறும் நெஞ்சம் உடையவர் உலகில் வேறெவரும் இருத்தல் அரிது. பிறருக்காகத் துன்புறும் தொண்டுள்ளம் இல்லக் கிழத்தியருக்குத்தானே இருக்கிறது! கணவன் படுந்துயரும், மகள் அணு அணுவாகத் துடித்து நோயுற்றுச் சாவதும், குடும்பப் பொறுப்பின் துன்பமும் சேர்ந்து அந்த அறிவொளியகத்தை உருக்குகிறது. நுண்ணிய உணர்வுடைய அறிவு மிக்கவர்கள் துன்பத்தையும், மிகுதியான துன்பமாகத் துய்ப்பார்கள்! இன்பத்தையும் முழு உள்ளத்தோடு சுவைப்பார்கள்!

எழிலரசியின் அத்தை கோதையம்மாள் தன் அருமை மருமகளின் கணவன் இறந்த துன்பம் கொண்டாட வரவில்லை. ஆகவே எல்லாம் முடிந்தபிறகு வந்து சேர்ந்தார். பெரிய யானையொன்று கூக்குரல் போட்டழுவது போலப் பண்ணில்லாமல் அழுது ஒப்பாரி பாடினார். எந்நேரமும் எழிலரசியிடம் அமர்ந்து, அவளுடைய பாழ்பட்ட வாழ்க்கையைப்பற்றி ஏதேனும் பேசிய வண்ணம் இருப்பதும், எழிலரசியின் கெட்ட காலத்தைப் பழிப்பதும், தான் வாழ்க்கையில் கண்ட இரக்கத்தைப் பெருக்கெடுத்து ஓடச் செய்யும் ஏமாற்றம் மிக்க இழிந்த வாழ்க்கை வரலாறுகளையும், கைம்மை எய்திய மகளிரின் துன்ப முடிவுகளையும் 'கதை கதை'யாகத் தன் 'இனிய யாழ்குரலில்' கத்திக் கூறினார்.

கோதையின் பேச்சு எழிலரசிக்குச் சொல்ல வியலாத துன்பமளித்தது. முதலில் அவருக்கு அஞ்சி மதிப்பளித்த எழில், பின்னர் அவரோடு பேசவும் மறுத்து, வெறுத்து நடக்கலானாள். 'அதை உணராமலேயே கோதை தன்



ஆட்சியைச் செலுத்தினார். எழிலரசியின் வாழ்க்கையைப் பற்றி கண்ணன் அன்பொளியிடம் ஒன்றுமே கூறவில்லை.

எழிலரசியைக் கண்டு செல்ல அவள் வீட்டிற்கு வந்தான் கண்ணன். கோதையும் அல்லிவிழியும் கூடத்திலமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். கண்ணனைக் கண்ட அல்லிவிழி, "வா, கண்ணா வா. ஏது? இந்தப் பக்கமே வருவதில்லை?......" எனப் புன்னகையோடு வரவேற்றார்.

"ஒன்றுமில்லைங்க! உங்கள் மருமகளுக்கு உடம்பு நன்றாக இல்லை. கர்ப்பமுற்று இது எட்டாவது திங்கள்" என்றான் நாணம் மிக.

"அட, எனக்குச் சொல்லவே இல்லையே! கண்ணா, அப்படியா? நல்லது. எனக்கு ஒரு பெயரன் பிறப்பான் என்று சொல்!..." என்றார். அளவற்ற உவகையோடு. அடுத்த நொடி அவள் உள்ளத்தில் இருள் கவிந்தது.

"தனக்குப் பெயரன் பிறப்பானா? நான் இனிமேலா கொஞ்சுவேன்?" என்றெண்ணும்போதே 'ஓ' வென அழவேண்டும் போலிருந்தது. அவர் தலை குனிந்து கொண்டார்.

"எழிலுக்கு உடம்பு எப்படி இருக்கிறது?......" என வினவினான் கோதையைப் பார்த்துக் கொண்டே.

"அப்படித்தானிருக்கிறாள். மாடிக்குப் போய்ப் பார். அவள் கீழே வருவதே இல்லை." என்றார் குனிந்த தலை நிமிராமல்.

கண்ணனுக்கு மிகவும் வருத்தமாயிருந்தது. கண்ணனுக்கு கோதையைப் பார்த்தவுடன் யானை நினைவுக்கு வந்தது. அவர் கண்களை அப்படியே திருகி எடுத்துவிட வேண்டுமென ஏனோ எண்ணினான்.

மாடிக்குச் சென்றான். கோதை அல்லி விழியையும் உரிமையோடு உள்ளே செல்லும் கண்ணனையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"யார் இவன்?" எனக் கேட்டார் கோதை. வேண்டாத காரியங்களில் தலையிடுவதே தொழிலான அவர் பார்வையில் வெறுப்பிருந்தது.

"கண்ணனா?... தெரிந்தவர். நல்லவர். சொந்தக்காரர்களைவிட உதவி செய்து உயிராகப் பழகுபவர். நம் வீட்டில் பிறக்காத குறைதானே தவிர மற்றப்படி நம்முடைய சொந்த உறவினர் போலவேதான்!......" என்றார் அல்லிவிழி.

அந்த வீட்டில் தன்னைத் தவிர வேறு எவரும் உரிமை கொண்டாடக் கூடாது என்ற எண்ணமுடைய தன்னலமே புகையும் அக் குறுகிய நெஞ்சினள் அவன்மேற் பொறாமையும் பகைமையும் கொண்டார்.

சிறிதுநேரம் பேசாது அமைதியாயிருந்து பின் மாடிக்குச் சென்றார். அவள் எண்ணத்தில் கள்ளத்தன்மை இருந்தது.

கட்டிலினருகிற் சென்று மெல்ல எட்டிப் பார்த்தான் கண்ணன். துவண்டு படுத்துக் கிடந்தாள் எழில். அவனையுமறியாது ஓர் ஏக்க நெட்டுயிர்ப் பெழுந்தது. அவ்வுயிர்ப்பின் ஒலி அந்த அமைதியான அறையில் ஒரு பாம்பின் சீறலைப் போலக் கேட்டது.

ஒலிகேட்டுக் கண் விழித்தாள் எழில். கண்ணனைக் கண்டதும் அவள் கண்கள் மலர்ந்தன. இதழில் ஓர் இள முறுவல் மிளிர்ந்தது.

"அட, எப்பொழுது வந்தீர்கள்? அமருங்கள். நாற்காலி இல்லையா?" எனக் கூறியபடி தலையைத் தூக்கினாள் எழுந்திருக்க.

"ஐயோ!......நீ எழுந்திருக்க வேண்டாம், எழில். நீ படுத்துக்கொள், இதோ இருக்கிறது." எனக் கூறிவிட்டு நாற்காலியைக் கட்டிலினருகில் நகர்த்தி, அமர்ந்தான்.

"கண்மணி நலமா? அவரும் வந்திருக்கிறாரா?"

"இல்லை எழில். அவள் வரவில்லை. நலம்தான். எழில், உனக்கொரு மகிழ்ச்சியளிக்கும் செய்தி சொல்லப் போகிறேன்," என நிறுத்தினான் கண்ணன்.

அழகான 'பனிக் கண்கள்' அகல விரிய அவனை நோக்கிய எழிலரசி, "என்ன செய்தி?" 'கண்களால்' கேட்டாள்!

நாணமும் பெருமையும் கலந்த உணர்ச்சிக் குரலில் கண்ணன், "'கண்மணி' 'அம்மா' ஆகப்போகிறாள்!..." என்று கூறினான் சிரித்தபடி.

உவகையும் வியப்பும் மிக, "ஆ!...அப்படியா? உம்...அப்படியானால், நீங்கள் 'அப்பா' ஆகப்போகிறீர்கள்?" என்றாள் எழில்.

இருவரும் சிரித்தனர்.

தன் பெரிய உடலைச் சுமந்தபடி முப்பத்திரண்டு படிகளையும் கடந்து மேலே ஏறி வந்த கோதை வாயிற்படியில் வந்து நின்றார்.

அவர்கள் சிரிப்பு கோதைக்கு வெறுப்பாக இருந்தது. 'அறுத்த சிறுக்கிக்குச் சிரிப்பு என்ன கேடு!..." என முணு முணுத்தார். முகத்தைச் சுளித்தார்.

"'ஏண்'டி யம்மா, மருந்து குடிக்க நேரமாக வில்லையா?........." என வேண்டுமென்றே கேட்டுக் கொண்டு உள்ளே நுழைந்தார் கோதை. எழிலுக்கு அவர் அங்கே வருவதே பிடிப்பதில்லை.

"நான் குடித்து விட்டேன், அத்தை. நீங்கள் கீழே போய்ப் படுத்துக் கொள்ளுங்கள். இப்படி வெயிலில் வெளியில் வந்தால் உடம்பு எதற்காகும்?..." என்றாள் வேண்டுமென்றே.

கண்ணன் ஓரக்கண்ணால் கோதையை நோக்கியபடி தன்னை மீறி வந்த சிரிப்பை அடக்க முயன்றான். எழிலரசியின் இதழில் நிறைந்திருந்த சிரிப்பு உள்ளத்தின் அடிவாரத்திலிருந்து மலர்ந்ததென்பதை அவள் முகத்தில் தவழ்ந்த அமைதியிலிருந்து அறிய முடியும்.

கோதையைக் குத்திக் காட்டுவது போன்ற அச்சொற்பொருளை உணர்ந்தவள் 'ஏதேனும்' சூடாகத் தாக்கிப் பேச வேண்டுமென்று துடித்தார். ஆனால், நிலைமை அவருக்கு ஏற்றவாறில்லை. அசையாமல் அங்கேயே நின்றிருந்தார் ஒற்றனைப்போல.

எழிலரசி ஆங்கிலத்தில், "அத்தை போய் விட்டாளா?" என வினவினாள். கண்ணன், "இல்லை. இன்னும் 'அது' நின்றுகொண்டிருக்கிறது." என ஆங்கிலத்திலேயே விடையிறுத்தான். இருவரும் சிரித்தனர்.

தனக்குத் தெரியாத ஆங்கிலத்தில் அவர்கள் பேசிச் சிரிப்பதைக் காண கோதைக்குச் சீற்றமும் வெறியும் மூண்டெழுந்தது.

"'அது' என அஃறிணையில் கூறினீர்களே! 'அது' என்றால் என்ன? மலையா? யானையா? எருமையா?" எழிலரசி உவகையோடு கேட்டாள்.

"அவ்வாறு எதையாவது இவரோடு ஒப்பிட்டால் அவைகளுக்குத் தம்மைப் பழிப்பதாகச் சீற்றம் வந்து விடுமே!..." எனக் கூறி அவனும் சிரித்தான்.

கோதைக்கு அங்கே நிற்பதைப்போன்ற அறியாமை வேறு இல்லை என்றறிந்து, முகத்தை ஓர் இடி இடித்துக் கழுத்தை ஒடித்துக் கொண்டு திரும்பினார் வெளியேற. வாயிற்படியில் காலை இடித்துக்கொண்டு வலி பொறுக்க வியலாமல் 'ஆ!' வென்றலறினார். அவர்கள் மீதுள்ள சீற்றத்தை அந்த உயிரற்ற வாயிற்படி மீது வீசினார். "சீ! சனியன்! இழவு, அப்பா!..." எனக் கத்தியபடி முணு முணுத்துக் கொண்டே சென்றார்.

அறையினுள்ளிருந்து சிரிப்பு எதிரொலித்தது.

"உடம்பு எப்படி இருக்கிறது? மருந்து குடித்தாயா எழில்?.....,......" என அன்பு மிகக் கேட்டான்.



"உம்...உடம்பிற்கென்ன? கிடக்கிறது. ஆமாம், கொஞ்சம் மருந்து ஊற்றிக் கொடுங்கள். நான் குடிக்கவே இல்லை. அவரிடம் நான் பொய் தான் சொன்னேன். அப்பா! அவரைக் கண்டாலே வெறுப்பாக இருக்கிறது." என வெறுப்போடு பேசினாள் எழில்.

கண்ணன் மருந்தை அளித்தான். குடித்து விட்டுச் சர்க்கரையையும் கொட்டிக் கொண்டாள். தலையணையி னருகிலிருந்த சாத்துக்குடி பழத்தை உரிக்கலானான் கண்ணன்.

"ஏதாவது கதைப் பொத்தகங்கள் இருந்தால் கொண்டு வருகிறீர்களா? எனக்குப் பொழுதே போகவில்லை. கண்மணியைப் பார்க்க ஆவலாக இருக்கிறது. அழைத்து வருகிறீர்களா?..." என ஆர்வத்தோடு பேசினாள்.

உரித்த சுளைகளை அவள் கையில் கொடுத்துக் கொண்டே, "கதைப் பொத்தகங்கள் தானே? தருகிறேன் எழில். நான் என் வீட்டில் 'அக நூலகம்' ஏற்படுத்தி இருக்கிறேனே! ஒவ்வொரு திங்களும் வருவாயிலிருந்து ஒரு நல்ல நூல் வாங்குவதென்று திட்டமிட்டு வாங்கி வருகிறேன். நம் அன்பொளி..." உடனே 'க்' கென்று தன் நாக்கைக் கடித்துக்கொண்டான். என்ன அறியாமை!

'அன்பொளி' என்ற பெயரைக் கேட்டதும் மின்னதிர்ச்சி யடைந்தாற் போல திரும்பி அவனை நோக்கினாள் அவள் கண்களில்தான் எத்தனை அலைவு! எத்தனை பசி! எத்தனை உணர்ச்சி! எத்தனைத் துடிப்பு!...

"என்ன? அன்பொளியா? அன்பொளிக்கு என்ன?.....உம், அவர் எங்கே இருக்கிறார்?......"

எழிலின் குரலில் அவளையும் மீறி நெகிழ்வும் துயரும் ஆவலும் குடி கொண்டிருந்தது. அவளமைதியான உள்ளத்தில் திடீரெனக் கொந்தளிப்பு உண்டாகி விட்டது.

"அன்பொளிக்கு ஒன்றுமில்லை. அவன் இப்பொழுது "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என ஒரு அரிய இலக்கியம் எழுதி வெளியிட்டிருக்கிறான். 'கலைச் செல்வம்' இதழ் வெளியீடாக வெளிவந்திருக்கிறது. முன்பு "ஞாலத் தாய்—ஐங்குறுநூறு சொற்பொழிவு' என்ற ஒரு நூல் வெளிவந்திருக்கிறது" என்றான். தனக்குத்தானே நொந்து வருந்தினான்.

எழிலரசி அமைதியாக இருந்தாள். அந்த இளம் உள்ளத்தில் என்னென்ன உணர்ச்சிகள் குமுறிற்றோ? என்னென்ன எழுச்சிகள் பொங்கிற்றோ? என்ன துன்பம் கொந்தளித்ததோ?

மெல்ல விழிகள் மூடிக் கொண்டன. சற்று கழித்து, "நீங்கள் அந்த இரண்டு பொத்தகங்களையும் கொண்டு வருகிறீர்களா? அதை நான் விலை கொடுத்தே வாங்க விரும்புகிறேன்" என்றாள். தலையசைத்து பணியை ஏற்றுக் கொண்டான் கண்ணன்.

கண்ணன் உள்ளம் செய்யத்தகாத குற்றம் செய்து விட்டது போலத் துன்புற்றுத் துடித்தது. அன்பொளி கண்ணனிடம் தன்னைப்பற்றி எழிலரசியிடம் எதுவும் பேசலாகாது என வேண்டிக் கொண்டிருந்தான். அதனால் கண்ணன் எழிலிடம் மழுப்பிப் பேசினான். ஆனாலும் அவள் மென்மையகத்தை வருத்தி விட்டோமோ என வருந்தினான்

அமைதியாகச் சில மணித்துளிகள் இறந்த காலமானது.

அவனிமைகள் அடிக்கொருமுறை இமைத்தன. தன் விரல் உயிரைக் கடித்துக் கொண்டிருந்தவன் நெஞ்சம் எழிலுக்காக உருகியது.

"ஆமாம். பாரியிடமிருந்து ஏதாவது கடிதம் வந்ததா உங்களுக்கு? உம்...இப்பொழுதெல்லாம் மணிமேகலை கூட கடிதமே எழுதுவதில்லை. அவள் கல்லூரியில் சேர்ந்த உடனே இரண்டு கடிதம் எழுதினாள். அவ்வளவு

தான். எனக்கென்னவோ ஒன்றும் பிடிக்கவில்லை. உம்...வாழ்க்கை எவ்வளவு குறுகிய காலம்! காலம் என்னும் பெருவெளியில் மக்கள் வாழ்க்கை...அப்பா! எவ்வளவு குறுமையானது! நாம் குழந்தைகளாயிருந்த போது ஒன்றாக, இந்த உலக உணர்வே இல்லாமல் எவ்வளவு இன்பமாக விளையாடிப் பாடி வாழ்ந்தோம்! இப்பொழுதோ...? உம்...சே! எல்லோரும் நம் உயிர் நண்பர்கள் எல்லோரும் ஒரே இடத்தில் என்றும் வாழ்ந்தால்... அப்பா!...உம்...என்ன இது வெறும் கனவு?!...உம்...நான் இப்படியே செத்து விட்டால் எனக்கு எவ்வளவு ஆறுதலாக இருக்கும்......" அவள் பேச்சைக் கேட்டுத் துடித்தான். பதறினான். "எழில்!" எனக் கூவினான்.

கண்ணன் நெஞ்சு எரிந்தது. அவள் கண்களிலிருந்து பொங்கிய கண்ணீர் தேங்கி வழிந்தது. உதடுகள் குவிந்து துன்பச் சுவையைச் சுவைத்தது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டே விம்மினாள். உதடுகளைப் பற்களால் கடித்து துன்பத்தை விழுங்க முயன்றாள். யாரிடமேனும் தன்நெஞ்சச் சுமைகளைக் கொட்டி அழுதுவிட வேண்டுமென அவள் அகக்கடல் உறுமியது. கண்ணன் சிலையானான். அவனும் உணர்ச்சிப் போராட்டத்தில் மூழ்கினான்.

"எழில், ஐயோ! இப்படியெல்லாம் ஏன் பேசுகிறாய்? அமைதியாக இரு அம்மா. நீ இப்படி அம்மாவிடம் பேசினால் அவர் உள்ளம் எவ்வளவு புண்படும்! நமக்குப் பொறுப்புணர்ச்சி இருக்கிறதே! அழாதே எழில். மணிமேகலைக்கு என்ன நிலைமைகளோ? அவை நமக்குத் தெரியுமா? பாரி எனக்குக் கூட கடிதம் எழுதவில்லை......"

அவளுக்கு ஆறுதல் கூறித் தேற்ற வேண்டுமென விரும்பினான். ஆனால் அவன் பேச்சு அவனுக்கே வெறுப்பை யளித்தது. அமைதியாக இருந்தான். அங்கே அவனிருக்கும் வரை எழிலின் துன்பம் மிகுதியாகுமென்றெண்ணி நாற்காலியினின் றெழுந்தான்.

"எழில், நான் போய் வருகிறேன். நாளைக்குக் கண்மணியை வரச் சொல்லுகிறேன். வருகிறேன்" என்றான்.

"ஏன் புறப்பட்டு விட்டீர்கள்? கொஞ்சநேரம் இருந்து போகக் கூடாதா?......" எழிலின் வினா இரவலனின் ஏக்கக் குரலைப்போல எளிமையும் கெஞ்சுதலும் மிக ஒலித்தது.

சற்று வெறித்த நோக்கோடு நின்றிருந்த கண்ணன், "எழில், உன் உள்ளத்தை நான் நன்றாக உணர முடிகிறது. ஆனால்......எழில், நீ உறுதியாக இரு. எந்த நிலைமையிலும் உள்ளம் தளரலாகாது. நாம் வாழ்வதும் வாழ்வு இழப்பதும் நம்மிடம் தானிருக்கிறது. நம் உள்ளம்தான் எல்லாவற்றிற்கும் பொறுப்பாளி. தீதும் நன்றும் பிறர் தர வாரா, நோதலும் தணிதலும் அவற்றோரன்ன" என்ற பூங்குன்றன் பாடல் உனக்குத் தெரியாதா? எழில், நல்ல ஓய்வு எடுத்துக் கொள்ளம்மா. நான் வருகிறேன்......" எனக் கூறிவிட்டு சற்று தயங்கி நின்றவன்; பரபரப்போடு நடந்து வாயிற்படியருகில் சென்று, அவள் படுத்திருந்த கட்டிலைத் திரும்பிப் பார்த்தான். அவனுக்கு 'ஓ' வெனக் கதறி அழவேண்டும் போலிருந்தது. கைக்குட்டையை வாயில் அடைத்துக்கொண்டு தன் வலக்கையால் துடிப்போடு முகத்தை அழுத்தி மூடிக்கொண்டான். 'சடா'ரெனத் திரும்பி வெளியேறினான்.

வெளி வந்து நின்று குமுறி வந்த வெறியைக் கொட்டினான். அந்த அறையைப் பார்த்தான். அந்த அறையின் சுவர்கள் 'பளிச்'சென்று வெள்ளை அடிக்கப்பட்டிருந்தது. அந்த அறையின் 'வெறிச்'சோடிய நிலைமை எழிலரசியின் உள்ளத்தைப் போலத் தோன்றியது.

செடியிலே உலர்ந்து கொண்டிருக்கும் முல்லைப் பூவின் நினைவு அவனுக்குத் தோன்றியது. 'தடதட'வென்று மாடிப் படிகளில் கண்ணன் இறங்கிச் செல்வது தெளிவாகக் கேட்டது.



எழிலரசி குமுறிக் குமுறி அழுதாள். 'ஐயோ! அன்பொளி!" என்று அவள் வாய் அலறியது. உள்ளத்தில் இனமறியாத நடுக்கம் உடலையும் ஒடுக்கியது. இடதுபுறம் திரும்பிப் படுத்தபடி கண்களை மூடிக் கொண்டாள். அவள் கண்ணிமைகளின் வழியே பீறிக்கொண்டு கண்ணீர் வழிந்து சொட்டியது. ஊரித்த சாத்துக்குடி பழச்சுளை கருதுவாரற்று ஏக்கம் பிடித்த எழிலரசியின் உணர்வைப் போலத் தனிமையாகக் கிடந்தது.

கீழே வந்த கண்ணன் அல்லி விழியிடம் விடைபெற்று வெளியேறத் திரும்பியபோது அழகு முருகன் உள்ளே வந்தார்.

'கண்ணா, வாப்பா, எப்பொழுது வந்தாய்?" எனக் கேட்டு விட்டு செருப்பைக் கழற்றி விட்டு பட்டுத்துண்டை நாற்காலி மேல் போட்டார்.

"கொஞ்ச நேரமாயிற்று. சும்மா பார்த்து விட்டுப் போகலாமென்று வந்தேன். ஆமாம், அந்த வழக்கு என்னவாயிற்று?..."

அவனைப் பார்த்துக் கொண்டிருந்த அழகு முருகன் அவன் கேள்வியைக் கேட்டு தலை குனிந்து கீழ் நோக்கியபடி நெட்டுயிர்த்தார். நெற்றி சுருங்கியது. வரிகள் படர்ந்தன.

"அடுத்த வெள்ளிக்கிழமை தீர்ப்புச் சொல்லுவார்கள். என்னவோ? எவ்வளவு செலவாகி இருக்கிறது தெரியுமா? இதுவரை ஆறாயிரம் ஆகிவிட்டது. உம்...நமக்குக் 'கெட்ட காலம்' அப்பா! இல்லையென்றால் இந்தப் பாம்புப்புற்றில் கையை விட்டிருப்போமோ? எல்லாம் இந்தக் காஞ்சிபுரத்துக் குட்டியானையால் வந்த வினை!..."

ஏக்கமும் துன்பமும் வெறுப்பும் சேர்ந்த பெருமூச்செறிந்தார்.

அல்லிவிழி தன் கணவனை ஒரு முறை பார்த்து விட்டு, "கண்ணா, நாம் ஏன் பிறர் மேல் குற்றம் சொல்ல வேண்டும்? அவர்கள் எப்பொழுதும் போலச் சொன்னார்கள். நாமும் விருப்பப்பட்டுத்தானே ஒவ்வொன்றும் செய்தோம்! அன்று 'இவரே' திருமணத்திற்காக வெறி பிடித்து ஓடியாடி முயற்சி செய்தார்! இப்பொழுது கெட்டபடி நடந்ததால் பழிக்கிறோம். நல்லபடி ஆகியிருந்தால் உச்சிமேல் வைத்துப் போற்றுவோமல்லவா? கெட்டதாகி விட்டதாலேயே பழிக்கலாமா? நாம்—நம்மை—நம் "அறிவை'ச் சொல்ல வேண்டும்! எதையும் தீர எண்ணிச் செய்யாத நம் மேல் குற்றமிருக்க இன்னொருவர் மீது சொல்லிப் பயன் என்ன? உம்..." என நெட்டுயிர்த்துக் கூறினார்.

கண்ணனுக்கோ 'ஏன்' கேட்டோமென்றாகி விட்டது.

அவர்களிருவரும் பூசல் கொண்டு போராடத் துவங்கிவிட்டால்...?...

"உம்...நாம் என்ன தவறு செய்து விட்டோம்? ஒன்றுமில்லையே!..." என அவர்களுக்கு நடுநிலைமையாகப் பேசுவதற்காகப் பேசினான்.

"இல்லை கண்ணா. யார் மீதும் நாம் குற்றம் சொல்லக்கூடாது. சொல்ல முடியாது. நாம், 'நம்' மீதே குற்றம் சொல்லிக் கொள்ளவேண்டும். மற்றவர்கள் என்ன செய்வார்கள்? நாம் ஒழுங்காக இருந்தால் அதுவும் ஒழுங்காக இருக்கும். உம்...போன கதையைப் பேசுவதில் என்ன பலன்?..."

அல்லிவிழி கண்களைக் கண்ணீர்த்திரை மூடலாயிற்று. திரும்பி சுவரை வெறித்து நோக்கினார். அவர் பார்வை எதிரே, சுவரில் இருந்த காலத்தை ஊடுருவி நோக்குவது போலிருந்தது.

அழகு முருகன் குனிந்த தலை நிமிராமல் அமர்ந்திருந்தார்.

"நான் வருகிறேன், நேரமாகிறது" எனக் கூறி விட்டு வெளியேறினான். அவன் உள்ளக்கடல் 'ஓ'வென்று ஊழிக் கூத்திட்டது.

கணவனும் மனைவியும் நீண்ட பெருமூச்சு விட்டனர்!

(தொடரும்.)

# " ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்

விளம்பிஸ்ரீ வைகாசிமீ கலியுகாதி 5060, சாலிவாகனம் 1881,
பசலி 1367, ஹிஜிரா 1377, கொல்லமாண்டு 1133,
இங்கிலீஷ் 1958 மேமீ—1958 ஜூன்மீ

| வைகாசி | மே | வாரம். | திதி. | நட்சத்ரம். | அமிர்தாதி யோகம். | விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | புத | ஏ25-15 | உ49-08 | சி49-08ம | ரிஷப ரவி நா-27-00, சர்வ மத்வ ஏகாதசி |
| 2 | 15 | வியா | து31-40 | ரே56-48 | சி59-48அ | ... ... ... |
| 3 | 16 | வெ | திர37-38 | அ60-00 | அ60 | ப்ரதோஷம் |
| 4 | 17 | சனி | ச42-45 | ,, 3-58 | சி60 | ... ... ... |
| 5 | 18 | ஞா | ●46-50 | ✻ப10-03 | மி10-03சி | அமாவாசை,கிருத்திகை |
| 6 | 19 | திங் | பிர49-45 | கிரு15-10 | ம15-10அ | ஜேஷ்ட சுத்தம் [விரதம் |
| 7 | 20 | செவ் | துதி51-28 | ரோ19-08 | அ19-08சி | சந்திர தரிசனம், கரிநாள், ஸோபபதம்,ஸத்யஸந்தர் |
| 8 | 21 | புத | திரு52-03 | மிரு21-55 | சி60 | ரம்பா விரதம் |
| 9 | 22 | வியா | சது51-25 | திரு23-35 | ம23-35அ | மாதசதுர்த்தி விரதம் |
| 10 | 23 | வெ | பஞ்49-43 | புன24-10 | சி24-10ம | ... ... ... |
| 11 | 24 | சனி | சஷ்46-58 | பூச23-40 | சி23-40ம | ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் திருநக்ஷத்திரம் |
| 12 | 25 | ஞா | சப்43-10 | ஆ22-10 | சி22-10ம | |
| 13 | 26 | திங் | அ38-30 | மக19-43 | ம19-43சி | |
| 14 | 27 | செவ் | நவ32-58 | பூர16-23 | சி16-23அ | |
| 15 | 28 | புத | தச26-43 | உத்12-15 | அ12-15ம | |
| 16 | 29 | வியா | ஏ19-53 | அ7-38 | சி60 | |
| 17 | 30 | வெ | து12-43 | சித்2-30 | சி60 | |
| 18 | 31 | சனி | திர5-23 சசி58-18 | சு57-13 வி52-03 | சி60 | |
| 19 | 1 (1958 ஸ்ரீ ஜூன்) | ஞா | ○ப51-40 | அ47-20 | ம60 | |
| 20 | 2 | திங் | பிர45-55 | கே43-30 | சி60 | ஜேஷ்டபகுளம்,நக்ஷத்திரம் |
| 21 | 3 | செவ் | துதி41-20 | மூ40-50 | அ40-50சி | ஸ்ரீ திருஞானசம்பந்தர் திரு |
| 22 | 4 | புத | திரு38-15 | பூ39-40 | அ60 | சங்கஷ்கி சதுர்த்தி, ரகு வாரிய தீர்த்தம் |
| 23 | 5 | வியா | சது36-58 | உ40-13 | சி60 | ... ... ... |
| 24 | 6 | வெ | பஞ்37-33 | தி42-40 | ம42-40சி | ச்ரவஞோபவாஸம் |
| 25 | 7 | சனி | சஷ்40-00 | அ46-55 | சி46-55அ | வைதிருதி ச்ராத்தம் |
| 26 | 8 | ஞா | சப்44-10 | சத52-45 | சி60 | பானு ஸப்தமி |
| 27 | 9 | திங் | அ49-40 | பூ59-50 | ம59-50சி | காலாஷ்டமி |
| 28 | 10 | செவ் | நவ55-53 | உட்60-00 | அ69 | த்ரிதின ஸ்ப்ருக் |
| 29 | 11 | புத | தச60-00 | ,, 7-33 | சி7-33ம | த்ரிதின ஸ்ப்ருக் |
| 30 | 12 | வியா | ,, 2-13 | ரே15-13 | சி15-13அ | * * * |
| 31 | 13 | வெ | ஏகா8-03 | அசு22-20 | அ22-20சி | சர்வ மத்வ ஏகாதசி |
| 32 | 14 | சனி | து12-58 | ✻ப28-28 | சி28-28அ | மிதுனரவி நா-43,30,கிருத்திகை விரதம் |

| | | |
|---|---|---|
| சுக் | பு,கே,சூ. | |
| அங் | 1-ரி-சூ6-க-கு-வ<br>13-மேஷ-சுக்<br>15-மீன-அங்<br>20-ரிஷ-புத<br>22-விரு-ச-வ<br>32-மிது-சூரி | யுரே |
| சனி (வ) | குவ்யா நெ(வ) | |


## புத்திர சந்தான எண்ணெய்



இந்த எண்ணெயைக் காலை மாலை இரு வேளையும் 1 அல்லது 2 காசு அளவு உள்ளங் கையில் விட்டுச் சாப்பிடவேண்டியது. இப்படி 15-நாள் சாப்பிட்டால் இது கருக்குழியிலிருக்கும் ஷை குற்றங்களை நீக்கி, கருக்குழியைச் சுத்தப்படுத்தி, மறு மாதத்திலேயே கருத் தரிக்கும்படிச் செய்யும். இது அனுபவமான எண்ணெய். இதற்குக் கடுமையான பத்தியம் கிடையாது.

சிலருக்கு கருத்தரித்து 2, 3, 4-மாதங்கள் வரையில் தங்கியிருந்து திடீரென்று உடைந்து போவதுண்டு. இவ்வகைத் தோஷமும் இந்த எண்ணெயில் நிவர்த்தியாகித் தீர்க்காயுளான கருத்தரிக்கும். இதன் விலை ரூபா 2.

தபாற் கூலி ரூ.1—12 nP.

## கர்ணபிந்து



காதில் சீழ் வடிதல், காது குத்தல், காது கேளா திருத்தல், காதில் நமைச்சல் முதலிய வியாதிகளுக்கு இந்த மருந்தில் 2-துளி காலை மாலைகளில் காதில் விட்டு வர, காதிலுள்ள நோய்களெல்லாம் நீங்கிவிடும்.

புட்டி 1-க்கு விலை 50 nP.

தபாற்கூலி 1-12 nP. மூன்று புட்டிகள் தருவித்தாலும் தபால் செலவு ரூ. 1—12 nP.

## கஸ்தூரி மாத்திரை

குழந்தைகள் முதல் கிழவர்கள் வரையில் எப்பருவத்தோர்க்கும் உண்டாகும் ஈளை, இருமல், சுரம், தலைப்பாரம், நெஞ்சில் கொருகொருப்பு, ஜல தோஷம் முதலியவைகள் தீரும். 25 மாத்திரை அடங்கிய புட்டி 1-க்கு விலை ரூபா 1. தபாற் கூலி ரூ. 1—12 nP.

## நரை மயிர் கருக்குந் தைலம்



தற்காலத்தில் பலவிதமாகச் செய்து விற்கப்பட்டு வருகிற கப்புகள் மயிரைச் செம்பட்டையாகவும், பசுமை நிறமாகவும், சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி விகாரப்படுத்தி விடுகின்றன. நமது தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 3 நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்கு முன்பிருந்த கருமை நிறத்தையும் பளபளப்பையும் உண்டுபண்ணும். மேலே கூறியுள்ள விகார குணங்கள் இதில் உண்டாகமாட்டா. இதைப் பூசிய பிறகு முகலட்சணமும் வசீகரமு முண்டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படுவார்கள். இதை உபயோகிக்கும் விதம் பார்சலோடு தெரிவிக்கப்படும். இதன் விலை ரூ. 1; தபாற் கூலி ரூ. 1—12 nP.

**தனலட்சுமி கம்பெனி,** தபால் பெட்டி நெ. 1376
நெ. 6 லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை-1

## காப் கியூர் என்னும் க்ஷய அரி



கப இருமல், இரைப்பு அல்லது மந்தகாசம், க்ஷயம், சளி, இருமல், கக்குவாய் இருமல் பெருத்த இருமல், தொண்டை நோய், சுவாச காசம், கடினமான ஜலதோஷம், அபாயமான ஈழை இருமல், தொண்டை எரிச்சல், தொண்டைக் கரகரப்பு, இருமலினால் தூக்கம் பிடியாமை, குளிர்ச்சியான வஸ்துவைச் சாப்பிடுகிறதினாலும் பனியில் நனைவதினாலும் உண்டாகும் சாதாரண இருமல் முதலான வியாதிகளை கண்டித்து நன்றாகக் கோழையை வெளியில் தள்ளி நோயாளி நன்றாகத் தூங்கச் செய்யும்.
புட்டி 1-க்கு விலை ரூ. 1. தபாற் கூலி ரூ. 1-2-0.

## ஜி. கியூர் இது 3-தினத்தில் குணப்படுத்தும்

மேக உஷ்ணத்தால் தாது கெட, மூலத்தில் அக்னி அதிகரிப்பதனால் கள்ளநோய், நீரடைப்பு, சதையடைப்பு, பவுத்திரம், அரையாப்பு முதலியன இந்த நோயின் மூலமாய் ஏற்படும். நீர்க்கடுப்பு, குத்தலும் எரிச்சலும் காண்பதுண்டு. இவைகளை நீக்கி நல்ல சுகத்தைக் கொடுக்கக் கூடிய அநுபவ மருந்து இது. பத்தியம் கிடையாது. இதனை உபயோகிக்கும் விவரம் மருந்துடன் அனுப்பப்படும்.
புட்டி 1-க்கு விலை ரூபா 1. தபாற் கூலி ரூ. 1—2—0.

## கக்குவாய் இருமலுக்கு

சிங்கமுகி ரசாயனம். இரண்டு மூன்று வேளை மருந்தில் கேவல், இரைறல் நீக்கி குணத்தை அளிக்கும். புட்டி 1-க்கு வி. ரூ. 2. தபால்கூலி ரூ. 1/2

## காஸ்டோலின்

கீழ்க்குறித்த சரும வியாதிகளுக்கு காஸ்டோலின் ஓர் இணையற்ற "சஞ்சீவி"—அரிப்பு, மண்டைக் கரப்பான், தாமரைப்படை, கண்டமாலை, மேகப் பத்து, அரையாப்புக்கட்டி, கரப்பான், அழுக்குத் தேமல், கன்னப்புற்று, குழிப்புண், மார்ச்சிலந்தி, முகப்பரு, முகச்சொறி, பித்தவெடிப்பு, தினவு, சேற்றுப்புண், சொறி, சிரங்கு, நாரைப்புண், நாப்புச் சிலந்தி, விஷக்கடிகள், வெட்டுக் காயம், வெண் குட்டம், தேள் கடி, ஆறாத ரணங்கள், புரை புண் முதலிய எந்த நோயையும் குணப்படுத்தி நலம் செய்வதாகும்.
டப்பி 1-க்கு விலை ரூ. 0—8—0. 3 டப்பி வரையில் தபாற் கூலி ரூ. 1-2-0.
3-டப்பிகளுக்கு குறையாமல் ஆர்டர் கிடைத்தால் மருந்து அனுப்புவோம்.

## கோல்டனல்

இரத்தமின்மை, பலவீனம், பித்தசோகை, காமாலை முதலியவைகளுக்கு சிறந்த மருந்து. சாப்பிட்ட 10 நாட்களில் இரத்தம் பெருகும்; நரை கருக்கும், பலம் உண்டாகும். புளியேப்பம், குடல் புண் வயிற்றுவலி, குன்மம் முதலிய வயிற்றுக் கோளாறுகள் அறவே ஒழியும். பத்தியம் இல்லாதது 4 மாதம் உபயோக மருந்தின் விலை ரூ. 2—0—0 தபாற் கூலி ரூ. 1—2—0

**காலாணி மருந்து:** காலில் விழும் ஆணிகளுக்கு சிறந்த மருந்து. புட்டி 1-க்கு விலை ரூ. 1. தபால் கூலி ரூ. 1-2.

---

**தனலட்சுமி கம்பெனி,** தபால் பெட்டி நெ. 1376
நெ. 6 லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை-1.

# சர்வதேள்விஷ சஞ்சீவினி

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்)




நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையிருப்பில் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனானி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. இதை நாள்பட வைத்திருப்பதால் இதன் குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாய்க்காலி, செய்யான், பாம்பு, எலி முதலியவற்றின் விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் இது அடியோடு நீக்கக்கூடியது. இது இரண்டுவித மருந்துகள் அடங்கியது. அதை உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 8. தபாற் கூலி 1—2—0 மூன்று பாக்கெட்டுகள் தருவித்தாலும் தபால் செலவு ரூ. 1-2-0 தான். டஜன் 1-க்கு விலை ரூபா 5; தபாற் கூலி 1—10—0.

## சுகபேதி மாத்திரை

இந்த மாத்திரையில் 2-முதல் 5-வரை தேக திடமறிந்து மாத்திரையைச் சாப்பிட்டு கொஞ்சம் ஜலம் சாப்பிடவும். இவ்விதம் சாப்பிட்டால் சுகமாய் பேதியாகிவிடும்.

25-மாத்திரை அடங்கிய புட்டி 1-க்கு விலை 37 nP. தபாற்கூலி ரூ. 1-12 nP.
மூன்று புட்டிகள் தருவித்தாலும் தபாற் கூலி ரூ. 1—12 nP. தான்.
மூன்று புட்டிகளுக்கு ஆர்டர் கிடைத்தால் இம் மருந்து அனுப்புவோம்.

## கண்நோய் மருந்து



இது கண்நோய், கண்குத்தல், கூசல், நீர் வடிதல் மங்கல், அந்திமாலை, பீளை கட்டல், சதை வளர்ந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணுக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் இது மிகச் சிறந்த ஔஷதம். இதை உபயோகிப்பவர் கண்ணாடி போடவேண்டியதில்லை.

புட்டி 1க்கு அணா 10. தபாற் கூலி ரூ. 1—2—0.
இரண்டு புட்டிகள் தருவித்தாலும் தபாற் கூலி ரூ. 1—2—0 தான்.

## மகா பித்தரோக நிவாரணி

பித்தரோகங்கள் 40-க்கும் இது சிறந்த ஔஷதம்.
புட்டி1-க்கு விலை ரூபா 3—0—0. தபால் கூலி ரூபா 1—2—0.

---

**தனலட்சுமி கம்பெனி,** தபால் பெட்டி நெ. 1376,
நெ. 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை-1.

## ஆரணி-குப்புசாமி முதலியார் இயற்றியவை

| நூல் | ரூ.ந.பை. |
|---|---|
| ரத்தினபுரி ரகசியம் 9-பாகம் | 18=87 |
| ஞானசெல்வாம்பாள் 5-பாகம் | 9=62 |
| கற்பகச் சோலையின் அற்புதக் கொலை | 2=00 |
| கடற்கொள்ளைக்காரர் 2-பாகம் | 4=00 |
| மதனம்பாள் 2-பாகம் | 4=00 |
| லோகநாயகி | 1=00 |
| விளையாட்டுச் சாமான் | 1=37 |
| பவளத்தீவு 2-பாகங்கள் | 3=75 |
| தபால்கொள்ளைக்காரர்கள் | 1=00 |
| அமராவதி 2-பாகங்கள் | 5=00 |
| மஞ்சள் அறையின் மர்மம் | 2=00 |
| கற்கோட்டை | 2=50 |
| பூங்கோதை | 0=75 |
| வீரநாதன் | 0=75 |
| கனகபூஷணம் 2-பாகமும் | 4=00 |
| கற்பக சுந்தரி | 3=00 |
| கமலசேகரன் | 2=50 |
| கிருஷ்ணவேணி | 2=50 |
| தினகரசுந்தரி | 1=50 |
| சந்திராபாய் | 2=50 |
| இராஜாமணி | 2=50 |
| இரத்தினபாய் | 2=50 |
| மதனபூஷணம் | 2=00 |
| சுவர்ணம்பாள் | 0=75 |
| தேவசுந்தரி | 2=00 |
| குணசுந்தரன் | 1=00 |
| பத்மாஸனி | 1=00 |
| ஆனந்தஸிங் | 2=00 |
| மின்சார மாயவன் | 2=00 |
| ஆனந்தசிங்கினஷ்டஜயங்கள் | 2=00 |
| அரசூர் இலக்ஷ்மணன் | 3=00 |
| கைவல்லிய நவநீத வசனம் | 2=25 |
| சகோதரவாஞ்சை | 0=31 |

---

| நூல் | ரூ.ந.பை. |
|---|---|
| கம்பராமாயண வசனம் | 4=00 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திரமும் உபதேசங்களும் | 3=50 |
| விவேகானந்தர் சரித்திரம் | 5=00 |
| தமிழ் மெடீரியா மெடிகா | 3=50 |
| மலையாள பகவதி | 1=25 |
| அற்புத நவநீத ரம்பை | 2=00 |
| அகட விகட விலாச விநோதம் | 0=62 |
| சிமாட்டி கார்த்தியாயினி | 0=87 |

| நூல் | ரூ.ந.பை. |
|---|---|
| தாசி ரமணி | 1=50 |
| உயிரோவியம் | 1=50 |
| யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன் | 2=[illegible] |
| இவ்வுலகை திரும்பிப்பாரேன் | 1=[illegible] |
| சிலப்பதிகார ஆராய்ச்சி | 2=[illegible] |
| ஆர்ய மத சித்தாந்தம் | 3=[illegible] |
| பூலோக லக்ஷ்மி கதை | 0=[illegible] |
| கனகரத்தினம் | 0=75 |
| கண்டிராஜா நாடகம் | 0=75 |
| குசேலோபாக்கியான வசனம் | 1=00 |
| உதயணன் | 0=37 |
| தசக்கிரீவன் | 0=87 |
| போஜ சரித்திரம் | 0=31 |
| சதானந்தர் | 1=25 |
| கர்ணன் சரிதை | 0=75 |
| பீஷ்ம விஜயம் | 0=62 |
| கீர்த்திசிங்கன் | 0=44 |
| முப்பெருந்தாசர் | 0=62 |
| மணவாளன் | 0=20 |
| பரசுராமன் | 0=20 |
| சிசுபாலன் | 0=50 |
| அங்கதன் | 0=25 |
| தசாவதார மகிமை | 0=50 |
| கிருஷ்ணன் தூது வசனம் | 0=37 |
| சண்டோபாக்யானம் | 0=37 |
| கருணாகரரும் சத்தியசீலரும் | 0=50 |
| சத்தியவசனம் | 0=25 |
| விமலன் | 0=25 |
| கண்ணபிரான் | 0=25 |
| செய்யுட்பாடத்திரட்டு | 0=25 |
| நாலு மந்திரி கதை | 0=25 |
| மங்களேசுவரன் | 0=37 |
| தக்கன் | 0=37 |
| சீமந்தனி | 0=50 |
| நான்குகோடி | 0=25 |
| மதிமோசவிளக்கம் | 1=00 |
| மெய்க்காதலி | 0=75 |
| மேனுமினுக்கி கதை | 0=75 |
| வீணகானன் ஞானேந்திரி | 0=50 |
| கோமளவல்லி கதை | 0=75 |
| விகடவல்லி கதை | 0=37 |
| தாலிகட்ட மறந்த கதை | 0=44 |
| ஞானசவுந்தரி (நாடகம்) | 0=56 |
| சத்தியவான்சாவித்திரிநாடகம் | 0=37 |

இந்திர கவசமென்னும் சர்வ தேவதா வசியம் விலை ரூபா 1=25 nP.

**ஆனந்தபோதினி ஆபீஸ்,**

**தபால் பெட்டி நெ. 167, சென்னை—1.**

ஜாதகாமிருத பல விமர்சம் என்னும்

# ஜாதக கணித சாகரம்

(மூன்றும் பதிப்பு)

யாதொரு நக்ஷத்திர பாகத்தில் வருகின்ற எந்த க்ரஹமாவது அந்த நிர சுபாவத்திற்கு ஒற்றுமை அல்லது வேற்றுமை யுற்றதா யிருக்கு ல் நக்ஷத்திரத்தினுடையவும் கிரஹத்தினுடையவும் சுபாவ குணம் தேச வர்த்தமானங்கட்குத் தக்கபடி பேதித்து விளங்கும். அதாவது நமது பூமியின் சுழற்சியால் அதைச் சூழ்ந்துகொண்டிருக்கும் பஞ்ச பூதாம்சங்களை நுட்ப நேரந்தோறும் கவர்ச்சியின் துவாரா நெருங்கி கலேத்து மாறுதலை யுண்டாக்கும். அதனாலேயே பிரபஞ்சத்தில் உலக மாறுதல்களும் பேதங்களும் நேரிடுகின்றன.

இந்த இரகசியத்தை விளக்கிக் காட்டும்பொருட்டே போதி சாஸ்திரம் ஏற்பட்டிருக்கின்றது. ஜோதிடத்தைப் பற்றிய எல்லாவற்றிற்கும் ஆதாரம் முக்கியமாய் பிருகத் ஜாதகம். அதை மலையாளத்தில் ஹோரை என்பார்கள். இந்த ஜாதக கணித சாகரம் என்னும் புத்தகம் வேதம் எப்படியோ அப்படிப்போல ஜோதிடத்திற்குத் தாயாகும். இதன் விலை ரூபா 2—0—0.

## ஸ்திரீ புருஷ ஜாதகத் திறவுகோல்

ஜோதிடரை விரும்பாமலே ஒவ்வொருவரும் தாம் தாமே ஜாதக கணிதம் பண்ணவும், 9-கிரகங்களை 12-இராசிகளில் அடைத்து ஆட்சி யுச்சம் இவைகளைக்கண்டு பலாபலன் சொல்லவும், இராசியில் 1,2,3,4,5,6,7-கிரகங்கள் ஒன்றாகக் கூடியிருப்பினும், இரண்டு மூன்று கிரகங்கள் சேர்ந்திருப்பினும் வேறு விதமாக மாறி மாறி யிருப்பினும் அவைகட்கு அனுபவமாகப் பலன் தெரிந்து சொல்லவும் இதனால் தெரிந்து கொள்ளலாம். இதன் விலை 50 nP.

## நிமித்தியகுறி சாஸ்திரம்

இந்த நிமித்தியகுறி சாஸ்திரத்தில் மனிதர்கள் மனதில் நினைத்துக் கொள்ளும் காரியங்களையும் அவற்றின் பலாபலன்களையும் அறிந்து சொல்லும் மார்க்கங்கள் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இது சகல மதஸ்தர்களுக்கும் வர்த்தகர்கள், சோதிடர்கள், விவசாயிகள், லௌகீகர், வைத்திய நண்பர்கள், பிரயாணிகள், வக்கீல்கள், உத்தியோகஸ்தர்கள் முதலாகிய எல்லாக் கனவான்களிடத்தும் அவசிய மிருக்கவேண்டியது. இதன் விலை 12 nP.

## கோசார பல நிர்ணயம்

ஸ்ரீமான் என். ஆர். திருவேங்கடாச்சாரியர், பி.ஏ. எழுதியது.

கோசார பலன்கள் நடைபெறுவது பல்வேறு அம்சங்களைப் பொறுத்திருக்கிறது என்ற விஷயத்தை விரிவாக ஆசிரியர் இந்த நூலில் குறிப்பிட்டிருக்கிறார். அது மாத்திரமில்லை. கோசார சம்பந்தமாகவுள்ள பல வேறு புராதன கிரந்தங்களில் காணப்படும் எல்லா முக்கிய விசேஷங்களுடன் மாத வார தின பலன்களையும், ஆதாய விரய பலன்களையும், ரோக மேற்பட்ட நக்ஷத்திரத்தைக் கொண்டு ரோகம் நீங்கக்கூடிய காலத்தையும் கண்டறியும் விவரம் முதலிய பல உபயோகமான விஷயங்களையும் ஆசிரியர் இதில் சேர்த்திருக்கிறார். தமிழ் நாட்டில் ஒவ்வொருவர் கையிலு மிருக்கவேண்டிய நூலாகும். இதன் விலை 50 nP.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்-1.

Regd. No. M 1190.
Registered as a News Paper in Ceylon



இந்த அபூர்வ மருந்தானது அநேககொடிய வியாதிகளை ஆச்சரியமாக கண்டிக்கக் கூடியது. வியாதியினாலாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது இளைத்துப் போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பல விருத்தி தருவதில் இது நிகரற்ற மருந்தாகும். சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் நோய் கண்டு அவஸ்தைப் படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தை யடைவார்கள்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15 நாள்சாப்பிட்டால் இது இணையில்லாத ஆனந்தத்தைத் தரும். மனிதர் தாம் இழந்துபோன தேக திடத்தைப் பழையபடி யடைதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. ஒருவன் 40 நாள் மருந்தை உட்கொள்ளும் பக்ஷத்தில் அவனுடைய தேகம் வஜ்ஜிரமே யாம். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது.

**20-நாள் மருந்து விலை ரு. 1. 40-நாள் மருந்து விலை ரு 1-12-0.**
போஸ்டேஜ் 20-நாள் மருந்துக்கு வேறு, 40-நாள மருந்துக்கு வேறு.

# அயத்தங்கத் திராவகம்

தனலட்சுமி கம்பெனி, 6.லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை.

Edited, Printed and Published by N. MUNISWAMI MUDALIAR, at the



## மதிமோச விளக்கம்

(தூசி இராஜகோபால பூபதி அவர்கள் இயற்றியது)

தருமமே தழைத்தோங்கி வளர்ந்துவந்த மகா புண்ணிய பூமியாகிய நவ பரத கண்டத்தில், கலிகாலந் தொடங்கியதிலிருந்து, மனிதர் காலவயப்ப மன மாறுபட்டுத் தருமத்தில் செலுத்தும் சிந்தையை மிகுதியும் அதர்ம செலுத்தி வருவதால் அறநெறி குன்றந்து மறநெறி வளர்ந்து வருகி அதற்கேற்ப வஞ்சமும் சூதும், பஞ்சமாபாதகமும், அவற்றிற் கஞ்சா மும் படைத்த மனிதரே நாள்தோறும், காடுகள்தோறும், ஊர்தோறும், கள்தோறும் மலிந்து விநோதம், விநோதமான படுமோசம், மதிமோசம், நிதிமோசங்களையும், சூது வஞ்சனைகளையும் செய்துவருகின்றனர். காலம் செல்லச் செல்ல இதற்குமுன் கண்டும், கேட்டுமிராத எண்ணிறந்த மோசா நாசச் செயல்கள் எங்கும், என்றும் நூதனம் நூதனமாகத் தோன்றி அதி யற்புதத்துடன் வளர்ந்துகொண்டே வருகின்றன; அவற்றைச் செய்யும் மனிதர்களும் உற்பாத பிண்டங்களாய் ஒருவரை யொருவர் எடுத்து விழுங்கு வோராய் அற்புதமாக உற்பவித்து மலையை விழுங்கிய மகாதேவன்போல வளர்ந்து சிறந்து ஜெகஜாலப் புரட்டர்களாயும், அண்டப் புரட்டராயும், கிடீர்ப் புளுகர்களாயும் பரவி வருகின்றனர். இவர்களுடைய மகாமோசச் செயல்களால் சூது வாதறியாத உலகத்தார் அடையும் கஷ்ட நஷ்டங்களுக் களவேயில்லை. வியாபாரந்தொழில் முழுவதிலும் மோசம்; விவசாயத்திலும் மோசம்; உத்தியோகத் துறைகளிலும் ஒப்பில்லா மோசம்; வித்தையிலும் மோசம்; வேடிக்கையிலும் மோசம்; வைத்தியத்திலும் மோசம்; மாந்திரீகத்தி லும் மோசம்; சோதிடத்திலும் மோசம்; சோற்றுக் கடையிலும் மோசம், கப்பலிலும் மோசம்; ரெயிலிலும் மோசம்; நீதிச்சபைகளிலும் மோசம்; தேசச்சேவையிலும் மோசம்; கோயிலிலும் மோசம்; குளத்திலும், வீட்டிலும் மோசம்; காட்டிலும் மோசம்; நாட்டிலும் மோசம்; நகரத்திலும் மோசம். இப்படியே மனிதர் தலைநீட்டு மிடங்களெல்லாம் மோசமாகவே யிருக்கின்றன. இப்படிப்பட்ட மோசங்களிலிருந்து தப்பிப் பிழைப்பதற்கான நீதிமதிகள் இதில் விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.

இதன் விலை ரூபா 1—0—0

## இரத்தினபுரி இரகசியம்

இதில் மிக்க ஆச்சரியமும், நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதி முதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந் துள்ளன. அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வமாக நிரூபிக்கப்படுகின்றன. நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசிய மாய் உணரவேண்டிய இலௌகிக ஆசார விஷயங்களைப் பற்றி ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. 9-பாகங்கள்

விலை ரூ. 18—87 nP.

ஔவையார் அருளிச்செய்த

## பெட்டமை

விலை 25 nP.

31 nP. போஸ்டேஜ் ஸ்டாம்பு அனுப்புவோருக்கு போஸ்டில் ஒரு பிரதி அனுப்பப்படும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167 மதராஸ்


உ

# ஆனந்த போதினி

ஒரு சிறந்த மாதாந்தத்

தமிழ்ச் சஞ்சிகை

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு."—திருவள்ளுவர்.

(தொகுதி 43.)

ஹேவிளம்பிஞு ஆடிமீ முதல் விளம்பிஞு
ஆனிமீ வரையில்

1957ஞு ஜூலைமீ முதல் 1958ஞு ஜூன்மீ வரையில்


நா. முனிசாமி முதலியார்,

"ஆனந்தபோதினி" ஆபீஸ்,

நெ. 6, லாயர் சின்னதம்பி முதலி தெரு,

சௌகார்பேட்டை, மதராஸ்.



*All Rights Reserved.*



பைண்ட் விலை ரூபா 3—8—0 } 1958 { தபாற் கூலி வேறு.

# ANANDA BODHINI

## GOLDEN OPINIONS

From Rao Saheb Late T. Ramakrishna Pillai Avl., B.A., F.M.U., F.R.H.S., Chairman, Board of Examiners in Dravidian Languages, Madras University.

I am a regular reader of "ANANDA BODHINI" the Tamil monthly published in George Town and I am glad to take this opportunity of expressing my appreciation of the way the journal is conducted. It is just the kind of magazine we want for the Indian women in their houses and the conductors of the journal have my best wishes for the success of their undertaking.

*Madras, 28th Nov. 1915.* THOTTAKADU HOUSE. (Sd.) T. RAMAKRISHNA PILLAI.

---

From Rao Bahadur A. C. Pranatartihara Iyer Esq., B.A., I.S.O., Retired Inspector of Schools, and Registrar of Books, Nungambakkam.

I have read several numbers of "ANANDA BODHINI." *It is* conducted on right lines. The matter is suitable and the diction is unobjectionable. I can unhesitatingly say that the journal deserves public encouragement and support.

NUNGAMBAKKAM, *Madras, 5th Dec. 1915.* (Sd.) A. C. PRANATARTIHARA IYER.

---

We have received the current number of the Tamil monthly "ANANDA BODHINI," containing a variety of information on several subjects of every day importance. The special feature *of the* monthly *is* that a separate section is set apart for giving advice to women either in the *form* of abstract statements, *or* small stories containing moral lessons.—HINDU 22—9—15.

---

**Dear Sir,**

Your Tamil monthly entitled "ANANDA BODHINI"......................is written in EASY, CLEAR and READABLE style, WELL-SUITED, PARTICULARLY, to LADIES who take a liking to *it* on account of the varied subjects of interest dealt therein, calculated to mould their characters. That such a monthly should be in existence, side by side with the Anglo-Indian contemporaries, is very much to be appreciated. The subjects dealt within the short compass of the monthly are such that they deserve to be READ and RE-READ from the view point to quality in contradistinction from style and rhetoric, with a select few of our *readers* seem to yearn for, as is evident from the pages of the current number i.e., pages 288 and 289. A majority of the subscribers now on the rolls will *be* at one with me when I say that the style now adopted would conduce to the well-being and uninterrupted continuance of the monthly, since it is being and has to be read by both sexes. ... ... ... ... It is very much to be envied that there should be over 10,000 subscribers, on the rolls which no other monthly of the kind is able to secure, or has ever before secured *since* inception. I wish the monthly all success.

TRIVANDRUM, 21—1—17. A. V. SUBRAMANIA AIYAR, F.N.S.A. (Lon.), F.G.I. (Birm.)

# ஆனந்தபோதினி

## 43-ம் வருடத்திய விஷய அட்டவணை

29056



| விஷயங்கள் | பக்கங்கள் |
|---|---|
| கடவுள் வணக்கம் ... | 2,62,122,182,242,302,362, 422,482,542,602,662 |
| **தலையங்கம்** | |
| வரவேற்கத் தக்க நடவடிக்கை ... | 3 |
| சுதந்திர நினைவுச் சின்னம் ... | 63 |
| போலி வியாபாரிகளின் தேசத் துரோகம் ... | 123 |
| தேர்தல் மூட்டிய சாதித் தீ ... | 183 |
| உலகில் ஒப்பிலாத சமுதாயம் ... | 243 |
| உலக சைவ உணவாளர் மாநாடு ... | 303 |
| விஞ்ஞானிகள் முன் நிற்கும் பெரும் பொறுப்பு ... | 363 |
| சர்வோதய சிந்தனைகள் ... | 423 |
| தூர்த்தரை அடக்கச் சட்டம் செய்க! ... | 483 |
| தீண்டாமையை ஒழிக்க உண்மையான வழி என்ன? ... | 543 |
| தமிழ் அறிஞர்களின் சங்கநாதம் ... | 603 |
| சிங்களவர் அட்டூழியம் ... | 663 |
| **பாட்டு** | |
| எழுந்திடுவீர் ... | 32 |
| காலை ... | 66 |
| அணில் ... | 99 |
| "நிலையில்லா வாழ்வு" ... | 109 |
| தமிழா! தயங்காதே! ... | 126 |
| வள்ளுவர் கண்ட வளநாடு ... | 131 |
| கலை வாழ்வு ... | 144 |
| கடல் ... | 221 |
| ஏழைப் பிணம் ... | 247 |
| நான் வரைந்த சித்திரம் ... | 255 |

| விஷயங்கள் | | பக்கங்கள் |
|---|---|---|
| பாட்டு (தொடர்ச்சி) | | |
| அன்னை | ... | 272 |
| போகிகள் | ... | 291 |
| "தைத் திருநாள்" | ... | 367 |
| பொங்கல் வாழி | ... | 368 |
| தயக்கம் ஏனோ ? | ... | 386 |
| அதுவே நன்னாள் | ... | 402 |
| ஒளிந்து கொண்டான்! | ... | 427 |
| கவி மடல் | ... | 453 |
| கவிதைப் பெண் | ... | 497 |
| விடி வெள்ளி | ... | 569 |
| ஆலயம் நிறுவுநர் இருவர்! | ... | 583 |
| வீராங்கனை | ... | 649 |
| "எழில் தரும் பொழில்" | ... | 693 |
| எந்நாளோ ? | ... | 709 |
| **கதைகளும்—கட்டுரைகளும்** | | |
| உடைந்த உள்ளம் | ... | 6 |
| தலைவன் திரும்பினான் | ... | 15 |
| கம்ப ராமாயணக் கருப்பொருட் டொகை | ... | 17,159,280 |
| உபகாரச் சிந்தை | ... | 24 |
| முடி வென்ன ? | ... | 28 |
| சொல்லருமை | ... | 33 |
| மனங்கவர் மைசூர் | ... | 39 |
| வாழ்வு நிறைந்தது | ... | 44 |
| எல்லைப் புறத்திலே! | ... | 49 |
| **ஞாலம்** (தொடர் கதை) | ... | 51,114,172,233,292,350, 412,472,532,592,654,710 |
| **ஹேவிளம்பி—விளம்பி ஸ்ரீ ஆனந்தபோதினி பஞ்சாங்கம்** | | 60,120,180,240,300,360, 420,480,540,600,660,720 |
| பறம்பிற் கோமான் | ... | 67,137,222 |
| அத்தானுக்கு...! | ... | 77,153 |
| சாவின் குரல் | ... | 84 |
| நிச்சயதார்த்தம் | ... | 96 |
| அன்னைக்கு | ... | 101 |
| சிதறுண்ட சிந்தனை | ... | 103 |
| சிந்தையைக் கவர்ந்த சித்திரம் | ... | 105 |
| இருவரில் சோகம் | ... | 110 |
| இருவரில் காதல் | ... | 127 |





| விஷயங்கள் | | பக்கங்கள் |
|---|---|---|
| தீயாரைக் காண்பதும் தீதே | ... | 132 |
| "நீர்மேற் குமிழி" | ... | 149 |
| எலுமிச்சம்பழம் | ... | 165 |
| திறக்காத பூட்டு! | ... | 167 |
| குறளிலும் குற்றம் | ... | 169 |
| "ஏமாந்த நெஞ்சம்" | ... | 186 |
| கவிக் குயில் | ... | 189 |
| உள்ளம் இல்லை | ... | 194 |
| பண்பும் படிப்பும் | ... | 197 |
| 'பன்மொழி ராமாயணம்'—1 | ... | 204 |
| குறளின் ஒலி நயம் | ... | 213 |
| நன் நிமித்தம்! | ... | 229 |
| பாலும் பழமும் | ... | 248 |
| வடசொல் வழக்கீடு | ... | 257 |
| நேர்மையான வழி | ... | 266 |
| சொர்க்கத்திற்கு ஒரு பறப்பு | ... | 269 |
| வழக்குப் பேசு | ... | 273 |
| அதிக இரத்த அழுத்தம் | ... | 285,335,467 |
| பொய்க் காய்வு | ... | 289 |
| அந்தப்புரத்துச் சமாதி | ... | 306 |
| 'ஊதிய பலூன்' | ... | 313 |
| அறந்தலைப் பிரியாச் செய்கை! | ... | 317 |
| மறைந்த காதல் | ... | 322 |
| ஆட்டக்காரி | ... | 326,394 |
| முப்பாலில் நான்மணிகள் | ... | 340 |
| காதல் தேர்வு | ... | 344 |
| பொங்கல் பரிசு | ... | 369 |
| குலவிளக்கு | ... | 377 |
| வேந்தன் விரும்பியது | ... | 387 |
| பொங்கும் கார்த்திகை | ... | 390 |
| "தேசிகர் பெருக்கிய திருவாய் மொழி" | ... | 403,456 |
| தென்னாட்டுப் பாளையங்கள் | ... | 409 |
| "மனப்பொய்கை" | ... | 410 |
| அவன் இலட்சியம்... | ... | 428 |
| ஆளப்பிறந்தவன் | ... | 437,500 |
| ஒரே வாய்! | ... | 446 |
| மேக வர்ணப் புடமை | ... | 448 |
| சன்மார்க்க தீபம் | ... | 461 |

| விஷயங்கள் | பக்கங்கள் |
|---|---|
| திருப்புகழ்-திறனய்வு ... | 487,573 |
| பூவோ? பூங்குழலோ? ... | 498 |
| ஆயிர நாமப் பேரை ... | 507 |
| அமைதி...! ... | 515 |
| துணை(வி) ... | 524 |
| "நல்ல தீர்ப்பு" ... | 529 |
| யாருக்குத் தோல்வி? ... | 546 |
| பொன்னி ... | 550,626 |
| கொடுத்து வைத்தவள்? ... | 557 |
| "கம்பன் படைத்த இராமன்" ... | 577 |
| பழி காணேன்...! ... | 581 |
| கன்றும் பசுவும் ... | 585 |
| வேற்றுமையில் ஒற்றுமை ... | 589 |
| திருவனந்தபுரம் சர்க்கார் பொருட் காட்சிச்சாலை ... ... | 607 |
| பிரளயம் ... ... | 610 |
| பாரதியாரின் குயில் தரும் இன்பம் ... | 617 |
| விதியை வென்ற மதி ... | 633 |
| தோளும் துணையும் ... ... | 637 |
| செந்நீர்ப் பஞ்சணை ... ... | 639 |
| திருக்குறட் சிறப்பு ... ... | 667 |
| ஏற்றமும் இஞ்சினும் ... ... | 673 |
| இதுதான் நட்பு ... ... | 677 |
| உயிர்தவச் சிறிது, காமமோ... பெரிது! ... | 683 |
| போகும் பாதை புதுப் பாதை ... | 686 |
| இரு சகோதரிகள் ... ... | 694 |
| "மூக்கு" ... ... | 707 |



ஆரணி-குப்புசாமி முதலியார் எழுதிய

## கற்பக சுந்தரி

அல்லது

### மூன்று கறைகளின் மர்மம்

இரண்டு பாகங்கள் அடங்கியது

**இதன் விலை ரூபா 3.** (தபாற் செலவு வேறு.)

## கிருஷ்ணவேணி

அல்லது

### அதிசய மர்மச் சுரங்கம்

**இதன் விலை ரூபா 2—50 nP.** (தபாற் செலவு வேறு.)

## அரசூர் இலக்ஷ்மணன்

அல்லது

### அதியற்புதக் கள்ளன்

(800-பக்கங்களுடன் கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது.)

இந்நாவலில் அரசூர் இலக்ஷ்மணனது சாமர்த்தியச் செயல்களும் அதிசயத் திருட்டுகளும், துப்பறியும் தொழிலில் ஈடுபட்டுப் பிரசித்திப் பெறுவதும் படிக்க படிக்க இன்பத்தைத் தரும்.

**இதன் விலை ரூபா—3—0—0**

## மின்சார மாயவன்

இது ஓர் மிக்க அபூர்வமான திருடன் சரித்திரம். இதன் கதாநாயகனாகிய மின்சார மாயவன் என்னும் திருடன் கல்வியும் மிக்க புத்தி சாமர்த்தியமும் தீரமும் உடையவன். ஆதலால் அவன் செய்கைகள் ஒவ்வொன்றும் மிக்க வியப்பை யுண்டாக்கத்தக்கதா யிருக்கும். அவன் ஆபத்தில் சிக்கிக் கொள்ளும் ஒவ்வொரு சமயமும் தப்புவான் என்று ஒருவரும் கருதார்கள், அப்படியிருந்தும் தப்பித்துக்கொள்வான். இது அறிவாளிகளுக்கு மிக்க விருப்பத்தை யுண்டாக்கத்தக்கது. மனிதர் உலக அனுபவம் பெற அறிந்து கொள்ள வேண்டிய பல விஷயங்களை பலர்க்கு அளிக்கக்கூடியது.

**இதன் விலை ரூ. 2.**

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, சென்னை-1.

"ஜீவா" தீட்டிய

# எழுத்து ஓவியங்கள்

## யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்?

(விதவைப் பெண்ணொருத்தியின் உள்ளம் உருக்கும் கதை)

**திருத்தமான இரண்டாம் பதிப்பு**

'சாரதா வித்யாலயா' தலைவி சகோதரி ஆர். எஸ். சுப்புலட்சுமி, பி. ஏ., எல். டி., பண்டிதை அசலாம்பிகை ஆகியோர் சிறப்புரைகள் கொண்டது.

இக் கதையில் வரும் கதாநாயகி காமாட்சியின் சித்திரம் தமிழ்ச் சமூகத்தில் நிலவிவரும் வைதவ்யத்தின் சித்திர மாகும். **விலை ரூ. 2-0-0.**

## காதலனா? காதகனா?

திருத்தமான இரண்டாம் பதிப்பு

கலாசாலை மகளிர் சிலரின் சீர்கெட்ட வாழ்க்கையும் போலி நவநாகரிகத்துக்கு அவர்கள் பலியாகி அடையும் கதியையும் இக் கற்பனைக் கதை படம் பிடித்துக் காட்டுகிறது. **இதன் விலை ரூ. 1—25 nP.**

## இவ்வுலகைத் திரும்பிப்பாரேன்?

செல்வக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்து சீமைப்படிப்பு படித்து நவநாகரிக வலையில் சிக்கிச் சீர்கேடுற்று வாழ்க்கையில் ஏற்பட்ட பல கஷ்ட நஷ்டங்களால் உலகையே வெறுத்துச் சென்ற ஒரு பெண்மணியின் சுயசரிதம் உள்ளத்தைக் கவரும் வகையில் வரையப்பட்டிருக்கிறது.

**இதன் விலை ரூ. 1—75 nP.**

## சீமாட்டி கார்த்தியாயினி

ரஷிய ஞானி லியோ டால்ஸ்டாய் எழுதிய "அன்னா காரினென்னா" என்னும் நவீனத்தைத் தமிழில் இனிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

**இதன் விலை 87 nP.**

## உயிரோவியம்

இதுகாறும் தமிழ் அன்னையின் திருமேனியிலேயே கிடையாத ஒரு எழில் வாய்ந்த ஆபரணம் என்றும், இதுவரை எந்த கதாசிரியராலும் காணாத முடிவு என்றும் ஒரு முறையல்ல; பலமுறை படித்தின்புற வேண்டிய கதை என்றும் அறிஞர்கள் இக் கதைச் சிறப்பைப் பாராட்டியிருக்கிறார்கள். இக் கதையில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு பாத்திரமும் நம் கண்முன்னே நடமாடுவது போன்ற உணர்ச்சி படிப்போர்க்கு ஏற்படும். **இதன் விலை ரூ. 1—50 nP.**

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, சென்னை-1.



# ஆனந்தபோதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு."—திருவள்ளுவர்.

| தொகுதி 43 | விளம்பி௵ ஆனிமீ கஉ<br>1958௵ ஜூன்மீ 15உ | பகுதி 12 |
|---|---|---|


## உள்ளுறை.


| என். | | பக்கம் |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | 662 |
| 2. | சிங்களவர் அட்டூழியம் (தலையங்கம்) | 663 |
| 3. | திருக்குறள் சிறப்பு | 667 |
| 4. | ஏற்றமும் இஞ்சினும் | 673 |
| 5. | இதுதான் நட்பு! | 677 |
| 6. | உயிர்தவச் சிறிது, காமமோ பெரிது! | 683 |
| 7. | போகும் பாதை புதுப் பாதை | 686 |
| 8. | "எழில் தரும் பொழில்" (கவிதை) | 693 |
| 9. | இரு சகோதரிகள் | 694 |
| 10. | "மூக்கு" | 707 |
| 11. | எந்நாளோ? (கவிதை) | 709 |
| 12. | ஞாலம் (தொடர் கதை) | 710 |
| 13. | பஞ்சாங்கம் | 720 |

# ஆனந்த போதினி

## கடவுள் வணக்கம்

விண்டபோ தகரும் அறிவரும் பொருளே
மெய்யனே ஐயனே உலகில்
தொண்டனேன் தன்னை அடுத்தவர் நேயர்
சூழ்ந்தவர் உறவினர் தாயர்
கொண்டுஉடன் பிறந்தோர் அயலவர் எனும் இக்
குறிப்பினர் முகங்களில் இளைப்பைக்
கண்டபோ தெல்லாம் மயங்கிஎன் உள்ளம்
கலங்கிய கலக்கம்நீ அறிவாய். 1

சீர்த்தசிற் சபைஎன் அப்பனே எனது
தெய்வமே என்பெருஞ் சிறப்பே
ஆர்த்த இவ்வுலகில் அம்மையர் துணைவர்
அடுத்தவர் உறவினர் நேயர்
வேர்த்தமற்று அயலார் பசியினால் பிணியால்
மெய்யுளம் வெதும்பிய வெதும்பைப்
பார்த்தபோ தெல்லாம் பயந்துஎனது உள்ளம்
பதைத்தது உன்உளமறி யாதோ. 2

பரைத்தனி வெளியல் நடம்புரிந் தருளும்
பரமனே அரும்பெரும் பொருளே
தரைத்தலத்து இயன்ற வாழ்க்கையில் வறுமைச்
சங்கடப் பாவியால் வருந்தி
நரைத்தவர் இளையர் முதலினோர் எனையோர்
நண்ப னென்றுஅவரவர் குறைகன்
உரைத்த போதெல்லாம் நடுங்கி என்உள்ளம்
உடைந்ததுஉன் உளமறி யாதோ. 3

அன்னையே அப்பா திருச்சிற்றம் பலத்துஎன்
ஐயனே இவ்வுல கதிலே
பொன்னையே உடையார் வறியவர் மடவார்
புகலும்ஆ டவர்இவர் களுக்குள்
தன்னையே அறியாப் பிணியினால் ஆவி
தளர்கின்றார் தருணம்ஈது எனவே
சொன்னபோ தெல்லாம் பயந்துநான் அடைந்த
சோபத்தை நீ அறியாயோ. 3

# சிங்களவர் அட்டூழியம்

சென்ற ஒரு திங்களாக இலங்கையில் சிங்கள இன வெறியர்கள் அங்குள்ள தமிழ் மக்களுக்குச் சொல்லொணாத கொடுமைகளையும், ஆற்றொணாத துயரங்களையும் ஏற்படுத்தி யிருக்கின்றனர். அத்துடன் உயிர்க்கொலைகள் வேறு செய்துள்ளனர். தமிழ்மக்களை மானபங்கப்படுத்தி யுள்ளனர். சொத்துக்களைக் கொள்ளை யடித்து நிரம்பப் பொருள் சேதங்களையும் ஏற்படுத்தி யுள்ளனர். கடுமையான செய்தி தணிக்கைக்குப் பிறகு இச் செய்திகள் வந்திருக்கின்றன வென்றால், அங்கு உண்மையில் நடந்த நிகழ்ச்சிகள் பலமாய் அதிகமாகவே இருக்கும் என்பதை எளிதில் யாரும் ஊகித்துக்கொள்ளலாம்.

இலங்கையில் சிங்கள வெறியர் பேயாட்டம் ஆடிக்கொண்டிருக்கையில் அங்குள்ள சிங்கள அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதில் போதிய முன்னேற்பாடுகளைச் செய்யாம லிருந்திருக்கிறது.

இக் கலவரங்களுக்கு அடிப்படைக் காரணம் இரண்டாகும். (1) சிங்கள மொழியோடு சம தகுதியில் தமிழும் தேசிய மொழியாக இருக்கவேண்டும். (2) இலங்கையில் பல தலைமுறைகளாக வாழ்ந்துவரும் இந்திய வமிசா வழியினரான இந்தியர்களுக்கு—தமிழர்களுக்கு குடி யுரிமைகள் தரவேண்டும். இவ்விரு காரணங்களையும் நடு நிலைமையிலிருந்து பார்க்கும் எவரும் இவ்விரண்டு அம்சக் கோரிக்கையின் நியாயத்தை மறுதலிக்கமாட்டார்கள் என்பது திண்ணம். முதல் காரணத்தின் நியாயத்தைச் சிங்கள அரசியல் தலைவர்கள் ஏற்கனவே ஒப்புக்கொண்டு, இலங்கை அரசியல் சட்டத்தையும் அதற்கேற்ப உருவாக்கி யிருந்தார்கள். இரண்டாவது கோரிக்கையின் நியாயத்தை ஏற்க மறுத்து சிங்கள அரசியல் தலைவர்கள் எதிர்ப்புக்காட்டி வந்தனர். இதன் காரணமாக இலங்கை இந்தியர்களுக்கு—தமிழர்களுக்கு-வேண்டாத தடைகளைப் போட்டு அவர் தம் குடியுரிமைகளுக்குக் கேடு செய்து வந்தனர். இக் கேட்டின் அபத்தங்களை இலங்கை தலைமை நீதிமன்றமும், அம் மன்றத்திற்கும் மேலான இலண்டன் உயர்நீதி மன்றமும் (பிரிவி கவுன்சில்) முறையே கொடுத்த தீர்ப்புக்களில் நன்கு எடுத்துக்காட்டி, இருந்தன. இதனால் சிங்கள ஆட்சியினர் வெட்கித் தலைகுனியும்படி ஏற்பட்டது நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

தமிழுக்கு சமதகுதி கொடுத்திருந்த நிலை சிங்களசாதி வெறியர்களுக்கும், இவ்வெறிக்குத் தூண்டுகோலாய் இருந்த சிங்கள அரசியல் தலைவர்கள் பலருக்கும் பிடிக்காமலிருந்தன. இதன் விளை

வாக அவர்கள் சிங்களப் பொதுமக்களிடத்தில் தமிழுக்கும் தமிழருக்கும் எதிரான பிரச்சாரங்களைச் செய்து வரலானார்கள். இதற்கு ஆட்சியிலிருந்த கட்சியினரும் ஒத்துப் பாட ஆரம்பிக்கவே, வகுப்புவாதிகள் கை ஓங்கியது. இதன் விளைவாக, அரசியல் சட்டத்தில் மாற்றம் செய்து, சிங்களமே இலங்கையின் ஆட்சிமொழி என்பதாக மாற்றிக்கொண்டு, தமிழர், கலை நாகரிகம், உரிமை ஆகியவற்றிற்கு அழிவுதேட முயன்றனர். சிங்கள அரசியல் தலைவர்களின் நாணயமற்ற இப் போக்கை நன்குணர்ந்த இலங்கைத் தமிழர்கள் சமஷ்டி ஆட்சிமுறை யிருந்தாலன்றி, தங்களுக்கு எதிர்காலத்தில் ஆபத்து ஏற்படும் என்று உணரலானார்கள். இதன் விளைவாக இலங்கையின் புகழ்பெற்ற வழக்கறிஞர் உயர் திரு செல்வநாயகம் தலைமையில் தமிழரசுக் கட்சியை ஏற்படுத்தினார்கள். இக்கட்சியினர் சென்ற தேர்தலில் தமிழ்ப்பகுதிகளில் அமோகமான வெற்றி பெற்றது ஒன்றே இவர்களுக்குள்ள செல்வாக்கையும், இவர்கள் கோரிக்கைக்கு மக்களின் ஒப்புதலும் இருக்கிறது என்பதைக் காட்டியது. சிங்கள இனவெறிக் கூட்டம் அரசியல் சட்டத்தில் தமிழுக்குக் கொடுத்திருந்த சம தகுதியை நீக்கியபிறகு, தமிழ்த்தலைவர்கள் போராடாமல் உரிமைகளைப் பெற முடியாது என்று முடிவுக்கு வந்து அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யலானார்கள். இந்த ஏற்பாடுகளுக்கு முன் சிங்கள இனவெறிக் கூட்டம், நடத்திக் காட்டிய அடக்குமுறையும் ஆர்ப்பாட்டமும் ஒரு படிப்பினையைத் தமிழர்களுக்குத் தந்தன. இதன் விளைவே தமிழர்கள் போராட முடிவு செய்ததும் ஆகும். போராட்ட நாள் நெருங்குவதற்கு முன்பு சிங்கள வகுப்புவாதிகளின் தலைவரும், இலங்கை முதல் அமைச்சருமான திரு பண்டார நாயகர் அவர்கள் தமிழ்த் தலைவர்களை சமரச ஏற்பாட்டுக்கு இணங்க வைக்கும் முறையில், பல தடவைகளில் அழைத்துப் பேசலானார். இதன் விளைவாக இரு சாராரும் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். இதன் முடிவு, தமிழ், சிறுபான்மையாரின் தேசிய மொழி என்பதாக அங்கீகரிக்கப்பட்டு, தமிழ்ப் பகுதிகளில் தமிழே ஆட்சிமொழியாகவும் இருக்கும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்த விதிகள் தமிழருக்கு நன்மை விளைக்காது என்று தமிழர்களில் ஒரு பிரிவினர் எதிர்த்து வந்தும்கூட, தமிழரசுக் கட்சித் தலைவர்களோடு செய்து கொண்ட ஒரு ஒப்பந்தத்தை அமல் நடத்த முடியாது என்று திரு பண்டார நாயகா வெளிப்படையாகச் சின்னாட்களுக்குப் பிறகு அறிவிக்கலானார். இதன் விளைவாக மீண்டும் போர்க்கொடி உயர்த்த தமிழரசுக் கட்சி முன் வந்தது. அதற்குரிய வேலைத் திட்டங்களை ஆலோசிப்பதற்காக வவுனியா என்ற இடத்தில் அதன் சிறப்பு மாநாட்டைக் கூட்டியது. இந்த மாநாட்டிற்கு வந்த பிரதிநிதிகளின் இரயில் வண்டி கவிழ்க்கப்பட்டதும், அதைத் தொடர்ந்து கொழும்புபோன்ற தலைநகரம் உள்ளிட்ட சில இடங்களில் தமிழர்களின் உயிர், பொருள்களுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டதும், அதனால் இலங்கை பூராவும் அமைதி குலையும்படி ஏற்பட்டதும் நேயர்கள் அறிந்ததொன்றாகும்.



இலங்கையின் அரசியல் வரலாற்றில் சமீபகாலமாய் நடந்து வரும் நிகழ்ச்சிகளைக் கவனிக்கும்போது, அங்குள்ள சாதி வெறி கொண்ட சிங்களத் தலைவர்களால் இலங்கையின் ஒற்றுமைக்கு வழி காண முடியாது என்பது தெளிவாக்கப்பட்டுவிட்டது. எப்பொழுது அரசியல் சட்டத்தை மாற்றி சிங்களம் மட்டுமே இலங்கையின் தேசிய மொழி என்று சட்டம் செய்தார்களோ அன்றே இலங்கையின் பிரிவினைக்கு வித்திட்டவர்களாகி விட்டார்கள். ஸ்விசர்லாந்தில் ஒரு சதவிகிதமே பேசப்படும் மொழிக்கு ஸ்விசர்லாந்தின் மன்ற பெரும்பான்மை மொழிகளோடு சமதகுதி கொடுத்திருக்கும்போது, இலங்கையின் மக்கள் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கையுள்ள தமிழுக்கு சம தகுதி வழங்க மறுப்பதும் இலங்கையை தாயகமாகக் கொண்டு பல தலைமுறைகளாக வாழ்ந்து வருகின்ற தமிழ் இந்தியர்களுக்கு குடியுரிமை வழங்க முடியாது என்று சொல்வதும் இலங்கைக்குச் சீர்கேட்டையே விளைக்கும்.

கடைசியாக, இலங்கையில் தமிழர்களுக்கு ஏற்பட்ட உயிர், பொருள் நஷ்டங்களுக்கு இலங்கை அரசு தக்க நஷ்டஈடு தர வேண்டியதும் அதன் முக்கிய பொறுப்பாகும்.

கலவரத்துக் காரணமான சிங்களசாதிய சங்கத்தையும், தமிழர்களின் நியாய உரிமைகளுக்குப் போராடும் தமிழரசு கட்சியையும் ஒரே தகுதியில் எண்ணி தடை விதித்திருப்பதும், தமிழ்த் தலைவர்களில் 58 பேரை வீட்டுக் காவலில் வைத்து, அதே சமயத்தில் இரண்டு சிங்களசாதிச் சங்கத்தலைவர்களை மட்டும் வீட்டுக் காவலில் வைத்திருப்பதும் நீதிக்கும், பாகுபாடில்லாத நிர்வாகத் திறமைக்கும் கேடு செய்வதாகும். இவ் விரண்டையும் கொண்டேதான் ஒரு அரசின் மதிப்பு தீர்மானிக்கப்படும். இக் கலவரங்களைப்பற்றி விருப்பு வெறுப்பில்லாத உயர்நீதிபதிகளைக் கொண்ட ஒரு பொது விசாரணைக்கும் இலங்கை அரசினர் உத்தரவிட வேண்டியதும் இன்றியமையாதது. இப்போதுள்ள ஆட்சி, சட்டம் அமைதியைக் காக்கத் தவறியிருப்பதாலும், சிங்கள வகுப்பு வெறியைக் கொண்டிருப்பதாலும் திரு பண்டாரநாயகாவின் அமைச்சரவை இராஜிநாமாச் செய்யவும் வேண்டும். இது வல்லாத வேறுவிதப் பரிகாரங்கள் எரியும் நெருப்பில் எண்ணெய் விட்டமாதிரியே தான் வந்து முடியும்.

# சந்தா நேயர்களுக்கு முன் அறிவிப்பு

நமது 'ஆனந்தபோதினி' மாதப் பத்திரிகைக்கு நாளது விளம்பி ஆண்டு ஆனித் திங்களுடன் நாற்பத்துமூன்று ஆண்டு நிறைவுறுகிறது. ஆகவே, ஆடிமீ முதல் தேதி (16-6-58) 44-வது ஆண்டு பிறக்கிறது. 'ஆனந்தபோதினி' தன் பருவத்திற்கேற்ற வளர்ச்சி பெற்றுக் காலவர்த்தமானத்துக்கு இயைந்த பற்பல சிறப்பியல்களுடன் விளங்கி வருவது வாசக நேயர்கள் அறிந்ததொன்றும். தமிழ் மக்களுக்கு எல்லாத் துறைகளிலும் ஒரு விழிப்பையும் எழுச்சியையும் அறிவையும் உண்டாக்கித் தக்க வழி காட்டுவதே 'ஆனந்தபோதினி'யின் முதற் பெரும் நோக்கமாகும். 44-ம் ஆண்டில் இன்னும் குறிப்பிடத்தக்க விசேஷ அம்சங்களுடன் கூடி விளங்கி 'ஆனந்தபோதினி' உங்களுக்குப் பெருமகிழ்வை ஊட்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறோம். தமிழ்மொழி, சமூகம், சமயம் ஆகியவைகளின் மறுமலர்ச்சிக்கான வகையில் பல கட்டுரைகளையும் சிறுகதைகளையும் தமிழ்நாட்டுப் பேரறிஞர்கள் பலர் 'ஆனந்தபோதினி'யில் எழுதி வருவார்கள் என்று அறிவிக்க விரும்புகிறோம்.

நாம் இறைவன் திருவருள் ஒன்றையே நம்பி தமிழ் மக்களுக்கு நம்மாலான சேவையைச் செய்யவேண்டுமென்ற ஒரு பெரு நோக்குடனேயே குறைந்த சந்தா விகிதம் ஏற்படுத்தி நிறைந்த விஷயங்களைக் கொடுத்து ஒழுங்காகக் கடந்த 43-வருஷ காலமாக நடத்தி வந்திருக்கின்றோம். ஆதலால், 'ஆனந்தபோதினி'யின்பால் அன்பு பூண்டு ஆதரித்து வரும் வாசக நேயர்கள் அனைவரும் 44-வது ஆண்டின் சந்தாத் தொகையை நாளது விளம்பிஆ ஆனிமீ 16-ந் தேதி (30-6-58)-க்குள் மணியார்டர் மூலமாகவோ நேரிலோ எங்களுக்குக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டுகிறோம். சந்தாத் தொகையின் பொருட்டு வி.பி. அனுப்புவதால் தபால் செலவு 50 nP. மணியார்டர் கமிஷன் 12 nP. ஆக 62 nP. அதிகமான செலவும் சஞ்சிகை வந்து சேர வீண்காலதாமதமும் ஆகும். ஆகையால், எல்லா நேயர்களும் மேற்குறிப்பிட்ட தேதிக்குள் மணியார்டர் செய்து விடுவதுதான் இருதரத்தாருக்கும் நலம்,

**மானேஜர்.**

**குறிப்பு:**—முன் பணம் அனுப்புவோர் பழைய சந்தாதாரர்களாயிருந்தால் மணியார்டர் கூப்பனில் தங்களுடைய சந்தா எண்ணைக் குறிப்பிட்டுப் 'புதிய ஆண்டுக்கு' என்று எழுதவேண்டும். புதிய சந்தாதாரர்கள் 44-வது ஆண்டுக்கு என்று எழுதவேண்டும்.

# திருக்குறட் சிறப்பு

பண்டித இராம சுப்பிரமணிய நாவலர்

*

'திருக்குறள்' என்பது, பிறமொழிகட்கு அரிதாகித் தமிழணங்கிற்கே சிறந்ததொரு அணிகலனாய் மிளிர்வதொரு நெறி நூல். அதன் சிறப்பை நுனித்து உணர்ந்து, பிறமொழியாளர் அதனைத் தம் மொழிகளில் பெயர்த்து ஆக்கம் செய்துள்ளனர். தெய்வத் தன்மை வாய்ந்த கருத்துக்கள் திருத்தகு தெய்வத் திருக்குறளிலே இலங்குகின்றன. தெய்வப் புலவர் திருவள்ளுவரே, தெய்வத் திருநூல் திருக்குறளே என யாவரும் எடுத்துரைக்கும் மேவருஞ் சிறப்புச் சான்றது அந்நூல்.

திருக்குறளில் பால்கள் மூன்று. அதன்கண் எழுத்தனைத்தும் சிறந்தன; அசையனைத்தும் அழகுடையன; சீரனைத்தும் செவ்வியன, தீவியன. ஒன்பதினாயிரத்து முந்நூற்றுப்பத்துச் சீர்களால் ஒன்பது சுவைகளும் கலந்து, ஆயிரத்து முந்நூற்று முப்பது பாடல்களை ஆக்கி அவற்றை நூற்றுமுப்பத்து மூன்று கலங்களில் வைத்து அவற்றை முறைப்பட அமைத்து நம்மவர் நுகரத் தந்தருளிய பொய்யா மொழியார்க்கு நாம் செய்வதொரு கைம்மாறு யாதுளது? 'கைம்மாறு வேண்டா கடப்பாடு' என்றவர் எக்கைம்மாறுதான் விரும்புவர்?

திருக்குறள் நுண்ணிய கருத்துக்கட்கு நிலைக்களம்: நுண்ணிய கருத்துக்களைத் திண்ணிய சொற்களில் விளக்கும் தன்மையில் திருக்குறள் ஒன்றே இணையற்றது. மொழி பெயர்ப்பினும் தான் முற்றொருங்கு அடங்கி நில்லாத சொற்செறியும் பொருணுணுக்கமும் கனிந்தது இக் கடவுள் நூல். இவ்வுண்மையைக்,

"கடுகைத் தொளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

என்ற பாட்டால் விளக்கினர் இடைக்காடர். அதனை 'அணுவைத் தொளைத்து' என்று திருத்தம் செய்தார் ஔவையார். எடுத்துக்கொண்ட பாவோசையே அணு. எழுசீர்களே எழுகடல். எடுத்துக்கொண்ட உட்கருத்தே அணு. எழுசீர்களிலும் கொண்ட கருத்து வகைகளே எழுகடல். குறுகத்தறித்த ஈரடிகளும், அவற்றில் நின்ற இருவகைப்பட்ட பொருள்களுமாம். இங்ஙனம், திருக்குறட் பாட்டை ஒலியாலும் பொருளாலும் வகைசெய்து,

"அணுவைத் தொளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

என்னும் பாட்டுக்குப் பொருள்காண்பது மிகப் பொருத்தமுடையதாகக் காணப்படுகின்றது.

அணுக்கள் பிரியுந்தோறும் ஆற்றல் மிகும் என்னும் உண்மையைப் பண்டைப் புலவர் பெருமக்களும் அறிந்திருந்தனர்போலும்! அணுவைக் குறுகத்தறித்தால், அதன் ஆற்றல் மிகுவதுபோலக்

குறுகத்தறித்த குறளணு பொருளாற்றல் மிகுந்து பல்கி விளங்குகின்றது. 'குறுகத்தறித்த குறள்'' என்பதற்கு 'ஒரு பகுதி குறுகும்படி தறிக்கப்பட்ட குறள்' என்னும் பொருள் சாலப் பொருந்துகின்றது.

இவ்வாறு குறுகத் தறித்த குறளாகையால், தறிபட்ட ஈரடிகளையும் கூட்டியே குறித்த பொருளைக் காணல் வேண்டும். சிலவிடங்களில் இரண்டில் ஒருபகுதியே தனிப்பொருள் ஒன்றைத் தந்து விளங்குமாயினும், அது மற்றைப் பகுதியையும் அவாவி நிற்றலே இயல்பாம் என்பது ஆராய்ந்து காண்பார்க்கு நன்கு விளங்கும். குறட்பாக்கள் ஈரடிகளும் பயின்றாலன்றிக், குறிபொருள் அறியலாகாதவை. 'பெரிதினிது பேதையார் கேண்மை' என்பது மட்டும் நோக்கின், பொருள் மாறுபாடாகவே தோன்றும். 'பிரிவின்கட், பீழை தருவதொன்றில்' என்பதுங்கூடக் கற்றறியுமிடத்தே குறிபொருள் விளக்கமாகின்றது. 'தேவரனையர் கயவர்' என்றால் பொருள் மாறுபாடாகவே தோன்றும். 'அவருந்தாம், மேவன செய்தொழுகலான்' என்பதுங்கூட உணரும்பொழுதே குறிபொருள் விளங்குகின்றது. குறுகத் தறித்த குறளை இருபகுதியும் ஒட்டி உணரல் வேண்டும்.

சுருங்கிய சொற்களால் பரந்த பொருளைப் பகரும் ஆற்றல் திருவள்ளுவர்க்கே சிறப்பு வாய்த்துளது. 'சுருங்கிய, சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லுதல் வல்லாரார் வள்ளுவரல்லால்' என்றார் அரிசிற்கிழார்.

'மடியை மடியா வொழுகல், குடியைக்
குடியாக வேண்டு பவர்,'

"இடும்பைக் கிடும்பை படுப்பர், இடும்பைக்
கிடும்பை படாஅ தவர்.''

'சூர்புணர்ந்து சார்பு கெடவொழுகின், மற்றழித்துச்
சார்தராச் சார்தரு நோய்.'

என்றாற்போலும் பாடல்களின் சொல்லருமையும் பொருட் பெருமையும் கற்று மகிழத்தக்கவை.

'கற்க கசடறக் கற்பவை, கற்றபின்
நிற்க வதற்குத் தக' என்றாற் போல்வனவற்றுள் சொற்கள் நிறுத்தளந்து வழங்கப்படுவது தெளியக் காணலாகும்.

திருக்குறள் ஓதுவதற்கு எளிது; உணர்வதற்கு அரிது. நுண்பொருளை நுவல்வது. 'ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி' என்றார் மாங்குடி மருதனார். திருக்குறட் பொருளைத் திருவள்ளுவரே உணர்வர்; ஏனையோர் நன்குணரார் என்னும் உண்மையை 'நாலுமொழிந்த பெருநாவலரே நன்குணர்வார்-போலு மொழிந்த பொருள்' என்றார் தொடித்தலை விழுத்தாண்டினார். 'ஒழிந்த பொருள்' எனக் கொண்டால், பொதுப்பொருளையன்றிக் குறி பொருளை ஏனையோர் நன்குணரார் திருவள்ளுவரே உணர்வார் என்று பொருள் கொள்ளலாகும். கற்குந்தோறும் புதுப்பொருள்



கொள்ளலாகும். கற்குந்தோறும் புதுப்பொருள் ஊறும் பேரூற்றுத் திருக்குறள். 'தீதற்றோ, ருள்ளதோ றுள்ள முருக்கும்ம—வள்ளுவர் வாய்மொழி மாண்பு' என்று மாங்குடி மருதனார் இதனைச் செவ்வனம் விளக்கியுள்ளார். இப்பொருண்மையை,

'மணற்கிளைக்க நீரூவ மைந்தர்கள் வாய்வைத்
துணச்சு ரக்குந் தாய்முலை யொண்பால்—பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர் முப்பால் மதிப்புலவோர்க்
காய்தொறு மூறு மறிவு.'

என்று உருத்தி, சன்கண்ணர் நன்கு விளக்கினர்.

'தொட்டனைத் தூறு மணற்கேணி, மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு'

என்று திருவள்ளுவர் செப்பியதற்கு இலக்கியம் அவர் செய்த திருக்குறளை ஓரிருமுறை கற்பதனொடு நில்லாமல் பன்முறை கற்கவேண்டும். ஒவ்வொரு முறையும் ஒவ்வோர் புதுநூலைக் கற்றாலன்ன பயன் திருக்குறளால் விளையும் என்பது ஒருதலை.

திருக்குறள் முப்பாலில் நாற்பால் உரைக்குஞ் சிறப்புடையது. அறம் பொருள் இன்பங்கள் வெளிப்படையாகவும் வீடுகுறிப்பாகவும் கூறப்பட்டிருக்கின்றன.

'நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூன்முறை.'

'அறம்பொருளின்பம் வீடென்னு மந்நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை'

'முப்பாலி னாற்பால் மொழிந்தவர்'

என்பவை அதனை நன்கு விளக்குகின்றன. 'மெய்யுணர்தல்' என்றும் அதிகாரம் வீடுபேற்றைக் குறிப்புவகையாற் கூறுகின்றது.

தமிழர்க்கு வேதம் திருக்குறளே. தமிழ்வேதம் அதுவே. வழிபடத்தக்கது வள்ளுவர் வாய்மொழியே.

'சாற்றிய பல்கலையுந் தப்பா வருமறையும்
போற்றி யுரைத்த பொருளெல்லாம்—தோற்றவே
முப்பான் மொழிந்த முதற் பாவலர்'

என்றார் நல்லந்துவனார்.

'செய்யா மொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே'

என்றார் வெள்ளிவீதியார்.

'எல்லாப் பொருளு மிதன்பா லுளவிதன்பால்
இல்லாத வெப்பொருளு மில்லையால்'

என்றார் தமிழ் நாயகனார். திருக்குறள் சொல்லாத பொருள் இல்லாத பொருள். வாழ்க்கைக்கு இன்றியமையாதவை முழுதுந் திருக்குறளிற் காணலாகும்.

வேதம் கன்மகாண்டம் ஞானகாண்டம் என்னும் இரு பகுதிகளைக் கொண்டது. கன்மகாண்டத்தில் அறமே சிறப்புடையது. எனவே, அறத்தை நாயனார் அறத்துப்பாலில் விளங்க உரைத்தார்: சடங்குகளைத் தெய்வப் புலவர் பாராட்டவில்லை. ஆயினும், அவை உலகியல் நோக்கித் தழுவப்படும் என்று கொண்டு அவற்றையுந் தழுவி ஒருசெய்யுளில் கன்மகாண்டத்தை முழுதும் செறித்துக் கூறுகின்றார், பொய்யில்புலவர். அச்செய்யுளே கன்மகாண்டத்துக்கு உயிர் எனலாகும். அச்சீரிய செய்யுளாவது,

'செய்தக்க வல்ல செயக்கெடும், செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்'

என்பது. வேத கன்மகாண்ட முழுதும் இவ்வொரு செய்யுட்கு இணையாகாது. வேதத்திற் கூறப்பட்ட ஞானகாண்டம் ஞானம் என்னும் பகுதியில் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. நிலையாமை பற்றறுதி தத்துவவாராய்ச்சி ஆன்மஞானம் வீடுபேறு என்பன அப்பகுதியில் வேத விழுப்பொருள்களாய் ஒளிக்கின்றன.

'தலைப்பட்டார் தீரத் துறந்தார், மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்'

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு'

'பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும், மற்று
நிலையாமை காணப் படும்.'

'எப்பொருள் எத்தன்மைத் தாயினும், அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

என்னும் பாடல்கள் வேதத்தை விழுங்கிக்கொண்டு நிற்கின்றன. தமிழர்க்கு வேறு வேதம் ஏன்? வழிபாடுமுதல் வீடுபேறுவரை திருக்குறள் நமக்கு வழி கோலுகின்றது. அதுவே நமது வேதம், 'அதுவே நீதி; அதுவே போதம்; இதில் என்ன பேதம்? ஏன் விவாதம்?

தமிழருடைய அறம், கல்வி, பண்பாடு, வீரம், நாகரிகம் முதலியவற்றுக்குத் திருக்குறளே சிறந்த விடை பகரும். தமிழரை இழிவு கூறுவார் திருக்குறளை விரித்துப் பார்க்கவேண்டும். உலகிலேயே எந்த மொழியிலும் திருக்குறளுக்கு இணையான நூல் இல்லை என்பது வெறும் புகழ்ச்சி அன்று. பாரதியாரும் திருவள்ளுவரைப் போல் புலவர் எந்நாட்டிலும் பிறந்ததில்லை என்கின்றார். அத்தகைய திருவள்ளுவர் தமிழர் என்றால், உலகில் உயர்ந்த வகுப்பார் யாவர் என்று நாம் சொல்லவேண்டுவதில்லை. திருக்குறள் தமிழ் நூல் என்றால் எம்மொழியிலும் சிறந்தது தமிழ் என்று சாற்றவேண்டுவதில்லை.

'அறத்தினூஉங் காக்கமு மில்லை' என்று கொண்டவர் தமிழர்' தமிழர் அறத்தையே தலைமையாகக் கொண்டவர். கசடறக் கற்பது அவர் தாய் கல்வி. கல்விதான் தமிழர்க்குக் கண். உள்ளுவதெல்லாம் உயர் ஒள்ளுவதே தமிழரது உள்ளப் பண்பாடு. மிகுதியால் மிக்கவை செய்தாரைத் தகுதியால் வெல்வதே தமிழரது இன



வெற்றி. இன்னா செய்தாரை அவர் நாண நன்னயஞ் செய்து விடுவதே தமிழருடைய தண்டனை. எள்ளாத எண்ணிச் செய்வார் தமிழரே. விழுப்புண்படாத நாளெல்லாம் வழுக்கினுள் வைப்பதே தமிழரது வீரம். விழித்தகண் வேல்பாயினும் அழித்திமையாமையே தமிழரது திண்மை. ஈகையும் இன்சொல்லும் வாய்மையும் இழுக்கற்ற வாழ்வும் தமிழரது 'நயத்தக்க நாகரிகம். பெருமையும் பணிவும் தமிழர்தம் அணிகள் பண்டைத் தமிழருடைய சிறந்த வாழ்க்கையின் நிழற்படந் திருக்குறளாக விளங்குவது காணலாம்.

உலகில் உள்ள எல்லா நிகழ்ச்சிகளையும் இரண்டாக வகுக்கலாகும். ஒன்று இன்ப நிகழ்ச்சி; மற்றொன்று துன்ப நிகழ்ச்சி. யாவரும் இன்பத்தை விரும்புவர், துன்பத்தை வெறுப்பர். தாம் விரும்பும் இன்பத்தைத் தமக்கும் பிறர்க்கும் ஆக்குதல் வேண்டும்; வெறுக்குந் துன்பத்தைத் தமக்கும் பிறர்க்கும் நீக்குதல் வேண்டும். எல்லா அறங்களும் இந்நெறி முறையில் அடங்கும். இம்முறையின் வழுவினை இலக்கண வகையால் அறம் எனத் தோன்றினும் பயன் வகையால் அறமாவதில்லை. திருவள்ளுவனார் மேற்கொண்ட நெறி இதுதான். இன்பமுந் துன்பமு மென்ன மிவையிரண்டும்—மன்பதைக் கெல்லா மனமகிழ—வன்பொழியா—துள்ளியுணர வுரைத்தார்'—இளவேட்டனார் என்பது காண்க. வள்ளுவர் வாய்மொழி மாண்பு வேறு; பிறர்மொழிப் பண்பு வேறு. தெய்வப்புலவரது நடைவேறு, கொள்கை வேறு. அதுதான் திருக்குறளுக்கும் பிற நூல்களுக்கும் உள்ள வேற்றுமை. இன்பாற்றல் துன்பொழித்தல் என்னும் இவ்விரண்டையும் அடிப்படையாகக்கொண்டே திருக்குறள் செய்யப்பட்டிருக்கின்றது. தேவர் கொள்கையில் வாய்மை என்பது உண்மை அன்று. 'வாய்மை எனப்படுவ தியாதெனின், யாதொன்றுந்—தீமை யிலாத சொலல்' தீங்கு பயவாத சொல்தான் அவர் கொள்கையில் வாய்மை. புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின், பொய்மையும் அவர்க்கு வாய்மைதான். 'பிறர்க்கின்னா செய்யாமை மாசற்றார் கோள்' 'பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா—பிற்பகற் றாமே வரும்' நோயெல்லாம் நோய் செய்யார்—நோயின்மை வேண்டுபவர்' என்றுந் திருக்குறள் பாக்கள் பிறர்க்குத் துன்பம் செய்யாமையை வற்புறுத்துகின்றன. திருக்குறளிலே சொல்லப்பட்ட அறங்களில் 'ஒன்றாக நல்லது கொல்லாமை' ஒன்றே. 'நண்பாற்றாராகி நயமில செய்வார்க்கும்—பண்பாற்றுவதே முதன்மை. யார்க்குந் தீதொழிய நன்மை செயலே' செந்நாப் போதார் குறிக்கோள்.

திருக்குறட் சிறப்பைத் திருந்தக் கூறுந் திறன் அரிது: அகரந் தொடங்கி கைரத்தில் முடியுந் திருக்குறள் தமிழ்மொழி முழுவதும் உள்ளடக்கி உள்ளது என்பது மிகையாகாது. ஐவகை இலக்கணமும் இலக்கிய வளமும் செறிந்தது திருக்குறள். 'முப்பால் பகார் நாவிற் குயலில்லை' என்றார் முதுகூற்றனார். திருக்குறள் 'உள்ளிருள் நீக்கும் விளக்கு. 'உள்ளக் கமல மலர்த்தும்' ஒண்கதிர்; 'சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய—வந்த வருவினைக்கு மாமருந்து;' தெள்ளமுதின் றீஞ்சுவையும் ஒவ்வாத தமிழமுதம். ஆகவே, திருக்

குறளின் ஆயிரத்து முந்நூற்று முப்பதருங்குறளும்—பாயிரத்தோடு பகர்வதே' நமது கடமை. திருக்குறள் என்னும் ஒரு நூலாலேயே நம் வாழ்வைத் தூய்மை செய்து, வீடாச்சிறப்பு எய்தி, மற்றியாவரினுஞ் சிறந்து வீடுபெறலாகும். தமிழரது செல்வம் அதுவே; தமிழரின் தகைமையையும் அதுவே. தமிழ் வேதத்தை சிந்திக்க நெஞ்சம்; வாழ்த்துகவாய்; கேட்க செவி; வந்திக்க சென்னி.

உள்ளுதல் உள்ளியுரைத்தல் உரைத்ததனைத் தெள்ளுதல் நினைதல் கூறல் தெளிதல்—என மூன்று வகையால் நாம் திருக்குறளைப் பயில வேண்டும். நாமே நன்கு கற்றுக் குறட்பொருளை உணர்ந்து, உணர்ந்தவாறு பிறர்க்கும் அறிவித்து, அறிவித்ததனை மீண்டுந் தேர்ந்து, தெளிய வேண்டும். இவ்வாறு திருக்குறளில் ஒரு குறள் கற்பினும் ஊதியமாம். தெய்வத் திருமறையைப் பிறமொழியாளர் உணர்ந்தும், இன்னுந் தமிழர் பலர் உணராதிருப்பது வருந்தத்தக்கது. வாழ்வு முழுதுந் திருக்குறள் கற்பினும் தீதில்லை; அது வாழ்வைப் புடஞ்செய்து பொலிவிக்கும் என்பது உண்மை. தமிழரைத் தமிழராகச் செய்யுந் திருக்குறளை நாம் கற்றுத் தமிழராகல் வேண்டும்.

'உருக் குறளாய் நின்றெவ் வுலகு மளக்குந்
திருக் குறளைக் கற்பீர் தினம்'

இதுவே எனது வேண்டுகோள்.


"ஆனந்த போதினி"
(மாதப் பத்திரிகை)
சந்தா விவரம்

| | |
|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட இந்தியா, சிலோன் | ரூ. 2—00 |
| வருடம் 1-க்கு வெளிநாடுகளுக்குச் சந்தா | ரூ. 3—00 |
| நடந்துகொண்டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை | ரூ. 0—20 |
| சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை | ரூ. 0—25 |

ஜீவிய சந்தா ரூ. 30—00

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

எப்பொழுது சேர்ந்தாலும் ஆடிமீ முதல் கணக்கு வைக்கப்பட்டு சஞ்சிகைகள் அனுப்பப்படும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, சென்னை.


# ஏற்றமும் இஞ்சினும்

பு. சுப்பிரமணியன்

☆

இன்னும் அந்தி சாயவில்லை.

களத்துமேட்டில் வேப்பமரத்தின்கீழ் அமர்ந்திருந்தேன். குளுமையான காற்று உடலுக்கு இன்பங் கொடுத்தது. ஆங்காங்கு நாற்று விட்டிருந்த நிலங்கள் பசேலென்று தோற்றிப் பார்வைக்கு இதங் கொடுத்தன.

களத்துமேட்டை ஒட்டியிருந்த நிலத்தில் புதிதாக நீரிறைக்கும் இஞ்சின் போட்டிருந்தார்கள். அதற்கு அருகாமையில் ஏற்றம் ஒன்று இருந்தது. இஞ்சின் வந்தபிறகு ஏற்றம் உபயோகமற்று விட்டதென்று அதன்நிலை எடுத்துக்காட்டியது.

இந்த உலகத்துச் சிந்தனையே அற்று நான் உட்கார்ந்திருந்தேன்.

ஆஹா! கிராமத்து வயற்புறங்களில் மாலை நேரம் எவ்வளவு இன்பமாகக் கழிகின்றது.

பசுமையான பட்டுமெத்தை விரித்தாற்போன்று எங்கும் பரந்து விரிந்த நிலங்களும் தம்புராவின் நரம்புகளை மீட்டுவது போன்று மரக்கிளைகளை மெல்ல மெல்ல அசைத்துச் சுருதி கூட்டும் தென்றற் காற்றும், அதற்கேற்ப பற்பல சுரங்களில் ஒலி யெழுப்பும் புள்ளினத்தின் இன்னிசையும், இவற்றிடையே வீற்றிருக்கும் இயற்கை யன்னையின் அமைதியான கொலுக்காட்சிகள் மனதுக்கு எவ்வளவு இன்பந்தருகின்றன. அந்தோ! மனித இனமே! இந்த இன்பத்தையெல்லாம் உதறியெறிந்துவிட்டு எங்கெங்கோ இன்பம் உள்ளதென்று துருவித் துருவி ஆராய்ந்து கொண்டிருக்கின்றாயே! உன் முன்னோர் எத்துணை அமைதியாக இயற்கையோடியைந்து வாழ்ந்து இன்பங் கண்டனர். அவர்கள் வாழ்ந்து காட்டிய நன்னெறியை விட்டு விலகி நீ எங்கோ போய்விட்டாயே!"

காலையில் விவேகானந்தர் நூல்களோடு உறவாடிய தன் விளைவு சிந்தனையெல்லாம் இந்தத் திசையிலேயே சென்றது.

திடீரென்று "அண்ணா!" என்ற குரல் கேட்டது.

சுற்றுமுற்றும் பார்த்தேன். யாரையுங் காணவில்லை.

அடுத்து, "என்ன தம்பி!" என்ற ஏக்கங் கலந்த பதிற் குரலொன்று கேட்டது.

சிறிது நேரத்திற்குப் பின்னரே, அங்கிருந்த ஏற்றமும் இஞ்சினும் பேசிக்கொண்டன என்பதைத் தெரிந்துகொண்டேன். நான் அமைதியாகக் கேட்கத் தொடங்கினேன்.

"என்ன அண்ணா, கவலையோடிருக்கிறாய்?" என்றது இஞ்சின்.

"வாழ்ந்து கெட்டவர்களைப்பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறேன், தம்பி!"

“யார் அண்ணா, அவர்கள் ?”

“வேறு யார்? நானும் என் உற்றார் உறவினருந் தாம்!”

“வாழ்வும் தாழ்வும் சகஜம்தானே அண்ணா? கோபுரம் குப்பை மேடாவதும் குப்பைமேடு கோபுரமாவதும் நாம் பார்த்து வருவது தானே!”

“தம்பி! குப்பைமேடு கோபுரமாவதைப்பற்றி யாருக்குங் கவலையில்லை; ஆனால், கோபுரம் குப்பைமேடானால் பலரும் கவலைப்படுவது சகஜம்தானே! போகட்டும்! எப்படியோ என்னைக் குப்பைமேட்டுக்கு இழிந்தவன் என்று குத்திக் காட்டுகிறாய்! பரவாயில்லை! நீ இழித்துக் கூறித்தானா என் பெருமை குன்றிவிடப் போகிறது? அந்தக் காலத்தில் நாங்கள் வாழ்ந்த வாழ்வைப்பற்றி உனக்கென்ன தெரியும்?” “எனக்கெப்படித் தெரியும்? சொன்னால் தெரிந்து கொள்கிறேன்.”

“ஆம்! சொல்கிறேன்! ஏர்பிடித்து வாழும் மக்கள் எங்களைச் சீரும் சிறப்புடன் வைத்துப் போற்றிய காலம் அது. அந்தக் காலத்தில் எங்களைக் காணாத நீர்நிலைகள் உண்டா? கேணி, குளம், குட்டை, ஏரி எங்கும் நீக்கமற நின்றிருந்தோம் நாங்கள். வயல் வரப்புக்கள், தோப்புத் துரவுகள் எங்கு பார்த்தாலும் ஏற்றப்பாட்டு ஒலித்துக் கொண்டிருக்கும். “ஏற்றப் பாட்டுக்கு எதிர்ப் பாட்டேது?” என்ற சிறப்புப் பெற்றது அப்பாட்டு. கவிச்சக்கரவர்த்தி கம்பனின் சிந்தனையைக் கவர்ந்த பெருமையுடையது அப்பாட்டு. “மூங்கில் இலைமேலே தூங்கு பனிநீரே, தூங்கு பனிநீரை வாங்கு கதிரோனே” என்ற இலக்கிய நயந் தோன்றும் அடிகளெல்லாம் இயல்பாய் மிதந்து வருந் தன்மையுடையது அப்பாட்டு. அந்த இனிமையான பாட்டொலித்த நாட்டின் மூலைமுடுக்கிலெல்லாம் இன்று என்ன கேட்கின்றது தெரியுமா? தரையே அதிரும்படியான பேரொலி! காதைச் செவிடாக்கும் இயந்திரத்தின் இடியொலி! அந்தோ! தென்றல் வீசிய சோலையிலே சூறாவளியா? மணஞ் சூழ்ந்த பொழிலிலே பிணவாடையா?

இது மட்டுமா? இன்னும் கேள்! செவிக்கு மட்டுமா நாங்கள் இன்பங் கொடுத்தோம்! மாந்தர் கண்ணுக்கும் விருந்தளித்தோமே! மனிதனோடு சேர்ந்து நாங்கள் உழைக்கும்போது நீ பார்த்திருக்கிறாயா? அந்தக் காட்சியைப் பார்த்துச் சுவைத்திருக்கிறாயா? “ஏற்ற மரத்தோழி இறங்கி வந்தால் வாழி!” என்று பாடி ஆடும் இளம் உள்ளங்களைக்கூடக் கவர்ந்த காட்சியாயிற்றே அது. ஒருவர் மேலேறி என்னை மிதிக்க மற்றொருவர் கீழ்நின்று சாலைவாங்கி ஊற்ற பசுமைச்சூழலிடையே தோன்றும் அக்காட்சியைப் பார்க்க வேண்டுமே! இயற்கையன்னையின் மடியிலே கிடந்து மனிதக்குழவி உந்தி உதைத்து அவள் மார்பகத்தைப்பற்றிப் பாலருந்துவதைப் போன்ற காட்சியல்லவா அது! அதற்குமாறாக இன்று என்ன காண்கிறோம் தெரியுமா? என்னவோ குழாய்க் கிணறுகளாம்! பம்பு செட்டுகளாம்! செயற்கை மழையாம்! இயற்கைத் தாயின் வயிற்றைக் கிழித்துக் குடர்களைப் பிடுங்கி அவள் உதிரத்தைக் குடிக்க ஆரம்பித்துவிட்



டான் மனிதன். தன்னைப் போற்றாத மக்களைத் தாம் எங்ஙனம் ஆதரிப்பான் ?”

“நன்றாயிருக்கின்றது உனது பல்லவி! பசித்தவன் பழங்கணக்குப் பார்த்ததுபோல நொடித்துப்போன நீ பழம் பெருமையைப் பாடுகின்றாய்!”

“தம்பி! நையாண்டி செய்கிறாயா? செய்! கேலிக்குரியதாகத் தான் ஆய்விட்டது எங்கள் நிலைமை.”

“கேலியில்லை அண்ணா! நீ ஆத்திரத்தில் பேசுகின்றாய்! கால நிலையை அனுசரித்து நீ பேசவில்லை. இன்றைய மனிதன் முன்னேறி விட்டான். எந்தக் காரியத்தையும் மிகக் குறுகிய காலத்தில் செய்து முடிக்க விழைகிறான். குறைந்த காலத்தில் நிறைந்த பலனைக் காண விரும்புகிறான். இந்த நிலையிலே இன்னும் அவன் உங்களை ஆதரித்துக் கொண்டிருக்கமுடியுமா? நாளெல்லாம் உழைத்தாலும் ஐந்து காணி நிலத்திற்கும் உங்களால் சரியாகத் தண்ணீர் பாய்ச்ச முடியாதே! எங்களைப் பாருங்கள்! ஒரு நாளில் ஐந்து காணி என்ன ஐம்பது காணிக்கும் தண்ணீர் பாய்ச்ச முடியும். இவ்வாறு ஐம்பது பேர் செய்யும் வேலையை நான் ஒருவனே செய்து விடுகிறேன். மனிதனின் உழைப்பு குறைகிறது! ஓய்வு பெருகுகிறது. உல்லாசம் வளர்கிறது. இதையெல்லாம் நீ யோசிக்க வேண்டாமா ?”

“யோசித்திருக்கிறேன் தம்பி! நீ ஏதோ கணக்குச் சொன்னாயே. ஐம்பது பேர் வேலையை நீ ஒருவனே செய்து விடுவதாக. அதையும் யோசித்திருக்கிறேன். தம்பி! நீ பிறந்த விதத்தையும் நான் பிறந்த விதத்தையும் சற்று எண்ணிப் பார்! எளிமையில் பிறந்தேன் நான்! நான் முழு உருவம் பெற நாலைந்து பேர் தங்கள் உடலுழைப்பைச் செலுத்தினாற் போதும்! அவ்வாறே நான் இயங்குவதற்கு இருவரின் ஒத்துழைப்பே போதும். ஆனால் நீயோ? நீ எங்கு பிறந்தாய்? எங்கெங்கு செப்பனிடப் பெற்றாய்? எங்கு முழுமையாக உருவானாய்? எங்கிருந்து எங்கு குடி வந்தாய்? நீ இயங்குவதற்கு எத்தனை துணைப்பொருட்கள் வேண்டும்? இவையெல்லாவற்றையும் கணக்கெடுத்துப் பார்! பிறப்பதற்கு முன்னமே ஐந்நூறு பேர் உழைப்பை உறிஞ்சி விட்டிருக்கும் நீ இப்போது ஐம்பது பேர் வேலையை நீ ஒருவனே செய்துவிடுவதாகப் பேசுவதில் என்ன பெருமை இருக்கின்றது. நீ சொன்னவாறே ஐம்பது பேர் வேலையை நீ ஒருவனே செய்வதாக ஏற்றுக்கொள்வோம். அதனால் நேரும் விளைவுகள் என்னவென்று பார்த்தாயா? அந்த ஐம்பது பேரின் கதி என்னவாகின்றது? உழைக்கச் சக்தியிருந்தும் வாய்ப்பின்மையால் வேலையின்றிப் பசிக்கு அடிமைப்பட்டு, ஊரூராய்த் திரியும் நாடோடிகளாய், நடைப்பிணங்களாய் அவர்கள் மாண்டு மடிய நேர்கின்றது.”

‘ஹா…ஹா!..ஹா…” என்று உரக்கச் சிரித்துவிட்டு இஞ்சின் பேச ஆரம்பித்தது.

“அண்ணா! இப்போது நீ பாடினாயே இந்தப் பல்லவி இது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. எத்தனையோ ஆண்டுகளாக என்

வர்க்கத்தார் கேட்டுச் சலித்துப்போன பழம்பாடல் இது. காந்திஜி போன்ற அரும் பெருந்தலைவர்களே எங்களுக்கெதிராக வசை புராணம் பாடியுள்ளனர். ஆனல் எந்தச் சக்தியும் தடுத்து நிறுத்த முடியாத அளவுக்கு இன்று எங்கள் வளர்ச்சி பெருகிவிட்டது. சந்திர மண்டலத்துக்கு ஏணிபோடும் இந்த நாளில் இதுபோன்ற பத்தாம்பசலிக் கருத்துக்களை நீ கூறுவாயானல் உன் புத்தியில் ஏதோ கோளாறென்றுதான் சொல்லவேண்டும்.''

"தம்பி! நன்ருய்ச் சொன்னய்! ஆம்! புத்திக் கோளாறுதான்! ஆனல் எனக்கல்ல. என்னையும் உன்னையும் கண்டுபிடித்த மனித இனத்துக்குத்தான் இன்று புத்திக் கோளாறு! இல்லையேல் மனிதன் தனக்குள்ளே பொங்கிச் சுரக்கும் இன்ப ஊற்றைப் புறக்கணித்து விட்டு இரண்டரை லட்சம் மைல்களுக்கப்பாலுள்ள சந்திர மண்டலத்தை நினைத்து ஏங்குவானு? தனக்குள்ளே மறைந்து கிடக்கும் அளப்பருஞ் செல்வங்களை மறந்துவிட்டு செவ்வாய் மண்டலத்துச் செல்வங்களைப்பற்றிக் கனவு காணுவானு? தனக்குள்ளே ததும்பி வழியும் சக்தி ஊற்றின் வலிமையை உதறிவிட்டுச் சந்திர மண்டலத்துக்குத் தாவுவதிலே தன் வலிமையைக் காண்பிக்க முனைவானு? இன்றைய மனிதன் தன்னையே நம்பவில்லையே! தனக்குள்ள உடற்பலத்தில் - மனுேபலத்தில் - ஆத்மபலத்தில் - நம்பிக்கை இழந்து தன்னை மறந்து தலைவிரித்தாடுகிருன். தன்னை மறந்த மனிதன் எங்களை மறந்ததில் வியப்பில்லை. ஆனல் ஒன்று! **தன்னை மறந்த மனிதனுக்கு வாழ்வில்லை! ஏற்றம் இழந்த உலகுக்கு ஏற்றமும் இல்லை!.........''**

"சாமியோவ்! இராப்பொழுது ஆயிடுச்சுங்களே! இன்னுமா இங்கே இருக்கீங்க?...''

சுவாரஸ்யமாகச் சினிமா பார்த்துக்கொண்டிருந்தபோது திடீரென மின்சாரத்தடை ஏற்பட்டாற் போன்றிருந்தது. என் எதிரே களத்துமேட்டைத் தற்காலிகமாகக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டிருந்த நரிக்குறவன் நின்றுகொண்டிருந்தான்.

ஏற்றமும் பேசவில்லை! இஞ்சினும் எதிர்க்கவில்லை! எல்லாம் மனக்குறளியின் வேலை.

வானத்தைப் பார்த்தேன். இருண்டு கிடந்தது மதியற்று!

பெருகும் இருளுக்கஞ்சி வீட்டை நோக்கி விரைவாக நடையைக் கட்டினேன்.



# இதுதான் நட்பு!

**வெண்ணெய்வேலன்**

★

"புணர்ச்சிப் பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்.'' —குறள்

என்பது பொதுமறை—அதுவும் தமிழ்மறை.

இதற்கு இலக்காக இருந்து அழியாப் புகழெய்தியவர்கள், தமிழிலக்கியம் தொட்ட எல்லோர் உள்ளத்திலும் பதிந்து நிலைத்து நிற்பார்கள் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

வாழ்வு என்பது வாழ்வதற்குத்தானே தவிர்த்து வீழ்வதற்கு அன்று. வாழ்வு என்ற பாதையிலே நடந்து செல்லச் செல்ல எதிர்ப்படும் துன்பமாயையும், இன்பமாயையும் எண்ணிலடங்கா. இன்பங்கள் அதிகமில்லாவிடினும், துன்பங்கள் முடியாத் தொடர்கதையாகக் கூட அதிகரிப்பதுண்டு. இத்தகைய துன்ப மாயைகள்தான் வாழ்விலே புகுந்த வள்ளாளனுக்கும் எதிர்ப்படக்கூடிய சோதனைகள்-தேர்வுகள், இந்தத் தேர்விலே வெற்றிகண்டு இன்பப்பாதையை-பேரின்பப் பாதையைக் கண்டு பிடிப்பதற்குள் நாம் படிக்க வேண்டியது பல புத்தகங்கள். அனுபவ ஏட்டிலிருந்து பயிலக்கூடியது ஏராளம். இத்துணைப் புத்தகங்களையும், அனுபவங்களையும் கரைத்துக் குடித்த பின்னும் வாழ்வின் தேர்விலே தோல்வி பெறுபவர் கேட்க வேண்டியதில்லை.

வாழ்வின் தொடக்கத்திலே எழும் துகளனைய துன்பத்தைக் கண்டு துயரப்படும் மன்பதைக்கு எற்றுக்கோ நீடித்த வாழ்க்கை? அதைத் தாங்கக்கூடிய உள்ள உறுதி பெருதவன் இந்த நாட்டின் நல்வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் எப்படித் துணைபுரியப் போகிருன்? அத்தகையவன் கோழை—உலகைக் கண்டு—உலகத்தின் போக்கைக் கண்டு திருந்தக் கற்றுக்கொள்ளத் தெரியாதவன். சே! தனக்கு வரும் இன்னலைத் தடைப்படுத்தக்கூடிய சிறந்த வழிகளில் ஒன்றையேனும் தன்னகத்தே பெற்றிருக்கவில்லையே!

எது சிறந்தவழி? இன்னலை—இடுக்கணைத்தடுக்கும் வழி கூடவா உலகத்தில் இருக்கிறது? என்று எழும் ஆச்சரியமிக்க வினவிற்கு வண்டமிழ் மறை வகுத்த வள்ளுவன் கூறும் விடை:

"இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்.''

என்பதுதான். இதுபோதாதா? துன்பம் சூழும் நேரத்திலே சிரிக்க வேண்டும். அந்தச் சிரிப்பு வள்ளுவர் குறளைக் கேட்டுவிட்டு வருகின்ற வெட்டிச் சிரிப்பாக இருக்கக்கூடாது. உன் வறுமை—இன்னல் என்னும் அந்தகாரத்தை விரட்டிவிடும் வகையிலே எழும் இயற்கைச் சிரிப்பாக—உள்ளத்தின் உணர்ச்சியிலே—உவகையின் திணைப்பிலே எழும் உணர்ச்சிச் சிரிப்பாக இருக்கவேண்டும். அப்படித்தான் சிரிப்பே வரவில்லையென்ருல் செங்நாப்போதாரின் சீர் குறளைக் கைக்கொண்டு படிக்க ஆரம்பித்துவிடேன்! பிறகு பார்

உன் முகத்திலே எவ்வளவு தெளிவுந் தேற்றமும், இன்னலை எதிர்க்கும் ஆற்றலையும் காண்பாய் என்பதை.

வாழ்வு வளப்படுவதும், குடும்பம் நலம்பெறுவதும், உள்ளத் துணர்வும், உடல் நிலையும் தளராது, வளர்ச்சியுற்று வளமிக்க நிலையிலே காணப்படுவதும், வறுமையென்ற மாபாவி தொடராது இருப்பதனுல்தான்.

"வறுமை வாழ்வைக் கொல்லும்" என்பதின் தத்துவமும் நோக்கற்பாலதே. வாழ்விலே வறுமை வந்தாலும் வாழ்விற்காக வகுத்து வைத்திருக்கும் அறநெறிகளுக்கும், நேரிய சட்டதிட்டங்களுக்கும் மீறி வாழ்க்கையை நடாத்திச் செல்லும் வஞ்சகமனம் படைத்தோர்கள் அக்காலத்தில் வாழவில்லை. அற்பவாழ்வின் சுகத்திற்கு விற்கவில்லை, அவர்களின் மானத்தை. இதற்கொப்ப ஒரு புலவனின் ஆணித்தரமான கூற்றைப் பாருங்கள்.

"வாழ்தல் வேண்டிப்
பொய் கூறேன்; மெய்கூறுவல்"

இப்படிக் கூறுகின்ற சங்ககாலப் புலவர்கள், மெய்யுளங் கொண்ட மென்தமிழ்ப் புலவர்களாக வாழ்ந்தனர். புலவரென்பார் பொருளுக்காக இல்லாத வொன்றை புனைந்துரைத்துக் கதைகட்டிக் கூறுகின்றவர்கள் என்று பலர் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். இது தவருன எண்ணம். புலவர்களைப்பற்றிக் கூற எழுந்த வள்ளுவர்

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்."

என்ருர். உள்ளதை உள்ளவாறு படம் பிடித்துக் காட்டும் ஆற்றல் படைத்த புலவர்களின் பட்டியலிலே சேர்த்தெண்ணப்படுபவர் பிசிராந்தையாரும் ஒருவராவார்.

பிசிராந்தையார்—பெரும்புலமைப்பெற்ற பழந் தமிழ்ப் புலவர். வாழ்வென்ற மாயையில் வெற்றிகண்டு வளமிக்க வாழ்வை யமைத்து நடத்துகின்ற நல்ல பல சூழ்நிலையைப் பெற்று வாழ்ந்து வந்தவர். வறுமையை ஓட்டுகின்ற வித்தைகற்ற வண்டமிழ்ப் புலவர்.

பிசிராந்தையார் என்பது அவருடைய ஊரின் பெயர். பாண்டிய நாட்டிலுள்ள பிசிர் என்பதிலிருந்தும், இவருடைய மகன் ஆதன், ஆதனுடைய தந்தை என்பது ஆதன்தந்தை, ஆந்தை என மருவி ஆந்தையார் என்ருகி புலவர் வாழ்ந்த ஊரின் பெயரோடு ஒட்டி பிசிர்+ஆந்தை+ஆர்=பிசிராந்தையார் ஆகியது என்று சொல் வாருமுளர். மற்றும் இவர் ஊர் பிசிராந்தையாக இருக்கலாம், ஊரின் பெயரோடொட்டி ஆர் என்ற சிறப்புவிகுதி சேர்த்து பிசிராந்தையார் என அவர் பெயர் வழங்கியிருக்கலாம் என்று நவில்வாருமுளர். எப்படி நோக்கினும் அவர் இயற்பெயர் இதுவாக இருக்காது என்பது ஆராய்வின் முடிவுத்திறனாக இருக்கலாம். எது எப்படியாயிருந்தாலும் பிசிராந்தையார் தனிப்பெருந் தண்டமிழ்ப் புலவர் என்பது வெள்ளிடைமலை.



பிசிராந்தையாரைச் சந்தித்த ஒருவர் "தாங்கள் இவ்வளவு வயதுகள் நிரம்பப் பெற்றும் நரை, திரையின்றி பல ஆண்டுகள் இருக்கின்றீர்களே, இதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டாராம். அதற்கு அவர் தரும் விடையைப் பாருங்கள்:

"என் மனைவி மிகவும் மாண்புடையவள்; யான் பெற்ற மக்களோ அறிவு நிரம்பப் பெற்றவர்கள்; என் கீழ் இருப்பவர்களும் யான் என்ன நினைக்கிறேனே அதனைக் குறிப்பறிந்து வினைசெய்யும் திறன்கொண்டவர்கள், அரசனும் அறமல்லாச் செயல்களைச் செய்யாது விடுத்து மக்களைக் காக்கும் இயல்பினன். இவற்றிற்கெல்லாம் தலையாயது, கல்வி கேள்விகளிலே சிறந்து அதற்குத்தக்க ஆன்றவிந்தடங்கிய குறிக்கோள் உடையவராகிய பெரியோர்கள் பலர் யான் வாழ்கின்ற ஊரிலே வாழ்கின்ருர்கள். அதனுல்தான் நரைதிரையில்லாது வாழ்கிறேன்" என்ருர்.

பிசிராந்தையார் வாழ்ந்த சூழ்நிலையை உன்னுங்கால் நமக்கெல்லாம் இத்தகையதொரு வாய்ப்பு என்று நிகழும், எப்பொழுது நாமும் வறுமையின்பாற்பட்ட வாழ்வு நீத்து நரைதிரையின்றி நீண்டகாலம் வாழ்வோம் என்று எண்ணத் தோன்றுவதில் தவறொன்று மில்லையே! இத்தகைய சூழ்நிலையை அமைத்துக் கொள்பவர்கள் யார்? வேறு யாராக இருக்க முடியும்? நாம்தான்! இதை அடிப்படையாக வைத்துக் கூறிய முப்பால் மொழிந்தோன்,

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

என்று கூறுகின்றமை ஒப்பு நோக்கத்தக்கது.

இத்தகைய குணக்குன்று—கன்னித் தமிழுணர்ந்த பிசிராந்தையார் வாழ்ந்து வருகின்ற காலையிலே......

* * *

சோழநாட்டுள்ளே கோப்பெருஞ் சோழன் என்பவன் பிசுராந்தையாருக்குச் சமகாலப் புரவலனுக இருந்து வந்தான். கோப்பெருஞ் சோழன் கவிபாடும் திறமை பெற்றவன். தமிழிலே புலமை மிக்கோர்களைப் போற்றிப் புகழ்ந்து பொன்னும் மணியும் பரிசிலென அளிக்கும் தமிழார்வம் கொண்டவன். ஆர்வம் மட்டுமல்ல, ஆராய்ந்துணரும் ஆற்றலும் பெற்றவன்தான் கோப்பெருஞ் சோழன்.

...சில செல்வர்கள் தன்னையொத்த செல்வந்தனேடுதான் நட்புக் கொள்வார்கள். ஏழைகளை ஏனென்றுகூட எட்டிப் பார்க்க மாட்டார்கள். ஆனல் கல்வியும் செல்வமும், குணமும் நலமும் வாய்க்கப்பெற்ற சோழன் செல்வத்திலே தனக்கு நிகரான ஒருவரையா நட்பினனுகக் கொண்டான்? அல்லவே அல்ல! பின்யாரை? ஒரு தண்டமிழ்ப்புலவரையல்லவோ நண்பராகக் கொண்டான்! அப்புலவர்தான் பிசிராந்தையார்.

இவர்களுடே ஏற்பட்ட நட்பு எத்தகையது? அதுதான் விந்தையிலும் விந்தை. புலவர் வாழ்ந்தது பாண்டியநாடு, புரவலன்

வாழ்ந்தது சோழநாடு. இவர்களுக்குள்ளே நட்பு வளர்ந்த விதமே வேறு. ஒருவர் ஒருவரைப்பற்றிக் கேள்விப்பட்டதேயன்றி நேர் முகக் காட்சி கிடையாது. அஞ்சல் தொடர்பேனும் உண்டோ எனின் அதுவும் கிடையாது என்றே சொல்லத் தோன்றுகிறது. இவர்களுடைய நட்பு உணர்ச்சிவயப்பட்டு, அதிலே தோன்றியது தான். கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையாரையும், பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனையும் நேசித்தது தொடர்பாலும், நீண்ட நாட் பழக்கத்தாலும் அல்ல. இவர்களிருவர்களுடைய உணர்வு ஒத்திருந்த காரணத்திலேதான் என்பது தெரிய வருகின்றது. இதைத்தான் வள்ளுவர் "......உணர்ச்சிதான் நட்பாங்கிழமை தரும்" என்று கூறியிருக்கிறார்.

இவர்கள் கொண்ட நட்பு பேதையர் நட்பல்ல. ஆனால் நிறையறிவு பெற்ற சான்றோர்களின் நட்பு. அதாவது வளர்பிறை மதி போன்றது. இந்நட்பு வளர்ந்து உச்சநிலையிலே சென்றது என்பதை நாம் கூறத் தேவையில்லை.

* * *

ஒருநாள் கோப்பெருஞ்சோழன் தன்னுடன் சினந்துகொண்டு போரிடத் தொடங்கிய தன் புதல்வர்களையே போரில் எதிர்க்கத் தொடங்கியவன், தமிழுணர்ந்த பெரும்புலவர் ஒருவரின் அறிவுரை கேட்டு இகலை விடுத்து வாழ்க்கையில் வெறுப்புற்றவனாய் நாடு துறந்து, உண்ணோநோன்பென்னும் வடக்கிருத்தலைக் கைக்கொண்டு உயிர்விடத் துணிந்த ஞான்று அவனுடைய உள்ளம் பாண்டிநாட்டிலேயுள்ள பிசிராந்தையாரை எண்ணிற்று. இந்த இடத்திலேதான் உணர்வுள்ள நட்பு ஆத்மீக சக்தி வாய்ந்தது என்று அளவிடத் துணிகிறது.

அன்பிற்கும் நட்புணர்ச்சிக்கும் ஆட்பட்ட நண்பர் பிசிராந்தையார் வருவார் வருவார் என்று எதிர் நோக்கினான் சோழன்.

"பாண்டியநாட்டிலே என்னையே அல்லும் பகலும் நினைந்து என் பெருமையைக் கூறிக்கொண்டிருப்பவரான பிசிராந்தையார் உயிரொன்றிய நண்பர். அவர் நான் செல்வம் பெற்று வாழ்ந்த போது என்னிடம் வாராது நிற்பினும், என்னுடம்பிற்கு ஊறு நேரப் போகின்றதொரு நிலையில் அவர் இங்கு வராது நில்லார். அவர் வருவது திண்ணம்" என்றார் அண்மையில் இருந்த பெரியோர்களிடம்.

எல்லோரும் திகைத்தனர்!

"ஏன் திகைக்கிறீர்கள்? முன்பின் பார்த்தறியாத ஒருவர் பாண்டியநாட்டிலுள்ளாராம். அவர் இப்போது என்னை நாடி வருவார் என்று தீர்க்கமாகக் கூறுகின்றேனே என்றா? இது நடக்குமா? உள்ளல் கலந்து பழகிய நட்புதானே என்றெல்லாம் நினைத்து ஐயப்படுகின்றீர்களா? ஐயப்படவேண்டாம்" மேலும் கூறலுற்றான் சோழன்.

"செறிந்த அறிவுடையச் செம்மல்களே! உள்ளத்தோடொன்றுபட்ட நண்பினனாகிய பிசிராந்தையார் என்றும் என்னை இகழ்ந்



துரைக்கா இனிய குணமுடைய குணக்குன்று. எனக்கேற்ற உளம் வயப்பட்ட நண்பர். புகழ்கெட வரும் பொய்மையை வேண்டாத மெய்யன்பு கொண்டவர். அவர் தனது பெயரை எப்பொழுதும், யார் கேட்பினும் என்பெயர் கோப்பெருஞ் சோழன் என்று கூறுமளவிற்கு என்மேல் அத்தனையன்பு வைத்துப் பழகும் அறிய குண நலம் உடையவர். இத்தகைய அன்புகொண்ட நல்லவர் நான் துயருருங்கால் அங்கே நிற்கமாட்டார், ஓடோடி வருவார். இப்பொழுதே வருவார்! இத்திறத்த பண்பெல்லாம் கொண்ட என் ஆருயிர் நண்பருக்கும் என்பக்கலிலேயே இடம் அமைத்துத் தாருங்கள்" என்றான் சோழன்.

இத்துணைத் திறமும் தீர்க்கமுமாய்க் கூறுகின்ற புரவலனுக்கு ஆத்மீக சக்தியின் தத்துவத்தின் முடிவுநிலை தெற்றெனத் தெளிந்திருக்கவேண்டும். அல்லால் அவன் இப்படிக் கூறியிருக்க முடியுமா? இவனுக்கு மட்டும் இச்சக்தி வாய்க்கப் பெற்றிருந்தது என்று சொல்வதற்கில்லை. அக்காலை வாழ்ந்த பெரும்பாலோருக்கும் இருந்தது என்றே துணிய முடிகிறது.

கோப்பெருஞ் சோழனின் உணர்ச்சி வெள்ளத்தின் அலையிலேயே மோதுண்ட அவன் சொற்கள் பிசிராந்தையாரின் உள்ளுணர்ச்சியை எப்படித்தான் தீண்டியதோ!

நண்பனுக்கு ஊறு நேர்ந்துவிட்டது. இனி நாம் இங்கு என்ன செய்யப் போகின்றோம் என்று புறப்பட்டு ஓடோடி வந்தார் புலவர்.

சோழனின் அருகிருக்கும் அன்பர்களின் ஐயப்பாட்டை களையும் பொருட்டு—உள்ளத்தால் ஒன்றுபட்ட நட்பின் திறனை உணரும் பொருட்டும் வருவதுபோல் இருந்தது பிசிராந்தையாரின் விரைவான வருகை.

புலவர் வந்தார். புரவலனுக்கு ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்தோட எழுந்தோடி "வாருங்கள் வாருங்கள்" என்று ஆரத்தழுவி அன்பின் அணைப்பென்னும் கட்டிலே ஒன்றுபட்டவர்களாக இருந்த காட்சி, நட்பில் உணர்வுகொண்ட அத்துணைபேருக்கும் மயிர்க்கூச்செடுக்காமலில்லை.

* * *

"புலவர் அவர்களே தங்களை நான் இந்தக் கோலத்திலே இருக்கும்போதாவது பார்க்க நேரிட்டதே அது என் பாக்கியம்" என்றான் சோழன்.

"தங்களுக்கு ஏன் இந்த வொரு முடிவு வந்தது?" என்றார் புலவர்.

"நான் வாழ்க்கையில் வெறுப்புற்ற புரவலன், அல்ல இரவலன்" தற்போது நாடு துறந்து நல்லதொரு முடிவு நிலையுற்றவன் நண்பா. என்றான் முகத்திலே துயரைத் தேக்கியவாறு.

"ஊறு நேர்ந்தவிடத்து உதவி புரிவதே உற்ற நண்பனின் கடமை. ஒன்றுபட்ட உள்ளங்கள் இரண்டில் ஒன்று பிரிகிறதென்

ருல் மற்றென்றிற்கு என்ன வேலையுள்ளது இந்த மாயை யுலகத்தில்? இதோ நானும் வருகிறேன் நண்பா-அரசியல் கண்ணோட்டத்திலே அரிதற்கரிதாய்க் கிடைத்த மன்னவனுக்கே இக்கதி என்றால்-நாட்டைக் காத்துப் புறக்கும் நல்லிறைக்கே இத்தகைய முடிவு வந்திருக்கிறதென்றால்-"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே மன்னனை யுடைத்து மலர்தலை உலகம்" என்று செப்புமளவிற்கு மன்னனின் மாட்சி இந்த உலகத்தில் இருக்குதென்றால் அத்தகைய நல்லோனுக்கு ஏற்பட்ட முடிவே இப்படி என்றால் நான் மட்டும் இவ்வுலகத்தில் வாழ்ந்து யாது பயன் காணப்போகிறேன். உங்களுக்குற்ற முடிவே என் முடிவும் என்று கூறுரைத்து சோழனின் பக்கலில் அமர்ந்து வடக்கிருந்தார்.

கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையர்பால் கொண்டிருந்த அன்பையும், அவர் தனக்கு ஊறு நேரப்போகிறது என்று கேட்ட மாத்திரையானே தன்னைத் தேடி ஓடோடி வருவார். அவருக்கும் பக்கத்திலே இடம் ஒழித்துத் தருக என்று திறனோடு கூறிய மொழி புணர்ச்சியை-அன்பு வெள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுதல் போன்று கவிதைச் சுவையிலே வடித்துத் தரும் சத்துள்ள தமிழ்ப் பிழிவைக் கொஞ்சம் சுவைத்துப் பாருங்களேன்.

"கேட்டல் மாத்திரை அல்லது யாவதும்
காண்டல் இல்லாது யாண்டுபல கழிய
வழுவின்றி பழகிய கிழமையர் ஆகினும்
அரிதே தோன்றல் அதற்பட ஒழுகலென்று
ஐயம் கொள்ளன்மின் அரறி வாளீர்
இகழ்விலன் இனியன் யாத்த நண்பினன்
புகழ்கெட வரூஉம் பொய் வேண்டலனே
தன்பெயர் கிளக்கும் காலை என்பெயர்
பேதைச் சோழன் என்னும் சிறந்த
காதற் கிழமையும் உடையன் அதன்றலை
இன்னதோர் காலை நில்லலன்
இன்னே வருகுவன் ஒழிக்க அவற்கு இடமே. (புற 216)

திணை: பாடாண்திணை
துறை: மொழித்துறை
பாடியவர்: கோப்பெருஞ் சோழன்

"உளமொன்றிப் பழகும்
களங்கமில் நட்பே
நிலைபெற் றிருக்கும்
நீள்புக ழெய்துமே"

அன்பால் அறிவால் அடைந்திடு நட்பை!

---



# உயிர்தவச் சிறிது, ★ ★ காமமோ பெரிது!

**அலைச்செல்வன்**

★

"தோழி! இன்று அவரிடம் நீ கட்டாயம் சொல்லிவிட வேண்டும்."

"எதைச் சொல்லவேண்டும்! நீயும் தலைவனும் குறிஞ்சிமலைச் சாரலில் கொஞ்சி விளையாடியதை நினைவுபடுத்த வேண்டுமா? கண்ணாடி நீரூற்று அருகே களிப்போடு நீங்கள் ஆடிமகிழ்ந்த நாளை நினைவுபடுத்த வேண்டுமா?"

"உனக்கு எப்பொழுதும் விளையாட்டுத்தான்! பழையதை நினைவுபடுத்தி என் உயிரை வாட்டுவது போதாதா."

"பின் எதை நினைவுபடுத்தச் சொல்லுகிறாய்?"

"எனக்கு அவரிடம் இதைச் சொல்ல முடியவில்லை! உன்னிடம் சொல்லாமலிருந்தால் பயனில்லை. எனக்கும் அவருக்கும் இடையே உள்ள தொடர்பு குடத்திலிட்ட விளக்கு என எண்ணியிருந்தேன். ஆனால் அது குன்றின்மேலிட்ட விளக்காகிவிட்டது. ஊரெல்லாம் பழி மொழிகின்றனர். ஒரு புறத்திலே காதல் தீ! மறுபுறத்திலே பழித் தீ! இரண்டிற்கும் இடையில் நான் எவ்வளவு நாட்கள் தவிப்பது? அவர் இதையெல்லாம் அறியாதவர் போலவே நடந்து கொள்கிறார். ஆகவே அவர் மீது......!"

"உனக்கு ஐயமாக்கும்! இங்கே பார்! தலைவி! காதல் இளமைப் பசி; வாழ்க்கைப் பசி. பசி என்றால் நாம் எதையும் புசித்து விடுவதில்லை. உடல் நலத்திற்கு ஏற்றதைத்தான் உண்ண வேண்டும். அது போலத்தான் வாழ்வு வளமடைய வேண்டுமானால், இன்பம் சிறக்க வேண்டுமானால் ஏற்ற முறையில்; ஏற்ற காதலனை தேர்ந்தெடுத்தபின்பு, அவன் மீது ஐயம் கொள்வது வாழ்வையே பொசுக்கிவிடும்."

"அது இல்லை தோழி, நான் நாளெல்லாம் வேகாமல் வெந்து சாகின்றேன். நான் எத்தனை நாளைக்குத் துடித்துத் துடித்துத் துவழ்வது. இந்த நிலை மாறுவதற்கு...!"

"இந்த நிலை மாறுவதற்கு உடனடியாகத் திருமணம் முடிய ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வளவு தானே"

இன்பம் கொஞ்சும் எழில்மின்னும் சோலை; குயில் கூவி மயிலாடும் சோலை; தென்றலும் மன்றலும் கைகோர்த்துக் களியாட்டம் ஆடும் சோலை. அந்தச் சோலை வழியாகத் தலைவன் வருகின்றான். தன் கண்ணின் கருமணியாகத் திகழும் காதலியை எண்ணிக்

கொண்டே வருகின்றான். இணையாகச் சென்ற மாடப்புறா அவன் இதயத்தில் இன்ப உணர்வை ஊட்டியது. அவன் காதல் உலகத்தில் கற்பனைச் சிறகு கொண்டு பறந்து கொண்டிருந்தான். கீ! கீ!... எனச் சத்தமிட்டுக் கொண்டு இரண்டு கிளிகள் மகிழ்வோடு வான வெளியில் நீந்திச் சென்றன. அந்தக் கிளிகளின் நிலையிலேதான் அவன் இருந்தான். ஆனால் அவ்ன் அருகிலே அவள் இல்லை! அன்புக் காதலி இல்லை.

பாதையிலே ஒரு முல்லைக் கொடி அருகிலிருந்த கொழு கொம்பில் சுற்றியிருந்தது. தென்றலின் தாலாட்டில் அது மெய்மறந்து ஆடிக்கொண்டிருந்தது. அவன் அருகில் சென்றான். முல்லை நகைத்தது! அந்த நகைப்புக்கு என்ன பொருள்? அவன் சிந்தனை குழம்பியது. அடுத்து ஒரு மாமரம். பழுத்த கனிகள் பல பச்சை இலைகளைக் கடந்து தன் தலையை, அந்தப்புறத்து ராணி திரையை விலக்கிக் கொண்டு பார்ப்பதுபோலப் பார்த்துக் கொண்டிருந்தன. அந்தப் பழங்களில்தான் எத்தனை குழுமை! எத்தனை கவர்ச்சி! ஒரு பழத்தைப் பறித்தான்; உணர்ந்து பார்த்தான்; நுகர்ந்து பார்த்தான். அவனுக்குப் போதை ஏறியது. தன் காதலியை எண்ணினான். தன் காதலியின் கன்னக் கதுப்பில் கனியும் பேரெழிலை எண்ணினான்! மாமரத்தின் பக்கத்தில் வேர்ப்பலா பழுத்திருந்தது. அதைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்த ஈக்கள் பழம் பழுத்து பலன் படத்தக்க பக்குவம் அடைந்துவிட்டது என்பதைத் தெரிவித்தன. அவனுக்கு அவன் காதலியின் நினைவே மறுபடியும் வந்தது. அவள் கனிந்த கனியாகக் காட்சியளித்தாள். அவளை எண்ணிக் கொண்டே வேகமாக நடந்தான்.

பண்புருவான அவனும், அன்புருவான அவளும் கருத்தொருமித்தார்கள்; காதல் கொண்டார்கள். அவனையும் அவளையும் பிணைத்தது அன்பு மட்டும்தான்; திருமணம் அல்ல! அவனையும், அவளையும் இணைத்தது காதல் பண்பு மட்டும்தான்; கடிமணம் அல்ல. குறிஞ்சி மலைச் சாரலில் கூடுவதும், கொஞ்சி நெஞ்சம் மகிழ்வதுமாகக் காலம் கடத்திவந்தார்கள். அவர்கள் திருமணத்தைப்பற்றி எண்ணவே இல்லை. அன்பாலும் பண்பாலும் பிணைக்கப்பட்டிருப்பவர்களுக்குத் திருமணம் எதற்கு என்று நினைத்தார்களோ என்னவோ! ஆனால் அவர்களைச் சமுதாயம் திருமணத்தைப்பற்றி நினைக்கச் செய்தது. ஏனெனில், 'பொய்யும் வழுவும்' சமுதாயத்தில் தலைகாட்டிய காலம் அவர்கள் வாழ்ந்த காலம். அவர்களுக்குத் திருமணம் இன்றியமையாததாக இருந்தது.

காதலியைக் காணுதற்குமுன்பு, காதலியின் தோழியைக் காண்கின்றான்.

"தலைவ! நீயும் எம் தலைவியும், அன்பாலும் பண்பாலும் 'செம்புலப் பயல் நீர்'போல இரண்டறக் கலந்து விட்டீர்கள். ஆனால் இந்த இன்பம் என்றும் நீடுநிற்க வழிகாண வேண்டாமா?"

"ஏன், எங்கள் இன்பத்திற்கு என்ன ஆபத்து வந்துவிட்டது?"



"தலைவ! நீ கடந்துவந்த சோலையில் கனியுடைய வேர் பலாவைப் பார்த்தாயா?"

"ஆம், பார்த்தேன்! அதற்கென்ன?"

"பழம் பழுத்துவிட்டால், தோட்டக்காரன் என்ன செய்ய வேண்டும்?"

"பழுத்த பழத்தைப் பக்குவமாகப் பறித்துப் பயன்படுத்த வேண்டும்."

"நீ கடந்துவந்த வழியில் வேர்ப் பலாவைத்தான் பார்த்திருப்பாய்! சிறு கொம்பிலே தூங்கும் பெரிய பலாப் பழத்தைப் பார்த்திருக்கமாட்டாய். சிறு கொம்பிலே தூங்கும் பெரிய பழத்தை உரிய காலத்தில் பயன் துயக்காவிட்டால் என்ன ஆகும்?"

"கொம்பு தாங்காது; பழுத்த பழம் கொம்பை முறித்துக் கொண்டு கீழே விழும்! அல்லது வேறு யாராவது பறித்துக் கொண்டு போய் விடுவர். ஆமாம்! இதை எதற்குப்பேசிக் காலத்தை வீணாக்குகின்றாய்?"

"தலைவ! உன் காதலியைப் பற்றிக் கூறத்தான் இத்தனையும் கூறினேன். அவள் வேரிலே பழுத்த பலா அல்ல! கொம்பிலே பழுத்த பலா! தொங்குகின்ற பழத்தைத் தாங்குகின்ற கொம்போ வலிவற்றது; சிறியது, பொங்குகின்ற காதலை போற்றுகின்ற உயிரோ மிகச் சிறிது. அவள் காதல் பெரிது; உயிர் சிறிது. அவள் காதலைத் தாங்க முடியாது தவிக்கின்றாள்; ஊரார் வசைச் சொல்லால் வதைக்கின்றார்கள். நீ அவளைத் திருமணம் புரியாது இப்படியே காலம் கடத்தினால் வேறுயாராவது உன் காதலியைக் கடிமணம் செய்தலும் கூடும். ஆகவே அதை உணர்ந்து செயல் ஆற்றவேண்டும்."

தலைவனுக்குச் சோலையிலே கண்ட பலாவின் காட்சி மறுபடியும் நினைவுக்கு வந்தது. கனியைச்சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்த ஈக்கள் கண்ணெதிரே தெரிந்தன! விரைவாக வீடு திரும்பினான். காதலும், கடிமணமும் மலரும், மன்றலும்போல ஒன்றியிருக்க வேண்டியவை என்பதை உணர்ந்தான். தோழி உணர்வித்தாள். விரைவில் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்ற உறுதியுடன் திரும்பினான். சங்ககாலத் தலைவனுக்கு மட்டுமா காதலுக்கும் மணத்திற்கும் உள்ள பிணைப்பை எடுத்துக்காட்டுகின்றாள் தோழி? இல்லை! இன்றைய இளங் காதலர்களுக்கும் கூறுகிறாள், கேளுங்கள்!

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
யார தறிந்திசி னோரே சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங்கிவள்
உயிர் தவச்சிறிது காமமோ பெரிதே.

—குறு-18.

# போகும் பாதை புதுப் பாதை

எஸ். சகுந்தலா

### கமலம்

நிலவை மேகம் மூடிக்கொண்டால் இருள் சூழ்வதில் வியப்பென்ன? நிலவை அறிமுகப்படுத்தவே உங்களுக்கு என் மன உணர்வை இங்கே வெளிப்படுத்துகிறேன்.

அழகிற்சிறந்த தமிழ்நாட்டில், புகழோங்கிய பாண்டியன் பரம்பரை முடிசூடி ஆட்சி பீடத்தில் அமர்ந்து அரசோச்சிய, அன்னை மீனாட்சியம்மை குடிகொண்டுள்ள மதுரையில் நான் பிறந்தேன். என்பதைத் தவிர என்பிறப்பு வேறு எந்த விதத்திலும் உயர்ந்ததாக இருக்கவில்லை. சாதாரண குடும்பத்தில் பிறந்தேன். குடும்பம் சாதாரணமானதாக இருந்தாலும் காக்கைக்குத் தன்குஞ்சு பொன்குஞ்சு என்பதுபோல் எனது பெற்றோர்களுக்கு நான், மிக அருமையாக இருந்தேன். அவர்கள் என்னை தங்கள் இரு கண்களைப் போன்று கருதி வளர்த்தார்கள். ஒரே பெண்ணான என்னை அவர்கள் மிக மிக அன்பாக நேசித்தார்கள். நான் பிறந்ததின் நன்னிமித்தமாக எனது தந்தையின் வேலையிலும் உயர்வு ஏற்பட்டது, கேட்க வேண்டுமா? எனது நிலை எவ்வளவு உயர்ந்ததாக இருக்கும் என்று பெண்ணின் அதிர்ஷ்டத்தால் தந்தையின் நிலை உயர்ந்ததென்றால் அந்தப் பெண்ணைக் கொண்டாடாதார் யாரேனும் இருக்க முடியுமா? என்றார். எனது செல்வாக்கு அதிகரித்தது. சென்னைக்கு என் தந்தையை மாற்றிவிட்டார்கள். சென்னையின் கலங்கரை விளக்கு என்னைக் கண்சிமிட்டி வா; வா என்றழைத்தது. கடற்கரை வெண்மணல் என் இதயத்தில் இன்பத்தை ஊட்டியது. சின்னஞ்சிறுமியான நான் என் பெற்றோருடன் நேரத்தை இனிதாகக் கழித்தேன். நார்த்வீக் என்னும் கிறிஸ்தவப் பள்ளியில் எனது படிப்பைத் துவக்கினேன். படிப்பில் அதிக ஆர்வம் இருந்தமையால் நான் சிறந்த முறையில் படித்துத் தேறினேன். எனது ஆறும்படிவப் படிப்பை முடித்தவுடன் அரசினர் மகளிர் கல்லூரியில் சேர்ந்து படிக்க ஆரம்பித்தேன். கல்லூரி நாட்கள் இன்பகரமாகச் சென்றன. பள்ளிப்படிப்பை முடித்து கலாசாலையில் கால் வைத்தவுடன் தேவலோகத்தில் மிதப்பதுபோல் இருந்தது. விதவிதமான ஆடை அலங்காரங்களுடன் பெண்கள் அழகிய வதனத்துடன் வருவதே ஒரு அழகாக இருக்கும். அன்று வழக்கம்போல் மாலை வீடு திரும்புகையில் எனக்காக ஒரு அதிசயம் காத்திருந்தது. எனது பால்ய நண்பரான ரவீந்திரர் வந்திருந்தார். என்னைப் பார்த்ததும் அவர் பிரமித்து விட்டார், கமலாவா! இது என்று ஆச்சர்யத்தால் கூவி விட்டார். நானும் அடித்து வைத்த கற்சிலையாக மாறினேன். நான் அன்று ஆடி ஓடி துள்ளி விளையாடிய ரவீந்தரனைக் காணவில்லை. அழகிய வதனத்துடன் கலாசாலை மாணவரான ரவீந்திரனைக் கண்டேன்.



### ரவீந்திரன்

மூன்றும் பிறையைப் பார்ப்பது நம்மில் ஏதோ மனநிறைவை உண்டாக்குகிறதல்லவா? நான் சிலருக்கு மூன்றும் பிறை.

ஜில்லா கல்வி அதிகாரியின் மகனாகப் பிறந்தேன். எனக்கு ஒரே ஒரு தம்பிதான் உண்டு. சிறந்த தேசபக்தரான எனது தந்தை எங்களை நல்ல நிலைக்குக் கொண்டுவருவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தார். கன்னித் தமிழைக்கற்று கருத்தாழ மிக்க கவிதைகளை இயற்ற வேண்டுமென்ற ஆவல் முளையிலேயே பிறந்தது. பாரதியாரின் "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே" என்ற பாட்டை பாடக் கேட்டுக்கேட்டு எனது ஆவல் பன்மடங்கு அதிகப்பட்டது. பழமையில் பிரியராகிய எனது தந்தை தமிழ்ப்படிப்பை மூன்றும் படலத்துடன் மூட்டை கட்டச் செய்துவிட்டார். பண்டைய நாகரீகத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக சமஸ்கிருதத்தை படிக்கத் தூண்டினார். தந்தை சொல்லை தட்டத்தான் முடியுமா? அந்த இளம் வயதில் தமிழ்தான் நல்லது அதைத்தான் கற்க வேண்டுமென்று கூறக்கூடிய அறிவுதான் இருந்ததா? புதிய எழுதுக்களைக் கற்கப் போகிறோம் என்ற ஆனந்தத்தில் சமஸ்கிருதத்தை கற்க ஆரம்பித்தேன். தற்காலிகமான அச் சந்தோஷம் சில நாட்களுக்குள் என்னை விட்டு நீங்கிவிட்டது, தாயை அலட்சியப் படுத்துவதாக நினைத்தேன். தமிழுக்கே அநீதி இழைப்பதாக எனது உள்உணர்வு கூறியது. "மறத் தமிழனா நீ? நீ உன் தாய் திருநாட்டிற்குச் செய்யும் நற்காரியமா? உன் தாய் உன்னைச் சீராட்டி, பாலூட்டி வளர்க்கவில்லையா? அவளை மதிக்காமல் பிறர் பொருளை விரும்பி ஏற்கிறாயே" என்று என் மனசாட்சி என்னை சித்திரவதை செய்தது. வீட்டில் தமிழ்ப் புத்தகங்களை படித்து வந்தேன்.

பள்ளிப்படிப்பை முடித்து கல்லூரியில் காலை வைத்தவுடன் சமஸ்கிருதத்தின்மேல் மிகுந்த வெறுப்பேற்பட்டது. தமிழை கற்க பெருமுயற்சி எடுக்க ஆரம்பித்தேன். சிறந்த கவிகளின் கவிதைகள் எனது மனதை தன்பால் இழுத்தன. தமிழ்நாட்டின் தவப்புதல்வராம் பாரதியாரின் கவிதைகள் என்னைத் தூண்டில் போட்டு இழுத்தன. இன்றைய கவியாம் பாரதிதாஸன் என்னைத் தன் அன்புக்கவிதைகளால் கட்டி அணைத்தார். அவர்கள் அடிச்சுவட்டைப் பற்றி நாமும் ஏன் கவிதை எழுதக்கூடாது என்ற கேள்வி என்னை வாட்டி வதைத்துக்கொண்டே இருந்தது. பாரதியாரைத் தலைவராகக் கொண்டேன். பாரதிதாசனை ஆசானாகக் கண்டேன். கவிதை எழுதத் தொடங்கினேன். மூன்றும் படிவம் வரையில் படித்தத் தமிழைக்கொண்டு கவிதை எழுதினேன். தந்தை பைத்தியக்காரன் பட்டம் கட்டினார். பாடத்தை ஒழுங்காகப் படிப்பதை விட்டு கதை கவிதை என்று காலத்தை வீணாக்காதே என்று உபதேசம் செய்தார். அண்ணன் என்னவோ இருக்குகிறான் என்று தம்பி காகிதங்களை பட்டம் விட்டான். படித்தறியாத தாய்க்கு தனயன் கதை எழுதினால் என்ன! காவியம் பாடினால் என்ன!! படுத்துத் தூங்கினாலும் ஒன்றுதான். இருந்தும் நாடு என்னை—இல்லை—

எனது படைப்புக்களை ஓரளவு ஏற்கத்தான் செய்தது. எனக்கு ஆதரவு சிறிது சிறிதாக பெருகி வந்தது. "செந்தமிழ் நாட்டில் உதித்த செம்மலே உனது தாய் மொழியாம் தமிழை மறக்காதே; அதன் வளர்ச்சிக்கு அரும்பாடு படு" என்று ஆர்வ மூட்டியது. தொடர்ந்து கவிதைகளை இயற்றினேன். எனக்கே அவை அழகுடன் கூடிய பூச்செண்டாக மலரவில்லை எனப்பட்டது. ஒரு பூக்குச் செய்யும் தவறாகக் கருதினேன். தக்க ஆசானைத் தேடினேன். பண்பிலே, அன்பிலே உயர்ந்த பரந்தாமனார் தமிழில் நேர்வழி காட்டினார். தாம் அறிந்தவற்றை யாதொரு குறைபாடுமின்றி கற்பித்தார். தூயதமிழை சிறந்த முறையில் கற்றபின் கவிதைகளை எழுத ஆரம்பித்தேன், கவிதைகள் பூரண பொலிவுடன் விளங்கின. சென்றகால கவிகள், கவிதைகள் இலக்கண வரம்பிற் குட்பட்டதாக இருக்கவேண்டுமென்றார்கள். தற்கால கவிகள் காதுக்கினிமையாக இருந்தால் போதுமென்கிறார்கள். நான் இரண்டையும் விரும்பினேன். அதேபோல் எழுதவும் செய்தேன். பத்திரிகை உலகு எனக்கு நல்வரவு கூறி வாழ்த்தி வரவேற்றது.

இச் சமயத்தில் குடும்பத்துடன் சென்னைக்குச் செல்ல நேர்ந்தது. சென்னையில் எனக்கு ஒரு சோதரி இருக்கிறாள் என்ற ஆனந்தத்துடன் சென்றேன். சிறிய வயதில் பார்த்த கமலத்தை பார்த்தவுடன் என் கண்ணையே என்னால் நம்ப முடியவில்லை. "நம் கமலம் எங்கே?" என்று கேட்டேன். அப்பா குறும்பாக "உன் முன்னால் நிற்பது யார் தெரியுமா?" என்றார். அன்பு உருவான கமலா ஒய்யாரமாக நின்று கொண்டிருந்தாள், என் சோதரி கமலாவா இது என்று என்னையே நான் பன்முறை கேட்டுக்கொண்டேன். "ஏன் அங்கேயே நிற்கிறீர்கள்?" என்ற தேனினும் இனியநாதம் என் செவியில் விழுந்தவுடன் தான் என்நிலையை அடைந்தேன். என் தம்பி வேங்கடன் ஓடிவந்து கமலாவின் கைகளைப் பிடித்துக்கொண்டான். சின்னஞ்சிறு வயதில் பொம்மை விளையாட்டு விளையாடி இருவரும் அடிபட்டு அப்பாவிடம் சென்று அடி வாங்கியது முதல் இன்று வரை நடந்த யாவற்றையும் இருவரும் பேசித் தீர்த்தோம்,

சென்னையின் ஒவ்வொரிடத்திற்கும் சென்று இன்பமாகக் களித்தோம். சிற்பத்தின் தலைசிறந்த இடமான மகாபலிபுரத்திற்குச் சென்றோம். ஒவ்வொரு சிற்பமும ஒவ்வொரு காவியம் பாடியது. சென்றகால சரித்திர ஏடுகளைத் திருப்பிப் பார்க்கச் செய்தது. நரசிம்ம பல்லவனையும் சிவகாமியையும் என் கண்ணெதிரே நிறுத்தியது. அதன் விளைவாக எழுந்த கவிதைகளை கமலத்திற்குப் படித்துக் காண்பித்து இன்புற்றேன். எங்கள் உறவு இந்தவிதமாகச் செல்லுகையில் எங்களது பெற்றோர்கள் எங்கள் இருவரையும் சுட்டிக்காட்டி பேசி சிரிக்க ஆரம்பித்தார்சள்.

**சங்கரலிங்கம்**

வளர்பிறைப்பகுதி நிலவின் முழுத் தன்மையைக் காட்டுவதன் அஸ்திவாரமல்லவா? எனக்கு முழுநிலவு முதலில் தெரியவில்லை.



என்னை உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. நான்தான் ரவீந்தரனின் தந்தை. கமலாவின் தந்தையான ராஜனும் நானும் தூரத்து உறவினர்கள். இருவரும் இளமையிலேயே நண்பர்கள், படிப்பை ஒன்றாகத் துவங்கினோம். ஆனால்! ராஜன் முடிக்கவில்லை. நான் முடித்தேன். வேலைதேடும் படலம் முடிந்து வேலையில் அமர்ந்தபின் இருவரும் அடிக்கடி சந்திப்போம். இருவரும் காந்தீயத்தில் அதிகப் பற்றுடையவர்களாக இருந்ததால் எங்கள் நட்பு நீடித்திருந்தது. காந்தி தொடங்கிய சத்தியாகிரகத்தில் இருவரும் பங்கு கொண்டோம். அதன் பயனாக அரசினரின் விருந்தாளிகளாக இருவரும் ஒரே இடத்தில் இருக்க நேர்ந்தது.

மணமுடித்து சொற்ப ஆண்டுகளே ஆகி இருந்தன. எனக்கு ரவீந்திரனும் அவருக்கு கமலாவும்தான் குழந்தைகள். நாட்டின் அவலநிலை எங்களை வாட்டி வதைத்தது. எங்கள் அருமை குழந்தைகளின் வதனங்கள் எங்கள் முன்தோன்றி வேதனையை அதிகப்படுத்தின. "அப்பா! எங்கப்பா சென்றீர்கள்?' என்று கேட்பது போல் காதில் ஒலித்தது. குழந்தைகளைப்பற்றி பேச ஆரம்பித்தால் நேரம் போவதே தெரியாமல் பேசுவோம். அது எங்களுக்கு ஒரு பெரிய ஆறுதலாக இருந்தது. எங்கள் இருள் மனதிலும் ஒரே ஒரு ஆவல்தான் மிஞ்சி நின்றது. எங்கள் குழந்தைகளை மணக்கோலத்தில் கண்டு எங்களது நட்பை மேலும் பலப்படுத்துவதொன்றே எங்களது குறிக்கோளாக இருந்தது. ஒருவருக்கொருவர் வாக்குக் கொடுத்துக் கொண்டோம். அந்த நாட்கள் வளர்த்த ஆசை ஆண்டுகள் பலவாகியும் வாடவில்லை. நாளுக்குநாள் வளர்ந்தது. இந்நிலையில்,

எனது மகன் கவிதைகள் எழுதத் தொடங்கி விட்டான்.

"இவன் என்ன பெரிய காளிதாஸனா, கம்பனா, கவிதை எழுத ஆரம்பித்து விட்டான்? கவிதை எழுதியவர்களெல்லாம் என்ன பாடுபட்டார்கள் என்பது இவனுக்குத் தெரியுமா? பாரதியார் உயிருடன் இருக்கும் பொழுது அவர் பெயரை வாயில் கூறக்கூட பயந்தார்கள், லக்ஷணமாகப் படித்துவிட்டு ஏதாவது உத்தியோகத்தில் சேர்ந்து நாலுகாசு சம்பாதிக்காமல் எழுதுகிறானாம்! கவிதை! கதை!! இப்படி மனதுக்குள் அலுத்துக்கொண்டேன். நாலுக்குநாள் அதிகமாக எழுத ஆரம்பித்தான். அவன் அதிகம் எழுத எழுத என் கவலையும் உடன்வளர்ந்து வந்தது. அவன் கவிதைகள் யாவும் காதல் கவிதைகளாக இருக்கவும் எனக்கு மிகப் பயமாகப் போய் விட்டது. ஏதோ! விழுந்து விட்டான் இல்லாவிட்டால் இப்படி எழுதத் தோன்றுமா? இந்த அழகு பிள்ளையை நம்பி நண்பருக்கு வாக்குக் கொடுத்து விட்டேனே என் செய்வதென்ற கவலை என்னை வெகுவாகப் பற்றிக்கொண்டது. எனக்கு வந்த கோபத்தில் அவனை என்ன செய்வதென்றே தோன்றவில்லை. கடைசியில் அவனைக் கூப்பிட்டுக் கேட்பதென்ற முடிவுடன் அவனைக் கூப்பிட்டேன்.

"ரவீந்தரா இந்தக் 'காதல்' என்ற கவிதையின் பொருள் என்ன? நீ ஏதேனும் மனதில் வைத்திருந்தால் என்னிடம் கூறக் கூடாதா?"

"அப்பா காதல் என்றால் தாங்கள் என்ன நினைப்பீர்கள் என்பது தெரியும். ஒரு பெண்ணும் ஆணும் சேர்ந்தால்தான் காதல் பிறக்கும் என்று நினைக்கிறீர்கள். அது உடலின் உறவைப் பொறுத்தது. நான் எழுதியதின் பொருள் அதுவல்ல. இயற்கை அன்னையின்பால் கொண்ட தெய்வீகக் காதல். அன்பே காதல் தூய்மையான கைம்மாறு கருதாத அன்புதான் காதல். இயற்கை பாடம் அன்பைச் செலுத்துவதே எனது இலட்சியம்" என்று கூறினான்.

என் மகன் கூறிய விளக்கத்தைக் கேட்டேன். இயற்கை எழிலில் மயங்கி கவிதை உருவான தென்பதைக் கேட்டு களிப்புற்றேன். இனி நண்பருடையதும், எனதுமானகருத்தைக் கூறலாம் என்று கூறினேன். ஆடாமல் அசையாமல் சிறிது நேரம் உட்கார்ந்து விட்டான்.

**ரவீந்தரன்**

முதலும் முடிவும் தெரியாதவர்களுக்கு வளர்பிறையா தேய்பிறையாவென்று எப்படித் தெரியும்? கண்மூடி நடக்கும் இந்த உலகை எண்ணியபோது இந்த உண்மைதான் எனக்குப் பளிச்சிட்டது.

"அப்பா! ஆண் பெண் உறவு மணத்தில்தான் உள்ளது என்று தாங்கள் நினைக்கிறீர்களா? அடுத்த பெண்களைத் தாயென மதிக்கும் தமிழ்நாட்டில் பிறந்த தாங்களுமா அப்படிக் கருதுகிறீர்கள். ஒரு பெண்ணுடன் ஆடவன் சிறிதுநேரம் பேசியவுடன் அவர்களை கணவன் மனைவியர்களாகச் செய்யத் தீர்மானிக்கிறீர்களே இது நியாயமா? சோதரி அற்ற எனக்கு ஒரு சோதரி கிடைத்தாள் என்று மகிழ்ந்திருந்தேன். அவ்வெண்ணத்தை குழிவெட்டி புதைக்கப் பார்க்கிறீர்களே; கமலம் என் சோதரி. அவளை எனது மனைவியாக எனது மனம் ஏற்காது; எனக்கு காதலிக்கவும் நேரமில்லை" என்றேன்.

அப்பாவுக்கு என்மேல் அளவில்லாத கோபம் வந்தது. இவன் என்ன தத்துவம் பேச ஆரம்பித்து விட்டான் என்று அம்மாவிடம் சண்டையிட்டார். இவைகளின் விளைவாக 'காதலிக்க நேரமில்லை' என்ற கவிதை உருவானது. அதை படித்தும் தந்தையின் மனது சாந்தி பெறவில்லை. "எங்கள் நட்பு நீடிக்க விரும்பினால்? நான் உனது தந்தை என்ற எண்ணம் இருந்தால் நீங்கள் இருவரும் தம்பதிகளாகத்தான் வேண்டும்" என்றார். பலருக்கு உபதேச மொழிகளை அள்ளி வீசும் எனது தந்தையே இவ்விதம் பேசினால் சிறியனாகிய என்னால் என்ன செய்ய முடியும்? வேதனையினால் உருக்குலைந்தேன். "சாவிலே காதல்" என்ற கவிதை உருவானது, அதைப் படித்த என் தந்தை அப்படியே சமைந்து விட்டார்.



"ஏன், தம்பி, உனது கற்பனை இப்படிச் செல்கிறது? சீரும் சிறப்புடன் பெற்று வளர்க்கவில்லையா? நல்ல அறிவுள்ளவனாகச் செய்யவில்லையா? தந்தையின் கடமையினின்று நான் தவறி விட்டேனா? உன் தந்தையைச் சொல்லம்புகளால் இப்படித் தாக்குகின்றாயே? உனக்கு நாங்கள் இழைத்ததுதான் என்ன? சொல்லு" என்று கேட்டார்.

"அப்பா! தாங்கள் கடமையினின்று தவறவில்லை. என்னை நாட்டிற்குத் தெரியும்படி நல்லோனாக்கினீர்கள், ஆனால்......"

"ஆனால் என்ன? ஏன் நிறுத்திவிட்டாய் கூறு."

"என் வாழ்க்கையின் இலட்சியங்கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. பூமியில் தோன்றி இரண்டு இலைகளை விட்டிருக்கும் சிறிய செடிக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்? அது வளர்ந்தோங்கி பலன்தர வேண்டாமா?"

"அதைத்தான் நானும் வேண்டுகிறேன், ரவீ கமலத்தை மணந்து பூத்து காய் காய்க்க வேண்டுமென விரும்புகிறேன்."

"தாங்கள் அதையேதான் திரும்பத் திரும்பக் கூறுகிறீர்கள். என் அன்பின் உருவான தங்கையை பெண்டாட்டியாக்கிக் கொள்ளச் சொல்கிறீர்கள், கமலத்திற்கு என்னைத்தவிர இவ்வுலகில் வேறுயாரும் கணவனாகும் தகுதியே இல்லையா? விரும்பாத மணத்தினால் நாங்கள் அடையும் பயன்யாது? அதனால் நீங்கள் பெறும் சாந்தி யாது? கூறுங்களப்பா, கூறுங்கள்! இதனால்தான் தாங்கள் சாந்தி அடைய முடியுமென்றால் நான் இந்த வாழ்க்கையே வாழ விரும்பவில்லை" என்றேன்.

"தம்பி! தம்பி!! அப்படியெல்லாம் சொல்லாதே. நானும் எனது நண்பரும் இளமையில் கட்டிய கோட்டையை இடித் தெறிகிறாயே என்ற வேதனைதான் அதிகமாக உள்ளது. தாயும் தந்தையும் கூடி தங்கள் பெண்ணுக்கும், ஆணுக்கும், தாங்களே முடிச்சுப் போட்டுவைத்து விடுகிறார்கள். அவர்களது மனநிலை என்னவென்பதை யாரும் அறிந்து கொள்வதில்லை. அதனால் நாங்களும் அப்படிச் செய்துவிட்டோம்" என்றார். கடைசியில் தந்தை என்னை ஓரளவுக்குப் புரிந்துகொண்டார்.

**ராஜன்**

இருண்ட உலகில் அழுந்திக் கிடந்தால் நிலவின் ஒளியை ரசிக்க முடியுமா? எம்போன்றோர் இவ்வுலகில் இருக்கும் வரை இருட்டுக்கு முன்னேற்றம் ஆவதன்றி வேறென்ன?

என்னைப்பற்றி எல்லோரும் சொல்லிவிட்டார்கள். புதுமையாகச் சொல்வதற்கு எதையுமே யாரும் வைக்கவில்லை. எங்கள் குழந்தைகளின் மீது எனக்கு ஒரே கோபம்தான். ரவியின் அப்பா ரவியிடம் கேட்டதே போன்று நானும் என் மகளைக் கூப்பிட்டுக்

கேட்டேன். ஏதோ ஒரு புதிரைக்கேட்டு விளிப்பதைப்போல் விளித்தாள். "என்னம்மா! அப்படி பார்க்கிறாய்? நான் கேட்பது விளங்கவில்லையா" என்று மறுமுறையும் கேட்டேன்.

"என்னப்பா சொல்கிறீர்கள்? எனக்கும் ரவிக்கும் மணமா? ஏம்பா! ஒரு பெண் ஒரு ஆடவனுடன் பழக ஆரம்பித்தால் காதலாகத்தான் இருக்குமா? அவனை அவள் கணவனாகத்தான் அடைய வேண்டுமா? பெண் ஆடவனுடன் வேறெந்த முறையிலும் பழகக் கூடாதா?" என்று வரிசையாக அடுக்கினாள்.

நான் அசந்து விட்டேன். "கமலம், நான் கேட்பதென்ன? நீ கூறும் வேதாந்தம் என்ன?" என்று சற்றுக் கடுமையாகவே கேட்டேன்.

"அப்பா! ஏன் கோபிக்கிறீர்கள்? உலகம் நாளுக்குநாள் மாறிக் கொண்டிருக்கும் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் தங்களைப் போன்ற பெற்றோர்கள் இருப்பதால் எத்தனை பெண்கள் வாழ்க்கை இழந்து தவிக்கிறார்கள்" இன்று ரவியையும் என்னையும் கணவன் மனைவியாக்க நீங்களும், ரவியின் பெற்றோரும் முனைந்திருக்கின்றீர்கள். நானும் அவரும் இசைந்து போகவில்லை என்றால் கடைசியில் எங்கள் வாழ்வு என்னாவது? உங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் சகோதர உறவை தகர்த்தெறிந்து விடாதீர்கள். சகோதர சகோதரிகளே இல்லாத எனக்கு உடன்பிறந்த பாசத்துடன் பழகும் ரவி அண்ணாவை என்னிடமிருந்து பிரிக்காதீர்களப்பா" என்று கத்தி அழுதே விட்டாள்.

நானும் சிறிதுநேரம் யோசித்தேன். நாங்கள் இருவரும் வாக்குக் கொடுத்ததை காப்பாற்றுவதற்காக இரண்டு இளம் உள்ளங்களைத் துண்டு துண்டாக்கி சித்திரவதைச் செய்யவேண்டும்? நான் அந்த நிலைமையிலிருந்தால் என்ன செய்வேன் என்று யோசித்தேன், அவர்களது சகோதரப் பாசத்தை எண்ணி எண்ணி வியந்தேன். அதற்கு முன்னால் எங்கள் தீர்மானம் பொடியாகிவிட்டது.

கமலத்திற்கு நான் வேறு வரனைப் பார்த்தேன். வரனும் கிடைத்து விட்டான். ரவீந்திரன் வெளிநாடு சென்றிருப்பதால் கமலம் தன் திருமணத்தைத் தள்ளி வைத்துவிடக் கூறினாள். ஒப்புக்கொண்டேன்.

ரவீந்திரன்—கமலத்தின் அண்ணன்—அடுத்த மாதம் ஊர் திரும்புகிறான், அடுத்தமாதம் திருமணம். அண்ணனின் பரிசுக்காகக் கமலம் காத்திருக்கிறாள்.

திருமணத்திற்கு அனைவரும் வரலாமே! புதுப்பாதையில் தலை நிமிர்ந்து நடக்கும் அண்ணன்—தங்கை இருவரையும் நேரிலேயே சந்திக்கலாமல்லவா?

---

# "எழில் தரும் பொழில்"

பி. பாலு

*

அடர்ந்த பொழிலூடே உயர்ந்த தருக்கள்
அம்மரங்களின் கிளைகளிலே தழுவிச் சென்று
படர்ந்த கொடிவகைகள் சுற்றில் ஆடி
பைங்கொடியில் சேர்ந்திருக்கும் வண்ணப் பூக்கள்
தொடர்ந்து கொடியினோடு சேர்ந்து ஆடிட
தொங்கும்நல் பூவினின்று சிந்தும் தேனும்
படர்ந்து பாரிதனில் பரவித் தழைத்த
பசும்புல்லில் ஒழுகிடுநல் எழிலைக் காணீர்! 1

கண்ணைக் கவர்ந்திடும் கமழ்பூ எழிலைக்
கண்டது தேனீ சென்றது அருகே
பண்தனை யிசைத்து கொண்டது களிப்பு
நடமிகப் புரிந்து பூவினில் தங்கி
தண்ணிய நறுந்தேன் அருந்துதல் தனக்கே
உரிமை எனவே மாந்தி மகிழ்ந்து
வண்ண மலர்பிற நாடியே செல்லும்
சோர்விலா உழைப்பை ஆங்கே காணீர்! 2

தென்றலும் பொழிலில் தெள்ளிசை பாடிட
தீங்கனி பலபல ஊச லாடிட
நின்றுநின் றோங்கிய உயர்மரக் கிளையிலே
ஓய்வுறும் பறவை கூடு கட்டி
நன்றென ஆங்கண் இனத்தொடு கூடிடும்
களிப்பொடு ஆடிடும் நிழலில் பசும்புல்
தின்றுதிரி மானின் முதுகி லமர்ந்து
சென்றிடும் அழகினை ஆங்கே காணீர்! 3

நாற்றிசை போற்றும் நறுமலர்ப் பொழிலின்
நாப்ப ணமைந்த எழில்மிகு பொய்கை
காற்றிலே அசைந்து கரையிலே வளர்ந்து
கண்கவர் கவினுறு நாணல் செடியும்
சேற்றிலே தழைத்துச் சிறப்பொடு விளங்கும்
ஆம்பலும் அல்லியும் குவளையும் எல்லாம்
போற்றியே புகழ்மிகப் புரிதலும் அரிதே
பொழிலின் பெருமை பெருகக் காணீர்! 4

எத்திசை காண்போம் சண்பக மலர்களும்
சந்தன மரங்களின் நறுமணம் பலவும்
கொத்துறு மலர்களின் கோலமே கோலம்
கொடிகளின் அசைவின் சீலமே சீலம்
தத்துநீர் பலவழி ஓடும்நீர் ஆகி
தண்பொழி லூடே சலசல பாடும்
இத்தகை பொழில்தனை எத்தகைப் புகழ்வோம்
செப்புதல் எளிதோ ஆங்கே காணீர்! 5

# இரு சகோதரிகள்

கோ. ஸ்ரீ. இராமன் எம், ஏ.,

*

எனக்கு வடிவாம்பாளைப் பல வருஷங்களாகத் தெரியும்; அவளுடைய பெற்றோர்களைத் தெரியும்; அவளுடைய சகோதரி ராஜாம்பாளைத் தெரியும்; அவள் பிரியத்துடன் மணந்து கொண்ட சூலூர் ஜெமீன்தாரரையும் நன்கு அறிந்திருந்தேன். அந்த ஜெமீன்தாரரை நான் இலங்கையில் சந்தித்திருந்தேன்.

வடிவாம்பாளின் தந்தை இப்பொழுது உயிருடன் இல்லை. அவர் பெயர் புருஷோதமர். ஆள்பார்ப்பதற்கு வாட்டசாட்டமாக இருப்பார்-காண்பதற்கு லட்சணமாக இருந்தார். மிகவும் ஆழ்ந்து யோசனை செய்யக்கூடிய அறிவைக் கொண்டிருந்ததாக எனக்கு எப்பொழுதும் தோன்றியதே இல்லை. சிதம்பரத்தில் அவர் பெரிய தனவந்தராகவே கருதப்பட்டார். கெட்ட பழக்கம் என்பதையே அறியாதவர். நன்றாகப் பேசும் மனிதரை சீக்கிரமே தமது நண்பராகக் கருதிக்கொள்ளுவார். சில சமயங்களில் தேச சஞ்சாரம் செய்து, சந்தோஷமாகப் பணத்தைச் செலவு செய்து வருவதும் உண்டு.

அவருடைய மனைவி பத்மாவதியை நான் நன்கு அறிந்திருந்திருந்தேன். வடிவழகிதான், காருண்யமும் பேச்சில் ஒரு இனிப்பும் ஒரு சிரிப்பும் இப்பொழுதும் நான் காண்பதாகவே நினைத்துக் கண்ணீர் விடுகிறேன். பத்மாவதியின் முகத்தில் எப்பொழுதும் மகிழ்ச்சித் தோற்றத்தைத்தான் நான் கண்டதுண்டு. இங்கிலீஷ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி ஆகிய பாஷைகளை நன்கு கற்றறிந்தவள். தாய்பாஷையாகிய தமிழில் சில பாடல்களை இயற்றி அவற்றைப் பாடுகையில் அது தேவகானமோ அல்லது கந்தருவகானமோ என்ற ஐயம் ஏற்படும். வெகு நன்றாகப் பாடுவாள். சிதம்பரத்திலும் அதைச் சுற்றியுள்ள சில கிராமங்களிலும் அவளை அறியாதார் யாரும் இலர்.

தனது மூத்தபுதல்வி வடிவாம்பாளின் மீது மட்டற்ற வாத்சல்யமும் பிரேமையும் கொண்டிருந்தார். அவரது நற்குணங்களின் சாயலென்றே வடிவாம்பாளைக் கருதலும் பிசகில்லை. கெம்பீரம், மாத்ருபக்தி, மரியாதை முதலியனவற்றை அவளிடம் கண்டோர் அவளைக் குறித்து வியந்து மகிழ்ந்து பேசுவதைக் கேட்டிருக்கிறேன்.

வடிவாம்பாள் ஜனித்தபொழுது பத்மாவதிக்குப் பதினெட்டு வயதிருக்கும். மகளுக்குப் பதினைந்து பிராயம் ஆகும் வரையிலும் வடிவாம்பாள் ஹிந்துமதம், புராணம், இலக்கியம் முதலியனவற்றைப் போதித்து வந்திருந்தமையால் அம்மடமகள் நல்ல அறிவைப் பெற்றிருந்தாள். அறிவு, வயது அதிகமாக இருந்தது. வடிவாம்பாளுக்கு பதினைந்தாவது பிராயம் நடந்து கொண்டிருக்கையில் அவளது தாயார் வயிறு வாய்த்திருந்தாள். சீக்கிரத்தில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அவளே ராஜாம்பாள். புருஷோத்தமருக்கு ஒரு ஆண் குழந்தை பிறக்கவேண்டும் என்ற எண்ணம் இருந்



தது. ஆயினும் அவரும் அவரது மனைவியும் புதல்வியும் மிகுந்த சந்தோஷத்தைப் பெற்று, தமது சுற்றத்தார்களும் நண்பர்களும் சந்தோஷம் அடையட்டும் என்று ஒரு பெரிய விருந்து நடத்தினர்.

குழந்தை பிறந்து மூன்று மாதங்கள் இருக்கும். ஓர்நாள் இரவு இரத்த அழுத்தம் காரணமாக பத்மாவதி ஹிருதய நோவினால் கஷ்டமுற்று, பொறுக்க முடியாத வலியினால் அன்றிரவே மரணமடைந்தாள். மரணத்திற்கு முன் பத்மாவதி தனது மூத்தமகளை நோக்கி, "வடிவு, நான் உன்னிட மிருந்தும் ஒரு வாக்குப் பெறவேண்டும்," என்றாள்.

"நீர் எதை விரும்பினாலும் நான் செய்யத் தயார்," என்றாள் வடிவாம்பாள்.

"இந்த சிறு குழந்தையின் போஷணைக்கும் இவள் நல் நடத்தைக்கும் நீதான் வழி காட்டியாக நிற்கவேண்டும். இவள் சுகத்தையே உன் சுகமாகக் கருதவேண்டும்."

"அம்மா, நான் தாங்கள் கூறுவதற்கு முரணாக எதையும் சொல்வதில்லை. நீங்கள் கவலைப்படவேண்டாம். இவளுக்குக் கலியாணம் ஆகும் வரையில் நான் எனது மணத்தை எதிர்நோக்குவது இல்லை. உண்மையாகச் சொல்லுகிறேன்" என்று கண்களில் நீர்த் துளிகள் தோன்றி கன்னங்களில் வழிந்தோட, பொறுக்க முடியாத விசனத்துடன் வடிவாம்பாள் கூறினாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் இறக்கப்போகும் பத்மாவதியின் கண்களில் நீர் வெளிப்பட்டு, "மகளே, என் அருமையான மகளே, என் பொருட்டு நீ செய்யும் வாக்குதானம் கொடிதே. ஆனாலும் ராஜாம்பாளை நன்கு பார்த்துக்கொள்" என்று தாயார் சொல்லிக் கண்ணை மூடிவிட்டாள்.

வடிவாம்பாளும் அவளது தந்தையும் அடைந்த துக்கத்திற்கு ஓர் எல்லையே இல்லை. புருஷோத்தமர் சிறிது நாட்கள் ஆனதும் சிதம்பரத்திற்கு அருகில் உள்ள சிவபுரி எனும் சிறு கிராமத்தில் அவருக்குச் சொந்தமான ஒரு சிறு வீட்டில் வசிக்கச் சென்றார். பழைய வீட்டில் இருந்தால் அது அவருக்குக் தாங்க முடியாத வேதனையையும் துக்கத்தையும் கொடுக்கும் என்று கருதியிருந்தார்; பழைய வீட்டில் இரு சகோதரிகளும் அவர்களுக்குச் சகாயம் செய்ய ஒரு மூதாட்டியும் இரண்டு நம்பகமான வேலையாட்களும் வசித்து வரலாயினர்.

பத்மாவதி பரமபதம் அடைந்த பின் ஒருநாள் மத்தியானம் நானும் எனது தமக்கையும் வடிவாம்பாளைக் காணச் சென்றிருந்தோம். வீட்டினுள் யாரும் இருக்கவில்லை. தோட்டத்தை யடைந்தோம். பச்சைப்பசேறென்றிருந்த புற்றரை மீது வடிவாம்பாள் ஒரு புஸ்தகத்தைக் கையிலேந்தி, வாசித்துக் கொண்டிருந்தாள்; சிறு குழந்தை ராஜாம்பாள் மெல்ல மெல்ல நடந்து தரையின் மீது விழுவதும் மெல்ல மெல்ல எழுவதுமாக இருந்தாள். பார்ப்பதற்கு சொர்ண விக்ரகம்போல் இருந்தாள். என்ன எழில்! என்ன கெம்

பீரமான கண்கள்! எனது தமக்கை என்னிடம், "குழந்தை என்றால் இதுதான் குழந்தை" என்றாள்.

வடிவாம்பாள் நம்மிருவரையும் பார்த்ததும் எழுந்து நின்று, மரியாதையாக, "அத்தான், அத்தையே, நீங்கள் வருவது குறித்து ஏன் எழுதவில்லை?" என்று கேட்டாள்.

"என்னமோ எழுத முடியவில்லை," என்று நான் சொல்லி விட்டுக் குழந்தை ராஜாம்பாளை எடுத்துக்கொண்டேன். பிரியத்துடன் அவளுக்கு இரு முத்தங்களை ஈந்தேன். ராஜாம்பாள் மிகவும் கெம்பீரமான கிளியைப்போல் என்னிடம் ஓரிரண்டு வார்த்தைகளைச் சொன்னாள். "யாழ் இனிது குழல் இனிது என்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்" என்று தெய்வப்புலமை வாய்ந்த திருவள்ளுவ நாயனார் வாக்கு எனக்கு ஞாபகத்திற்கு வந்தது.

ராஜாம்பாள் அவளுடைய தந்தை புருஷோத்தமர் சாயலைக் கொண்டிருந்தாள் என்றே சொல்லவேண்டும். அறிவும் அப்படியே! நான் பின்னர் நடந்த சம்பவங்களை நினைத்துக்கொண்டால், எனக்கே பரிதாபமும் ஆச்சரியமும் உண்டாகியது. வடிவாம்பாள்! அம்மா! எத்தகைய குணவதி! தனது தாயாருக்குக் கொடுத்த வாக்கிற்கு விரோதமாக நடக்கவே இல்லை. இரண்டு ஜெமீன்தார்கள் அவளை மணந்துகொள்ள முன் வந்தனர். ஆனால் அவள் முடியாது என்று சொல்லி விட்டாள். அவளது தகப்பனாரும் எவ்வளவோ சொல்லியும் பயனில்லை. அவளைப் பார்த்த பொழுதெல்லாம் பத்மாவதியின் அழகின் சாயலைக் காண்பதாகவே தோன்றும்.

வடிவாம்பாள் நம்மிருவரையும் அழைத்துச் சென்று, காபி சிற்றுண்டியை முன்வைத்து உபசரித்தாள். குழந்தை ராஜாம்பாள் மழலைச் சொற்கள் தெய்வீக கானம்போல் இருந்தன.

"நீ எப்பொழுது மதராசுக்கு வருகிறாய்?" என்று எனது தமக்கை கேட்டதற்கு, அவள், "நான் இக் குழந்தையை நன்றாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். தாயார் இறந்த பின் இவளுக்கு நான் தாயார் அல்லவா?, மதராசுக்குப் போக முடியாது" என்று பதில் இறுத்தாள்.

நாமிருவரும் வடிவாம்பாளையும் அவள் சகோதரியையும் விடுத்து அங்கு நின்றும் அகன்றதும் எனது தமக்கை, "என்ன உதாரகுணம்! என்ன பெருந்தன்மை. என்ன மாத்ருபக்தி! என்ன தியாகம்!" என்று வடிவாம்பாளைக் குறித்துப் பேசிக்கொண்டாள். அது உண்மையே.

பதினேழு வருஷங்கள் வெகு விரைவில் சுழன்றன. ராஜாம்மாள் பதினெட்டு வருஷ சௌந்தர்ய கோகிலம்போல் உருவிலும் திருவிலும் தோன்றினாள். வடிவாம்பாளுக்கு ஐம்பத்தொன்று ஆண்டுகள் ஆயினும் தனது தாய்க்குக் கொடுத்த வாக்கினை பரிபாலிப்பதில் கிஞ்சித்தேனும் தயங்கவில்லை.

புருஷோத்தமருக்கு எழுபது ஆண்டுகள் ஆயிற்று. அவர் ஒரு தடவை கோயமுத்தூருக்குச் சென்றிருந்தார். அங்கு சூலூர்



ஜெமீன்தாரரை முதன்முதலாகச் சந்தித்தாள். பின்பு புருஷோத்தமர் தமது புதல்வியருடனும் ஆட்களுடனும் இலங்கைக்குச் சென்றார். அங்கு சூலூர் ஜெமீன்தாரரும் சென்றிருந்தார். அந்த ஜெமீன்தாரரை நான் அங்கேதான் முதன்முதலாகக் கண்டது. நான் ஏதோ இலக்கிய சம்பந்தமான மகாநாட்டுக்குப் போயிருந்தேன். புருஷோத்தமர் தமது நண்பர் ஒருவருடைய வீட்டில் தங்கியிருந்தார். நானும் அங்கேதான் தங்கியிருந்தேன்.

ராஜாம்பாள் சௌந்தரிய கோகிலம்போல் பேரழகியாக விளங்கினாள். இலங்கையில் நாங்கள் தங்கியிருந்த வீட்டிலும் அக்கம் பக்கத்திலும் இருந்த ஜனங்கள் மிகவும் புகழ்ந்து பேசியதை நான் கேட்டிருக்கிறேன். இனிமையான பேச்சு, கர்ணாமிருதமான கானம், ஜனங்களிடம் மரியாதையான நடத்தை முதலியனவற்றைக் குறித்துப் பேசி ராஜாம்பாளைப் புகழ்ந்தனர். இதற்கெல்லாம் தன் சௌக்கியத்தையும் சுகத்தையும் துறந்து, பெருத்த தியாகத்தையே செய்த வடிவாம்பாளே காரணமாவாள். தனது அன்பான அன்னைக்கு மரணத் தறுவாயில் கொடுத்த வாக்கினைப் பரிபாலித்து வந்தாள். மணம் செய்து கொள்வதில்லை என்று ராஜாம்பாளுக்குத் தனது தமக்கை மீது மட்டற்ற வாத்சல்யமும் பக்தியும் இருந்தமையால் எந்த விஷயத்திலும் வடிவாம்பாளின் சொற்படியே நடந்து வந்தாள். தன் பொருட்டு வடிவாம்பாள் செய்த பெரிய தியாகம் கலியாணம் செய்து கொள்ளாதது—மகத்தான தியாகம் என்று எண்ணி அவள் மாட்டு அளவற்ற அன்பைக் காண்பித்து வந்தாள்.

ஒருநாள் சாயுங்காலம் நாம் தங்கியிருந்த வீட்டுக்காரர்—நமது நண்பர்—நமக்கென்று பிரத்தியேகமாக ஒரு பெருத்த விருந்து நடத்தினார். அதற்குச் சுமார் நூறு கனவான்களும் சீமாட்டிகளும் வந்திருந்தார்கள். சூலூர் ஜெமீன்தார் என்று சொல்லப்பட்ட ஒருவரும் வந்திருந்தார். பராங்குசம் என்பது அவர் பெயர். அவர் நன்றாகப் பேசுவார். முப்பத்தெட்டு வயது. அழகான முகம், தேனினும் இனிய பேச்சு—இது காரணமாக ராஜாம்பாள் அவரைக் கலியாணம் செய்துகொள்ள விரும்பினாள். விருந்தில் பாரதியாரின் பாடல் சிலவற்றை ராஜாம்பாள் பாடியபொழுது ஜெமீன்தாரரும் அவளையே கவனித்து நோக்கிய வண்ணம் இருந்தார். அம்மடமகளைத் தான் எப்படியாயினும் கலியாணம் செய்துகொள்ள வேண்டும் என்று உறுதி கொண்டார்.

விருந்திற்கு மறுநாள் அவர் புருஷோத்தமரைக் கண்டு பேசினார். அவருடைய புதல்வியைத் தாம் மணந்து கொள்ளுவதாகச் சொன்னார். புருஷோத்தமர் சரியென்றே சொல்லி விட்டார். காரணம் என்ன? பெருத்த பணக்கார ஜெமீன்தார்; அழகான தோற்றம்; பேசுவதில் ஒரு நயம். ராஜாம்பாளும் தனது தந்தையின் குணங்களைக் கொண்டிருந்தமையால் வடிவாம்பாளைக் கேட்காமலே தனது சம்மதத்தைக் கொடுத்துவிட்டாள்.

ஜெமீன்தாரர் பராங்குசம் புருஷோத்தமரிடம் சொல்லியதாவது:—"நான் இனிமேல் பாக்கியவானே. உமது புதல்வியை

மனைவியாகப் பெறும் பாக்கியம் என்னை சந்தோஷ சாகரத்தில் ஆழ்த்தி யிருக்கிறது."

"சிதம்பரத்திற்குப் போனதும் கலியாணத்தை நடத்தி விடுகிறேன்," என்ருர் புருஷோத்தமர்.

ஆனல் வடிவ்வாம்பாளுக்கு மனதில் பெருத்த கவலையும் திகிலும் ஏற்பட்டது. சூலூர் ஜெமீன்தாரர் மதருஸ் ராஜதானியைச் சேர்ந்தவராஞலும் அவர் சூலூரில் தமது சகோதரியர் இருவருடனும் சேர்ந்து இருக்கவில்லை யென்றும், இலங்கையில் தமது சொந்த முயற்சிகளால் வீடு கட்டுவதற்குச் செங்கல் சப்ளை செய்யும் தொழிலில் பெருத்த பணம் சம்பாதித்தாராதலால் அவர் இலங்கையிலும் மதராசிலும் தமது காலத்தைக் கழித்து வந்தாரென்பதைக் கேள்விப்பட்டிருந்த வடிவாம்பாள் பராங்குசத்தை வெறுத்தாள். தனது தங்கை அவசரப்பட்டு சம்மதம் கொடுத்தது சரியல்லவென்று அவளிடம் கூறினுள். ஆனல் அவள், "அக்கா, இந்த ஒரு விஷயத்தில் நான் தங்களைக் கேட்காமல் அவரைக் காதலனுகக் கொண்டுவிட்டேன். தயவு செய்து நான் அவரை மணந்து கொள்ளுவதற்கு உதவ வேண்டும்" என்று கேட்டுக்கொண்டாள். வடிவாம்பாள் பின்னர் என்ன செய்யக்கூடும்?

சிதம்பரத்தில் ராஜாம்பாளுக்கும் சூலூர் ஜெமீன்தாரர் பாராங்குசத்திற்கும் சிறப்பாக மணம் நடைபெற்றது. நானும் கலியாணத்திற்குப் போயிருந்தேன். வடிவாம்பாளுக்கு மட்டும் முகத்தில் சந்தோஷம் இருக்க காணப்படவில்லை. திருமணத்திற்கு ஜெமீன்தாரருடைய இரு சகோதரிகளும் வரவில்லை; காய்ச்சல் என்று காரணம் எழுதியிருந்தனர். பராங்குசம் அதன் பொருட்டு விசனப்படவில்லை. சந்தோஷமாகவே இருந்தார்.

கலியாணத்திற்குப் பின் ஜெமீன்தாரரும் அவரது மனையாட்டியும் இலங்கைக்கும் மதருசுக்கும் பிரயாணம் செய்து திரும்பினர். சூலூருக்குத் தமது மனைவியை அழைத்துப் போவதாக பாராங்குசம் ஏற்பாடு செய்திருந்தார். ஆனல் அது நிறைவேறவில்லை. காரணம் புருஷோத்தமர் திடீரென்று மரண மடைந்து விட்டார்.

ராஜாம்பாளின் புருஷர் தமது மாமனுர் வீட்டிலேயே வாசம் செய்ய ஆரம்பித்தார். சிவபுரி சிறிய கிராமம் ஆனலும் அந்த ஊர் அவருக்குப் பிடித்தமாக இருந்தது. கிராமத்தைச் சுற்றிலும் வயல்களில் பச்சைக்கம்பளம் விரித்தாற்போல் நெல் பயிர், காணப்பட்டது மனதிற்கு நிம்மதியையும் கண்ணிற்கு குதூகலத்தையும் கொடுத்தது. ஜெமீன்தாரருக்குத் தனிமையில் இருக்கவே பிரியம் என்று வடிவாம்பாள் கருதினுள். அவளும் தனது தங்கையுடன் சிவபுரியிலேயே இருந்து வரலானுள். தங்கையை விட்டுப் பிரிந்திருக்க அவள் மனம் விழையவில்லை.

சூலூருக்குச் செல்லுவதற்கு ஏற்பாடு ஆயிற்று. ஒரு வாரம் அங்கு இருந்துவிட்டு, திரும்பி வர வடிவாம்பாளும் மனமொப்பினுள். ஆனல் ஜெமீன்தாரருக்கு டைபாயிடு ஜ்வரம் வந்தது போக முடியவில்லை. தேகஸ்திதி பழைய நிலைக்குத் திரும்பியதும் ஜெமீன்



தார் தமது சகோதரிகளைச் சிதம்பரத்திற்கு வருமாறு எழுதினுர். அவர்கட்கு வர முடியவில்லை. இப்படியே காலச்சக்கரம் சுழன்று சென்று கொண்டிருந்தது.

ராஜாம்பாள் கருத்தரித்திருந்தாள். எட்டு மாதங்கள் ஆயிற்று. வடிவாம்பாள் தனது சகோதரியை வெகு பிரியத்துடனும் ஆர்வத்துடனும் பாதுகாத்தும் சம்ரட்சணை செய்தும் வருவதாயினுள். அவளுக்கு ஜெமீன்தாரர் மீது ஏற்பட்டிருந்த ஒரு வெறுப்பு அப்படியே இருந்து வந்தது.

ஒருநாள் ஜெமீன்தாரருக்கு வழக்கம்போல் ஞாயிற்றுக்கிழமை கோயம்புத்தூரில் பிரசுரமாகி வந்துகொண்டிருந்த "ஜனங்களின் தோழன்" வரவில்லை. அந்த வாரப்பத்திரிகை வந்ததும் பாராங்குசம் ஏதோ ஒரு செய்தியைப் படித்துவிட்டு, ஐந்தே நிமிஷங்களில் அப் பத்திரிகையைக் கிழித்து எறிந்து விடுவார்.

இது ராஜாம்பாளுக்கும் வடிவாம்பாளுக்கும் வெகு ஆச்சரியத்தைக் கொடுத்திருந்தது. வடிவாம்பாள் இதை என்னிடம் பிறகு சொன்னுள். ஆனல் அதைப்பற்றிக் கனவானிடம் ஏதும் கேட்கவில்லை. அப் பத்திரிகை வராத காரணம் தெரியாமையால் ஜெமீன்தாரருக்கு மனக்கலக்கம் ஏற்பட்டது. பிரியத்துடன் மனைவியுடன் பேசும் அவர் அன்று கோபத்துடன் பேசிவிட்டு, சிதம்பரத்திற்குச் சென்று தபாலாபீசில் விசாரித்து வருவதாகச் சொல்லிவிட்டு வீட்டினின்றும் அகன்ருர். இரவு திரும்பி வருவதாகச் சொல்லியிருந்தார்.

ராஜாம்பாள் விசனத்துடன் தனது அறையில் படுக்கச் சென்ருள். தனது புருஷன் கடிந்து பேசியது அவளுக்கு வியப்பையும் சொல்லொணுத துக்கத்தையும் கொடுத்து விட்டது. மேலும் கர்ப்பிணி; அதனல் சோர்ந்துபோன உள்ளத்துடன் படுத்துக்கொண்டிருந்தாள். இதை எல்லாம் வடிவாம்பாள் தான் எனக்கு ஒரு வார்த்தை விடாமல் உரைத்திருந்தாள்.

மத்தியானம் ஒரு மணி சமயம். அப்பொழுது ஒரு அந்நிய மனிதர் சகோதரிகள் வசித்து வந்த வீட்டிற்கு வந்து, ஜெமீன்தாரினியம்மாளைக் காணவேண்டும் என்று சொன்னுர். எஜமானியம்மாளைக் காண முடியாது அச் சமயத்தில் என்று வீட்டு வேலையாள் சொன்னுன். தான் முக்கியமான ஒரு காரியத்தை முன்னிட்டு அங்கு வந்திருப்பதாகவும் பதிலுக்குக் காத்து நிற்பதாகவும் அக்கனவான் சொல்லியனுப்பினுர். அதைக் கேட்டதும் ராஜாம்பாள் தனது தமக்கையை நோக்கினுள். வடிவாம்பாள் வந்திருந்த மனிதரைப் பார்க்கும் பொருட்டு மாடியினின்றும் இறங்கி வந்தாள்.

வந்திருந்த கனவான் வடிவாம்பாளைக் கண்ணுற்றதும் எழுந்து மரியாதையுடன் தமது நமஸ்காரத்தைச் செய்து, "தாங்கள் ஜெமீன்தாரினி அம்மாளா?" என்று கேட்டார். தான் எஜமானியம்மாளின் தமக்கை என்றும் அந்த அம்மாளின் விஷயங்களைத்தானே கவனித்து வருவதாயும் ஜெமீன்தார் வெளியில் போயிருப்பதாயும் சொன்னுள்

வடிவாம்பாள். அவளுக்கு மனத்தில் பெருத்த திகிலும் வேதனையும் ஏற்பட்டிருந்தது; அந்நிய மனிதர் அப்பொழுது ஏன் வந்தார் என்று

அந்த கனவான் பிரபு வெளியில் சென்றிருப்பதை அறிந்ததாகச் சொல்லிவிட்டு மேலும், "நான் வந்திருக்கும் விஷயத்தை ஜெமீன்தாரருக்குச் சொல்லக்கூடாது. முக்கியமான செய்தி" என்றூர். வடிவாம்பாள் எனக்கு ஒரு வார்த்தை கூட விடாமல் எல்லாவற்றையும் சொல்லியதை வைத்துக்கொண்டே இதை எழுதுகிறேன்.

வடிவாம்பாள், "ஏன் ஜெமீன்தாரருக்குத் தெரியக்கூடாது?" என்று கேட்டாள்.

"அவர் பின்னர் அறிந்து கொள்ளலாம். இப்பொழுது அறியக்கூடாது. நான் சொல்லும் விஷயம் ஜெமீன்தாரினியை மிகவும் பாதிக்கக்கூடியது. மனதை தைரியமாக வைத்துக் கொள்ளுங்கள். நான் சொல்லப்போகும் செய்தி மிகவும் தொந்திரவை கொடுக்கக் கூடியது" என்று வந்தவர் சொல்லுகையில், வடிவாம்பாள் ஏதோ பயத்தின் பயனுகச் சோர்வடைந்து, நாற்காலியின்மேல் சாய்ந்து கொண்டாள். பின்னர் மனதை திடப்படுத்திக்கொண்டு, "நீங்கள் விஷயத்தைக் கூறலாம்" என்ருள்.

அந்த கனவான் பின்வருமாறு சொன்னுர்;—"அம்மா, நான் இரகசியப் போலீஸை சேர்ந்தவன். என் பெயர் சோமசுந்திரம். என்னை இன்ஸ்பெக்டர் பதவியில் சர்க்கார் உயர்த்தி இருக்கிருர்கள். இதோ பாருங்கள் "ஜனங்களின் நண்பன்" என்ற கோயம்புத்தூரில் பிரசுரமாகும் வாரப் பத்திரிகையின் பிரதியொன்றை. இதை நாடிக்கொண்டு போயிருக்கிருர் ஜெமீன்தார்."

வடிவாம்பாள் அப் பத்திரிகையை வாங்கிக்கொண்டு, அவர் குறித்த விஷயத்தைப் படித்தார். படித்ததும் அவள் முகம் சவம் போல் வெளுத்து விட்டது. சீக்கிரத்திலேயே அவள் தன் மனதை திடப்படுத்திக்கொண்டு அதைப் படித்தாள். "சூலூர் ஜெமீன்தார் பாராங்குசம் அவர்கள் இன்று காலை மதருசிலிருந்து கோயம்புத்தூருக்கு நீலகிரி மெயிலில் வந்திருக்கிருர்."

வடிவாம்பாளுக்கு மறுபடியும் கலக்கம் ஏற்பட்டது. ஹிருதயம் பட படவென்று வேகமாக அடித்துக்கொள்ள வாரம்பித்தது. இன்ஸ்பெக்டர் சோமசுந்திரம் அவளை தைரியமாக இருக்குமாறு வேண்டிக்கொண்டார். சிறிது நேரத்தில் வடிவாம்பாள் தைரியங் கொண்ட மனத்தினளாய், "நான் இனிமேல் அதைரியப்படுவதில்லை. நீங்கள் விஷயத்தை விளக்கிக் கூறுங்கள்" என்று இரகசிய போலீஸ் இன்ஸ்பெக்டரைப் பார்த்துக் கூறினுள். அப் பத்திரிகையை அவரிடம் கொடுத்தும் விட்டாள்.

"சூலூர் ஜெமீன்தார் ஆறு தினங்களுக்கு முன்புதான் மதருசிலிருந்து கோயம்புத்தூருக்கு வந்தார். அவர் கோயம்புத்தூரிலிருந்தும் ஒரு மோட்டார் வண்டியில் நேராக சூலூருக்குச் சென்ருர். அவருடைய சகோதரிகள் அவரை ஆச்சரியத்துடன் வர



வேற்ருர்கள். பராங்குசம் சிதம்பரத்தில் தமது மனைவியுடன் இருப்பதை அறிந்திருக்கும் அவர்கள் திடீரென்று இலங்கையினின்றும் மதருசுக்குக் கப்பலில் பிரயாணம் செய்து, உடனேயே போலீஸ் அதிகாரிகளுக்கு விஷயத்தைக் கூறிவிட்டு, சூலூருக்கு வந்தாரென்ருல் அதில் ஆச்சரியங் கொள்ளாமல் இருக்க முடியுமா? பராங்குசம் மதருஸ் இரகசிப் போலீசுக்கு இலங்கையில் நடந்த சில விஷயங்களைக் கூறிவிட்டு, அதை ஆராய்ச்சி செய்யுமாறு ஏற்பாடு செய்து, சூலூருக்குச் சென்ருர். உண்மையில் ஒருவர்தான் சூலூர் ஜெமீன்தாரராக இருக்க முடியும். ஆகவே நான் இதை ஆராய்ச்சி செய்து போலி ஜெமீன்தாரரைக் கைது செய்துகொண்டு போக வந்திருக்கிறேன். ஒரு சந்தேகம் இருக்கிறது. அதை ஆராயவேண்டும். இப்பொழுது புதிய ஜெமீன்தாரரும் சூலூரில் அவரது மாளிகையில் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிருர். ஜெமீன்தாரருடைய சகோதரிகள் வந்தவரைத் தமது சகோதரர் என்று ஏற்றுக்கொள்ளவில்லை. பராங்குசமும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். பயனில்லை. நானும் அவர் கூடவே சூலூருக்குச் சென்றிருந்தமையால் அந்த சீமாட்டிகளுடன் பேசி விட்டு, பராங்குசத்தை காம்பவுண்டில் இருக்கும் இன்னெரு மாளிகையில் காவலுடன் இருக்கச் செய்து, இந்த ஊருக்கு விரைந்து வந்தேன்.

"புறப்படு முன் நான் கோயம்புத்தூரில் கைதிகளுடைய நோட்டு புஸ்தகமொன்றை அதிகாரிகளிடமிருந்து வாங்கிப் படித்தேன். இருபது வருஷங்களுக்கு முன்பு நடந்த ஒரு விஷயம் எனக்கு உண்மையை உரைப்பதாக இருந்தது. அதில் பின்வரும் விஷயம் இருந்தது:—"அழகப்பன் என்பவன் சூலூரில் தோல் வியாபாரம் செய்யும் ராமலிங்கம் என்பவருடைய மகன். மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறியிருக்கிருன்; கனவானைப்போல் நடக்கும் சுபாவம் உண்டு. அவன் அவனது பெற்ருேர்களுடன் விரோதம் செய்து கொண்டிருக்கிருன். நடத்தை தைரியம், வஞ்சகம், சாவதானமாக நடக்கும் ஆற்றல் பிறரைப்போல் நடிப்பதில் சாமர்த்திய சாலீ பேசுவதில் ஒரு இனிமையும் நயமும் உண்டு. சூலூர் ஜெமீன்தாரருடைய குமாரன் பராங்குசத்தைப்போல் பார்ப்பதற்குக் காணப்படுகிருன். இருபத்திரெண்டாவது பிராயத்தில் அச்சப்ப முதலியார் என்பவரை அடித்த குற்றத்திற்காக சிறைவாசம் செய்கிருன்" என்று போலீஸ் அதிகாரி சொன்னுர்.

அதைக் கேட்டதும் வடிவாம்பாள் திகில் கொள்ளவில்லை. "அப்படியா? நீங்கள் தொடர்ந்து கூறுங்கள்" என்று சொன்னுள்.

சோமசுந்திரம் மற்ருெரு விஷயத்தையும் படித்துச் சொன்னுர். "மூன்று வருஷங்களுக்குப் பின் அழகப்பன் இன்னுமொரு பெரிய குற்றத்திற்காகச் கைது செய்யப்பட்டு ஆயுள் பரியந்தம் சிறைவாசம் செய்ய நீதிபதி உத்திரவு இட்டிருக்கிருர். குற்றம் இந்தக் கைதி வீரப்பசெட்டியாரைக் கொன்றது. சிறை மனையிலிருந்தும் தப்பி ஓடி இருக்கிருன். தாடியையும் தனது தலைமயிரையும் நீளமாக வளர்த்து இருந்தான்."

சிறை மனையில் ஒரு வருஷம் இருந்து ஓடிவிட்டான். இன்னுமொரு விஷயம் என்னவென்றால் அழகப்பன் சிறைச்சாலைக்கு இரண்டாவது முறை வந்ததும் அவனது புஜத்தின் மீது கை. அ. என்ற எழுத்துக்கள் சிறைச்சாலை அதிகாரிகளால் பொறிக்கப்பட்டன. புதிய ஜெமீன்தாரரைச் சோதித்தோம். அவர் புஜத்தில் கைதி அழகப்பனைக் குறிக்கும் இரண்டு எழுத்துக்களும் காணவில்லை. ஆகவே இந்த ஜெமீன்தாரருடைய வலது புஜத்தைச் சோதித்துப் பார்த்து உண்மையை அறிந்து கொள்ளவேண்டும். நீங்கள் எனக்கு இதன் பொருட்டுச் சகாயம் செய்யவேண்டும்.''

"நீங்கள் ஒரு விஷயத்தைச் சொல்லவில்லை'' என்று வடிவாம்பாள் கேட்கவே, போலீஸ் அதிகாரி.

"ஆம், பராங்குசம் சென்னையில் போலீஸ் சூபரின்டென்டிடம் சொன்ன விஷயந்தானே?'' என்று கேட்கவே, வடிவாம்பாள் ஆம் என்று சொன்னாள்.

"அவர் சொன்னது வருமாறு,'' என்று சோமசுந்திரம் மறுமுறையும் சொல்லுவதானார்:—"பராங்குசம் இலங்கையிலிருந்து சென்னைக்கு வந்ததும் என்னையும் எனது மேல் அதிகாரியையும் கண்டு பேசினது யாதென்றால் தாம் ஒரு பெருத்த அபாயத்தில் சிக்கியிருப்பதாகவும் அதை நிவர்த்தி செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அவர் சொல்லியவாறே சொல்கிறேன், கேளுங்கள். 'பனிரெண்டு வருஷங்களுக்கு முன் நான் எனது தகப்பனார் மரித்த பின் எனக்கு ஏற்ற உத்தியோகம் சைந்நியத்தில் கிடைக்கவில்லை. ஜெமீனில் அதிகப் பணமும் இருக்கவில்லை. சம்பாதித்துத்தான் ஆகவேண்டும். நான் விசனத்துடன் சூலூரை விடுத்து இலங்கைக்குச் சென்றேன். அங்கு சிலகாலம் தங்கியிருந்தேன். எனது சகோதரிகள் இருவரும் சூலூரிலேயே இருந்தார்கள். இலங்கையில் நான் இருந்தபொழுது ஒரு தொழிலை நடத்தவாரம்பித்தேன். அது வீடு கட்டுவதற்குச் செங்கல் சப்ளை செய்வது. அப்பொழுது அழகப்பன் அங்கே வந்து சேர்ந்தான். நான் அவனுடன் முதலில் அவ்வளவாக ஸ்நேகம் கொள்ளாதிருந்தாலும், அவனுக்கு ஜீவனம் செய்ய மேஸ்திரி வேலையைக் கொடுத்தேன். முதலில் அவனை அழகப்பன் என்று நான் தெரிந்து கொள்ளவில்லை. தாடியும் மீசையும் வளர்த்தியிருந்தான். பத்து வருஷங்களில் எனக்கு அபாரமான சம்பத்து கிடைத்துவிட்டது. சந்நியாசி போல் காணப்பட்ட அழகப்பன் என் வீட்டிலேயே வசித்து வந்தான். எனக்கு அத்தியந்த நண்பனும் ஆகிவிட்டான். ஆனால் தான் உண்மையில் யார் என்பதை எனக்குச் சொல்லவில்லை. மூன்று வருஷங்களுக்கு முன் அவன் என்னைத் தனிமையில் சந்தித்தபொழுது, என்னை என் வீட்டில் பூமிக்கு அடியில் கட்டப்பட்டிருந்த அறையில் என்னை சிறை வைத்துவிட்டு, வேலைக்காரர் முதலாயினோர்க்கு நான் இந்தியாவுக்குப் போயிருப்பதாகச் சொல்லிவிட்டான். இது பிறபு தெரிந்தது. அழகப்பன் ஓர்நாள் இரவு கொழும்புக்குச் சென்று தனது மீசை தாடி முதலியவற்றை க்ஷவரம் செய்துகொண்டான். தலைமயிரைக் கிராப் செய்துகொண்டான். மறுதினம் திரும்பிவந்து என் பதவியை வகிக்க வாரம்பித்தான்.



'நான் என் வீட்டில் சிறைவாசம் செய்ய நேரிட்டது! பனிரெண்டு தினங்களுக்கு முன்புதான் நான் விடுதலை செய்யப்பட்டு, சென்னைக்கு வந்தேன். என்னை ரகசியமாக அறையில் வைத்து, கொஞ்சம் ஆகாரம் கொடுக்குமாறு ஏற்பாடு செய்திருந்தான். தக்க காவலும் வைத்திருந்தான். நான் இருட்டிலேயே அதிக வருஷங்கள் இருக்க நேரிட்டதால், எனக்கு காவல் வைக்கப்பட்ட ஆள் என்னைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. செங்கல் சப்ளை செய்யும் தொழிலில் வந்த சம்பத்து எல்லாவற்றையும் அழகப்பன் சுருட்டிக்கொண்டு இலங்கையில் தான் சூலூர் ஜெமீன்தார் என்று கபடநாடகம் நடித்து வந்தான். உலகமும் அப்படியே நம்பி விட்டது. அழகப்பனுக்கு என்னைப்பற்றியும் சூலூரில் உள்ள என் சகோதரியரைப்பற்றியும் விஷயங்கள் நன்கு தெரிந்திருந்தமையால் அவன் சூலூருக்குப் பணம் அனுப்புவதை நிறுத்தவில்லை, கடிதம் மட்டும் எழுதவில்லை. ஒருநாள்—பனிரெண்டு நாட்களுக்குப்பின்—எனக்கு காவல் வைக்கப்பட்டிருந்த சேவகன் என் முன்னால் வந்ததும் திடீரென்று காக்காய் வலிப்பினால் அவதியுற்றான். அந்த சந்தர்ப்பத்தில் நான் சிறை மனையிலிருந்தும்—என் வீட்டிலிருந்தும் தப்பித்துக்கொண்டு வெளிவந்தேன். எனக்கு தாடியும் மீசையும் இருந்தமையால் வேலையாட்கள் என்னை அழகப்பன் என்றே எண்ணி விட்டனர். நான் உடனே போலீசுக்குச் சென்று நடந்ததைக் கூறினேன். அவர்கள் எனக்கு சகாயம் செய்து, அழகப்பனுடைய ஏஜென்டைக் கைது செய்து, அவனிடம் இருந்தும் அழகப்பன் இருக்கும் இடத்தை அறிந்து கொண்டனர். நான் போலீஸ் அதிகாரிக்கு வந்தனம் செய்துவிட்டு, வேறு ஒருவரை செங்கல் சப்ளை கம்பெனிக்கு ஏஜன்டாக நியமித்துவிட்டு மதராசுக்கு வந்தேன். "இந்தக் கதையை பராங்குசம் சொல்லியவாறே சொல்லியுள்ளேன். அம்மா, உமக்கு மிக்க ஆயாசம் உண்டாகி இருக்கும்'' என்றார் இன்ஸ்பெக்டர் சோமசுந்திரம்.

வடிவாம்பாளுக்கு விசனம் அதிகமாக இருந்ததே ஒழிய களைப்பு ஏற்படவில்லை. போலீஸ் இன்ஸ்பெக்டர் இரவு ஒன்பதுமணிக்கு வருவதாகக் கூறிவிட்டு, "அம்மா, நான் உண்மையை அறிந்து நடக்கவேண்டும். நீங்களும் ராஜாம்பாள் அம்மாளும் கவலை கொள்ளவேண்டாம்'' என்று மொழிந்து விட்டு, வந்தனம் செய்து சென்றார்.

சூலூர் செய்தியைப் படிக்கும் பொருட்டே ஜெமீன்தார் பராங்குசம் கோயம்புத்தூரிலிருந்து வரும் வாரப் பத்திரிகையை தருவித்துக் கொண்டிருந்தாரென்றும் உண்மையான ஜெமீன்தார் திரும்பி வந்துவிட்டால் என்ன செய்வது என்ற திகிலை அவர் கொண்டிருந்தாரென்றும் வடிவாம்பாள் அறிந்து கொண்டாள். தனது தங்கை கபடநாடகம் நடத்திய ஒரு கொலைகாரனைக் கலியாணம் செய்துகொண்டாளே என்ற வருத்தம் அவளுக்கு ஏற்பட்

டது. கனவில் நடந்து செல்பவள்போல் மாடிக்குச் சென்றாள். ராஜாம்பாளுக்கு உண்மையை உரைக்க மனம் விழையாமல், "நமது தகப்பனாருடைய பூமியைப்பற்றி ஏதோ பேசிக்கொண்டிருந்தார். நான் எனது அறைக்குச் சென்று சில கடிதங்களை எழுதவேண்டும். நீ கவலையற்றுத் தூங்கு," என்று பகர்ந்து விட்டுத் தனது அறைக்குச் சென்றாள். சென்றவள் தனது படுக்கையில் படுத்துக் கொண்டாள். இரகசியப் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஏதோ தவறு செய்து விட்டிருக்க வேண்டுமென்றும் ராஜாம்பாளின் புருஷனே உண்மையான ஜெமீன்தாரராக இருக்கக் கடவுள் அருளவேண்டும் என்றும் யோசனை செய்த வண்ணம், சோர்வும் துக்கமும் ஒருங்கு சேர்ந்து அவளைச் சிறிது நேரம் கவலைக்குள்ளாக்கின. பின்பு சற்று கண் அயர்ந்தாள்.

அவள் கண் திறந்து பார்த்த பொழுது சாயுங்காலம் இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. ராஜாம்பாளின் அறைக்குச் சென்றாள். பேச்சு ஆரம்பிக்கு முன் ஜெமீன்தார் பராங்குசம் மிகவும் களைப்புடனும் கோபத்துடனும் திரும்பி வந்தார். அவர் நாடிச் சென்ற பத்திரிகை அவருக்குக் கிடைக்கவில்லை. இன்ஸ்பெக்டர் அதை ரகசியமாகத் தபாலாபீஸ் அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொண்டதை அவர் எப்படி அறிய முடியும்? மேலும் பத்திரிகை கிடைத்திருந்தால் ஜெமீன்தார் மாயமாக மறைந்து போயிருப்பாரன்றோ என்ற யோசனை வடிவாம்பாளுக்கு ஏற்பட்டது.

"எனக்கு ஜ்வரமும் குளிரும் களைப்பும் இருப்பதால் நான் உடனே துயிலப் போகிறேன்" என்று ராஜாம்பாளிடம் சொல்லி விட்டுத் தமது அறைக்கு ஜெமீன்தார் சென்று விட்டார்.

ராஜாம்பாளுக்கு துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. "அக்கா, என் புருஷர் எத்தனை சீக்கிரத்தில் கெட்டவராக மாறிவிட்டார்" என்று சொல்லி கண்ணீர் உகுத்தாள். கண்ணைத் துடைத்துக் கொண்டாள். சிறிது நேரமானதும் அவள் எழுந்திருந்து தனது கணவனுடைய அறைக்குச் சென்று, மூன்று நிமிஷங்களில் திரும்பி வந்தாள். "அக்கா, அவர் என்ன தூக்கம் தூங்குகிறார்" என்றாள்.

சகோதரிகள் இருவரும் தமது போஜனத்தை முடித்துக் கொண்டனர். வடிவாம்பாளுக்குத் தனது தங்கையின் கணவன் ஒரு பெரிய கள்வன், கொலைகாரன் என்று தோன்றியதால், அவள் சரியாக உணவு உட்கொள்ளாமல், தனது தங்கையின் கதி என்னாகும் என்று மனம் புழுங்கினாள். என்ன ஆனாலும் ஆகட்டும் என்று தைரியம் செய்துமொண்டாள். ராஜத்திற்கு இன்னும் விஷயத்தைக் கூறவில்லை.

இரவு ஒன்பது மணிக்குச் சரியாக போலீஸ் இன்ஸ்பெக்டர் சோமசுந்திரம் வந்தார். வடிவாம்பாள் அவரைக் கண்டதும் சிறிது அச்சமடைந்தாள். அவள் மெல்லிய குரலில், "பிரபு வந்து விட்டாரா, அம்மா?" என்று கேட்டார்.



"வந்துவிட்டார். நல்ல தூக்கத்தில் இருக்கிறார். நீங்கள் ஏதோ தவறுதலாக இந்த மனுஷரைச் சந்தேகிக்கிறீர்கள்" என்றாள் வடிவாம்பாள்.

"பயப்பட வேண்டாம். இவர் உண்மையில் அழகப்பனாக இருந்தால் நியாயத்தின்படி இவர் தமது பதவியை இழக்க வேண்டியதே. இவருடைய வலது புஜத்தின் மீது கை. அ. என்ற எழுத்துக்கள் இல்லாமல் இருந்திருந்தால் அந்தப் போலி ஜெமீன்தாரரை நாம் சிறைமனைக்கு அனுப்பவேண்டும். அப்பொழுது இவர் நிரபராதி அன்றோ?" என்றார்.

அதைக் கேட்டதும் வடிவாம்பாள் இணங்கினாள். இன்ஸ்பெக்டர் சோமசுந்திரம் அந்த ஸ்திரீயை அழைத்துக்கொண்டு மெதுவாக ஜெமீன்தார் அறைக்குள் நுழைந்தார்.

ஜெமீன்தார் துயின்று கொண்டிருந்தார். வலதுபுஜம் அறையின் கூரையைப் பார்த்த வண்ணம் இருந்தது இன்ஸ்பெக்டருக்கு அனுகூலமாயிற்று. தமது கையில் கொண்டு வந்திருந்த மெழுகு வத்தி தீபத்தை அருகே வைத்துவிட்டு சிறிய கத்திரிக்கோலை எடுத்துக் கொண்டார். மெதுவாக ஜெமீன்தார் அணிந்திருந்த ஷர்ட்டை புஜத்தின் பக்கம் சப்தம் செய்யாமல் கத்தரித்தார். உள்ளே பயில்வான் பனியனை ஜெமீன்தார் அணிந்திருந்தார். போலீஸ் இன்ஸ்பெக்டர் புஜத்தின் மீது இருந்த பனியனை சிறிது விலக்கினார். கை. அ. எனும் எழுத்துக்கள் அச்சடித்தாற்போல் காணப்பட்டன! வடிவாம்பாளும் அதைக் கண்டு உண்மையை அறிந்தாள். மனதை தைரியப்படுத்திக் கொண்டாள்.

பின்பு இருவரும் தீபத்துடன் கீழே வந்து விட்டார்கள். கீழே வந்ததும் துப்பறிபவர் வடிவாம்பாளை நோக்கி, "அம்மா, தைரியமாகி நான் சொல்கிறபடி நடக்கவேண்டும். நீங்களும் உமது தங்கையும் இன்னும் பத்து நிமிஷங்களில் இந்த வீட்டை விட்டு, சிதம்பரத்திலுள்ள வீட்டிற்குச் செல்லவேண்டும். மோட்டார் வண்டியை ஆயத்தம் செய்யுமாறு டிரைவருக்குச் சொல்லுகிறேன். நான் இன்றிரவை இங்கேயே கழிக்கப்போகிறேன். நாளைக்காலையில் நான் தங்களைப் பார்க்கிறேன்" என்று சொன்னார், பின்பு அவர் "டிரைவரை"ப் பார்க்கச் சென்றார்.

வடிவாம்பாள் தனது சகோதரியின் அறைக்குச் சென்றாள். எப்படி அந்த ஸ்திரீ. ரத்தினம் ராஜாம்பாளுக்கு அவளது புருஷனது சரிதையைக் கூறினாளோ அது எனக்குத் தெரியாது. அதைப் பற்றி எனக்காவது பிறருக்காவது அவள் கூறவே இல்லை.

அன்றிரவே அவர்கள் அச் சிறுவீட்டை விடுத்து சிதம்பரம் சென்று விட்டனர். அடுத்த நாள் காலையில் திடீரென்று கருப்ப நோய் ராஜாம்பாளுக்கு உண்டாயிற்று. குழந்தை பிறந்தது, ஆனால் ராஜாம்பாள் மூன்று தினங்களானதே விசனத்தினாலும் அவமானத்தினாலும் இறந்து போனாள். பின்பு அக் குழந்தையும் இறந்து போயிற்று. வடிவாம்பாள் அன்று முதல் சோகம் மேலீட்

டால் மெலிந்து உலர்ந்து போன கொடிபோல் ஆகி விட்டாள். நான் அவளைக் கண்டு துக்கம் விசாரிக்கச் சென்றிருந்தேன். பாவம்! தாய்க்கு கொடுத்த மொழியினை நன்கு காத்தும் அவளுக்கு ஒரு பலனும் ஏற்படவில்லை அல்லவா?

போலி ஜெமீன்தார் கைது செய்யப்பட்டு கோயம்புத்தூருக்கு அழைத்துச் செல்லப்பட்ட செய்தியை சோமசுந்திரம் வடிவாம்பாளுக்கு உரைத்து விட்டுச் சென்ருர். உண்மையான சீமான் பராங்குசம் ஜெமீன்தார் பதவியில் ஸ்திரமான ஸ்தானத்தை வகித்தார். அவருடைய சகோதரியர் உண்மையை அறிந்த பின் தமது சகோதரனை அன்போடும் நோக்கினர். போலி ஜெமீன்தார் மூதன்முதலில் தம்மிருவரையும் சூலூர் மாளிகையில் சந்தித்த பொழுதும் கொஞ்ச நாட்கள் தங்கியிருந்தபொழுதும் செய்த சிறுபிழைகளையெல்லாம் சொல்லிச் சொல்லி சிரித்தார்கள். அழகப்பன் அவர்கள் நகையாடிய பொழுது "நான் எத்தனையோ வருஷங்கள் வெளியூரில் இருந்தமையால் இந்தப் பிழைகள் ஏற்படுகின்றன" என்று சொல்லியிருந்தானும். "உங்களுடைய பெயர்களையே நான் மறந்து விட்டேன்" என்று சொல்லிக்கொண்டிருந்தானும்.

அழகப்பன் செய்த குற்றங்களுக்கு அவனை அந்தமான் தீவுக்கு விசாரணை தீர்ந்த பிற்பாடு நீதிபதிகள் உத்திரவுப்படி அனுப்பப்பட்டான்.

வடிவாம்பாள் சிதம்பரத்தில் இருந்த மாளிகையில் ராஜாம்பாளின் ஓவியத்தைப் பார்த்துக்கொண்டும் சிந்தித்துக் கொண்டும் துக்கப்படுவாள். போலி ஜெமீதார்தான் அவளுடைய சாவுக்குக் காரணம் என்பாள். என்ன சொல்லியும் பயன் என்கொல்? ஆண்டாண்டு அழுது புரண்டாலும் மாண்டார் திரும்புவரோ?" என்பதை நான் அவளுக்கு எடுத்துரைப்பேன். அதைக் கேட்டு ஒருவாறு சாந்தம் பெறுவாள். இப்பொழுது வடிவாம்பாள் தனது முதிய வயதிலும் ஏழைமக்களுக்குக் தான தர்மங்கள் செய்து அவற்ருல் ராஜாம்பாளின் ஆன்மா இன்புறட்டும் என்று சொல்லுவதை நான் கேட்டிருக்கிறேன்.



# "மூக்கு"

சசுவாணன்

மூக்கைப்பற்றி கட்டுரை எழுத உட்கார்ந்தேன். என் மருமகன் கண்ணன் மூக்கில் துணியை விட்டுக்கொண்டு தும்மல் ஒன்று போட்டான். சகுனம் சரியாக இல்லையோ என்று எண்ணியபடி பக்கத்தில் இருந்த பொடி டப்பியை எடுத்தது என் கை.

'சர்'ரென்று மூக்கில் உறிஞ்சிய பொடி என் மூளையை முடுக்கியது. முதலில் நாம் சுவாசிக்க மூக்கு இல்லாவிட்டால் நாம் வாழவே முடியாது.

மழை காலமோ, பனி காலமோ வந்துவிட்டால் மூக்கின் விரோதி ஜலதோஷம் பீடித்துக்கொள்வது வழக்கம்.

சாப்பாட்டு ராமன்கள் மூக்கு முட்ட சாப்பிடுவதில் அலாதி ஆசை கொள்வது இயற்கை. ரகசியமாக ஒரு காரியத்தைச் செய்து கொண்டிருக்கையில் வேறு யாராவது வந்துவிட்டால், "கழுகுக்கு மூக்கில் வியர்த்தமாதிரி இவன் வந்துவிட்டானே" என்று அலுத்துக் கொள்வது சிலரது வழக்கம்.

பழைய காலத்தில் மூக்கு குத்திக் கொள்ளாத பெண்களை பார்ப்பது அரிது. இன்றைய உலகில் அநாகரீக மாயிற்றே அது.

சிலருக்கு மூக்குக்குமேல் கோபம் வருவது இயற்கை. பறவைகள் மூக்கின் (அலகு) உதவிகொண்டு செய்யும் காரியங்களை நான் கூற வேண்டியதில்லை.

நல்ல மணமுள்ள பட்சணங்களைக் குசலப்பிரச்னம் விசாரிக்க மூக்கைத்தவிர வேறு எதனுல் முடியும்?

பையன்கள் உபாத்தியாயர்களுக்கு "கிளி மூக்கன்" "குடமிளகாய் மூக்கு" என்று அடைமொழி இட்டு அழைப்பது நமக்கு தெரியாததல்ல.

மூக்கினுல் குறட்டை விட்டு தூங்குவது சிலரது வழக்கம்.

இராமாயணத்தில் லெட்சுமணன் சூர்ப்பனகையின் மூக்கை அறுத்த கதையை நாம் படித்திருக்கிருேம்.

தெனுலிராமன் முன்பு காளி ஆயிரம் தலையுடன் பிரசன்னமானுள். காளியைப் பார்த்த தெனுலிராமன் கடகடவென்று சிரித்தான். உடனே காளி "தெனுலிராமா! நீ ஏன் சிரித்தாய்?" எனக் கேட்டாள்.

தெனுலிராமன், "தாயே! நான் ஒரு மூக்கை வைத்துக்கொண்டு ஜலதோஷம் வந்தால் எத்தனை கஷ்டப்படுகிறேன். நீயோ ஆயிரம் முகத்தில் ஆயிரம் மூக்கை வைத்துக்கொண்டிருக்கிருய். உனக்கு ஜலதோஷம் வந்தால் எத்தனை கஷ்டம் வரும் என்பதை நினைத்து சிரித்தேன்" என்ருன். காளியும் அவனது ஹாஸ்யத்தைக் கண்டு சிரித்தாள்.

கண்ணில் போடும் கண்ணுடிக்கு ஏன் 'மூக்குக் கண்ணுடி' என்று பெயர் வந்தது என்ற கேள்வி என்னை திகைக்க வைத்தது.

கண்ணுடியின் மையத்தை மூக்கு தாங்கிக்கொள்வதால் ஏற்பட்ட பெயரோ என்று நான் எண்ணுகிறேன்.

ஒருவருக்கு பிள்ளை பிறந்து, இறந்துகொண்டே இருந்து கடைசியில் ஒரு பிள்ளையோ, பெண்ணோ தங்கினுல் அவர்கள் மூக்கில் வளையம் ஒன்று போட்டு மூக்கன் என்ருே, மூக்காண்டி என்ருே, மூக்கம்மா என்ருே, பெயர் வைப்பது நம் நாட்டு வழக்கமாக இருக்கிறது.

மூக்கின்மேல் விரல் வைத்து ஆச்சரியப்படுவது நமக்கு வியப்பான விஷயமல்லவே!

சிறு குழந்தைகள் சண்டை இட்டுக்கொண்டு நம்மிடம் வந்து முறையிடும்போது சிலர், 'அவன் வரட்டும் இங்கு. அவன் மூக்கை அறுத்து மிளகாய்பொடி போட்டு விடுகிறேன்' என்ற சொற்களை நாம் கேட்டிருக்கலாம்.

பழைய கால கதை ஒன்று எனக்கு நினைவு வருகிறது.

மூக்கரையன் என்று ஒருவன் இருந்தான். அவனுடைய மூக்கைப்பற்றி பிறர் இழிவாக பேசுவது அவனுக்கு பிடிக்கவில்லை. இதற்காக யுக்தி ஒன்று செய்தான் அவன்.

ஒருநாள் நடு வீதியில் நின்றுகொண்டு வானத்தை நோக்கியபடி, 'கடவுளே! உன் தரிசனம் இன்ருவது கிடைத்ததே. இதற்காக எத்தனை நாள் தவம் கிடந்தேன்' என்ருன்.

இதைக் கேட்டு மற்றவர்கள் திகைத்தார்கள். வானத்தை நோக்கியபடி 'ஒன்றும் தெரியவில்லையே' என்ருர்கள்.

உடனே மூக்கரையன் 'நீங்கள் மூக்கை அறுத்துக்கொண்டு பார்த்தால் தான் கடவுள் தரிசனம் கிடைக்கும். கடவுள் மறையும் நேரமாகி விட்டது. சீக்கிரம்' என்று அவசரப் படுத்தினுன்.

எல்லோரும் மூக்கை அறுத்துக்கொண்டு பார்த்தவுடன் ஒன்றும் தெரியவில்லை. அவர்கள் மூக்கரையனை வைது தீர்த்தார்கள்.

உடனே அவன், 'என் மூக்கைப்பற்றி இனி ஒன்றும் சொல்ல மாட்டீர்கள் அல்லவா? அதற்காக செய்த யுக்தி இது!' என்ருன். மற்றவர்கள் வெட்கி தலைகுனிந்தனர்.

மூக்கைப்பற்றிய சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைத்தேன். ஏனென்ருல் மூக்குப்பொடி தீர்ந்துவிட்டது. என் கற்பனையும் நின்றுவிட்டது.

---

# எந்நாளோ?

ம. க. சிவசுப்ரமணியன்

★

வறியவனுய் ஏழையனுய் இரப்பா னுக்கு
வீசுதற்குப் பொருளில்லை என்பார் ஆனுல்
வெறிகேட்கும் காளிக்குப் பலியாய்ப் போட
விலைகொடுத்து வெள்ளாட்டை வாங்கி வைத்தே
அறிவழிய ஆடுபலி கொடுத்தே கூடம்
ஆதியெல்லாம் பெற்றுவந்து பூசை தன்னை
நெறிதவரு தாற்றுகின்ற பேதை மாந்தர்
நல்லறிவு பெறுகின்ற நாள்எந் நாளோ? 1

ஒட்டியுலர் வயிறெரியப் பசியாற் ருது
ஓலமிடும் இரவலர்தம் குரல்கே ளாது
இட்டளத்தை யறியாது இனிதாற் ருது
இருப்பதுடன் விரட்டியடித் தோட்டு கின்ற
கெட்டகுணங் கொண்டசில பேதை மாந்தர்
கோடிபொருள் கொடுக்கின்ருர் கோயி லுக்கும்
துட்டமுனி புங்கவர்க்கும் அவர்கள் செய்கை
தூர்க்கின்ற அறிவாளும் நாள்எந் நாளோ? 2

வாடியுலர் கும்பியரை வாவென் ருது
வயிருர உணவிட்டு மகிழூட்டாது
தாடிவளர் சாமியாரைத் தெய்வம் போலத்
தான்மதித்து விருந்திட்டுத் தாளில் வீழ்ந்து
கோடிநிதி நல்கியுடன் கரங்கள் கூப்பிக்
கும்பிட்டு வணங்குகின்ற பேதை மாந்தர்
ஆடியெனப் பொருள்விளக்கும் அறிவைத் தேடி
அலைகின்ருர் எனக்கேட்கும் நாள்எந் நாளோ? 3

தொடர் கதை:




39

எழிலரசியின் வீட்டை விட்டு வெளியேறிய கண்ணனின் உள்ளம் எண்ணக்கடலில் நீந்தலாயிற்று.

"எண்ணத்தில் உயர்ந்தவர்கள் வாழ்வில் தாழ்ந்து விடுவது வியப்பாக இருக்கிறதே! நல்லவர்கள் நலிந்து பாழாவதைத் தடுக்க நாட்டில் ஒரு முயற்சியும் நடைபெற வில்லையா? என் உயர்ந்த எண்ணங்கள் உடையவர்கள் இப்படி அல்லலுற வேண்டும்? "நல்லவர்கள் அறநெறியில் வாழ்ந்து அதனால் துன்பமும் வறுமையும் அடைந்தாலும் அதைக் 'கேடு' என உலகம் ஏற்றுக்கொள்ளாது" எனத் திருக்குறள் பேசுகிறதே!

"கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு."

என்ற மறைமொழி பொய்யா? இருக்காது. இன்று ஞாலம் போற்றும் கலைஞர்கள், தலைவர்கள், புலவர்கள், அறிஞர்கள், சான்றோர்கள் தங்கள் வாழ்க்கையில் எவ்வளவு தாழ்ந்து போனார்கள்! எவ்வளவு துன்பம் துய்த்தார்கள்! ஆனால், அவர்கள் 'எண்ணங்கள்' 'கொள்கை' 'உணர்வுகள்' இன்று மட்டுமென்ன; என்றும் நிலைத்து நிற்பதல்லவா! ஆம், சான்றோர்கள் தங்கள் விலைமதிப்பற்ற புகழுக்கும் அறிவாற்றலுக்கும் விலையாகத் தங்களை, தங்கள் தன்னலம்—வாழ்க்கை—இன்பம்—உரிமை அனைத்தையும் இழந்து விட வேண்டும்! ஆ! என்ன கொடிய விலை!

எவ்வளவு உயர்ந்த குடும்பம்! எவ்வளவு தாழ்ந்து விட்டது! எழிலரசிக்கும் உடலில் நோயே இல்லை. உள்ள நோய்தான் அவளுயிரைக் கொல்லுகிறது. எழிலரசிக்கும் அன்பொளியிடம் காதலிருக்கிறது போலிருக்கிறதே! ஐயோ! என்ன வாழ்க்கை! எழிலரசி கைம் பெண்ணாகி விட்டாள் என்ற உண்மை மட்டும் அன்பொளிக்குத் தெரிந்தால்......! அப்பா!!......

எனப் பலப்பல எண்ணியபடி வீடு வந்தான். அறையில் அன்பொளியும் கண்மணியும் பேசிக்கொண் டிருந்தனர். கை கால் கழுவிக்கொண்டபின் கண்மணியை அழைத்தான்.



"கண்மணி, நான் எழிலரசி வீட்டிற்குப் போயிருந்தேன். அவள் உடல் நிலை அப்படியே தான் இருக்கிறது. உன்னை வரச்சொன்னாள் எழில். உன் 'மாமியார்' கூடக் கேட்டார். 'கண்மணி, நீ 'முதலாளி'யாகி விட்டதற்கு வருந்தினார். நீ 'பன்மை'யாகி விட்டதைக் கூறிவிட்டேன்'" எனக் கூறிக் குறும்புச் சிரிப்பு சிரித்தான். அவளுக்கு ஒன்றும் விளங்க வில்லை.

"என்ன சொல்கிறீர்கள்?..." என்றாள் குழப்பத்தோடு.

"ஐயோ! இது புரிய வில்லையே!...'வருங்கால அம்மாவே!' நீ முதல் ஆளியாக, அதாவது வயிறு பெருத்தவளாக—சூல் மகளாக ஆகிவிட்டதைச் சொல்லி விட்டேன் என்றேன்! முதலில் மகிழ்ச்சி யடைந்தார். பிறகு 'நல்லபடி ஆகவேண்டுமே' என்று வருந்தினார்..." என்று கூறி அவள் கையைப் பற்றித் தன்னருகில் இழுத்து, காதருகில், "கண்மணி, நான் எழிலரசி வீட்டிற்குப் போனதை அன்பொளி அறியக்கூடாது. இன்னொரு உண்மை சொல்லட்டுமா? எழிலுக்கு அன்பொளி மீது 'காதல்' உண்டு என்பது..." அவன் சொல்லி வரும்போதே வியப்பால் 'ஆ!' வெனக் கத்திக் கொண்டு விழிகள் மலர நிமிர்ந்தாள். உடனே தன் குறும்புத் தன்மையோடு அவள் காதை மெல்ல 'நறுக்'கென்று கடித்து விட்டான்!

"ஆ!...ஐயோ!..." எனக் கத்தியபடி பதறித் துடித்து, சற்று நகர்ந்து, காதைப் பிடித்துக் கொண்டு சீற்றம் மிக, "என்ன மாமா இது? 'அஃறிணை' போல நடந்து கொள்கிறீர்களே!" என்றாள் கடுமையான முகத்தோடு. சூற் பருவத்து உணர்ச்சிக் கொந்தளிப்பில் இயல்பான பொறுமையும் சிதைந்து விட்டது!

அவள் விரல்கள் கடியுண்ட இடத்தைத் தடவிக்கொடுத்தது. அவளருகில் நெருங்கி கடித்த காதைத் தன் கையால் தொட்டுப் பார்த்து, "த்சொ... த்சொ...ரொம்ப வலிக்கிறதா? நான் மிக மறைவான செய்தியைச் சொன்னால் நீ 'ஆ' என்று கத்திவிட்டாய்! அதனால் தான் விளையாட்டிற்கு உன் காதைக் கடித்து விட்டேன்!" என்றான் இரக்கப்படுவது போல நடித்து.

"ஐயோ! காதைக் கடித்தாராம்; காதை! குறும்பு!...எப்பொழுதுமா விளையாட்டுத் தன்மை?......"

"உம்...இனிமேல் எங்கே விளையாட முடியும்? கண்மணி, இனி நீயும் நானும் முன் போல விளையாட முடியாது! என் தெரியுமா? 'புதிய உயிர்' ஒன்று இந்த உலக உறுப்பினனாகச் சேரப் போகிறதே' அப்பொழுது நாம் விளையாடினால் அந்தப் புது விருந்தினருக்குக் கொஞ்சம் அஞ்சியல்லவா விளையாட வேண்டியிருக்கும்! அதனால்தான் ஆவல் தீர இப்பொழுதே விளையாடி விடலாம்!..." குறும்பாகச் சிரித்தபடி கூறினான்.

"ஐயோ!..." என 'அழகு' காட்டினாள் கண்மணி. அவனும் அவளுக்கு 'அழகு' காட்டினான். ஒரே சிரிப்பு!

"கண்மணி, இங்கே பார்!" காதலனும் காதலியும் கவிதையைப்போல இல்லறம் நடத்துவர். எதுகையும் மோனையுமாக காதலனும் காதலியும்; காதலர் 'உள்ளம்', 'உழைப்பு' என்ற 'நேரசை', 'நிரையசை'ச் சீர்களுடன் சிக்கலில்லாமல் கூடி வாழ்வார்கள். இப்பொழுது—குழந்தை—'தளை' வருகிறது. வரட்டும்! தளை வந்தால்தான் 'பாட்டு' இன்னும் அழகாக இருக்கும். அப்பொழுதுதான் கவிதைக்கு உயிர் வரும். கவிதையின் பொருளும் தோன்றும்! கவிதையின் நோக்கமும் நிறைவேறும். "நீயும் நானும் இந்த 'வாழ்க்கை யாப்பிலக்கணத்திற்கு' இலக்கியமாகிறோம்!

வரட்டும். 'ஈன்று புறந் தருதல் உன் தலைக்கடனே!' 'சான்றோன் ஆக்கு தல் என்தலைக் கடனே!' என்ன 'தலைக் கடனோ!' 'வயிற்றுக் கடனோ!' 'இந்த வயிற்று'க் கடனுக்கே வருவாய் வழி இல்லை! இப்பொழுது ஒரு 'கடன்' வருகிறது! இது ஒரு புது வருவாய்! வரட்டும்! 'இந்த உலகத்தை'க் கொஞ்சம் பார்க்கட்டும்! "கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்ற பாட்டு கம்பன் பாடியதில் ஒரு அரிய பொருள் புதைந்திருக்கிறது. ஈன்று புறந் தரும் தாய்க்கடன் எவ்வளவு துன்ப மானது! இந்தத் துன்பத்தைக்—கடனைத்தான் / கம்பன் பாடினானோ என்னவோ! அவனைத்தான் கேட்க வேண்டும்!......"

கண்ணனின் சொற்பொழிவு வளர்ந்து கொண்டே போகும் முன் கண்மணி இரு காதுகளையும் கைகளால் மூடிக்கொண்டு, "போதும் மாமா" என்றாள். அவள் குறும்பைச் சுவைத்த வண்ணம் வாயை தன் வலக்கை யால் அழுத்தி மூடிக்கொண்டு அசையாக் கற்சிலையாய் அவளையே பார்த் துக்கொண்டு நின்றான்!

அவன் நின்ற காட்சியைக் கண்டு அவள் சிரித்து விட்டாள். அவனும் சிரித்தான்.

"கண்மணி, நீ நாளைக்கு எழிலரசி வீட்டுக்குச் சில பொத்தகங்களை எடுத்துக் கொண்டு போ. படிக்க வேண்டும் என்று எழில் கேட்டார். கண்மணி, துன்பப்படுபவரைப் பார்த்துப் பார்த்து 'ஞாலத்'தைப் படிக்க முடியாதவர் வாழ்ந்து என்ன பயன்? 'ஆற்றுதல் என்பதொன்று அலர்ந் தவர்க்குத் துணை புரிவதே அறம்' என்பது எவ்வளவு உயர்ந்த கொள்கை! ஆ! தமிழ் நாட்டுப் பண்பே! தமிழ் நாட்டு அறிவே! தமிழ் நாட்டு அறமே! நீ வாழ்க! வாழ்க! வாழ்க!!" என்றான் உணர்வு பொங்க.

கண்மணி ஏதோ ஆழ்ந்த நினைவில் மூழ்கியதை அவள் புறத்தோற்றம் தெளிவாக வெளிக்காட்டியது.

இருவரும் சற்று பேசிய பின் அறையினுள் சென்றனர். அன்பொளி எதையோ படித்துக் கொண்டிருந்தான். அவனைக் கண்டு கண்ணன் சிரித்தான்.

"கண்மணி, 'அன்பொளியைப் பார்த்தால் 'பூப்பெய்திய இளம் பெண்' போல இருக்கிறதல்லவா! எப்பொழுதும் அறைக்குள்ளேயே அடைபட் டிருப்பதை எண்ணினால் சிரிப்பு வருகிறது! இது ஒரு நல்ல உண்மை! அன்பு, நீ எவ்வளவுக் கெவ்வளவு வாயை மூடிக்கொண்டிருக்கிறாயோ, அவ்வளவுக் கவ்வளவு மதிப்பில் உயர்கிறாய்! மதிக்கப் படுகிறாய்! திறந் துள்ள கையை விட மூடிய கைக்குத்தானே மதிப்பு மிகுதி! மறைக்கப் படுவதற்கு மதிப்பு மிகுதி. பரபரப்பும் மிகுதி. வரவேற்பும் உண்டு. குமரிப் பெண்களுக்கு ஏன் இவ்வளவு மதிப்பும் பெருமையும் உண்டாகி யிருக்கிறது? அவர்கள் வெளியே தலையைக்கூட காட்டாமல் மறைவில் ஒளிந்து கொண்டிருக்கின்றனர்! அதனால்தான்!......"

மூவரும் நகைத்தனர்.

"கண்ணா, உங்கள் வீட்டிற்கு வந்து, உங்கள் இல்வாழ்க்கையைக் கண்ட பின்னர் ஒரு 'உண்மை'—உயர்ந்த 'கருத்து' ஒன்று எனக்குத் தோன்றிற்று. "பண்பும் அறிவும், மனைவியும் கொழுநனும் போல. இவை இரண்டும் சேர்ந்தால் தான் உண்மையான பேரின்ப வாழ்வு அமையும்." என்பதுதான்! ஐயோ! இந்த உலகம் இருக்கிறதே; நல்ல உலகம்! உண்மை



அறியாத உதவியற்ற உலகம்! சட்! எனக்கு இவ்வுலகின் மீது சொல்ல வியலாத வெறுப்பு உண்டாகிறது. சில பொழுதுகளில் இந்த உலகத்தை விட்டு 'வேறு' எங்காவது ஓடி விடலாமா; அங்கேயாவது அமைதியாக வாழலாமா? என்று உள்ளம் துடிக்கிறது! ஐயோ! என்ன கொடிய உலகம்!"

அன்பொளி சீற்றத்தோடு பேசினான். உணர்ச்சித்தீ 'குபீர்' எனக் கொழுந்து விட்டெரியத் துவங்கி விட்டது. நோயில் வீழ்ந்து எழுந்ததால் நரம்புகளின் ஆட்சிக்கு அடிமையாகி இருந்தான்.

"அன்பு, நீ பேசுவது உண்மையில் 'கலித்தொகையும், திருக்குறளும், புறநானூறும்' கற்ற அறிஞன் பேச்சாக இல்லை. 'பெரிதே உலகம் பேணு நர் பலரே' என்ற ஒப்பற்ற பாடலைப் பாடிய புலவர் மரபில் வந்த புலவன் பேச்சாக இல்லை 'உலகம்' என்று 'எதை' நீ குறிப்பிடுகிறாய்? அது என்ன ஒரு கற்பனைப் பொருளா? காண முடியாத 'பண்பா?'

அன்பு, உலகில் நீ ஓர் 'உயிராக' வாழப் பிறந்த பின்பு நீ ஞாலத்திற் குரியவனாகி விட்டாய். ஞாலமும் உனக்கு உரிமையாகி விட்டது. அப் பொழுது நீ எந்த அளவிற்கு உலகினைப்பற்றி "எண்ணவும், பேசவும், தீர்ப்பளிக்க"வும் உரிமை உண்டோ; அந்த அளவிற்கு 'உலகம்; உன்னைப் பற்றி 'எண்ண, பேச, தீர்ப்பளிக்க' உரிமை உண்டு. அதுதான் அறம். அதை மாற்றவோ, ஏமாற்றவோ, நீக்கவோ முடியாது. புகழுரை கூறி உலகம் உன்னைப் போற்றினால் அதை மட்டும் மகிழ்வோடு வரவேற்கிறாய்; ஆனால் இகழ்ந்து 'பழி' கூறினால் வெறுக்கிறாய்! உலகைத் தூற்றுகிறாய்! அவ்வாறு செய்வதால் நீ உள்ளம் பண்படாதவன் என்று பிறர்க்கு உணர்த்துகிறாய். உலகைப் பற்றி நீ கவலைப் படாமலிருக்கலாம்; ஆனால் உலகம் உன்னைப் பார்த்துக் கொண்டே இருக்கும்; பேசிக்கொண்டே இருக்கும்.

உலகைக் குற்றங் கூறுகிறவர்கள், தூற்றுகின்றவர்கள் ஒன்றை மறந்து விடுகிறார்கள். தாங்களும் அந்த உலகில் வாழ்கின்றவர்கள் என்பது தான்! உலகில் ஒழுகி அந்த உலகில் உழல்கிறவர்கள் என்பதையும் அறியா மல் பேசுகிறார்கள். உலகைப் பற்றித் தீர்ப்பு கூறும்போது, அவர்கள் முதலில் தங்களையே ஆராய்ந்து, உண்மை தெளிந்து தீர்ப்பு செய்து கொண்டு, பிறகே உலகை நோக்க வேண்டும்.

ஊரில் வாழ ஒருவன் ஒப்புக்கொள்ளும்போதே அவன் 'ஊர் வாழ்வை ஒப்பி ஏற்றுக் கொள்கிறான். அதன் சட்ட திட்டங்களுக்கும் வழக்க பழக் கங்களுக்கும் இணங்கி ஊர் நலத்தை ஏற்றுக்கொள்ளுகிறேன்' என உறுதி மொழி கொடுத்தவனாகிறான். அவன் அந்த மக்கள் கூட்டத்தின் இன்பத் திலும் துன்பத்திலும் நன்மையிலும் தீமையிலும் தொடர்பும் உரிமையும் கடமையும் உடையவனாக இருக்கிறான். ஆதலால்தான் தன்னுயிரைத் தானே அழித்துக் கொள்ளவும் உரிமையில்லை. உண்மை என்பது எப்போதும் மாறுவதில்லை. அது மாறாத நிலையில்தான் இருக்கிறது."

"கண்ணா, நீ சொன்னது உண்மைதான். அந்த உண்மையை உலகம் உணரவில்லையே! கள்வனை நம்புகிறது; கள்ளமற்ற நல்லவனை ஒறுக்கிறது. கயவனைத் தலைவனாக்குகிறது; நல்லவரைப் பொல்லாதவனெனப் பழிக் கிறது. உண்மையைப் பொய் என்கிறது. பொய்யை மெய் என்கிறது. இதனால் 'உண்மை' எது 'பொய்' எது என்றே உணரமுடியாத வண்ணம்

குழப்பம் உண்டாகி விட்டதே! இதன் விளைவாக 'உண்மை'யை மக்கள் நம்பாது பொய்யை நம்புகின்றனர். உண்மை என்பது வறண்டகொள்கையாக, வாழ்க்கைக்காக அமையாத, வாழ்க்கைக்கு உதவாத ஓர் கற்பனைப் பொருளாக மதிக்க முனைகிறார்களே!"

"அதுமட்டுமல்ல. என் மாமா, 'உலக சட்டங்கள்' ஏற்றுக் கொள்ளுபவைகள் தான் 'உண்மை'யா?"

"இல்லை கண்மணி, சட்டங்களுக்கு அப்பாற்பட்டது உண்மை! கட்டுப்பாடுகளுக்கு அடங்கிக்கிடக்கும் 'விலங்கு' அல்ல உண்மை! அன்பு, காலம் மாறும்போது பழமை மாறி புதுமை குடியேறும். அதைக் கொண்டு 'பழமை' மடமையானது என்பதா? 'பழமை' ஒவ்வாதது நம் காலத்திற்கு, நம் சூழ்நிலைக்கு என்றால் அதை ஒதுக்கிவிட வேண்டும். பழிப்பது கூடாது. இன்று—நிகழ்காலம் 'புதுமை' என்று கருதுவதும் பிற்காலத்தில்—வருங்காலத்தில் மடமையானதாகப் பழமையானதாக மாறிவிடலாம்! இதுபோலத்தான் உண்மை காலத்தால் பொய்யாகி விடலாம். ஆனால், அடிப்படை உண்மை என்றும் மாறாது மாற்ற முடியாதது. ஆனால், அன்பு நீ சொன்னதும் ஒரு வகையில் உண்மைதான். உண்மையைத்தவிர மற்ற எல்லாவற்றையும் உண்மை என்று கருதி, நம்புகிறார்கள் மக்கள்; இதுதான் உண்மை!"

"மாமா, 'இந்த உண்மை' பொய்யாகும் காலம் வராதா?"

"வரும் கண்மணி, வரும். அன்பொளியைப் போன்ற ஆயிரம் 'அன்பொளிகள்,' உன்னைப் போன்ற 'ஆயிரம் கண்மணிகள்' இந்தக் கேள்வியை ஒரே காலத்தில் கேட்டால் அந்த நாள் நாளைக்கே வந்து விடும்!"

"கண்ணா, உலகில் 'தன்னலம்' ஒழிந்தால் தானப்பா நம் கனவு எல்லாம் நினைவாகும்."

"என்ன அன்பொளி இது! என் கொள்கைக்கு எதிராகப் பேசுகிறாயே! மக்களுக்குத் தன்னலம் மிகுதியாக வேண்டுமப்பா. மக்களுக்கு என்ன? உயிரினத்திற்கே உயிரினுஞ் சிறந்தது தன்னலம். 'தன்னலம் வேண்டும்; வேண்டும்' என மீண்டும் மீண்டும் முழங்க வேண்டும். அதுதான் நல்லது. தன்னலம் ஏன் ஒழிய வேண்டும்? இயற்கையின் அமைப்பைப் பார். உலகம் எல்லாம் தன்னலமாகவே இருக்கிறது. இயற்கையே தன்னல அமைப்பினது. எங்கு, யாரிடம் தன்னலம் இல்லை? 'தன்னலத் துறவு' இருக்கிறதே; அதுவும் ஒரு தன்னலம் தான்! 'தவம்—அறம்—ஒழுக்கம்—அறிவு—இன்பம்'...எல்லாம் தன்னலமே! பிறந்த குழந்தை 'ஆ'வென வாயைத் திறந்து அழுகிறதே; ஏன்? தன்னலம் காத்துக் கொள்ள! காதல் என்பது என்ன? தன்னலத்தின் அடிப்படையில் விளையும் பிறர் நலம்! நட்பு என்ன? உள்ளத்தின் தனிமை நோயை ஆற்றிக் கொள்ள அமைந்த வெறி உணர்வுப் பசிக்கு ஒரு மருந்து! அங்கும் தன்னலம் தான்! மேதை நிலையில் வாழும் சான்றோரின் அடிப்படை ஆவல் தன்னலத்தின் சிகரமாக இருக்கும்! 'இருவர் தன்னலம் பொது நலம்!' அவ்வளவுதானே? உலகில் ஒவ்வொரு அணுவிலும் தன்னலம் சுடர் வீசுகிறது. உயிர்கள் உண்கின்றன, உடுக்கின்றன, அணிகின்றன, அழகு செய்து கொள்கின்றன, அரசியல், வாழ்வியல் அமைக்கின்றனர், வீடும் நாடும் அமைக்கின்றனர், உழைக்கின்றனர்; பொருளீட்டுகின்றனர்; சேர்க்கின்றனர், செலவிடுகின்றனர்; புகழ் வேட்டையாடுகின்றனர்; சட்டம், அறம், அற



நிலையம் அமைக்கின்றனர்; அறிவியற் கலை, ஆராய்ச்சி, பொறியியல் ஆகியவைகளை விளக்கின்றனர்; மொழி உண்டாக்கி முரணியும் அணைந்தும் பேசுகின்றனர்; நாடு சுற்றல், உவகைச் செலவு செல்லல், ஒப்பந்த உடன்படிக்கைகள், அரசியல் அமைப்புக்கள், ஆட்சி முறைகள், பட்டங்கள், பல்கலைக் கழகங்கள், உயர் நிலைகள், அலங்காரங்கள், நாகரிகங்கள், வரலாறுகள், இலக்கியங்கள், கலைகள், மருத்துவம், இன்னும் எத்தனையோ கோடானு கோடி அமைப்புக்கள், இயக்கங்கள் எல்லாம் தன்னலத் திட்டங்கள் தான்! இயற்கையை அறிந்து ஆட்சி செய்கின்றனர் மக்கள் என்றால் அவர்களின் தன்னல உணர்வுதான் அம்முயற்சியை விளைவிக்கிறது! 'வாழ்வு'—'உலகம்' என்பவை தன்னலம் என்னும் தாய் வயிற்றில் தோன்றிய குழந்தைகள்! அறிவு, அறம், அன்பு, அருள், இரக்கம், பொதுமை, பண்பு, சட்டம், ஒழுக்கம், உரிமை, தூய்மை, வாய்மை, நேர்மை, மாண்பு, கற்பு, கல்வி எலலாம் மக்கள் தங்கள் நலத்திற்காகவே அமைத்துக் கொண்டவை. எங்கும் எதிலும் தன்னலத்தையே கண்டு, தன்னலத்திற்காகவே வாழ்கின்றனர். ஓருயிர் உயிரான 'அமீபா'விலிருந்து 'மனிதன்' வரையும், அஃறிணையிலிருந்து உயர்திணை ஈறாக எல்லாம் தன்னலம் என்ற பேராற்றலினால் இயக்கப்படும் பொறிகள்! தன்னலம் என்னும் தோன்றா மாயையின் திருவிளையாடலே யாவும்! உலகின் முதல் அடிப்படைக் கொள்கை—நோக்கம்—குறிக்கோள்—எல்லாம் தன்னலமே. இவ்வுண்மை உணராமல் 'தன்னலத்தை' ஒழிக்க வேண்டுமென்பது 'ஏமாற்றம்' அல்லவா? தன்னலத்தின் உண்மையை, தன்மையை, உண்மைக் கொள்கையை, தன்னலத்தின் அமைப்பியற்கையை நல்ல முறையில் மக்களுக்கு உணர்த்த வேண்டுமென்று சொல். ஏற்றுக்கொள்கிறேன். வரவேற்கிறேன். 'உலகம்—தன்னலம்' என்பது தான் எனது கொள்கை. அன்பொளி, தன்னலம் என்பது எங்கே பாழாகிறதோ; அங்கே துன்பம், பகை, வெறி, போர், அழிவு, ஊழி உண்டாகி விடுகிறது! இதுதான் உலகின் ஒவ்வொரு மாறுதலுக்கும், கேட்டுக்கும் அடிப்படைக் காரணமாகும். ஒவ்வொருவரும் தம்முடைய உண்மையான தன்னலத்தை உணர்ந்து அதைப் போற்றி ஒழுகினால்; பிறருக்கு ஒரு சிறு—மிக மிகச் சிறு தீங்கும் நேராது. நான் திருந்தினால் என் வீடு திருந்தும், என் வீடு திருந்தினால் எங்கள் தெரு திருந்தும்; எங்கள் தெரு திருந்தினால் எங்கள் ஊர் திருந்தும்; ஊர் திருந்தின் கோட்டமும், கோட்டம் திருந்திடின் மாவட்டமும்; மாவட்டம் திருந்திடின் மாநிலமும்; மாநிலம் திருந்திடின் நாடும், நாடு திருந்துமேல் என் ஞாலமும் திருந்தும். இன்பம் அடையும்." என ஒவ்வொருவனும் எண்ணி, உணர்ந்து, சொல்லி, திருந்தி; வாழ்ந்து, வளர்ந்து, உயர்ந்தால் ஏனப்பா 'ஞாலம்' பேரின்ப வீடாகாது? ஆகவே ஞாலத்தைப் பழிக்காதே! வாழ்த்து! "வாழிய ஞாலம் வாழிய மக்கள்," "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று பாடு! அது உலகப் பாட்டாகும்! ஞாலம் வாழ நாமும் வாழ்வோம், என்ற மெய்யுணர்வு ஓங்க வேண்டும்!"

கண்ணன் பேசி முடித்தான். பெருமூச்சு விட்டான். அன்பு சிரித்தான். அந்தச் சிரிப்பில், "அட, பித்தனே! உன் கனவு என்றைக்கு நினைவாகப் போகிறதடா!..." என்ற எள்ளல் குறிப்பிருந்தது.

அன்பொளி சிரித்துக்கொண்டே, "கண்ணா, இன்றைய 'உலகம்' எப்படியப்பா இருக்கிறது?" என வினவினான்.

"உருண்டையாக!" எனப் பதில் கூறினான் நகைச்சுவையாக கண்ணன். மூவரும் சிரித்து விட்டனர்.

பொழுது போய் விடவே விளக்கேற்றினான் கண்ணன். அடுக்களை வேலையை விரைவில் முடித்தாள் கண்மணி. உண்டு முடிந்த பின் சற்று உரையாடிக் கொண்டிருந்தனர். பேசியபடியே அன்பொளி உறங்கி விட்டான்.

"அட, உறங்கி விட்டாரே!" என்றாள் கண்மணி. வெளியே பார்த்த கண்ணன், "கண்மணி, இன்று 'முழு நிலவு' அல்லவா? வா, மாடிக்குப் போகலாம்" என்றழைத்தான்.

★ ★ ★

நிலவுக்கு விருந்தளிக்க விண்மீன்கள் கூடியிருக்கும் அந்த இரவின் அமைதியான சூழ்நிலையில் அவள் நெஞ்சக்கடல் பொங்கிப் புரண்டு சிரித்து விளையாடிக் கொண்டிருந்தது. புதுப்புது நினைவு அலைச் சுருள்கள் சுருண்டெழுந்து புரண்டன. நெடிது வளரும் இன்பக் கனவுகள் பெருமூச்சுக்களாகப் பாய்ந்தன.

கண்மணியின் உவகையை உரைக்க வியலுமா?

"அன்பு எவ்வளவுக்கெவ்வளவு கொடுமையானதோ, அவ்வளவுக்கவ்வளவு இனிமையானதும் அமைதியானதும் கூட!" என எண்ணி மென்னகை பூத்தாள்.

அழகு நிலவின் வெண்ணொளி வீட்டு மாடியில் படர்ந்திருந்தது. வான எழினியில் வெண்முகிலும், கருமுகிலும் நிலவொளியை அப்பிக்கொண்டிருந்தது. எல்லையற்ற அமைதியான விண்ணிலே அமைதியின் நிலைக்களனாய் வெண்ணிலவு அசையா ஓவியமாக நின்று கொண்டிருந்தது. வியப்பான விண்வெளி, அதில் புதுமையின் விளைவான பழமையான வெண் மதி. அவ்வெண்டிங்கள் நல்கும் வெண்ணொளி!......

அவர்களுள்ளத்தில் அளவற்ற அமைதியை, பேரமைதியை, அறிவமைதியை, ஆற்றல் மிக்க அமைதியை, அளித்தது இயற்கை. பொங்கு தமிழ்ப் பொதியிலில் பிறந்து பூஞ்சந்தனத்தின் கொங்கணிந்து குளிர் சாரலிடை வளர்ந்த கொழுந்தென்றல் உடலில் அமிழ்த உணர்வின்பத்தை பெருக்கெடுக்கச் செய்து தவழ்ந்தது.

ஞாலம் அசையா ஓவியமாக—நிழலோவியமாக இருந்தது. சூழ்நிலையிலுள்ள ஊர்க்காட்சி, இருளோவியமாக இருந்தது. உலகம் தூங்குவதுபோலிருந்தது! ஆம். உலகம் எப்பொழுதும் ஒரு பகுதி உறங்கிக் கொண்டும், இன்னொரு பகுதி விழித்துக் கொண்டும் தானே இருக்கிறது! வாழ்விலும் சாவிலும் வலமிடமாக வளரும் இவ்வுலகின் நிழற்காட்சி, 'நிலவு தோய்ந்த நகர்' எனக் கம்பன் பாடும் பாட்டைக் கண்ணனுக்கு நினைவூட்டிற்று.

"ஆ! என்ன அழகு! கண்மணி, இந்தப் புலவர்களும் கலைஞர்களும் எவ்வளவு அரிய பிறவிகள்! எத்தகைய பேரின்பத்தைச் சுவைக்கிறார்கள்! உலகின் இயற்கையோடு ஒன்றி ஒன்றி பேரின்பம் போதையேறி எவ்வளவு அழகான வாழ்க்கை வாழ்ந்து விடுகிறார்கள்! அவர்களை எண்ணினால் எனக்குப் பொறாமையாக வருகிறது? சீ!...கண்மணி, 'இந்த ஞாலம் ஒரு தொட்டில்; அதில் வாழும் உயிர்கள் அனைவரும் குழந்தைகள்; இந்த விண்ணகம் தொட்டிலில் கட்டியிருக்கும் விளையாட்டு ஓவியத்திரை; அதில் தீட்டப்பட்டிருக்கும் புதுமையான ஓவியம் நிலவும்...விண்மீன்களும்!...எப்படி?......"



அவன் சிரித்தான். தாள முடியாத கற்பனை இன்பத்தால் அவள் கன்னத்தைத் தட்டினான்.

"ஏது?...நீங்களே புலவராகி விட்டீர்களே!" எனக் குறும்பு பேசினாள்.

"ஆம். இயற்கையோடு ஒன்றி விடுகிற எவரும் புலவர்கள்தான்; எவரும் கலைஞர்கள்தான்!"

ஒருவர் ஒருவரிற் கலந்த உணர்வா லின்ப மொழி யுரைத்து இயற்கையழகில் மூழ்கினர்.

கண்மணியின் உள்ளம் அவனை விட்டுப் பிரிந்தது.

அழகு நிலவு வீசும் ஓவியக்கதிர்களோடு தாவி விளையாடி எங்கெங்கோ, கற்பனை கடந்த கவின் மிகு இடங்களில் திரிந்தாள். உள்ளத்தின் குரல் எங்கும் எதிரொலிக்கலாயிற்று! அவள் கண்களை மூடிக்கொண்டாள். அதில்தான் எத்தனை இன்பம்! எத்தனை அமைதி!......

கண்மணியின் நெஞ்சில் இன்னதென உரைக்க இயலாத உணர்வு பொங்கிப் பொங்கி சுரந்தது! அந்தப் பேரின்பத்தைத் தாங்க அவளால் முடியவில்லை. அப்படியே கண்ணனின் மடிமீது படுத்துக் கண்ணை மூடிக் கொண்டாள்!......

தனக்குள் ஒரு குழந்தையும் தான் ஒரு 'குழந்தையுமாய்' கண்ணனின் அன்பு மடியிலே தவழும்போது 'அவள்,' 'அவளாக' இல்லை! ஏன்? ... ஞாலத்திலே உயர்ந்த—மதிக்கமுடியாத—ஈடு இணையற்ற, விலை கடந்த பேராற்றல் மிக்க 'சான்றாண்மை' நிலை என்கிறார்களே; அந்தப் புகழின்ப நிலைக்கும் பெரிய நிலையிலே பேராட்சி செய்வது போன்ற செருக்கு—இன்பம்—பெருமிதம் வீறுகொண்டெழுந்தது. ஓர் இளந்தாயின் உணர்ச்சிகளை எல்லாம் அவள் 'கனவு காணும் குமரியுள்ளம்' தன் முழுவெறியோடு துடிதுடித்துச் சுவைத்தது. ஒளி இருந்தால் தானே நிழல் விழும்! அதே போல, இன்ப ஒளியினால் அவளுள்ளத்தில் புத்தம்புதுக் 'கனவு ஓவியங்கள்' அணியணியாக நிழலாடின. எத்தனை உயிருள்ள கனவுகள்! அவளுக்கு அழகான தங்கச்சிலை பிறக்கிறது! அதைக் கண்டு அவள் 'தாய்க்குமரி நெஞ்சம்' அருளால் தழைத்து, அன்பால் விம்மி, பெருமைச் செருக்கால் விளங்கி, நாணத்தால் உயிர்த்து, பெண்மையால் மலர்ந்து, காதலால் பேரியற்கைப் பேரொளி வாழ்வாகி, பேருவகை பூத்து 'இன்ப வெறி' பிடித்தவளாக ஆக்கி விடுகிறது அவளை. செயலிழந்து, தன்னை மறந்து, அக் குழந்தையின் 'குளிர்ந்த பூங்கைகளிலே தன்னை மறந்து விடுகிறாள்! சின்னஞ்சிறு செங்கை, அதனுள் 'ஏதோ' புதையலை ஒளித்துக் கொண்டிருப்பதுபோல மூடிக் கொண்டிருக்கிறான் இந்த ஞாலத்தின் புதுமகன்! செங்குருதியின் பளபளப்பு பளிங்குபோல வெளிக்காட்டும்; மல்லிகை, முல்லை மலரிதழ்களினும் மென்மை வாய்ந்த பொன்னுடல்!!... பூவினால் செய்து, பொன்னொளி பெற்ற அந்தத் தளர்ச்சியும், நரம்புகள் புறந்தோன்றாத, அழகு மேனியில் ஆங்காங்கே பசுநிறக் குருதிக் கொடிகள் படர்ந்துள்ள காட்சி; தழைத்த மரத்திலே தாவிப் படர்ந்த தவழும் பசுங்கொடியை நினைவூட்டுவதாயிருக்கிறதே! 'அவன்' தன் செந்தாமரைத் திருவடிகள் வலியெடுக்கும் வண்ணம் "பட பட" வென உதைத்துக் கொள்கிறான் தரையில். சிறிய கரிய கண்ணால் 'இப்படியும் அப்படியும்' விழித்து நோக்கித்தான் வந்திருக்கும் 'புது ஞாலத்'தில் தனக்குத் 'தெரிந்

தவர்கள்' இருக்கிறார்களா என ஆராய்வது போல நோக்கும் நோக்கிலிருக்கும் தூய ஒளி!......ஆ! அத்தகைய தூய, குற்றமற்ற, மேன்மை மிக்க பார்வை—நோக்கம் இந்த ஞாலத்தில் யாரிடத்தில் அமைந்திருக்கிறது?... மழலைமொழி யறியாத 'விளையாச் செல்வத்தை,' எழுதா ஓவியத்தை, 'செதுக்காத உயிர்ச்சிலையை' கோடாத இன்ப இலக்கியத்தைத் தன் மார் போடணைத்துக் கொள்கிறாள்! ஆ!.........அப்பா! அவள் பேய்த்தன்மை கொண்ட 'ஆறாத தாய்மைக் காதலால்' அணைத்துக் கொள்ளும் போதும்; தன் அன்பை எல்லாம் ஒரே மூச்சில் கொட்டித் தீர்க்கும், உயிரை வாட்டி, உச்சிக்கு மயக்க மேற்றும் முத்தமாரியிலும் 'அவன்' திக்கு முக்காடித் திணறுகிறான். அன்னையின் அறிவற்ற, கண்மூடித் தன்மையான வெறி அவனுக்கு விளங்காததாக—விளக்கமில்லாததாக இருந்திருக்கும்! அவனுக் கென்ன தெரியும் ஓர் இளந்தாயின் 'ஆவல்வெறி,' போர் புரியும் வெறி மூண்ட வேங்கைப் புலிக்கு இருப்பதை விடப் பல வெள்ளம் மடங்கு மிகுந்ததென்று! .......

அவள் கொஞ்சிக் கொஞ்சிச் சிரிக்கிறாள். பேருவகையால் பெருமூச்சுப் புயலை வெளிவிடுகிறாள். அவன் அழகிளந் தளிர்க்கை அவள் மீது படும்போது அவள் பொன்னுடல் துடிப்பாலோ; உணர்ச்சிப் பெருக்காலோ; தன்னை மறந்து சிலிர்க்கிறது. அவன்—அவள் மழலைப் புலவன்; தன் செந்தாமரைச் செவ்வுதடு விரிய கதுப்புக் கன்னத்திலே கண்ணாடி ஒளி மின்ன, தன் 'பொக்கை வாய்' திறந்து சிரிக்கிறான்! ஆ! ஐயோ! அந்த 'விடியல் நகை' அவளுயிரையே போக்கி விடுகிறதே! கள்ள மறியாப் 'பிள்ளைப் சிரிப்பு' அவளுணர்வை எல்லாம் வாரி இழுத்து மயக்குகிறதே! என்ன உணர்ச்சி! என்ன மயக்கம்! அம்மம்மா! அவன் சிரிப்பில் விடியலின் வெண்ணொளியும், முத்தின் முறுவலும், முல்லையின் நகையும், மின்னலின் ஒளிர்வும், சுடர் வீசுகிறதே! 'உள்ளத்தில் கள்ளமிலா உணர்வினுலைக் கூடம் படைக்கின்ற செவ்வதட்டு உயிர் மாய்க்குஞ் சிரிப்பு; பண்புத் தமிழ் பெற்ற எழிற் சிரிப்பின் சிரிப்பு' என்று அவள் நெஞ்சம் களி ததும்ப பொங்கிப் பாடும்! அந்தச் சிரிப்பில் தோன்றும் இன்பத்திற்கு ஈடு, இலக்கியத்தி லாழ்ந்தாலும் கிட்டுமா? ஊஉம்!......அறிவை மயக்கும் அமிழ்தச் சிரிப்பு அது! பண்ணளிக்கும் குதலை அமுதொழுகும் பசுந்தேறலுற வாடும் பைங்குழவி பெருவிரல் சுவைத்து தண்ணளிக்குந் தாமரைச் சிவப்புற செங்கையமுது சப்பும் அந்தச் சின்னஞ் சிறியவனின் ஒவ்வொரு செயலும் ஒவ்வொரு ஒப்பற்ற இலக்கியம்! ஒவ்வொரு நிகழ்ச்சியும் கலையின் சாயல்! குழலையும் யாழையும், தமிழிசையையும் சுவையற்றதாக்கும் அவன் 'அழுகை ஓசை'யைக் கேட்டு அவள் செவி எப்படி குளிர்கிறது! அமிழ்தம் பாயும் அக்குரலை அவன் எங்கே பெற்றான்? அவனழுகைக் குரல் கேட்டு அவள் நெஞ்சம் எப்படி துடிக்கிறது! எந்த வேலையிருந்தாலும் அப்படியே போட்டு விட்டு அவனை எடுத்து, "என்னடா கண்ணூ!..." எனக் கொஞ்சியபடி தன் நெஞ்சோடு சேர்த்தணைத்து முத்தமிடாமற் போனால்......!... அப்பா!...அந்த உயிர் துடிக்கும் துடிப்பை என்ன வென்று சொல்வது?...

எழுதாச் சொல் மழலை ததும்ப பொழியும் அவன் பேச்சுதானே அமிழ்த மொழி? ஏன் அவளறிவு அவன் பேசும் இலக்கியத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை? எத்தனையோ பெயர் தங்களை "அறிஞர்கள், முற்றுமுணர்ந்தவர்கள், கலைஞர்கள், புலவர்கள் என்று" என்று சொல்லிக் கொள்கிறார்களே; அவர்கள் அவன் பேசும் மொழியைப் புரிந்து கொள்ள முடியுமா? முடியாதே! அவனிலக்கியம் அறிந்த அறிஞன் அவன்தான்.



அவன் வாய்திறந்து பொக்கைச் சிரிப்போடு ஒலிக்கும் புரியாத ஓசையிலே ஒன்றி விடுகிறாளே! உயிர், உணர்வு, உள்ளம், உடல், சூழ்நிலை எதையும் மறந்து, அவனோடு அவள் உலகத்தவளாகி விடுகிறாளே! தன் தாயிடம் தான் அவனுக்கு எவ்வளவு உரிமை! அவனில்லை என்றால் அவளில்லை என்றாகி விட்டாளே! எப்படி? காலத்தோடு கற்பனை கடந்த அந்த அறிய முடியாத ஓர் அன்பின் ஆற்றலை தாய்க்கும் அவனுக்கும் என்றும் நீக்க முடியாததோர் 'தொடர்பை' 'கூட்டுறவை' 'காதலை' உண்டாக்கி விட்டது! அதன் பிணைப்பு இன்று நேற்றல்ல, இந்த மண்ணகம் தோன்றி, உயிர்கள் தோன்றுவதற்கு முன்பேயே தன் போராட்சியைத் துவங்கி விட்டது! அதைக் கலையாக விரித்து ஆகாது! இலக்கியமாக இசைத்துத் தீராது!

பாலுதட்டு முத்தம், பார்வைச் சிரிப்பு, பசியழுகை, அன்புக்கைகளின் பேரின்ப வருடல், குறும்புகள் இத்தனையும் ஒவ்வொரு இன்ப ஞாலத்தில் அன்னையைக் குடியேற்றும்! ......"

எண்ணம் எவ்வளவுக் கெவ்வளவு நீண்டதோ; அவ்வளவுக் கவ்வளவு இன்ப நிறைவு நெஞ்சில் சுரந்தது. ஊனை அமிழ்த மாக்கும் ஒப்பற்ற நினைவல்லவா தாய்மையின் நினைவு!

கண்ணனின் அன்புக் கைகளில் மெல்ல உறங்கலானாள்.

நிலவுக்கதிரின் ஒளி வெள்ளத்தில் அவள் நினைவுகள் தழைத்து மயங்கின. அவள் குழந்தையாகவே ஆகிவிட்டாள்!......"

(தொடரும்.)

## சந்தா நேயர்களுக்கு

ஆனந்த போதினிக்கு ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. சந்தாத்தொகை எப்பொழுது செலுத்தப் பட்டாலும், நடைமுறை ஆண்டின் ஆடி முதற்கொண்டே கணக்கு வைக்கப்பட்டு, இதழ்கள் அனுப்பப்படும். மாத நடுவே அனுப்பப்படும் சந்தாத் தொகைகளுக்கு அடுத்து வரும் தமிழ் மாதத்தின் முதல் தேதி அன்றுதான் பத்திரிகைகள் அனுப்பப்படும்; தபால் கட்டணச் சலுகை சம்பந்தமான புது விதிகள் காரணமாக பத்திரிகை வெளி வரும் தேதியைத் தவிர, இதர நாட்களில் இதழ்களை அனுப்ப இயலாதவர்களாய் இருக்கிறோம் என்பதை நம் பத்திரிகை அன்பர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம்.

சந்தா நேயர்கள் நமது காரியாலயத்திற்கு எழுதும் கடிதங்களில் அவரவர் சந்தா இலக்கத்தைத் தவறாது குறிப்பிட்டு எழுத வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

மானேஜர்.

# “ஆனந்தபோதினி” பஞ்சாங்கம்

விளம்பி௵ ஆனி௴ கலியுகாதி 5060, சாலிவாகனம் 1881,
பசலி 1367-68, ஹிஜிரா 1377, கொல்லமாண்டு 1133,
இங்கிலீஷ் 1958 ஜூன்௴—1958 ஜூலை௴

| ஆனி௴ | ஜூலை௴ | வாரம். | திதி. | நட்சத்ரம். | அமிர்தாதி யோகம். | விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 15 | ஞா | திர16-33 | கிரு33-18 | சி60 | மாத சிவராத்திரி, கரிநாள் |
| 2 | 16 | திங் | ●ச18-38 | ரோ36-38 | அ60 | சர்வ அமாவாசை |
| 3 | 17 | செவ் | அ19-18 | மிரு38-35 | சி38-35ம | இஷ்டி [சனம் |
| 4 | 18 | புத | பிர18-35 | திரு39-15 | சி60 | ஆஷாடசுத்தம், சந்திர தரி |
| 5 | 19 | வியா | துதி16-43 | புன38-53 | அ60 | ராம ரதோற்சவம் |
| 6 | 20 | வெ | திரு13-53 | பூச37-35 | ம60 | மாதசதுர்த்தி விரதம் |
| 7 | 21 | சனி | சது10-15 | ஆ35-35 | ம35-35அ | கடகாயனம் |
| 8 | 22 | ஞா | பஞ்6-00 | மக33-03 | ம33-03சி | சஷ்டி-உபவாசம் |
| 9 | 23 | திங் | சஷ்1-20 சப்56-18 | பூர30-08 | சி60 | ஆனித் திருமஞ்சனம், வைவஸ்வத ஸப்தமி |
| 10 | 24 | செவ் | அ50-55 | உத்26-50 | அ26-50சி | தேதி மழை |
| 11 | 25 | புத | நவ45-23 | அ23-20 | ம23-20சி | ... ... ... |
| 12 | 26 | வியா | தச39-40 | சித்19-43 | சி19-43அ | சாக்ஷுஷ மன்வாதி |
| 13 | 27 | வெ | ஏ33-58 | சு15-58 | சி60 | |
| 14 | 28 | சனி | து28-18 | வி12-15 | சி60 | |
| 15 | 29 | ஞா | திர23-03 | அ8-50 | ம60 | |
| 16 | 30 | திங் | ○ச18-18 | கே5-55 | சி60 | |
| 17 | 1 | செவ் | ப14-20 | மூ3-43 | அ3-43சி | |
| 18 | 2 | புத | பிர11-35 | பூ2-38 | அ60 | |
| 19 | 3 | வியா | துதி10-10 | உ2-53 | சி60 | |
| 20 | 4 | வெ | திரு10-23 | தி4-38 | ம4-38சி | |
| 21 | 5 | சனி | சது12-18 | அ8-05 | சி8-05அ | ... ... ... |
| 22 | 6 | ஞா | பஞ்15-53 | சத13-10 | சி60 | தனியனுள் |
| 23 | 7 | திங் | சஷ்20-50 | பூ19-35 | ம19-35சி | அதிதி |
| 24 | 8 | செவ் | சப்26-48 | உட்27-00 | அ27-00சி | ... ... ... |
| 25 | 9 | புத | அ33-05 | ரே34-43 | ம60 | காலாஷ்டமி, ருத்ரஸாவர்ணி மன்வா |
| 26 | 10 | வியா | நவ32-05 | அசு42-05 | அ42-05சி | ... ... ... |
| 27 | 11 | வெ | தச44-08 | பர48-35 | சி60 | ... ... ... |
| 28 | 12 | சனி | ஏ47-48 | ✲கி53-43 | அ60 | கிருத்திகை விரதம் |
| 29 | 13 | ஞா | து49-45 | ரோ57-08 | சி60 | பாபநாசினி த்வாதசி |
| 30 | 14 | திங் | திர49-53 | மிரு58-45 | அ58-45சி | ப்ரதோஷம் |
| 31 | 15 | செவ் | சசி48-23 | திரு58-50 | ம58-50சி | மாத சிவராத்திரி, கிருஷ்ணாங்காரக சதுர்த்தி விர. |

ஜூலை 1958

| அங் | கே,சுக் புதன் | | சூரி |
|---|---|---|---|
| | 2-மிது-புத<br>5-குரு-வ-நி<br>7-ரிஷ-சுக்<br>17-கட-புத<br>26-மேஷ-அ<br>30-நெப்-வ-நி | | சூ யுரே |
| | சனி (வ) | ராகு நெ(வ) | குரு (வ) |


## சர்வமேக நிவாரணத் தைலம்




இந்தப் பிரசித்திபெற்ற இராஜ சஞ்சீவி திராவகத்தை, காலை மாலை இரண்டு வேளைகளிலும் 10-நாட்கள் வரை உட்கொண்டால் வெகு நாட்களாகத் தேகத்தில் ஊறிய மேக ரோகங்கள், மேக வாயு, தனுர்வாதம், முழங்கால் வாதம், குதிக்கால் வாதம், சகலமான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு இரணங்கள், குழிப் புண்கள், புரையோடுகிற புண்கள், திமிர் வாய்வு, கை கால் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள், கிரந்தி முதலிய கிரந்திப் புண்கள், தொடைவாழை படைகள், நகக்கணுநோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள், நெருப்பிலிட்ட பஞ்சு போல் போகும். இது அநேக ஜனங்களின் துன்பத்தை நீக்கிச் சௌக்கியத்தை உண்டு பண்ணி வந்திருக்கிறது. கடின பத்தியமின்றி, பால், நெய், கறி முதலியவைகளுடன் சாப்பிடக்கூடியதும், தேக இளைப்பு, ஆயாசம் முதலியவைகளை உண்டாக்காமல் வியாதிகளைக் கண்டித்துச் சுகப்படுத்தக் கூடியதுமாகிய உண்மையான மருந்து

இதன் விலை ரூபா 1—8—0 தபாற் கூலி ரூ. 1—2—0

## சீதபேதி (டிசென்டரி) பவுடர்



இரத்தபேதி, சீதபேதி, சீதமும் இரத்தமும் கலந்த பேதி, மலத்துடன் இரத்தம் வருதல், மூலக் கடுப்பு அடி வயிற்று நோய் முதலான வியாதிகள் குழந்தைகள் முதல் பெரியோர் வரையில் யாருக்கிருந்தாலும் 4-வேளையில் இம் மருந்து தப்பாமல் குணப்படுத்தும்.

ஒரு புட்டியின் விலை அணு 8. தபாற் கூலி ரூ. 1-2-0
6-புட்டி வரை தபால் செலவு ரூ. 1—2—0 தான்.

## கூந்தல் வளரும் துளி

இதை நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெயில் கலந்து பிரதி தினம் மயிருக்குப் பூசி வந்தால் கூந்தலானது ஆலம் விழுதுபோல் நன்றாக வளரும். தலையில் பேன் சேராது; சுண்டு உண்டாகாது; மயிர் உதிராது. வழுக்கை விழுந்த இடத்திலும் மயிர் முளைக்கும். புட்டி 1-க்கு விலை அணு 12.
தபாற் கூலி ரூ. 1-2-0 2-புட்டிகளுக்கும் தபால் செலவு ரூ. 1—2—0 தான்.

## கார்டோலின் - ஆஸ்தமா நிவாரணி

ஈளை இருமல், சுவாச காசம் முதலிய பிரான்கியல் ஆஸ்தமா நோய்கள் 10 நாளில் தீரும். ஆஸ்மா இருமல் எந்த நிலையில் இருந்தாலும் குணத்திற்கு உத்திரவாதம். பத்தியம் இல்லை. 50 மாத்திரைகள் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 12. தபாற் கூலி ரூ. 1-2 இம்மருந்துக்கு எப்போதும் ரூ. 5/-அட்வான்ஸ் அனுப்பிவிட வேண்டும்.

**தனலட்சுமி கம்பெனி,** தபால் பெட்டி நெ. 1376
நெ. 6 லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை-1.

# ஜீவானந்த ரஸாயனம்

இதில் சுக்கில சுரோணிதப் போஷணைக்கு உரிய அரிய பெரிய மருந்துகளும் மலையாள மூலிகைகள், பழ ரசங்கள், புஷ்பச் சத்துக்கள் முதலிய பல மூலிகைகளும் சேர்த்துச் சாப்பிடுவதற்கு மிக இனிய லேகிய பதமாய் தயார் செய்யப்பட்டிருக்கிறது.

'ஜீவானந்த ரஸாயன'த்தை ஒரு மண்டலம் நீடித்துச் சாப்பிடுவதினால் ஜீவ நரம்புகளில் பற்றிவரும் மேகவிஷ துர்நீர்களைப் போக்கும். கெட்ட சகவாச தோஷத்தினால் ஏற்பட்ட வெள்ளை, கிரந்தி மேகவியாதி, மேகச் சொறி, பித்தப்பாண்டு, துர் அப்பியாசம் முதலியவற்றால் ஏற்பட்ட பலஹீனம், தாது நஷ்டம், சொற்பன ஸ்கலிதம், நரம்புத் தளர்ச்சி, ஆயாசம், உடல் நடுக்கம், பசியின்மை, குன்மம், தூக்கமின்மை, மேக காங்கை, மூலச்சூடு, மார்பு வலி, இடுப்பு வலி, மலச்சிக்கல், இருமல், மூத்திரத்துடன் இந்திரியம் நீத்துப் போகுதல், கைகால் ஓச்சல், ஞாபகமறதி, கண்மங்கல் முதலிய பல வியாதிகளையும் போக்கும். வீரிய விருத்தி, தாதுபுஷ்டி, இரத்தவிருத்தி, போகசக்தி முதலியவைகளை அபாராமாய் உண்டாக்கும். தளர்ந்து துவண்டுபோன ஆண் நரம்புகளை முறுக்கேற்றும். தசைகளை வளரச் செய்யும். உடைந்து போன இந்திரியத்தை இறுகச் செய்யும். இல்லற வாழ்க்கையில் இணையற்ற இன்பத்தை அளிக்கும். பெண்களுக்குக் காணும் சூதகச்சிக்கல், பெரும்பாடு போகுதல், அதிகப் பிள்ளைகளைப் பெற்றதனால் ஏற்பட்ட தளர்ச்சி, பலஹீனம், மர்மஸ்தானத்தில் நமை, எரிச்சல், வெள்ளை, வெட்டை முதலிய பல வியாதிகளையும் கண்டிக்கத் தக்கது. பத்தியமில்லை.

டின் 1-க்கு ரூ. 2—75 nP. தபாற் கூலி ரூ. 1—12 nP.

**லீலா அதிசயன்** புட்டி 1-க்கு ரூ. 2–50nP. தபாற்கூலி ரூ. 1–12nP

## மாலதி முகவசீகர மருந்து (முகப் பருக்களுக்கு)

முகத்தில் ஏற்படும் பருக்கள், தழும்புகள், வெயிலில் சுற்றுவதால் உண்டாகும் கருமை, வேர்க்குருக் கட்டிகள் முதலிய முக அழகைக் கெடுத்து விகார ரூபத்தை யுண்டாக்கும் சர்வ பருக்களையும் போக்கி முகத்திற்கு நல்ல தேஜஸையும், பளபளப்பையும், காந்தியையும் கொடுக்கவல்ல மருந்து. விலை டின் 1-க்கு ரூ. 1. தபாற் கூலி ரூ. 1—12 nP.

## நயன பிந்து (EYE DROPS)

கண் சம்பந்தமான வியாதிகளுக்கு மிகவும் சிறந்தது.

கண்ணோய், கண்ணில் பீளை கட்டுதல், கண் எரிச்சல் கண்களில் சதை வளருதல், கண் வீக்கம், கண் சுருங்குதல், கண்களிருந்து சதா நீர் வடிதல், கண் பார்வைக் குறைவு, கண்ணில் பூ படுதல், மாலைக்கண், கண் புளித்தல் கண் புகைதல், கண் கொதிப்பு, கண் சிவப்பு, கண்ணுக்குள் தூசு துரும்பு முதலானவை விழுந்ததுபோல் கண் அருகுதல் முதலிய கண்ணைச் சார்ந்த எல்லா நோய்களும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். கண்ணுக்கும் நல்ல ஒளியைக் கொடுக்கும். கண்ணோய் பரவும் காலத்தில் இம்மருந்து
21 கையிருப்பிலிருந்து விட்டால் மேற்படி நோய்கள் வராமல் தடுத்துக் கொள்ள
5 ாம். சிறு குழந்தை முதல் கிழவர் வரையாதொரு பயமுமில்லாமல் கண்
28 ரில் விடலாம். 1-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ.1–25nP. தபாற்கூலி ரூ.1–12nP.
29

**தனலட்சுமி கம்பெனி,** தபால் பெட்டி நெ. 1376

நெ. 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை-1.



## கல்யாணி கிருதம்

கு ஓர் வரப்பிரசாதம். ஸ்திரீகளின் கர்ப்பாஸய சம்பந்த திகளுக்கும் அமிர்தத்திற்கு ஒப்பான திவ்விய ஔஷதம். ளில் உண்டாகும் வயிற்றுவலிக்கு இது ராஜா. கர்ப்பம் வு, கருக்குழியில் உண்டாகும் கோளாறுகள், பெரும் வயிற்றுவலி முதலியவைகளைக் குணப்படுத்தி கர்ப்பாச ம். இம்மருந்தால் குழந்தைப்பாக்கியம் பெற்றவர்கள் காந்த ருது பேதப்படுவதால்தான் ஸ்திரீகளுக்கு எண் வியாதிகள் உண்டாகின்றன. சரீரம் ஸ்தூலித்தல், கால் சோர்வு, இடுப்புநோய், சூதகத்தின் நிறம்மாறுதல். டையாகவும் கறுத்தும் வெளிப்படுதல் மாதா மாதம் படுதல், சூதகம் சிறிது கண்டு மறைதல், ஒரே பக்கத்துத் நாய், முதலிய பல வியாதிகளையும் குணப்படுத்தும்.

து விலை ரூ. 3. தபாற் சார்ஜ் ரூ. 1—12 nP.

## வாத கெஜாங்குசம்

ண்டவாயு, சரீரம் முழுதும் பரவி உபத்திரவிக்கும் வாயு ர்ஸ வாயு, முழங்கால் வாயு, முட்டுக் களில் நீர் தங்கி உபத் முதலிய எவ்விதமான வாயு ரோகங்களையும் கண் ஔஷதம். கை கால் சந்துகளில் காணும் வலி, குதிக் டு வீக்கம், ஆனைக்கால், மலபந்தம், மலச்சிக்கல், தொடை கின்ற வலி, தொடை நரம்புகளில் பிகுவு, உடம்பு ஸ்தூலித்தல், ானவாயு பறிதல்; வயிறு ஏம்புதல், மேல் மூச்சு சுவாஸகாசம், குன்மம், ஓடுவாயு முதலாகச் சொல்லப்பட்ட அவரவர்களின் க்குத் தக்கபடி உண்டாகும் எல்லாவித வாயு ரோகங்களையும் மல மூத்திராதிகளைச் சரிப்படுத்தி தேக ஆரோக்கியத்தை உண்டு

புட்டி 1-க்கு விலை ரூ. 3. தபாற் சார்ஜ் ரூ. 1—12 nP.

## காமதேனு

இது சகலவிதமான மேக நோய்களைக் கண்டித்து திடகாத்திரமான தியை உண்டாக்கும்.

இந்த மருந்தை ஆண், பெண் ஆகிய எவ்வயதினரும் சாப்பிடலாம் உடம்பு மெலிந்து சக்தியற்று எலும்பும் தோலுமாய் இருக்கும் எவரும் இந்த 'காமதேனு'வை சாப்பிட்டு வந்தால் தசை புஷ்டியாகி, நரம்புகளுக்குப் பலமும், முறுக்குமேற்றி, ஜீரண கருவிகளை வலுவுறச் செய்து, உடம்பிற்குப் பலமும், வசீகரத்தையு முண்டாக்கும். பலம், புஷ்டி, ஆரோக்கியத்தையும் தரக்கூடியது. புத்துயிரளிக்கவல்ல இளமையைத்தரும். மலையாள றையில் தயாரிக்கப்பட்ட சிறந்த ஔஷதம்.

டின் 1க்கு விலை ரூ. 3-0-0. தபாற் கூலி ரூ. 1—12 nP.

ராத மேஹரணங்களுக்கு **சஞ்சீவி களிம்பு** விலை அணா 12.

தபாற் கூலி ரூ. 1-2-0. 2-புட்டிகளுக்கும் தபால் செலவு ரூ. 1-2-0 தான்.

நெ. 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை-1.

**தனலட்சுமி கம்பெனி,** தபால் பெட்டி நெ. 1376,

நெ. 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை-1.

ஆரணி-குப்புசாமி முதலியார்

| இயற்றியவை | ரூ.ந.பை. | | |
|---|---|---|---|
| | | தாசி ரமணி | |
| ரத்தினபுரி ரகசியம் 9-பாகம் | 19=87 | உயிரோவியம் | |
| ஞானசெல்வாம்பாள் 5-பாகம் | 9=62 | யான் ஏன் பெண் | |
| கற்பகச் சோலையின் அற்புதக் | | பிறந்தேன் | |
| கொலை | 2=00 | இவ்வுலகை திருப் | |
| கடற்கொள்ளைக்காரர் 2-பாகம் | 4=00 | சிலப்பதிகார ஆ | |
| மதனும்பாள் 2-பாகம் | 4=00 | ஆர்ய மத சித்த | |
| லோகநாயகி | 1=00 | பூலோக லக்ஷ்மி | |
| விளையாட்டுச் சாமான் | 1=75 | கனகரத்தினம் | |
| பவளத்தீவு 2-பாகங்கள் | 3=75 | கண்டிராஜா ந | |
| தபால்கொள்ளைக்காரர்கள் | 1=00 | குசேலோபாக்கி | |
| அமராவதி 2-பாகங்கள் | 5=00 | உதயணன் | |
| மஞ்சள் அறையின் மர்மம் | 2=00 | தசக்கிரீவன் | |
| கற்கோட்டை | 2=50 | போஜ சரித்திரம் | |
| பூங்கோதை | 0=75 | சதானந்தர் | |
| வீரநாதன் | 0=75 | கர்ணன் சரிதை | |
| கனக[illegible] | [illegible]=00 | பீஷ்ம விஜயம் | |
| கற்பக[illegible] | 3=00 | [illegible]ர்த்திசிங்கன் | |
| [illegible]சேகரன் | 2=50 | [illegible]ப்பெருந்தாசர் | |
| கிருஷ்ணவேணி | 2=50 | [illegible]ணவாளன் | |
| தினகரசுந்தரி | 1=50 | [illegible]சுராமன் | |
| சந்திராபாய் | 2=50 | சிசுபாலன் | |
| இராஜாமணி | 2=50 | அங்கதன் | |
| இந்திராபாய் | 2=[illegible] | தசாவதார மகிமை | |
| மதன[illegible] | [illegible]=00 | கிருஷ்ணன் தூது வசன | |
| சுவர்ணும்பாள் | 0=75 | சண்டோபாக்யானம் | |
| தேவசுந்தரி | 2=00 | கருணாகரரும் சத்தியசீல | |
| குணசுந்தரன் | 1=00 | சத்தியவசனம் | |
| பத்மாஸனி | 1=00 | விமலன் | |
| ஆனந்தலிங் | 2=00 | கண்ணபிரான் | |
| மின்சார மாயவன் | 2=00 | செய்யுட்பாடத்திரட்டு | |
| ஆனந்தசிங்கினஷ்டஜயங்கள் | 2=00 | நாலு மந்திரி கதை | |
| அரசூர் இலக்ஷ்மணன் | 3=00 | மங்களேசுவரன் | |
| கைவல்லிய நவநீத வசனம் | 2=25 | தக்கன் | [illegible] |
| சகோதரவாஞ்சை | 0=31 | சீமந்தனி | 0= |
| | | நான்குகோடி | 0=2 |
| கம்பராமாயண வசனம் | 4=00 | மதிமோசவிளக்கம் | 1=00 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய | | மெய்க்காதலி | 0=75 |
| சரித்திரமும் உபதேசங்களும் | 3=50 | மேனுமினுக்கி கதை | 0=75 |
| விவேகானந்தர் சரித்திரம் | 5=00 | வீணுகானன் ஞானேந்திரி | 0=50 |
| தமிழ் மெடீரியா மெடிகா | 3=50 | கோமளவல்லி கதை | 0=75 |
| மலையாள பகவதி | 1=25 | விகடவல்லி கதை | 0= |
| அற்புத நவநீத ரம்பை | 2=00 | தாலிகட்ட மறந்த கதை | 0= |
| அகட விகட விலாச விநோதம் | 0=62 | ஞானசவுந்தரி (நாடகம்) | 0= |
| சீமாட்டி கார்த்தியாயினி | 0=87 | சத்தியவான்சாவித்திரிநாடகம் | 0= |

இந்திர கவசமென்னும் சர்வ தேவதா வசியம் விலை ரூபா 1=25 n

[illegible] - 630 008

**ஆனந்தபோதினி ஆபீஸ்,**

**தபால் பெட்டி நெ. 167, சென்னை—1.**

தேவகோரள ஜோதிஷம் O. P. லக்ஷ்மீநரஸிம்மாச்சாரியார் எழுதியது

**ஜோதிஷ பாவத்திரய நிர்ணயம் ரூ. 2=00**

# ஆருட பாவம்

(பிரச்ன நாரதீயத்தின் மொழி பெயர்ப்பு.)

உலகில் ஜோதிஷ சாஸ்திரத்தில் எத்தனையோ பேதங்கள் இருக்கின்றன அதில் இந்த பிரச்ன சாஸ்திரமும் ஒன்றாகும். பிரச்னைகள் பலதிறப்பட்டிருப்பினும் அவற்றிற்கெல்லாம் பலனும் கூறப்பட்டிருக்கிறது. இது நஷ்ட பிரச்னை என்பதைக்கொண்டே சகலத்தையும் கண்டறிந்து கொள்ளக்கூடும். இந்த ஆருட சாஸ்திரமானது உடனேயே சீக்கிரமாகப் பலனைத் தெரிந்து கொள்வதற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது.

இதன் விலை 25 nP.

# விவாஹம்

விவாஹம் என்னும் இந்த ஜோதிஷ புத்தகத்தில் தாரா பலன் என்பதும் [illegible]ன்மானு ஜன்ம திரிஜன்மங்களும், ராசிப் பொருத்தம், கணப் பொருத்தம், ரஜ்ஜு, மஹேந்திர வர்க்கம், ஸ்திரீ தீர்க்கம், கிரக மைத்திரம், வேதைப் பொருத்தம், விவாஹத்தில் மாங்கலிய தாரணஞ் செய்கிற முகூர்த்த கால [illegible]க்கிரக பலன்கள், இன்னும் அநேக பொருத்தங்களையும் விளக்கமாகவும் [illegible]தாகவும் தெரிந்துகொள்ளும்படி எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை 50 nP.

# யோக மஞ்சரி

"கோசார பல நிர்ணயம்," நூலுக்கு ஆசிரியரான

N. R. திருவேங்கடாசாரியர் B.A., அவர்கள் இயற்றியது.

[illegible]னைப்பயனை அறியவும், அறிந்ததன் பின் அவைகளால் ஏற்படும் [illegible]க்கத்தை நீக்குவதற்கோ குறைத்துக் கொள்ளுவதற்கோ சாஸ்திரங்களில் உபதேசித்துள்ள சாந்தி மார்க்கங்களைத் தெரிந்துகொள்வதற்கும் ஜோதிஷ சாஸ்திர ஞானம் அவசியமெனப் பராசரர், கௌதமர், பிருகுநாரதர் காசிபர், கர்க்கர், அத்திரி முதலான மஹரிஷிகள் பல நூல்களைச் செ[illegible] திருக்கிறார்கள். இதிலும் 1. யோகாத்தியாயம், 2. பாவாத்தியாய[illegible] 3. [illegible]சாத்தியாயம், 4. கோசாரத்தியாயம், 5. அஷ்டவர்க்கத்தியா[illegible] ஆகிய இவ்வைந்து பிரிவுகளையும் செவ்வையாய் படித்து அவைகளில் தேசித்துள்ள ரகசியங்களை அறிந்துகொண்டு இஷ்ட தேவதாத் தியா[illegible]துடன் தனக்கோ மற்றவர்களுக்கோ ஒரு குறிப்பிட்ட பாவத்தினுடைய [illegible]பத்தன்மையை அறிந்துகொண்டு சுகத்தைப் பெருக்கிக் கொள்ள[illegible] [illegible]ஷ்டத்தை ஜெபஹோம தானத்தினால் நீக்கவோ அல்லது குறைத்[illegible] [illegible]கொள்ளவோ முயலவேண்டும்.

இதன் விலை 75 nP.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்-1.



காலே
கான்
விலே
போஸ்
13.48-
ரூ. 4.
ரூ.

தற்காலத்தில் மனித
பால்ய சேஷ்டையாலும், இ
த்தப் போக்காலும் அவ
உண்டான 20-வகை ரோ
கள், சூலைரோகம், குன்மரோகம், பித்தபா
கை கால் முடக்கு, ஓய்வாய்வு, பித்த மப்பம், செ
தொண்டை எரிச்சல், ... அஜீர
பசியில்லாமை, தாதுஹீனம், தேக ...
ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரை யில்லா
தலை சுழற்றல், நீர் இறங்கும்போது ...
முடியாத பாண்டலயத் தரும் நீர் மேகம் முத
வைகளை ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீ
விடும். இதற்கு மிஞ்சின லேகிய மருந்தும் வே
க்குமில்லை.

சிங்கபலத்தைத் தருவதேது?

# ...மிர்த சஞ்சீவி லேகியம்

அயக்காந்த செந்தூர

...லட்சுமி கம்பெனி, 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு.



Edited, Printed and Published by N. MUNISWAMI MUDALIAR, at "ANANDA BODHINI PRESS". No. 6, Lawyer Chinnathambi Mudali Street, Sawcarpet, Madras.